அகஸ்தியர்

வைத்திய சிந்தாமணி

வெண்பா 4000 என்னும்

மணி 4000

Dr. S. பிரேமா, M.D. (Siddha)
சித்த மருத்துவத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பாகம் - 1

தாமரை நூலகம், சென்னை - 600 026.

அகஸ்தியர் மணி 4000 என்னும்

வைத்திய சிந்தாமணி வெண்பா 4000

முதல் பாகம்

ஆசிரியர் :
மரு. செ. பிரேமா எம்.டி. (சி)
இணைப் பேராசிரியர் மற்றும்
துறைத்தலைவர், சித்த மருத்துவத்துறை.
தமிழ் பல்கலை கழகம்.
தஞ்சாவூர்

தாமரை நூலகம்
7, என். ஜி.ஓ. காலனி,
வடபழனி, சென்னை . 600 026.
தொலைபேசி எண்: 044 . 23620249

முதல் பதிப்பு : மார்ச் - 1996

இரண்டாம் பதிப்பு : ஜூன் - 2014

மூன்றாம் பதிப்ப : டிசம்பர் 2022

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	அகஸ்தியர் மணி 4000 என்னும் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 முதல் பாகம்
ஆசிரியர்	:	மரு. செ. பிரேமா, எம்.டி.(சி) இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், சித்த மருத்துவத் துறை, தமிழ்ப்பல்கலைச் கழகம், தஞ்சாவூர்
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2022
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ. x 14 செ. மீ
நூலின் தன்மை	:	சித்தர் இலக்கியம்
அச்சுத்தாள்	:	16.6 கி.கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	378
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரூ. 250
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

91/4

ஔவை நடராசன்
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
வாகை,
தஞ்சாவூர் 613005

தேதி 8 - 12 - 95

வாழ்த்துரை

மேனாட்டு மருத்துவம் நம் நாட்டில் பரவுவதற்கு முன்னர், பழங்காலந்தொட்டே ஒரு வகையான இயற்கை மருத்துவம் இங்கு நிலவியது. மருந்தே உணவாகவும், உணவே மருந்தாகவும் கொண்டு நம் முன்னோர் வாழ்ந்தனர். போரில் மாண்டனர் என்று புகழப்பட்டனரேயன்றி நோயில் மாண்டவர்கள் என்று இகழப்பட்டோர் பலராகவில்லை. "நோயின் றியன்ற யாக்கையர்," ஊன்று விரல் அழுந்தா உடம்பினர் என்றெல்லாம் தமிழ்மக்கள் பாராட்டப்பட்டனர். மருத்துவத்தை மரபான வாழ்க்கைத் தொழிலாக அந்நாளிலேயே கொண்டவர்கள் உண்டு. எனினும், பிற்றை நாளைய பேதைமையால் மருத்துவச் செய்திகள் மறைபொருளாகவே வழிவழியாக இருந்துவிட்டன. மரபு மருத்துவம் அந்நாட்டு மக்களின் கருவூலம் என்ற நோக்கில் மருத்துவச் செய்திகளை பல பாடல்களாக மருத்துவப் புலவர்கள் பாடிச் சென்றனர்.

நலம் விளைக்கும் மருத்துவம் என்ற பொருளில் சித்தி மருத்துவம் என்றே பெயர் வழங்கியிருந்திருக்கும். பின்னர் சிந்தனையாளர்களைச் சித்தர் என்று மக்கள் குறித்தால் சித்த மருத்துவம் என்ற பெயர் அமைந்ததுபோலும் சித்தர்களுக் கொல்லாம் தலைவராகக் கருதப்பட்ட அகத்தியர் பெயரில் இன்று சித்த மருத்துவம் தன் பெருமையை மீண்டும் நிலை நாட்டி வருகிறது. ஓலைச்சுவடிகளில் கிடைத்த பாடல்கள் அகத்தியர் பாடல்களாகக் குறிக்கப்படுகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவத்துறை, ஓலைச்சுவடித்துறை ஆகிய இரு துறைகள் உள்ளன. இவை இரண்டுமே சுவடிகளில அடங்கிய மருத்துவச் செய்திகளைப் பதிப்பித்து நாட்டுக்கு வழங்கியுள்ளன.

சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் சே. பிரேமா அம்மையார் அவர்கள் அகத்தியர் மணி 4000 என்ற இந்த நூலை

வனப்புறப் பதிப்பித்து வெளியிடுகிறார். இந்நூலிலுள்ள மருத்துவச் செய்திகள் முறையாக ஆராயப்பட்டு அறிவியலாளர்களால் தக்கவையென ஏற்கப்படவேண்டும். சிற்றூர் மக்களிடம் பரவியிருந்த மூலிகை யறிவு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இருப்பதை இழப்பதில் நமக்கு நிகர் யாருமில்லை. இனியேனும் நாம் விழப்புற்றுத் திகழ வேண்டும் சித்த மருத்துவம் என்பது ஒரு சாராருக்கு மட்டும் உரிய மருத்துவம் என்ற நிலை மாறவேண்டும். பள்ளிப் பாடல்களில் கூட மூலிகை பற்றிய தகவல் சேர்க்கப்படவேண்டும்.

டாக்டர் சே. பிரேமா அவர்கள் அரும்பாடுபட்டு இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். புலமையும் திறமையும் ஒய்வில்லாது உழைக்கும் பெருமையும் பூண்ட டாக்டர் பிரேமா அம்மையாரைப் பாராட்டி மகிழ்கிறேன். இந்நூலைத் தமிழுலகும், மருத்துவ உலகும் இருகரம் நீட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

(ஓ - ம்) ஔவை நடராசன்

மணி 4000 என்னும் அகத்தியர் வைத்திய சிந்தாமணி
வெண்பா 4000

என்னுரை

மணி 4000 என்னும் அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 என்னும் இந்நூலுக்கு யான் பதிப்பாசிரியர் என்பதில் மிகவும் பெருமை அடைகின்றேன். தஞ்சை சரபோஜி மஹாராஜாவின் சரஸ்வதி மஹால் நூலகத்தில் சுவடி எண் 250 வைத்திய சிந்தாமணி என்ற பெயரில் 1345 வெண்பாப் பாடல்களைக் கொண்ட சுவடியைப் பதிப்பிற்காக தெரிவு செய்து தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களிடம் அனுமதி கோரினேன். அவர்களும் அனுமதி அளித்து இத்துறையில் வல்லுநர் சிலரிடம் கருத்துக் கேட்கும் படிக் கூறினார். அவ்வாறு கருத்துக் கேட்கப்பட்டபோது முன்னாள் சித்த மருத்துவத்துறை இயக்குநர் மறைந்த டாக்டர் க. சு. உத்தமராயன் அவர்கள் சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்கு மணி 4000 என்ற சுவடி பதிப்பிற்கு டாக்டர் ஆர். தியாகராசன் அவர்கள் 1000 பாடல்களுக்கு உரை எழுதிக் கொடுத்ததாகவும் அது இந்நாள்வரை அச்சியற்றப்படவில்லை எனவும் தெரிவித்தார்கள். இதே கருத்தை டாக்டர் ஆர். தியாகராசன் அவர்களும் தெரிவித்தார்கள். 1897 ஆம் ஆண்டில் திரு. கந்தசாமி அவர்களால் பதிப்பிக்கப் பெற்ற சட்ட முனிவர் வாதகாவியம் 1000 என்ற அச்சு நூலின் முதல் பக்கத்தில் மணி 4000 என்ற நூல் அச்சில் உள்ளதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு நூல் எதுவும் வெளிவரவில்லை, என்பதை டாக்டர் ஆர், தியாகராஜன் அவர்களிடமிருந்து அறிந்து கொண்டேன். இதன் பின்னர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வ. ஐ சுப்ரமணியன் அவர்களுடைய இசைவுடன் 1986 ஆம் ஆண்டில் தொடங்கி 3 ஆண்டில் முடிக்கும் திட்டமாக இதனை எடுத்துக் கொண்டேன்.

இப்பணி தொடர்பாகச் சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து அகத்தியர் வைத்திய சிந்தாமணி 4000 (ஆர். 2282) என்ற சுவடியும் சிந்தாமணி, தாதுநிதானம் (ஆர். 3500, 3501) என்ற சுவடிகளின் கையெழுத்துப் பிரதியும் இரவல் வாங்கி வரப்பட்டது. இதில் வைத்திய சிந்தாமணி என்ற சுவடி விருத்தப்பாவினால் அமைந்திருந்தது. 12 -ஆம் பாடலிலிருந்து துவங்கிய இச்சுவடியில் இரசவாத முறைகளே அதிகம் காணப்பட்டன. நான் எடுத்துக் கொண்ட தலைப்பு மணி வெண்பா 4000 என்பதால் வெண்பா வடிவில்

அமையாத இச்சுவடியை நீக்கித் தாதுநிதானம் என்ற சுவடியைப் பிரதி செய்து கொள்ளப்பட்டது. இதிலிருந்த பாடல் எண்ணிக்கை 1250 வைத்திய சிந்தாமணி என்ற பெயரில் வெண்பாப் பாடல்களாக உள்ள சுவடிகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப் பட்டன.

பிரதி செய்து வைத்துள்ள வெண்பாப் பாடல்கள். மற்ற சுவடிகள், தாள் சுவடிகள், அச்சு நூல்களுடன் ஒப்பு நோக்கிப் பாடபேதங்கள், அதிகமான பாடல்கள் போன்றவை குறிக்கப் பெற்றன. தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ள வைத்திய சிந்தாமணி (சு. எண். 250) என்ற சுவடியில், இந்நூல்களின்கண் உள்ள உள்தலைப்புகளும், அவற்றின் பாடல் எண்ணிக்கையும் கூறப்பட்டுள்ளன. அதன் எண்ணிக்கை 2672 ஆனால் இச்சுவடியில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை 1345 மட்டுமே ஆகும். மேலும் இந்நூலுடன் ஒப்புநோக்கப்பட்ட எந்தச் சுவடிகளிலும் இல்லாத வகையில் தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகச் சு.எ. 157194, 200 ஆகிய சுவடிகளில்

1) "சோதியின் ஒளியில் நின்று
துலங்கிய முகம்ம தாவே
ஆதியிப் புவனம் தன்னில்
அமைப்பித்த ஆதந்தன்னால்
சாதி இரண்டான போதே
சகலநோய் விபரம் எல்லாம்
ஓதிய சிந்தாமணிக்கு
உடையவன் காப்புதானே."

2) "முந்தாதி யந்தமிழால் முதுலகி லேவைத்திய
சிந்தா மணிவெண்பா செப்புதற்கு - நந்தா
திரும னுலகாதி எவ்வுயிர்க்கும் தாயாம்
ஒருவன் துணையா கவும்"

என்னும் இவ்விரு பாடல்களும் நூல் முதலில் எழுதப் பட்டுள்ளன. இச்சுவடிகள் இரண்டும் மஸ்தான் சாயுபு, காதர் பாட்சா ஆகிய இரு முஸ்லீம்களால் எழுதப்பட்டவை என்பதற்கான குறிப்பும் அதில் உள்ளது.

வைத்திய சிந்தாமணி வெண்பா என்ற பெயரிலிருந்த சுவடிகளை மட்டுமே தேடி ஒப்புநோக்கி வந்தபோது எதேச்சையாக வேறு சித்தர்களின் பெயர்களிலிருந்த சுவடிகள் சிலவற்றில் இந்நூலில் உள்ள பாடல்கள் சில காணப்பட்டன. இதனால் வெண்பா முறையில்

பாடப்பட்டுள்ள அனைத்துச் சுவடிகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதன்பின் இந்நூலுக்குத் தொடர்பானவை எனக்கருதப்பட்டச் சுவடிகள் ஒப்புநோக்கப்பட்டன. ஒரு சில பாடல்களுக்காக பலமாதங்கள் செலவு செய்து பல்வேறு சுவடிகள் மற்றும் அச்சு நூல்களைத் தேடி அலைய வேண்டியிருந்தது. உதாரணமாக வாதநிதானம் பித்த நிதானம் என்ற தலைப்புகளில் பாடல்கள் கிடைத்தன. இத்தலைப்புகளைக் கொண்டு கபநிதானம் என்ற பெயரில் பாடல்கள் இருக்க வேண்டும் என்பதற்காக பல சுவடிகளை ஆய்ந்து பின்னர் தஞ்சையிலிருந்த மத்திய சித்த ஆயுர்வேத ஆய்வுக் கழகத்தில் நூலாய்வுப் பிரிவில் இதற்கான பாடல்களை கண்டுபிடித்துச் சேர்க்கப்பட்டது.

"தன்வந்திரி வைத்திய சிந்தாமணி" எனும் பெயரில் விருத்த மாகவும், வெண்பாவாகவும் வெவ்வேறு விதமாகப் பாடப்பட்டுள்ள சுவடிள் சில உள்ளன. இவற்றுள் வெண்பா முறையில் பாடப்பட்டுள்ள சுவடிகள் மணி 4000த்திற்கு ஒப்பாக உள்ளன. ஆயினும் தன்வந்திரி என்று பாடலின் இடை இடையே வருகின்றது. இதில் 1500 பாடல்கள் உள்ளன.

அகத்தியர் வைத்தியம் 100 (சு.எ.ஆர். 6447 GOML) வைத்திய வெண்பா (ஆர் 4396 GOML) தேரையர் நோயின் சாரம் (ஆர் 3413ஆர் 5430 GOML) வைத்திய சிந்தாமணி (38 SML) .அகத்தியர் 2000 என்ற அச்சுநூல் ஆகியவற்றில் மணி 4000த்தை ஒத்த பாடல்கள் காணப்படுகின்றன. மணி 4000த்தில் உள்ள வெண்பாக்கள் ஒரு தலைப்பில் உள்ள பாடல்கள் மட்டும் அந்தாதியாக உள்ளன. உதாரணமாக கஸ்தூரி மாத்திரை என்று எடுத்துக்கொண்டால் அதற்குரிய 2 பாடல்கள் மட்டும் அந்தாதியாக அமைந்துள்ளன. ஆனால் மேற்கண்ட சுவடிகள் அனைத்திலும் உள்ள 133 பாடல்களும் அந்தாதியாகவே அமைந்துள்ளன.

இதன் முதல் பாடல்

"ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை ஆய்ந்து
சீரியதாம் செந்தமிழிற் செப்பவே - மாரியென
வெள்ளமுதல் பொழியும் வேழ முகமுடைய
வள்ளலே யென்மனத்துள் வா"

என்று தொடங்குகிறது. இந்நூலை இன்னார் செய்தார் என்ற குறிப்பு எதுவும் எங்கும் காணப்படவில்லை.

சென்னை அடையாறு மருந்து செய்நிலையத்தில் வைத்திய சிந்தாமணி என்னும் மேற்கோளுடன் 1. திராட்சாதி சூரணம், 2. ஆர்த்தரா கண்டாவலேஹ்யம். 3. கிருமி முத்கர ரஸ, 4. மஹா சன்னிபாத பைரவரஸ, 5. சூலைக் குடாரம், 6. சுவாசக் குடாரரஸ, 7. இராஜ மிருகாங்கரஸ 8. ஸ்திகா பரண் ரஸ 9. வங்க பஸ்ம ஆகிய 9மருந்துகள் செய்து விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நூலின்கண் நாடி, முக்குற்ற நிதானம், முக்குற்ற சுரம், சட்ரசம், பேடசம், கற்கம், குடிநீர், சுத்திமுறை, பற்பம், செந்தூரம், மாத்திரை, லேகியம், இரசாயனம், சூரணம், வடகம், எண்ணெய், நெய், தைலம், பலரோகத்திற்கு மருந்து போன்றவைகள் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை 2346 பாடல்களே கிடைத்துள்ளன மீதமுள்ள பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை. கிடைத்த வரையிலான பாடல்கள் தற்போது உரையுடன் அச்சியற்றப்பட்டு உள்ளன.

வைத்திய சிந்தாமணி என்ற பெயரில் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் நூல்கள் உள்ளன. மலையாளத்தில் சிந்தாமணி வைத்தியர் என்ற ஒரு மருத்துவப் பரம்பரையினர் உள்ளனர். இவர்கள் வைத்தியசிந்தாமணி நூலில் உள்ள மருந்துகளைப் பயன்படுத்தி மருத்துவம் புரிவோர் என்பர். தெலுங்கில் உள்ள வைத்திய சிந்தாமணி நூலில் பிரகரணங்களாகப் பிரிக்கப்பட்டு உரிய குறிகுணங்களும் மருந்துகளும் விவரிக்கப்பட்டள்ளன.

இந்நூலாக்கப் பணியின்போது மணிவெண்பா 4000 என்பது ஆயுர்வேத நூல் எனவும் இதனைப் பதிப்பிக்கத் தேவையில்லை எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அகத்தியர் பெயரால் உள்ள நூல்களைத் தொகைப்படுத்தப் படும் அனைத்து இடங்களிலும் இந்நூலின் பெயர் காணப் படுகிறது. ஆயினும் பேடசம் என்ற பிரிவில் காணப்படும் செய்யுள்களில் சரகா், சுசுருதர் போனற பெயர்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இந்நூலிலுள்ள மருத்துவக் குறிப்புகள் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் பயன்தர வல்லது என்பதில் ஐயமில்லை.

பல எளிமையான மருந்து செய்முறைகளும் சில அரிய மருந்துகள் பற்றிய குறிப்புகளும் அடங்கியுள்ள இந்நூல் மருத்துவத் துறையைச் சார்ந்த அனைவருக்கும் மிகவும் பயன்தரக்கூடிய நூல். இந்நூலில் குறைகின்ற பாடல்களை ஈடு செய்ய இது தொடர்பான சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சு நூலகள் போன்றவை இருப்பின்

அவற்றை எனக்கு இரவல் தந்து உதவினால் இதன் அடுத்த பதிப்பு மேலும் செம்மையாக வெளிவர உதவும்.

இந்நூலாக்கப் பணிக்கு அனுமதி அளித்து அதற்குரிய அனைத்து உதவிகளையும் செய்துகொடுத்த தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வ. அய். சுப்பிரமணியன் அவர்களுக்கு என் முதல் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இந்நூலை அப்பெருந் தகைக்கே சமர்ப்பணம் செய்கிறேன். இந்நூலாக்கத்திற்கு உறுதுணை புரிந்த தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் முனைவர் ச. அகஸ்தியலிங்கம், முனைவர் சி. பாலசுப்பிரமணியன், இந்நூலுக்கு வாழ்த்துறை வழங்கிய முன்னாள் துணை வேந்தர் அவ்வை நடராஜன் ஆகியோர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூல் பதிப்பிற்கு அனைத்து ஆலோசனைகளையும் வழங்கி, தம்மிடமிருந்த இந்நூல் தொடர்பான கையெழுத்துப்படியினை ஒப்பு நோக்குவதற்குக் கொடுத்து உதவிபுரிந்ததோடல்லாமல் இந்நூலினை நுண்ணாய்வு செய்து கொடுத்த என் ஆசிரியர் மரு. ஆர். தியாகராஜன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்குரிய சுவடிகளைப் பெயர்த்தெழுதி சுவடி நூலகங்களுக்குச் சென்று பாடல்களை எழுதிவந்து இந்நூலாக்கத்திற்குத் தேவையான உதவிகள் செய்த திருமதி க. இலலிதாம்பிகா, செவ்வி மா சத்தியபாமா புலவர் ப. வெ. நாகராஜன், என் கணவர் மரு. ச. அரங்கராஜன் அவர்களுக்கும் பிழைத்திருத்தம் செய்து ஆய்வுரை எழுதியளித்து அவ்வப் போது ஆலோசனைகளையும் வழங்கிய திரு. பாவலர் பால சுந்தரம் அவர்களுக்கும் என் நன்றி உரியது. தெலுங்கு வைத்திய சிந்தாமணி அச்சுநூலின் தலைப்புகளை தமிழில் மொழி பெயர்த்தளித்து என் பணிக்குத் துணைபுரிந்த மறைந்த திரு. டி.வி. பட்டா அவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன். இந்நூலை அச்சியற்றுவதற்கு முன்வந்த தாமரை நூலகத்தாருக்கு என் நன்றி உரித்ததாகும்.

இந்நூலாக்கப் பணியில் உதவிபுரிந்த சரஸ்வதிமஹால் சுவடிகள் நூலகம், ஓரியண்டல் சுவடிகள் நூலகம், அறிஞர் அண்ணா மருத்துவத்துறை இயக்குநரகம், சென்னை மத்திய சித்தா ஆயுர்வேத நூலாராய்ச்சிப் பிரிவு, பாண்டிச்சேரி பிரஞ்சிந்தியக் கழகம், ஓரியண்டல் சுவடிகள் நூலகம், திருவனந்தபுரம், தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை ஆகியவற்றிற்கும் என் நன்றியுரியதாகும்.

செ. பிரேமா

ஆய்வு அறிமுகவுரை

சித்தர் நூல் மருத்துவம் பற்றிச் சில குறிப்புகள்

தமிழர்களின் வாழ்வு, வாழ்நிலம், கலையுணர்வு, பண்பாடு முதலியவற்றைக் கருதும்போது இன்றைக்கு நிலவும் வரலாற்றுச் சான்றுகளின்படி சிந்துநதி, கங்கை நதி நிலப் பரப்பு முதல் கடல் கொண்டது போக எஞ்சியிருக்கும் ஈழம் வரையுள்ள நிலப்பரப்பில் பழந்தமிழ் மக்கள் பரவி வாழ்ந்திருந்தனர் என்பது புலனாகின்றது.

தொல்காப்பியர் வாழ்ந்த கால எல்லையில் தமிழகப் பரப்பு வடவேங்கடம், தென்குமரி ஆகிய எல்லைக்குள் சுருங்கி நின்றது என்பது தொல்காப்பியப் பாயிரத்தால் தெரிகின்றது. பின்னர் அந்நிலம் சேர. சோழ, பாண்டியர் என்னும் தொல் குடியினரால் ஆளப் பெற்றுவந்த காலத்தில் வட பகுதியினின்று பல்வேறு குறிக்கோளுடன் வந்தேறிய மக்கள் தொடர்பு காரணமாகச் சோழ நாட்டு வடபகுதி தெலுங்கு, கன்னட நாடுகளாகவும், சேர நாடு மலையாள நாடாகவும் சிறிது சிறிதாகத் திரிந்தன. எனினும் பண்டைய உலக நாடுகளுள் ஒன்றாகச் சிறந்த தென்னகம் விளங்கியுள்ளமை வரலாற்றுச் சான்றுகளால் விளங்குகின்றது.

பண்டைத் தமிழர் ஆட்சி, வாணிபம், கலை, பயிர்த் தொழில் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர், கலைகளுள் இயல், இசை, நாகடம், சிற்பம், ஓவியம் உடற் கூற்றறிவியல் முதலியவை குறிப்பிடத்தக்கவை களாகும். அவற்றுள் உடற் கூற்றறிவியல் என்பது மருத்துவக் கலையைக் குறிக்கும். தமிழர் மருத்துவக்கலை மிகச் சிறந்து விளங்கியமைக்கு பலசான்றுகள் உள்ளன.

தெற்கே வடவர் குடியேற்றம் நிகழ்ந்த காலை மத்திய ஆசியா மேற்கு ஆசியாவினின்றும் பலர் வடக்கே வந்து கலந்தனர். அக்காலை பாரதநாட்டின் வடபகுதி ஆரிய நாடு ஆரியாவர்த்தம் என்னும் பெயரால் வழங்கப்பெற்றது. அக்காலத்தில் அன்று நிலவி வந்த மருத்துவ முறைகள் ஆரியர்களின் மருத்துவ முறை கலந்தது. அந்நிலையில் பண்டைய மருத்துவ முறை வடக்கே ஆயுள்வேதமுறை எனப் பெயர் பெற்றது. தெற்கே தமிழ் மருத்துவம் சித்தமருத்துவம் என வழங்கப்பெற்றது.

நோய்நாடல், மருந்து, மருத்துவச் செயல்முறைகளுள் சில ஆயுள் வேதத்திலும் சித்த மருத்துவத்திலும் ஒற்றுமைப் பட்டிருப்பதற்குக்

காரணம் பண்டைய நடை முறையேயாகும். இவ்வரலாற்று நிலையை உணராதார் சிலர் தமிழ் மருத்துவத்திற்கு மூலமும் ஆதாரமும் ஆயுள் வேதமே என மயங்குவர்.

சித்த மருத்துவம் என்பது பண்டைத் தமிழர்கள் கண்டு நடைமுறைப் படுத்திய தூய தமிழ் மருத்துவமே என்பதற்கு சித்த முறையில் கூறப்பெறும் அடிப்படை மருந்துப் பொருள்களுள் தலையாய மூலிகைகள் தமிழக மலைப் பகுதிகளிலும். காடுகளிலும், நீர்ப்படுகைகளிலும் காணப்படுவதிலிருந்தும் சித்த மருத்துவம் பற்றிக்கூறும் மூலச் சுவடிகள் யாவும் தமிழ் மொழியில் அமைந்து தமிழகத்திலேயே வழங்கி வருவதிலிருந்தும் அறியலாம்.

இனி தமிழ் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவம் என்னும் பெயர் அமைந்தமைக்குரிய காரணம் அது சித்தர்களால் உருவாக்கப்பட்டது என்பது பலர் கருத்தாகும். சித்தர் என்றால் அணிமா, லகிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவர் என்பது பொருள் என்பார் அவர். இஃது ஓரளவிற்கு பொருந்துவதே.

இனி சித் என்பதற்குப் பொருள் ஞானம் என்பதாகும். ஞானம் என்பது முக்கால நிலைகளை அறியும் தூய உணர்வாகும். எனவே முக்கால உணர்வுடைய ஞானியர்களால் உருவாக்கப்பட்டது இம்முறை ஆதலின் சித்த மருத்துவம் எனப்பட்டது. எனினும் சித்த மருத்துவ முறையை அருளிய நூலாசிரியர் பலர் முனிவராயும் இருடிகளாயும் இருப்பதைக் காணலாம். அகத்திய முனிவர், மச்ச முனி சட்ட முனி என முனிவர் என்னும் பெயரில் விளங்குவோரே மிக்கிருத்தலானும். அவர்தம் நூல்களுள் இடையிடையே ஞானம் என்னும் தலைப்பில் மணிமந்திரம் யோகம், தவம் ஆகியவை பற்றிப் பேசப்படுவதாலும் இவ்வுண்மை புலனாகும்.

மற்றும் சித்த மருத்துவத்திற்குரிய முறைகள் பாடாணம். உப்பு, உலோகம், மூலிகை முதலிய நிலம் விளைபொருள்களால் செய்யப்படும் மருந்துகளால் மட்டும் நோய்கள் தீரும் என்று கூறாமல் நாள்கோள்களின் நிலைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்பவும் மந்திர யந்திரங்களின் அடிப்படையிலும் நோய்களைத் தீர்க்கும் முறைகளைக் கூறுதலான் இம்மருத்துவம் யோகஞானம் கைவரப்பெற்ற ஞானியர்களால் உருவாக்கப்பட்டது என்பது ஏற்புடையதாகும்.

நூல்: சித்த மருத்துவ நூல்கள் பெரும்பான்மையும் தொல்காப்பியம் முதல் யாப்பருங்கலம் முதலியவை ஈறாக உள்ள

இயற்றமிழ் இலக்கண நூல்கள் கூறும் செய்யுள் இலக்கண யாப்பமைதிகளையும் இசை நூல் கூறும் இசை இலக்கிய யாப்பமைதிகளையும் கொண்டு பாக்களாலேயே செய்யப்பெற்றுள்ளன. இந்நூல்களுள் பயின்றுவரும் பாவகைகள்: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா இவற்றின் வகைகள் தாழிசை, துறை பல்வேறு வகை விருத்தங்கள், சந்தப்பா வண்ணப்பாக்கள் ஆகிய இயற்றமிழ்ப் பாக்களும் சிந்து, கும்மி, கீர்த்தனை என்னும் தருக்கள் ஆனந்தக்களிப்பு ஆகிய இசைத் தமிழ்ப்பாக்களுமாகும், மேலும் இயற்றமிழ்ப்பாக்களுள் சில சூத்திரம் என்னும் பெயராலும் அமைந்துள்ளன.

அவ்வாற்றான் சித்த மருத்துவ நூல்கள் பல காவியம் என்னும் பெயரால் அமைந்துள்ளன. (கவியினால் இயன்றது காவியம்) காவியம் என்னும் பெயருக்கேற்ப அவற்றின் உட்பிரிவுகள் காண்டம் சருக்கம் முதலிய பெயர்களைப் பெற்றுள்ளன. இவற்றுள் உவமை முதலிய பொருளணிகளும், யமகம் (மடக்கு) திரிபு முதலிய சொல்லணிகளும் அமைந்து இலக்கியச் சுவைகளைய்யும் நல்குகின்றன. பெரும்பாலானவை அந்தாதித்தொடையில் அமைந்துள்ளன.

இந்நூலாக்க முறைகளான் சித்தமருத்துவம் என்பது தமிழரால் உருவாக்கப் பெற்ற தமிழ் மருத்துவமே என்பது உறுதியாதலைத் தெரியலாம்.

மருந்து: மருந்து என்னும் சொல் தாவரம் என்னும் பொருளுடைய "மரம்" என்பதனடியாக ஆக்கப்பெற்ற தமிழ்ச் சொல்லாகும். மரம் என்பது மரம் செடி கொடி புல் பூண்டு ஆகிய யாவற்றையும் அடக்கியதொரு தொகுதிப் பெயராகும். மரு என்பதற்கு மணம் (வாசனை) என்பது பொருளாகும். தாவரங்களின் மணம் காரணமாகவே அஃறிணை உயிரினங்கள் அவற்றைத் தெரிந்து கொள்ளுகின்றன. மரு என்பதற்கு மற்றொரு பொருள் மருவுதல் (தழுவியிருத்தல்) மண், கல், நீர் இவற்றைத் தழுவி வளர்வது என்பதாகும். மரு + அம் + மரம் அம்உடைமைப் பொருள்தரும் விகுதியாகும்.

மருந்து என்னும் சொல் மரு ந் து என்னும் மூன்று வரியடிகளால் உருவானதொரு ஒட்டுச் சொல், இதன் பொருள் தாவரங்களால் (மூலிகைகளால்) இனிதாகச் செய்யப்பட்டது என்பதாகும். ந் என்பது நீர்மையையும் இனிமையையும் து என்பது மைத்தன்மையையும் குறிக்கும்.

மற்று, பாடாணம், உலோகம், உப்பு முதலியவற்றாலும் மருந்து செய்யப் பெறுதலின் மூலிகைகளான் ஆனதே மருந்து என்று கூறுதல் பொருந்துமோ எனின் பாடாண முதலியவற்றைப் பக்குவப்படுத்திச் செந்தூரமாகவும் பற்பமாகவும் பிறவகையாகவும் செய்வதற்கு துணையாவது மூலிகைகளே யாதலின் பொருந்துமென்க. மற்று, விலங்கு பறவை நீர் வாழினங்ள் முதலியவற்றாலும் மருந்து செய்யப் படுகின்றனவே எனின் விலங்கு பறவை முதலியவைகள் தாவரத்தையும் அவற்றாலான பொருள்களையுமே உண்டு வளர்தலின் அவையும் தாவரத்தன் திரிபுகளேயாம் என்க.

கற்கால மணிதர்கள் தொடக்க காலத்திலிருந்தே நோய்களுக்கு மூலிகைகளையே பயன்படுத்திக் குணமுற்றமையாலும் சில விலங்குகளும் பறவைகளும் இவற்றுக்கும் தம்மையுற்ற நோய்களைப் போக்கிக்கொள்ள மூலிகைகளை உண்ணுதலானும் அவை மருந்து என்னும் பெயர் பெற்றன. பின்னர் பல்வேறு வகையான நோய்களைத் தீர்க்கும் பொருள் யாவற்றிற்கும் மருந்து என்னும் பெயர் குறியீடாக அமைந்தது.

பசி, அறியாமை, அஞ்ஞானம் முதலியவற்றை நீக்கும் உணவு, கல்வி, யோகம், முதலியவைகளும் ஒப்புமையாக்கத் தா்ல் மருந்து என்று வழங்கப்படுகின்றன.

இருநோக்கிவள் கண்கள் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்று அந்நோய்மருந்து

என்பார் வள்ளுவர்

இவ்வடிப்படையில் மருந்தினை ஆக்குபவனையும் கையாள் பவனையும் மருத்துவன் என்றும் மருந்து கொண்டு இயற்றும் தொழிலை மருத்துவம் என்றும் மக்கள் வழங்கலாயினர்.

வைத்தியன் என்ற சொல் தமிழடியாகத் தோன்றித் திரிந் தமைந்ததொரு வட சொல்லாகும். வித்து மூலம் வித்துக்களைக் கொண்டு தொழில் செய்பவன் வைத்தியன் மற்றொரு பொருள் பாடாணம் முதலியவற்றை வேதித்து மருந்தாக்குபவன் என்பதாகும் வேதித்தலைச் செய்பவன் வைத்தியன். வித்தையை உடையவன் வைத்தியன் என்பது வடநூலார்தரும் விளக்கம்.

உயிருடம்பும் நோய்களும்: உயிரியக்கத்தொடு கூடிய உடம்பு என்பது நிலம் நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களின்

கலப்பினால் அமைந்ததொரு காட்சிப்பொருள், இவ்ஐந்துபூதங்களின் கூறுகளுள் நிலம் என்பது எழுதாதுக்களான் ஆனபருவுடம்பாகும். ஆகாயம் என்பது மனம், புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகக் கரணங்களின் கூட்டமாகிய உள்ளுடம்பாகும். ஏனையவை பருவுடம்பின் முக் குற்றங்களாகும். அவற்றுள் நீர் என்பது சிலேத்துமத்தை (சிலேத்துமத்திற்குரிய தமிழ்ச்சொல் ஐ என்பதாகும்.) அது குளிர்த்தன்மை உடையது. தீ என்பது பித்தம் அது வெப்பத்தன்மை யடையது. வளிஎன்பது காற்று அஃது உலவும் தன்மையுடையது ஓர் உடம்பின் கண் இயற்கையாக அமைந்துள்ள ஐம்பூதக் கூறுகளுள் உடம்பு ஏனைய நான்கு பூதங்களுக்கு முரிய இடமாகும். ஆதலின் அவை குறையினும் மிகினும் திரியினும் நோய்களைச் செய்யும். ஆகாயக் கூறாகிய அந்தக் கரணங்கள் திரியின் அது மன நோயை உண்டாக்கும் மன நோயும் உடம்பையே தாக்குதலான் மருத்துவநூலோர் உடற்குற்றமாக நோய்செய்வன ஐ. வளி, பித்து என்னும் மூன்றையே தலையாய குற்றங்களாக எண்ணினர்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

என்பது வள்ளுவர் கூற்று.

நோய் என்பது காற்று வெப்பம் பனி மழை என்னும் புறப்பொருள்களின் நுகர்வாலும் பருகும் நீர் தின்னும் உணவு கொள்ளும் காற்று என்னும் அகத்தேநுகரும் பொருள்களாலும். தோன்றுவனவாகும். இவையன்றிக் கொக்கு முதலிய சிற்றுயிர்களாலும் நோய் உண்டாகும். மேலும் அச்சம், வெகுளி, ஆசை, காமம், அழுக்காறு முதலிய தீய குணங்களாலும் நோய்கள் வரும், இங்ஙனம் பருவுடம்பும் நுண்ணுடம்புமாகிய இருவகை உடம்பும் பற்றி நோய்கள் தோன்றுதலான் சித்த மருத்துவம், மருந்தினை பணி மந்திரம் மருந்து (ஔடதம்) என்னும் மூன்று கூறுகளையுடையதாக அமையலாயிற்று.

இவற்றுள் மணி என்பது நாள் கோள்களின் இயக்கங்களாகிய காலத்தை உணர்த்தும் நாளும் கோளும் ஒளியோடு கூடியதிரண்ட பொருள்களாதலின் அவை மணி எனப்பட்டு ஆகுபெயரான் காலத்தை உணர்த்திநின்றது. இதனை

உற்றானளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்

என்னும் திருக்குறளாலும் மருந்து செய்வதற்கும் நோயாளர்க்குக் கொடுத்தற்கும் உரிய பொழுது, நாள், கிழமை, விண்மீண், பருவம் முதலியவை பற்றிச் சித்த மருத்துவ நூல்கள் கூறும் கூற்றுகளாலும் உணரலாம். இதற்கு மாறாகச் சித்த மருத்துவர் பலரும் ஆய்வாளர்களும் பாதரசம் முதலியவற்றைக் கட்டிச் செய்யும் குளிகைகளையே மணி எனக் கருதிக் கூறிவருகின்றனர்.

மந்திரம்: மந்திரம் என்பது ஆகாயபூதத்தின் தன் மாத்திரையாகிய ஒலிக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு ஓதப்பெறுவதாகும். மந்திரங்கள் மூல எழுத்தொலி துணை ஒலி கூட்டொலிகளாக அமையும், இம்மந்திர ஒலிகள் எல்லா மொழிகட்கும் பொதுவாகும்.

சித்தர் நூல்களில் பூஜாவதி - ஞானம் என்னும் தலைப்புக்களில் மந்திரம் பற்றிய செய்திகளும் விளக்கங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். வாதபித்த கபங்கள் என்னும் மூன்றின் திரிபுகளால் நிகழும் நோய்களைப் போக்குவதற்குரிய பொருள்களான மூலிகை உப்பு உலோகம் பாடாணம் ஆகியவற்றை மருந்துக்காகக் கொள்ளும்போதும், மருந்துகளைக் கூட்டும்போதும், அரைக்கும்போதும், புடமிடும் போதும் நோயாளர்க்கு அளிக்கும் போதும் மந்திரங்களை உள்ளொலியாக இசைத்தல் மரபாகும்.

ஒரு மூலிகையை பறிப்பதற்குமுன் நாள் கோள் கிழமை பொழுதுகளைக் கணித்தறிந்து மந்திரத்தொடு காப்புக்கட்டிப் பலியிட்டுப்பின் பறித்துக் கைக் கொள்ளவேண்டும். கைக் கொள்ளும் போது அவற்றிற்குரிய தெய்வங்களை முறைப்படி வழிபட்டுப் பின்னர் சமூலமாகவோ, வேர் தண்டு கிளை இலை, பூ பிஞ்சு, காய் கனிகளாகவோ கைக்கொள்ள வேண்டுமென்பது சித்தர் நூல்களில் காணப்படும் மரபாகும்.

மருந்துகளின்றி இலையடித்தல், நீராட்டல், புகையூட்டல் முதலிய காரணங்களால் நோயைப் போக்குதற்கு மத்திரங்களைச் செபிக்கும் வழக்குமுண்டு. இவ்வகையில் பூச்சிக்கடி தேள், பாம்பு, பூரான் முதலியவற்றின் விஷங்களை நீக்கும் மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன.

மேலும் காமாலை, சித்தப்பிரமை, வயிற்றுவலி, சுளுக்கு, சுரம் முதலிய நோய்களை மந்திரங்களால் போக்கும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. மந்திரங்களைத் தகட்டில் எழுதிச் செபித்து, அத்தகட்டின் மூலம் நோய்களைப் போக்கும் முறைகளும் மந்திர நூல்களில் கூறப்படுகின்றன. இம்மந்திரப் பிரயோகம் மருந்தினும்

மேம்பட்ட தாகலின் காலத்தைக் குறிக்கும் மணி என்பதன் பின்னும் மருந்திற்கு முன்னுமாக நடுவே வைக்கப்பட்டுள்ளது.

மணி மந்திரம் மருந்து என்னும் இவ்வடிப்படையில் தான் அகத்தியர் முதலிய ஞானயோகச் சித்தர்களின் மருத்துவ நூல்கள் அமைந்துள்ளன. அவையாவும் செவி வழிப்பாடமாக வழிவழியாகக் கற்றுப் பின்பற்றி வரப்பெற்றுள்ளன. ஒரு காலத்தில் இம்மருத்துவ முறைகளை ஆர்வமுள்ள யாவரும் கற்றுப் பணியாற்ற வேண்டு மென்னும் பெருநோக்கில் எழுத்துருவில் நூல்கள் இயற்றப்பெற்றன. அவை உரைநடையில் அமையின் மிக்கும் குறைந்தும் விடபட்டும் வழுவுற்றும் சிதைந்துவிடும் என்னும் நெடுநோக்கினால் சித்த மருத்துவக் கருத்துக்களை அச்சித்தர்களிடமும் அவர் பரம்பரையினரிடமும் கற்ற மாணாக்கர்கள் அவற்றை எதுகை மோனையமைந்த சீர்களால் வரையறைப்படும் அடிகளைக் கொண்ட செய்யுள் வடிவில் இயற்றிப் பாதுகாத்து வந்தனர், அவற்றுள் இடைச் செருகல் நேராமலும் விடுபட்டுப் போகாமலும் காத்தற் பொருட்டுப்பாக்களைப் பெரும்பாலும் அந்தாதியாக அமைத்து வைத்தனர்.

மூலச்சுவடிகளும் படி எடுப்போரும்: மூலச்சுவடியிலிருந்து படியெடுப்போர் அத்துறையில் பயிற்சியும் யாப்பிலக்கண அறிவும் உடையராயிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி ஓலையைப் படிக்குந்திறனும் ஓலையில் எழுதும் திறனும் மட்டுமே வாய்க்கப் பெற்றோரால் படி எடுக்கப்பெறின் அவற்றில் பல்வேறு வகையான பிழைகள் நேரும். பெரும் பாலான ஏடுகள் கூலிக்குப் பணியாற்றுவோரால் படியெடுக்கப் பெற்றனவாக்வே உள்ளன. மருத்துவச்சுவடிகளைப் படியெடுப்போர்க்கு மருந்திற்குரிய சரக்குகளின் பெயரும் அவற்றிற் குள்ள பிரதிப் பெயர்களும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். அதனோடு அந்நூல் எவ்வெப்பாக்களான் பாடப்பட்டு உள்ளனவோ அப்பாக்களின் இலக்கணமும், எழுத்திலக் கணமும் சொல்லிலக்கணமும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். இன்றேல் பாடங்கள் பலவாக வேறுபடும். இன்றைக்கு கிடைக்கும் நூல்கள் பெரும்பாலும் பல்வேறு பிழைகளுக்கு ஆட்பட்டனவாகவே உள்ளன. மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிப் போர்க்கும் மேற்கூறியவை பொருந்தும.

மேற்கூறிய குறிப்புக்களின் அடிப்படையில் இனி இந்நூலைப் பார்ப்போம்.

நூற்பெயர்: இந்நூலின் பெயர் அகத்தியர் மணி 4000 என உள்ளது இதற்கு அகத்தியர் மணிவெண்பா 4000 என்றும் பெயர்கள் உண்டு என்பது பதிப்பாசிரியர் குறிப்புக்களால் தெரிகின்றது. மணி என்பது சிந்தாமணி என்பதன் முதற்குறை சிந்தனைக்கு மாணிக்கம் போல்ஒளிதருவது என்பதும் சிந்தனைக்கு முடி மணியாக விளங்குவது என்பதும் இதன் பொருளாகும்.

வெண்பா என்பது நூற்கருத்துக்கள் அமைந்துள்ள வடிவத்தின் பெயர் வெண்பா பல வகைப்படும். அவற்றுள் இந்நூல் நேரிசை வெண்பாவால் ஆக்கப் பெற்றுள்ளது. இதன் இலக்கணம் இரண்டு நாற்சீர் முச்சீர்களுக்கு இடையே முதலிரண்டடிகளில் அமைந்துள்ள எதுகை நயத்தோடு ஒரு தனிச்சீர் அமைந்து வெண்டளை பிறழாமல் செப்பலோசையுடையதாய் இறுதிச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றாக முடிந்திருப்பதாகும். 4000 என்பது பாடலின் தொகை.

இந்நூலின் இடையே உள்ள 99ஆவது செய்யுள் சிதைந்த கலித்துறையாப்பில் அமைந்தது. அது காப்புச் செய்யுளாகும் என்பது "துரிசாயுகந்திட வாதவெண்பாவுக்குத் துணை முகமதுவே காப்பு" என்னும் இறுதியடியால் புலனாகின்றது.

நூலாசிரியர்: இந்நூலின் ஆசிரியர் அகத்தியர் என்பது இதன் தலைப்பினால் விளங்குகின்றது. அகத்தியர் என்னும் பெயருடைய இவர் வடமொழி தென்மொழி நூல்களுள் பாக்களாகக் காணப் படுகின்றார். சிவபெருமானருளால் தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்தவர். பொதியமலையில் வாழ்ந்தவர் (வாழ்பவர்) முனிவர் எழுவருள் தலையாயவர் என்று புராண வரலாறுகள் கூறுகின்றன.

இவருக்கு உள்நாட்டிலும் அயல் நாடுகளிலுமாக மாணவர் பலர் இருந்தனர் என்பது இவர் பெயரால் உள்ள மருத்துவ நூல்களால் புலனாகின்றது. இவர் பெயரால் சிற்றகத்தியம் பேரகத்தியம் என்னும் இயற்றமிழ் இலக்கண நூல்களும் அகத்தியர் தேவாரத்திரட்டு என்னும் தோத்திரத்திரு நூலும் அகத்தியர் பெருந்திரட்டு, விதி நூல் மூவகைக் காண்டம், வைத்திய சிந்தாமணி, வைத்தியக் கண்ணாடி, வைத்திய காவியம் 1500, 1690 கர்மவியாபகம் கரிசில், பற்பம் 200, தண்டகம், நாடி முதலிய மருத்துவ நூல்களும் சக்திசாலம், சண்முகசாலம் என்னும் சால நூல்களும் பல சோதிட நூல்களும், மந்திர நூல்களும் காணப்படுகின்றன.

இவரைப்பற்றிப் பேராசிரியர் பலர் ஆய்வு செய்து நூல்கள் பல இயற்றியுள்ளனர் ஆதலின் இவரைப்பற்றி இங்கு விரிவாய் ஆய்வு செய்யாமல் ஒரு கருத்தை மட்டும் கூறுகின்றேன். கலைநூல் பலவற்றிற்கு ஆசிரியராகவும் போதகாசிரியராயும் முற்காலத்தில் திகழ்ந்த அறிவாற்றல் மிக்க ஞானி ஒருவரின் பெயர் அகத்தியர் என விளங்கியமையால் அவர் சீட பரபம்பரையைச் சார்ந்த பலர் அவர் பெயரை மூலபீடப் பெயராகக் கொண்டு நூல்கள் இயற்றி வந்துள்ளனர் என்பது புலனாகின்றது. இவற்றுக்குக் கண்கூடாக நூல்கள் உள்ளமையால் அவற்றுள் கூறப்படும் செய்திகளே நமக்கு முக்கியமாகும். நூலாசிரியரின் காலம் பிறப்பு வளர்ப்பு முதலியன பற்றித் தடுமாறத் தேவையில்லை என்பது எனது கருத்தாகும்.

நூற்பொருள்: முதற்பாகமாகிய இந்நூலுடன் 1092 செய்யுள்கள் உள்ளன. அவற்றுள் கடவுள் வாழ்த்தாகக் காப்பாக உள்ள எட்டுச் செய்யுள் தவிர்ந்த ஏனையவை மருத்துவத் தொடர்பான கருத்துக்களைக் கூறுகின்றன:

அவை வருமாறு: அட்டவித பரிட்சை (6) நாடிப் பரிட்சை (7) நாடிபார்க்கும் முறை (8) நாடி இலட்சணம் (9 - 14) தேகம், நிறம் மொழி நேத்திரம் மலம் சலம் நா இவற்றின் பரிட்சைகள் (15-21) அசீரணம் நான்கின் பெயர் (22) சப்தசுரத்தின் பெயர் அவற்றின் குணங்கள் (23-43) சன்னிவகைகள் விவரம் (44-62) எழுவித தோடங்கள் பற்றிய விவரம் (63-73) அதிசார விவரம் லட்சணங்கள் (74-86) நாடி விகற்பப்பட்டவர் (87, 88) இலக்கணத்திற்கு அபாத்திரர்கள் (89) சுரரோகி சிகிச்சை விவரம் (90-94) வைத்தியன் லட்சணம் (95-96) நோயாளன் இலக்கணம் (97-98) வாத நிதானம் (99-101), வாத வகைகள் (102-165) பித்த நிதானம் (166) பித்த வகைகள் (167-186) சிலேத்தும நிதானம் (187) சிலேத்தும வகைகள் (188-202) வாதபித்த சிலேத்துமங்களுக்குக் கியாழம் (203-353) சூரணங்ள் (354-475) தொடர்ச்சி (770-772) வடக வகைகள் (476-506) மண்டூரங்கள் (507-513) இரசாயனங்கள் (514 - 552) தொடர்ச்சி (621 - 624) பாடக்ர அரிதகி (552 - 560), இலகனபுட்டி (561 - 573) அட்ட குன்ம குடோரி (574-576) கௌதமி தக்கிரலசுனம் (572 - 582) கோழிக்கடுகு (583- 593). சூலைப் பிடாரம் (594-597) எலுமிச்சங்கடுகு (598-603) பற்பவகைகள் (604-611) ஒற்றடம் (612-617) சினேகபொட்டணம் (618-620) லேகியங்கள் (625-775) தொடர்ச்சி (990-1007) நெய்வகைகள் (777-806) கிருதம் (807-905) திராவகம்

(906-911) தோடசுத்தி பாதரசசுத்தி முதலிய சுத்திகள் (915-945) செந்தூரங்கள் (946-976) பற்பங்கள் (977-989) இரசபூபதி (1008-1010) குமாரன்கள (1011-1035) தொடர்ச்சி (1052-1059) ரசங்கள் (1039-1051 -1060-1092) என்பனவாகும்.

ஒரு சிறு குறிப்பு; கி. மு. வுக்குப்பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றி வளர்ந்து வந்த இத்தமிழ் மருத்துவமுறை பின் தோன்றிய சமண பௌத்த சமயத் துறவியராலும் தென்னகத்திற்கு வந்தேறிய வைதிக முனிவர்களாலும் பேணப்பட்டு வந்தது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் 6, 7-ஆம் நூற்றாண்டு வரை தென்னகம் சமண பௌத்த கோட்பாடுகளை ஏற்று வைதிகத்திற்கு எதிராக ஆட்சி புரிந்த களப்பிரர் சில பல்லவ மன்னவர்கள் ஆதிக்கத்தில் வாழ்ந்த சில சாமான்ய துறவியரால் தமிழ் மொழியில் அமைந்திருந்த சுவடிகள் அழிக்கவும் மாற்றவும் பட்டன அக்கால கட்டங்களில் வாய் மொழி வாயிலாகவும் உரைநடைக் குறிப்புக்கள் வாயிலாகவும் சித்த மருத்துவ முறை குடிவழி மரபாகச் சிலரால் கையாளப் பட்டுவந்தது.

பின்னர் பாண்டியரும் சோழரும் தலை நிமிர்ந்து களப்பிரர்களைவென்று ஆட்சி மேற்கொண்ட காலத்தில் பரம்பரை மருத்துவர் சிலர் அரசாங்க வைத்தியர்களாக உயர்ந்தனர். சித்த மருத்துவம் செழிப்புற்றது. மருத்துவக் குறிப்புக்கள் பல நூல் வடிவுற்றன. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் முகமதியர் படையெடுப்பால் பல சுவடிகள் அழிந்தன: அக்காலை மதம் மாறிய சிலர் பழைய மரபினைச் சார்ந்தவராதலின் முகமதிய வைத்திய முறையான யுனானி முறையை ஏற்காமல் சித்த மருத்துவ முறைகளையே மேற்கொண்டு அவற்றை நூலாக்கம் செய்யத் தொடங்கினர். மதம் மாறாத பழைய பரம்பரை யினரும் நூல் செய்ய முற்பட்டனர்.

இன்றைக்குக் கிடைத்திருக்கும் சித்த மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை 13 முதல் 17 வரையுள்ள நூற்றாண்டுகளிற் செய்யப் பெற்றனவாகும். அதனால் செய்யுள் நடை எளியதாயும் வட சொற்களும் வழக்குச் சொற்களும் கலந்தனவாயும் அமைவனவாயின.

அவை அகத்தியர் முதலாய முனிவர்கள் சித்தர்களின் கருத்துக்களே யாதலின் அவரவர் பெயர்களால் நூல்களை ஆக்கினர். நூலாக்கம் செய்த அனைவரும் தேறிய மொழிப் புலமையுடையோரல்லர் பலர் செவி வழியாகக் கேட்டுப் பயிற்சி பெற்றுக் கவிபாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர். ஆதலின் வெண்பா முதலிய கடினமான யாப்பமைவுடைய செய்யுட்களில் சில பல குறைபாடுகள் இயல்பாகவே அமையலாயின.

பின்னர், படி எடுத்தோரான பலர் தக்க மொழிப் புலமை பெறாதவரேயாவர். அதனால் பாடல்களில் சில பல பிழைகள் அமைவனவாயின இவ்வரலாற்று உண்மையின் அடிப்படையிலே தான் நாம் மூல பாடங்களை அணுகுதல் வேண்டும்.

அம்முறையில் இந்நூலிலும் மூல பாடங்களில் இயற்கையான குறைகளும் படியெடுத்தோரால் நேர்ந்த பிழைகளும் ஓரளவிற்கு உள. அவற்றுள் உதாரணமாக ஆங்காங்கே சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்.

வெண்பா யாப்பிலக்கணச் சிதைவுகள்

செய்யுள் 14. மூன்றாமடி "மெலிந்த பரிச வகைசென்னி பாதமென" என்பதில் என என்பது மிகையாகும், அதனால்வெண்டளை கெட்டது செய்யுள் 92, இரண்டாமடி "கோதில் இடை நடுவே கஞ்சியும் குடித்து" என்பது நான்கு சீராக உள்ளது. இது "கோதிலிடை யேகஞ்சி யுங்குடித்து" என இருப்பின் முச்சீராகும் மூன்றாமடியில் "சேத்துமமத்தி" என்பதுநாலசைச் சீர் இது "சேத்மமத்தி" என இருப்பின் முச்சீராகும். நான்காமடி "புறவானத்தில் கஞ்சி கொள்ளலாம்" இதன் முதற்சீர் நாலசையாக அமைந்து ஓசை நீள்கிறது. இதனுள் கஞ்சி என்பது மிகை அது முன்பேயே உள்ளது. அதனால் "புறவானத்திற்கொள் ளலாம்" என இருத்தல் வேண்டும். செய்யுள் 349ஆம் ஈற்றடி "தேறுமர மஞ்சள சாதிக்காய்" என்பது இது "தேறுமஞ் சள்சாதிக் காய்" என இருத்தல் வேண்டும் செய்யுள் 359 ஈற்றடி "தாகமுடன் அத்திசுரந் தானும்" என்பதில் "உம்" மிகை "தாகமுடன் அத்திசுரந்தான்" என இருத்தல் வேண்டும். செய்யுள் 458 ஈற்றடி "வாதபித்தம் போமே வணங்கி" என்பதில் இறுதிச் சீர் புளிமாவாக உள்ளது. இது வாதபித்தம் போம் வணங்கி யே என இருத்தல்வேண்டும். இது ஏடெழுதினோர் பிழை, செய்யுள் 505, 506 இவற்றின் இறுதிச் சீர் திருத்த வியலாத பிழைகள் பல பாடல்களில் இறுதிச் சீர் தேமா புளிமாவாக நின்று பிழையானது செய்யுள் 1055

"அரைத்தெடுத்துக் குப்பியிட்டு வாகவெழு சீலைமண்ணை
உரைத்தபடி செய்வாயிரோரகலில் - பொருந்தியிட்டு
வாலுகா யந்திரத்தின் வைத்தே தலைகீழாய்
சாலமேலச் சட்டி கவிழ்த்தான்" என உள்ளது. இது
"அரைத்தெடுத்து குப்பியிட் டெழுசீலை மண்ணை
உரைத்தபடி செய்ஓர் அகலில் - பொருத்தியிட்டு
வாலுகா யந்திரத்தின் வைத்தே தலைகீழா

சாலுமேல் சட்டி கவிழ்தான்" என்றிருத்தல் வேண்டும். இது படியெடுத்தோர் செய்த பிழை.

எழுத்துப்பிழை: செய்யுள் 131, முதலடியில் தூயவாத ஏப்பமிகும் என்பது இதனுள் மிகுந்து எனப் பிழைபட்டது. 141 இரண்டாமடியில் மற்றவர்க்காம் என்பது மற்றவர்க்காகும் எனப் பிழைபட்டது.

சொற்பிழை: செய்யுள் 90 வெந்நீர் என்பது வென்னீர் எனப் பிழையானது, செய்யுள் 1003 பண்ணு ரசம் என்பது பன்னுரசம் எனப் பிழையாக உளது.

தலைப்புப்பிழை: செய்யுள் 3 பெரியோர் வணக்கம் என்றுள்ளது. அது நாமகள் வணக்கம் எனல் பொருந்தும்.

மதிப்பு: வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 என்னும் நூலின் முற்பாகமாக 1092 பாடல்களைக் கொண்டு 376 பக்கங்களில் மூலபாடமும் கருத்துரையும் பாடபேதக் குறிப்புக்களுடன் இந்நூல் அமைந்துள்ளது.

மூலபாடங்கள் பெரிய எழுத்திலும் வரைக்குறிப்புகள் அதற்கடுத்த சிறிய எழுத்திலும் அமைந்தள்ளன. உரை பதவுரையாகவோ பொழிப்புரையாகவோ இல்லாமல் கருத்துரையாக அமைந்துள்ளது படவேறுபாடுகள் சிலவற்றும் மூலப்பாடத்தையடுத்தும் சிலவற்றில் கருத்துரைகளுக்குப் பின்பும் அமைந்துள்ளன. பாடவேறுபாடுகளை ஒவ்வொரு பாட்டுக்கும் பின்வையாமல் ஒருதலைப்பின் கீழ்வரும் பாடல்களை வரிசையாக அமைத்து இறுதியில் அவ்வப் பாடல் எண்களைத் தந்து பாடவேறுபாடுகள் குறிக்கப் பட்டுள்ளன.

மருந்து: மருந்து செய்முறைப் பற்றிய செய்யுளின் கருத்துரைகள், சேரும் சரக்குகள், செய்முறை அளவு, அனுபானம், தீரும் நோய் என்று வகைப்படுத்திக் கூறப்பெற்றுள்ளன சிலவற்றின் கீழ் குறிப்பு என்னும் தலைப்பில் அதுபற்றிய இன்றியமையாத செய்திகள் தரப்பட்டுள்ளன. இம்முறை படிப்போர்க்கு மட்டுமின்றி மருத்துவர்கட்குப் பெரிதும் பயன் தருவதாகும். அச்சுப் பிழைகள் மிகக் குறைவாக அமைந்துள்ளன. பிழைதிருத்தம் பின்னர் சேர்க்கப்பட்டுள்ளது.

பின்சேர்க்கையில் மருந்து முதலியவற்றின் அட்டவணை பொருட் குறிப்பு அகர நிரலி சேர்க்கப்பட்டிள்ளன. இந்நூற் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடிகள் விவரம் தரப்பட்டுள்ளது.

ஆர். தியாகராசன்

அளவுகள்

நிறுத்தலளவை:

4 நெல்	1 குன்றி
2. குன்றி	1 மஞ்சாடி
5 மஞ்சாடி	1 நிட்கம்
2 நிட்கம்	1 கோலம்
2 கோலம்	1 சொன்னம்
2 சொன்னம்	1 துலை மாணி
2 துலைமாணி	1 பலம்
10 பலம்	1 துலாம்
100 துலாம்	1 பாரம்

முகத்தலளவை:

2 தொடி	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	1 குடுவம் அல்லது உழக்கு
4 பிரஸ்த்தம்	1 படி
4 படி	1 குறுணி
4 குறுணி	1 ஆடகம்
2 ஆடகம்	1 வாட்சியம் (பதக்கு)
2 வாட்சியம்	1 துரோணம்
2 துரோணம்	1 கலசம்
2 கலசம்	1 தூணி
2 தூணி	1 வகம்
5 சோடு	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	1 உழக்கு அல்லது குடுபம்
2 உழக்கு	1 உரி அல்லது மானிபம்
2 உரி	1 நாழி அல்லது படி அல்லது பிரத்தம்
2 நாழி	1 பாத்திரம்
2 பாத்திரம்	1 ஆடகம், கஞ்சம், கலசம்
2 குறுணி	1 பதக்கு, குரோணம், கும்பம்
2 பதக்கு	1 தூணி
3 தூணி	1 கலம்
7 கலம்	1 கோட்டை
2 சிறங்கை அல்லது சுளகை	1 அஞ்சலி

நிறுத்தலளவை (வேறு)

1 நெல்	மா
8 மா அதாவது	
8 நெல் எடை	1 மஞ்சாடி
2 மஞ்சாடி	1 வல்லம்
10 வல்லம்	1 நிட்கம் அல்லது கழஞ்சு
4 கருடம் அல்லது கழஞ்சு	1 பலம்
25 பலம்	1 தூக்கு
2 தூக்கு	1 எடை
2 எடை	1 துலாம் அல்லது நிறை
20 துலாம்	1 பாரம்
1 பாரம்	1 கண்டி

ஒப்பீட்டு அளவுகள்

4 நெல்	1 குன்றி	130 மி. கிராம்
2 குன்றி	1 மஞ்சாடி	260 மி. கிராம்
5 மஞ்சாடி	1 நிடகம்	1300 கிராம்
2 நிடகம்	1 கோலம்	6. 250 கிராம்
2 கோலம்	1 கரிசம்	12.500 கிராம்
4 கரிசம்	1 பலம்	35 கிராம்
2 பலம்	1 பிரத்திருதி	70 கிராம்
2 பிரத்ருதி	1 குடவம்	140 கிராம்
4 குடவம்	1 பிரத்தம்	5,600 கிராம்
4 பித்தம்	1 குறுணி	22,400 கிராம்

பொருளடக்கம்

பக்கம்

கடவுள் வணக்கம் 9

அட்டவிதப் பரிட்சை நாடிப் பரீட்சை, பார்க்கும் முறை வாதநாடி இலட்சணம், பித்தநாடி இலட்சணம், பித்தநாடி, சிலேட்டுமநாடி, தொந்தநாடி இலட்சனம் அசிரண நாடி, தீபனநாடி இலட்சணம், மாதர் சங்க நாடி மிலபந்தநாடி இலட்சணம், சன்னிபாத நாடி இலட்சணம், தேகப் பரிட்சை, நிறப் பரிட்சை, மொழிப் பரிட்சை, மலப் பரிட்சை, சலப்பரிட்சை, நாப் பரிட்சை அசீரணம் நான்கின் பெயர், சுர நிதானம் 10 - 16

சப்த சுரத்தின் பெயர், வாத சுரக்குணம், பித்த சுரக்குணம், சிலேத்தும சுரக்குணம், பூத சுரக்குணம், அபிகாத சுரக்குணம், அசீரண சுரக்குணம், வாத பித்த சுரக்குணம், வாத சிலேத்தும சுரக்குணம், பித்த சிலேத்தும சுரக் குணம், அவ பத்திய சுரக் குணம், கந்தாப சுரக்குணம், ஆயுசு சுரக் குணம், சரும சுரம், இரத்த சுரம், மாங்கிச சுரக் குணம், அத்தி சுரக் குணம், சன்னி பாத சுரம், சன்னி பாத சுரம் (வேறு) 17 - 24

சந்திச் சன்னி (சன்னி பாதத்தின் பிரிவு 13) அந்தக சன்னி, உருத்தாக சன்னி, சித்தவிப் பிரம சன்னி, சீதாங்க சன்னி, தாந்திரிக சன்னி, கண்ட குப்ச சன்னி, கர்ன்னிக சன்னி, புக்ன நேத்திர சன்னி, இரக்திட்வி சன்னி, பிரலாப சன்னி, சிம்மக சன்னி, அபினியாச சன்னி சாத்திய சன்னி வகை, அசாத்திய சன்னி வகை, சன்னி சாத்தியா அசாத்தியம், சன்னிக்கு நாளறிய 25 - 31

ஏழுவித தோடப்பிறப்பு, அபத்திய தோடத்தின் இலட்சணம், சங்கமம் தோர் இலட்சணம், விடம தோட இலட்சணம், விட சீததோட இலட்சணம், பீதசிம்மக தோட இலட்சணம், இரத்த சிம்மக தோட இலட்சணம், தோடங்களுக்கு நாள். 32 - 35

அதிசார நிதானம் வாதாதிசார இலட்சணம், பித்தாதி சார இலட்சணம், சிலேட்டுமாதிசார இலட்சணம், தோடாதி சார இலட்சணம், அசாத்தி யாதிசார இலட்சணம், அசாத்திய அதிசாரம் சாத்தியாதிசாரம், அசாத்திய அதிசாரம் 35 - 39

நாடி விகற்பப்பட்டவர்கள், இலங்கணத்திற்கு அபாத்திரர்கள், சுரரோக சிகிச்சை விபரம், வைத்தியன் இலட்சணம், நோயாளியின் இலட்சணம். 40 - 44

வாத நிதானம், ஊர்த்துவ வாதம், சிரோவாதம் பாரிசச் சூலைவாதம், கம்பவாதம், ஊர்த்தகம்பவாதம், கிக்கி வாதம், சோணவாதம், அமிலவாதம், இரசுவாதம், சந்தியா வாதம், கனுர் வாதம், திமிர்வாதம், அந்தி வாதம், காகவாதம், நயனவாதம், உதரவாதம், நாசிக வாதம், அவையாங்க வாதம், சிம்மாங்க வாதம் நகவாதம், கர்ணவாதம் சர்ப்ப வாதம், விருச்சிக வாதம், முடக்கு வாதம், சன்னி வாதம், அங்குலி வாதம், பிரமவாதம், மலபந்த வாதம், மூத்திர வாதம், குன்ம வாதம், பாகுவாதம், பாரிச பாகு வாதம், பாதவாதம், விசூனசுவாதம் தூமவாதம், விதூம வாதம், சுரவாதம், சோப வாதம், சல்வாதம், அசீரண வாதம், சயவாதம், சுட்கவாதம், திவா வாதம், சலவாதம், ஆதித்த வாதம், அக்னி வாதம், ததிவாதம், மதுவாதம், ஸ்நானவாதம், உன்மதவாதம், கடிவாதம், வாயு வாதம், சுக்கில வாதம், சம்போக வாதம், கந்தவாதம், இரசவாதம், தாம்பூல வாதம், சீரான்ன வாதம் பூதவாதம், மற்றும் சில வாதங்களின் நாமமும் அவற்றின் இலட்சணமும், மோகன வாதம், பவனவதம், துக்க வாதம், கலக வாதம், சாக்கிர வாதம், ஆத்மரிய வாதம், கல்மவாதம், நாட்டிய வாதம், தூம்பிர வாதம், கபால வாதம், நித்திரை வாதம். 45 - 66

பித்த நிதானம், சூரியவர்ண பித்தம், அசீரண பித்தம், விவர்ண பித்தம், காமாலை பித்தம், ஆமில பித்தம், இரத்தம் பித்தம், சுவேத பித்தம், கீர பித்தம், புண்டரீய பித்தம், புசங்க பித்தம், கரபாத பித்தம், சீதபித்தம், மூர்ச்சை பித்தம், குசும பித்தம், குரோத பித்தம், பிரமை பித்தம், சென்னி பித்தம், சுதாக பித்தம், திருட்டின பித்தம், துர்ப்படா பித்தம், சரும பித்தம், துர்க்கந்த பித்தம், மதன பித்தம். 67 - 73

சிலேத்தும நிதானம், வாத சிலேத்துமம், பித்த சிலேத்துமம், சிக்குவா சிலேத்துமம், இரத்த சிலேத்துமம், உக்கார சிலேத்துமம், கோச சிலேத்துமம், சுவேத சிலேத்துமம், சுர சிலேத்துமம், சுக்கில சிலேத்துமம், துக்க சிலேத்துமம், தொனி சிலேத்துமம், மகா சிலேத்துமம், பேன சிலேத்துமம், மூலை சிலேத்துமம், மூர்ச்சை சிலேத்துமம், வமன சிலேத்துமம், சீன சிலேத்துமம், சுய சிலேத்துமம், சோட சிலேத்துமம். 74 - 78

வாதசுரக் கியாழம் - 1 வாதசுரக் கியாழம்-2, 3.......7..... பித்தசுரக் கியாழம்-1 ....10, சிலேத்தும சுரக்கியாழம்-1........5. வாதபித்த சுரக்கியாழம், வாதசிலேத்துமசுரக்கியாழம், பித்த சிலேத்தும சுரக்கியாழம், தொந்த சுரக்கியாழம் சன்னி பாத சுரக்கியாழம், சன்னிபாதசுரக் கியாழம் (வேறு), தருண சுரக்கியாழம், புராண சுரக்கியாழம், அசீரண சுரக்கியாழம், தாப சுரக்கியாழம் - 1, தாபசுரக்கியாழம் (வேறு) தாகசுரக் கியாழம், அத்தி சுரக்கியாழம், இரத்த சுரக்கியாழம், அபத்திய சுரக்கியாழம், விடசுரக்கியாழம், விட சுரக்கியாழம் (வேறு), விட சீதசுரக்கியாழம், தோட சுரக்கியாழம் திரிதோக்கியாழம் ஒருநாள் மாறல் சுரக்கியாழம், இரண்டுநாள் மாறல் சுரக்கியாழம், மூன்று நாள் மாறல் சுரக்கியாழம், சர்வ மாறல் சுரக்கியாழம், நான்குநாள் மாறல் சுரக்கியாழம், சர்வமாறல் சுரக்கியாழம், -2- சீதசுரக்கியாழம் 1 - 4, மாலைசுரக் கியாழம் இராச்சுரக் கியாழம் தோட சுரக்கியாழம், சர்வசுரக் கியாழம்-3, 4, சந்திக சன்னிக்கியாழம், சர்வசுரக்கியாழம் -5, அந்தக சன்னிக் கியாழம் உருத்தாக சன்னிக்கியாழம், சித்தவிப்ரம சன்னிக்கியாழம், சீதாங்க சன்னிக் கியாழம், தாந்திரிக சன்னிக் கியாழம், கண்டகுப்ச சன்னிக்கியாழம் கர்ன்னிக சன்னிக்கியாழம், புக்னநேத்திர சன்னிக்கியாழம், இரத்திட்னி சன்னிக்கியாழம், பிரலாப சன்னிக் கியாழம், சிம்மக சன்னிக் கியாழம், அபிவியாச சன்னிக்கியாழம், சர்வ சன்னிக்கியாழம், சர்வசன்னி தசமூலக்கியாழம், சர்வசன்னி பஞ்சமூலக்கியாழம், சர்வசன்னி அட்ட மூலக்கியாழம், சர்வசன்னி அட்டா தசமூலக்கியாழம், சர்வசன்னி பஞ்சகோலக்கியாழம், வாந்தி விக்கல் கியாழம், வாந்தி விக்கல் கியாழம்-2, அந்தரதாகக் கியாழம்-1,,,,,,,3, சூலைக்கியாழம்-1, 2, பிரசவப்பெண் சுரக்கியாழம், சூலைக்கியாழம்-3, மூர்ச்சைக்கியாழம் கிராணிக் கியாழம்-1, கிராணிக்கியாழம்-2, அசீரண சுரக்கியாழம், அசீரண வாயுக்கியாழம், தீபனக்கியாழம் பூச்சிக்கியாழம், வாதக்கியாழம், சர்வாங்க வாதக் கியாழம், வீக்கக்கியாழம்-1, வீக்கக்கியாழம்-2, பாண்டு சோபைக்கியாழம்-1, பாண்டுசோபைக் கியாழம்-2, 3, அதிசாரக்கியாழம்-1, 2, பாண்டு சோபைக்கியாழம்-4, அதிசார சுரக்கியாழம்-5,,,,,,8 பால அதிசாரக்கியாழம், உதரநோய்கியாழம், தோடாதிசாரக்கியாழம்-1, இரத்த பித்தக் கியாழம்-1, சிலேத்து மரோகம், பிரமேகம் இவற்றுக்குக் கியாழம், மூத்திரக்கிரிச்சிரக்கியாழம், சர்வரோகக் கியாழம்-1, 2, மேகக்கியாழம், அபிவாத சுரக்கியாழம், மாங்கிச சுரக்கியாழம் 149 - 151

மகா ஏலாதி சூரணம், இலகு ஏலாதிக்சூரணம், இலகுஏலாதிச்சூரணம் (வேறு), தாளிசபத்திரிச் சூரணம, அட்ட சூரணம் (வேறு), அசுவகெந்தாதிச் சூரணம், கண்டாத்திரிகச் சூரணம், சிவதைவேர்ச் சூரணம், தாடிமமாதிச் சூரணம், திராட்சாதிச் சூரணம், யோகராச குக்குலு, யோகராசக் குக்குலு (வேறு) குக்குலுச் சூரணம், சிங்காதிச் சூரணம், சூரணராசன், கந்தகச் சூரணம், கந்தகச் சூரணம் (வேறு), சௌபாக்கிய சொண்டிச் சூரணம், சமன் சூரணம் முத்தாதிச் சூரணம், சாரணைவேர்ச் சூரணம், கற்சூராதி சூரணம், தாபவலைச் சூரணம், காற்பாசயாதிச் சூரணம், சந்தவாதிச் சூரணம், தாசனப்பொடி, சாரத்துலாதிச் சூரணம், திப்பிலியாதிச் சூரணம், அசுவகெந்தாதிச் சூரணம், பரங்கிப் பட்டைச் சூரணம் பரங்கிபட்டைச் சூரணம் (வேறு) மணிமந்திராதிச் சூரணம், வார்பந்தியாதி சூரணம், நாகராதிச் சூரணம். 152 - 195

கந்தக வடகம், காங்கைய வடகம், தாளிச பத்திரி வடகம், மண்டூர வடகம், செவ்விய வடகம், ஏலாதி வடகம், பாவன கடுக்காய், பவரோசனதி வடகம். 195 - 203

அமுச மண்டூரம், திரிகடுகாதி மண்டூரம் 204 - 205

மதுஸ்னுகி இரசாயனம், மதுஸ்னுகி இரசாயனம் (வேறு), திப்பிலி இரசாயனம், வல்லாதி இரசாயனம், பரங்கிப்பட்டை இரசாயனம் (வேறு) வல்லாதி இரசாயனம் (வேறு) கந்தக ரசாயனம், கந்தக இரசாயனம் (வேறு) வல்லாதகி இரசாயனம் (வேறு) பாடாக்கிர அரிதகி 206 - 218

இலசுனபுட்டி, மகாசுனபுட்டி, அட்டகுன்மக் குடோரி, கௌதமி தக்கிரலசுனம், கோழிக்கடுகு, நார்த்தங்காய்கடுகு, சூலைப்பிடாரம், எலுமிச்சங் கடுகு 219 -229

மண்டூர பற்பம், நவநீத பற்பம், ஒற்றடம், ஒற்றடம் (வேறு) சினேக பொட்டணம், லோகாமிர்த ரசாயனம், மகாவில்வாதி லேகியம் 230-235

இலகு வில்வாதி லேகியம், வில்வாதி லேகியம், வில்வாதிலேகியம் (வேறு) குண்டலாதி லேகியம், குண்டலாதி லேகியம் (வேறு) சிஞ்சாதி லேகியம், மகாசிஞ்சாதி லேகியம், அகிலாதி லேகியம், ஆத்திராதி லேகியம், கண்டாமலக லேகியம், கண்டத்திப்பிலி லேகியம், கூழ்ப்பாண்லேகியம், திப்பிலியாதி லேகியம், கண்டங்காரி லேகியம், திராட்சாதி லேகியம், மகா பிரசாத லேகியம், சவுபாக்கிய சொண்டி

கண்ட சக்கரை லேகியம், இலகு குண்டலாதி லேகியம் வில்வாதி லேகியம், சரபங்க வில்வாதி லேகியம். 236 - 274

மதனகாமேசுரம் மதனகாமேசுரம் (வேறு) ஏலாதிச் சூரணம் பாண்டு காமாலைக்கு லேகியம் 275 - 281

சுத்தி நெய் வறனாதி குக்குலு நெய், கடுக்காய் நெய், பூசணிக்காய் நெய், இலந்தை நெய், கண்டங்காரி கிருதம் புளியாரை கிருதம், அகிலேகிய கிருதம் கதகாதி கிருதம் ததகரதி கிருதம் (வேறு) ருத்திராதி கிருதம், வாகாதிகிருதம், வாகாதி கிருதம் (வேறு) சதாவேரி கிருதம், சதாவேரி கிருதம் (வேறு) சரபிந்தாதி கிருதம் கூழ்பாண்டகிருதம் சம்பகனமந்தகக் கிருதம், பஞ்சகவ்விய கிருதம், கதலிகந்த கிருதம், மகாகலியாண கிருதம், பஞ்சகவ்விய கிருதம், பஞ்ச கவ்விய கிருதம் (வேறு) சட்பல கிருதம், குக்குலு கிருதம் அசுவ கெந்தாதிக் கிருதம், திப்பிலியாதி கிருதம் கதகாதி கிருதம், ஆத்திராதி கிருதம், இலட்சுமி கிருதம், நயன சஞ்சீவி கிருதம். 282-320

சங்கத் திராவகம், லோக திராவகம். 320-321

தோட சுத்தி, அரிதாரசுத்தி, வெள்ளைப் பாடாண சுத்தி, கவுரி சுத்தி, தொட்டிப்பாடாணச் சுத்தி, கந்தகசுத்தி, துருசுசுத்தி, பால்துத்த சுத்தி கற்பூர சுத்தி, நிமிளை சுத்தி, நிமிளை சுத்தி (வேறு) வெண்கார சுத்தி, சங்குபாடாண சுத்தி நேர்வாள சுத்தி, உப்புகள் சுத்தி, கற்பூர சிலாசத்து, வெண்போளம் கறியபோளம் சுத்தி, பெருங்காயம், திப்பிலி சுத்தி, ஊமத்தை விதை, எட்டி விதை சுத்தி, திப்பிலி மிளகு சுத்தி, ஓமசுத்தி, சீரக சுத்தி, அயச் செந்தூரம் வங்கநாகச் சுத்தி. 322 - 332

நாகச் செந்தூரம், வங்கச் செந்தூரம், தாமிர செந்தூரம், செம்பொன் செந்தூரம், செம்பொன் செந்தூரம் (வேறு) வெள்ளிச் செந்தூரம். கஞ்சங்க செந்தூரம், காந்தச் செந்தூரம். 332 - 339

பவழபற்பம், வைரபற்பம், மரகத பற்பம், நீலக்கல் பற்பம், மாணிக்க பற்பம், புஷ்பராக பற்பம், கோமேதக பற்பம், வைடூரிய பற்பம், முத்து பற்பம். 340 - 344

அப்பிரக வகை, அப்பிரக பற்பம் (வேறு) 344 - 348

இரச செந்தூரம். இரச செந்தூரம் (வேறு) இரசபூபதி. 346 - 350

நவலோக அக்கினிக் குமாரன், நவரத்தின அக்கினிக் குமாரன். சித்தாக்கினி குமாரன். இலகு வாக்கினி குமாரன், மகா அக்கினி குமாரன்.

29
பிரதாப வக்கினி குமாரன் பிராவாக்கினி குமாரன் திவியாக்கினி குமாரன், உத்தமாக்கினி குமாரன் 351 - 358

புவனேச ரசம், திரிபுராந்தக ரசம், காளகண்ட ரசம், காம்பளி ரசம், பத்திரசம், அவனேசுர ரசம், மாக அக்கினி குமாரன் (வேறு) மகேசுர ரசம், நாரசிங்கரசம், சாம்பவி ரசம் (வேறு) கிடார ரசம் பார்வதிரசம் நாராயண ரசம் வைணவி ரசம் இலட்சுமி நாராயண ரசம் இரணியகற்ப ரசம் கமலாசன ரசம் பிதாமகனார் ரசம் பார்வதி ரசம் (வேறு) கல்யாணி ரசம் சர்வேசுர ரசம், வீரவிக்கிரம ரசம். 359 - 376

அகத்தியர் மணி 4000

என்னும் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000

கடவுள் வணக்கம்

முந்தாதி யந்தமிழால் மூதுலறி வேவைத்திய
சிந்தா மணிவெண்பா செப்புதற்கு - நந்தா
திரும ணுலகாதி எவ்வுயிர்க்கும் தாயாம்
ஒருவன் துணையாக வும். 1

ஒருவாயி னால்வாய் மதமூன்றி லோரா
இருதாளின் முத்தாள் இசைய - வருமோர்
களிற்றை இனி துரைத்தக் கல்வியீர் போற்றீர்
வெளிற்றை இனிதுரைக்க வே. 2

இவ்விரு பாடல்கள் சம நூலகச் சுவடி எண் 157, 200 ஆகிய வற்றில் மட்டும் காணப்படுகின்றன.

உலகில் தொன்மையான தமிழ்மொழியில் சிந்தாமணி வெண்பாவைக் கூறுவதற்கு, இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும், தாயான இறைவன் துணை நிற்க வேண்டும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மதங்களை அழித்து தாள்பணிந்து மனதில் உள்ளதைக் கல்வி அறிந்த பெரியோர்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

பாட வேறுபாடு:
பாடல் எண் : 1, 1. முந்தாரியந் தமிழால்,

பெரியோர் வணக்கம்

தோற்றுமிம்ப ரும்பரெனச் சூழ்ந்தமர ராயிருப்பார்
சாற்றும் வயித்தியசிந் தாமணியைப் - போற்றியே
வெண்பாவா யானும் விளம்புதற்கென் னாவிலே
பெண்பாவாய் மேவாய் விரைந்து. 3

எல்லாச் சமயத் தவருக்கும் யாக்கையினால்
அல்லால் பயனில்லை யாமாகில் - வல்ல
வயித்தியசிந் தாமணியை வாழ்த்த இமையோரும்
தயித்தியரும் வானவரும் தான். 4

விளைந்த வியாதிநிதா னம்மவர்க்கு அருளும்
தெளிந்திடும் சுத்திதனி யோக[1] மனைத்தும் - கிளர்ந்த[2]
உள்ளநிதா னமனைத்தையும் நன்முறையே[2]
கொள்ள நிதானமுடன் கூர்ந்து.[4] 5

மக்கள், தேவர்கள் இவர்களிடம் வைத்திய சிந்தாமணி வெண்பாவைக் கூறுவதற்குக் கலைமகள் என் நாவில் வரவேண்டும்.

எல்லாச் சமயத்தைச் சார்ந்தவருக்கும் உடல் நன்னிலையில் இல்லையாயின் பயன் இல்லை. இதற்கு வல்லமை வாய்ந்த வைத்திய சிந்தாமணியைத் தேவர்களும், சிவபெருமானும் வாழ்த்த அருள வேண்டும்.

உடலின்கண் உண்டாகும் நோய்களைக் கணித்தறிவதற்கான முறைகள் இனி கூறப்படும்.

பாட வேறுபாடு:

பாடல் எண் : *3, 1.* நாவில்

4, 1. சமயத்தவருக்கும் இயற்கையால்,

5, 1. சுந்தர, *2,* தெளிந்திடும் சுத்தி ரசயோகஞ்,

3. கிளர்ந்த மற்று,

4. முள்ளநிதான சிகிச்சை யோகமுடன் மனதுள்.

அட்டவிதப் பரிட்சை

அகத்துறு[1] நோயைக் கரத்தாம லகம்போல்[2]
பகுத்தறிவீர்[3] நாடிப் பரிசம் - தொகுத்தநிறம்
கட்டுவகைச் சொல்மொழிகண் கண்டமல[4] மூத்திரம்நா[5]
எட்டுவகை யாலுமறி வீர். 6

உடலில் உண்டாகும் நோய்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிவதற்கு நாடி, பரிசம், நிறம், மொழி, விழி, மலம், சிறுநீர், நாக்கு ஆகிய எட்டு வகைப் பரிட்சை முறைகளை அறிய வேண்டும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 6, 1. அகத்து, 2. கையாமலகமாக, 3. பகுத்தறியும் நாடி பரிட்சை, 4. சேர்விழிகள் சொல்விழிகள் கண்ட மல, 5. மூத்திரமரை.

நாடிப் பரிட்சை

மேலுரைத்த நாடியெங்கு மேவினால் உன்பாக
மூலம் கரமூல மூலமேல்[1] - நூலளவே
தீண்டிநின்றால் வாதபித்த சிலேட்டுமமென மூன்றாகும்
தாண் டிநின்றால் ஆச்சரியந் தான். 7

உடலில் கால் முதல் கைவரை நாடி பரவி நின்றாலும் கையின் மணிக்கட்டில் நூலளவாக வாதபித்த சிலேத்தும நாடி நடக்கும். இவை அதிகரித்து குறைந்து நடந்தால் நோயுண்டாகும்.

பாட வேறுபாடு:

பாடல் எண் : 7. 1. மூலமே.

நாடி பார்க்கும் முறை

பார்க்கில்யாக் கை[1] விகாரம் பார்த்தா லாடவர்க்கு
ஏற்கும் வலக்கை இடக்கை[2] - மடவார்க்கமாம்[3]
அங்குட்ட மூலம் அவைக்கப்பால் வெவ்வேறாய்[4]
பங்கிட்டு மூவிரலால் பார். 8

உடலில் மாற்றங்களைத் தெரிந்து கொள்ள ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும், மணிக்கட்டில் கட்டை விரலுக்கு அடுத்த மூன்று விரல்களால் வாதபித்த சிலேத்தும நாடிகளைப் பார்த்தறிய வேண்டும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 8,
1. பார்க்கில் இயற்கை,
2. இழைமருங்கு
3. வார்க் காகு,
4. ஓர் வைப்பாய்.

வாத நாடி இலட்சணம்

வாதமுதல்[1] மூன்றும் வரன்முறையே[2] வைத்தறிக
வாதகதி வக்கிரகதி யாயறிக [3] வாதநடை
வேட்டத்[4] தவளை வெளிச்சனா கங்குழந்தை
ஆட்டிய தொட்டில் அட்டை யாம். 9

தவளை, பாம்பு, சிறுபிள்ளைத் தொட்டில், அட்டை இவற்றைப் போல் வாதநாடி நடக்கும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 9 1. வாதமுன்,
2. வைத்தறிக,
3. வக்கிரகதியை யறிக.
4. வேட்கை.

பித்தநாடி சிலேட்டுமநாடி இலட்சணம்

சருவிய பித்தம் சபலகதி தானூர்க்
குருவிபுறா வன்னமணில் கூறும் - திரகதியின்[1]
மிக்குடனாம் சேட்டுமம்[2] வியனூர்க் குருவிபுறா
குக்குடம் போல்நடக்கும் கூர்[3]. 10

பித்த நாடி ஊர்க்குருவி, புறா, மயில் இவற்றைப் போல நடக்கும்

சேத்தும நாடி ஊர்க்குருவி, புறா, கோழி இவை போன்று நடக்கும்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 10. 1. திரகதினே,
2. சேட்பம், 3. காண்.

தொந்தநாடி இலட்சணம்

குட்டை வெள்ச்சை குருவிநடை காடையுடன்[1]
அட்டை நடைநடக்கும் ஆமாகில் - கெட்டியாய்
வாதபித்த தொந்தமே வாரணமாய்[2] அட்டையாய்
தாதுவினில் சேட்டும்[3] வா தம். 11

'முதலை' போலவும், குருவி, காடை, அட்டை இவற்றைப் போலவும் நடக்கும் வாதபித்த நாடி.

கோழி அட்டை இவை போன்று நடக்கும் சிலேத்தும வாத நாடி.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *11.* *1.* தான்காட்டி,
2. வாரமாய்,
3. சேட்ப,

அசீரணநாடி தீபனநாடி இலட்சணம்

மத்தகசம் போல்நடந்து மந்தித்து இருக்குமே
அததகை[1]சங் கித்தால் அசீரணமே - நித்திரையாய்
தள்ளாடும் காக்கைநடை தான் தீ பனமென்றே[2]
வெள்ளாடும் சொல்லும் விரைந்து. 2

யானை நடை போன்றிருக்கும் அசீரண நாடி, தூக்கத்தில் தள்ளாடும் காக்கையைப் போலிருக்கும் தீபன நாடி.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *12* *1.* அத்தங்கை,
2. தீபன நாடி.

மாதர் சங்க நாடி மலபந்த நாடி இலட்சணம்

எழப்பட்டால் இக்கு மிளமுலையார் மாதர்
உளப்பட்டால் நாடிவிரைந்து ஓடும் - எழுப்பித்
திருப்புகையில்[1] அன்னமெனச் சொல்லு மலபந்தம்
அருப்புகையில் நாடியறிந் தால். *13*

மாதர் சங்கமத்தினால் நாடி நடைவிரைந்து நடக்கும். மல பந்தநாடி அன்னத்தைப் போல நடக்கும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *13,* *1.* திரும்புவகையில்

சன்னிபாத நாடி இலட்சணம்

நாடிமந் தம்குடிலம் நாடியாய் அட்டைஅன்னம்
கூடிவந் தசைந்தசைந்து கீழோடு[1] - நாடி
மெலிந்த பரிச வகை[2] சன்னி பாதமென
வலிந்த[3] பரீட்சை வகை. *14*

நாடி நடை மந்தப்பட்டு மறைந்து அட்டை, அன்னம் இவற்றைப் போல அசைந்து அசைந்து நடக்கும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் ; 14 1. கூடிவரும் தின்னாதுக் கொத்தாது
2. பருசதுவே,
3. மலிந்த,

தேகப் பரிட்சை

வெம்மை குறைந்தாலு மிகுந்தாலு வாதபித்தம்
தம்மை நிரைநிரையாய்ச் சாற்றுவார் - வெம்மையன்றி
சீதமும்அவ் வாறாகில் சிலேட்டும மொன்றுதொந்த
மீதமும்அவ் வாறாகு மேல். 15

உடல் வெப்பம் குறைந்தால் வாதம், மிகுந்தால் பித்தம், குளிர்ந்திருந்தால் சிலேத்தமாகும். தொந்த நோய்களுக்குப் பல விதமாயிருக்கும்.

நிறப் பரிட்சை

உரைத்தகறுப் பான்[1] வாத ரோகிபித்த ரோகி
அரைத்தமஞ்ச ளைக்குளித்தோன் ஆவான் - இரத்தம்
குளித்தவனு மாவான்[2] கொடும்சிலேத்தும ரோகி
வெளுத்திடுவான் தொந்தரோகி[3] யே. 16

வாதரோகிக்கு உடல் கறுத்திருக்கும். பித்தரோகிக்கு அரைத்த மஞ்சள் போலிருக்கும். சிவந்த நிறத்தில் இருப்பான் சிலேத்துமரோகி, வெளுத்திருப்பான் தொந்தரோகி.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 16 1. கறுப்பாம்.
2. குளித்தவனுமாவன்.
3. தொந்தமெல்லாம், இரத்தமெல்லாமே.

மொழிப் பரிட்சை

பலரோகி வார்த்தைப் பலவிதமாம் வாதத்
தலைரோகி வார்த்தைச் சமமாகும் - நிலைகடந்த
பித்தரோ கிக்குஉயர்ந்த பேச்சுண்டாம் சிலேட்டுமந்தான்
சத்தம்ஈ னச்சுரமாம் தான்[1] 17

மொழி பலரோகிக்கு வார்த்தை பலவிதமாயும், பித்த ரோகிக்கு உயர்ந்த பேச்சும். சிலேத்துமரோகிக்கு ஈனசுரமாயும் இருக்கும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *11,* 1. சத்துமிளச் சபலம்தான்.

நேத்திரப் பரிட்சை

கண்கறுத்து நீரோடில் காலாம் நடுவாகில்
கண்பசக்கும் சொக்கும் கடையாகில் - கண்பீளை
சாடி வெளுக்குமே சன்னிவாதம் பித்தமுமென்
றோடியகா மாலை பசக்கும். *18*

கண் கறுத்து அதில் நீர் வடிந்தால் வாதமாகும். பித்தத்திற்குக் கண் மஞ்சளாக இருக்கும். கபத்திற்கு கண் பீளைக் கட்டி வெளுக்கும். சன்னி பாத்திற்கும். காமாலைக்கும் கண் மஞ்சளாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *18,* 1. காமாலைக்கண் பசக்கும்
ஓடிய காமாலை பசக்கும்

மலப் பரிட்சை

கறுத்தமல பந்தமலங் காலாகும் பித்தம்[1]
சிறுத்தமுட் டிணம்செம்மை சேரும்[2] - பொறுத் தொருக்கால்[3]
சீதமலந் தில்லையுமாம்[4] சேர்ந்தபல ரோகியாம்
மீதமலம் எண்ணிறமு மே. *19*

மலக்கட்டுடன் கூடிய கருத்த மலம் வாதமாகும். சிறுத்த உட்டிணத்துடன் செம்மையாகும் பித்தம். சிலேத்துமத்திற்கு சீத மாயிருக்கும். பலரோகிக்கு எந்த நிறமாகவும் இருக்கலாம்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 19, 1. மலம்கால் பசந்து சிலேட்டுமம். பசந்து
சேந்து
2. இரத்த மலந்த வெள்ளென்றும், மிறுத்தமலந்
3. வருத்த முறை (சி. ம, சுருக்கம்)
4. வெண்மையாம் (சி. ம. சு)
5. மீதமலம் எண் ணிறமுமே, தினீர்
வெள்ளென்றும்.

சலப் பரிட்சை

வாதரோ கம்தெளிந்தான் மஞ்சளித்தான் மற்றையது
சீதனுரைத் தார்பலவாம் சேர்ந்தநோய்[1] - கோதகலா
மூத்திரத்தின் உண்மை மொழிந்தோம்[2] இனிச் சொல்வா(ம்)
நாத்திரத்தின் உள்ளவகை நாம். 20

வாதரோகிக்கு நீர் தெளிந்திருக்கும், பித்த ரோகிக்கு மஞ்சளாக இருக்கும். கபரோகிக்கு நுரைத்திருக்கும், தொந்த ரோகிக்கு இவை கலந்து காணப்படும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 20, 1. சேரநோய்,
2. மொழிந்தார்,

நாப் பரிட்சை

முள்ளாய் வெடித்துக் கறுத்தான்முன் பின் வெளுத்துத்
தள்ளாநீ ருண்டோசேர்ந் தால்பசந்தால் - எல்லாம்
நடுவாம் பலபலவாம் நற்சன்னி முன்னோய்
ஓடுநீரில் நாவென்றோ து. 21

நாக்கு வெடித்துக் கறுத்து முள்போன்றிருக்கும் வாதரோகிக்கு. பித்தரோகிக்கு மஞ்சளித்திருக்கும் அல்லது சிவந்திருக்கும். கப ரோகிக்கு வெளுத்திருக்கும். சன்னிபாதத்தில் நீரில் உள்ளது போன்றிருக்கும்.

அசீரணம் நான்கின் பெயர்

இப்பா லசீரண நான்காகு மாசசணம்
விப்பிறட்டடந் தூமம்வி தூமமென - எப்பொழுதும்
ஒத்ததலை நோதலுடன் னோதன் முறையேசுபா
வத்திலேப் பம்புளிச்சேப் பம். 22

அசீரணக் குறி :

அசீரணம் நான்கு வகைப்படும். அவை மாகட்சணம், பிறட்டம். தூமம். விதூமம் ஆகும், எப்பொழுதும் ஒரு தலைவலி, ஏப்பம், புளிச்சேப்பம் இவை ஏற்படும்.

சுர நிதானம்

துன்னும் வியாதி நிதானம்[1] தொகுத்துஉரைத்த[2]
பின்னும் வியாதிவகை பேசுவார் - முன்னே
சுரத்தை உரைப்பார் சுரமென் பார்இக்[3]
கரத்தைவியா திக்கர சன்.[4] *23*

கண்ணுவார் அல்லால்[1] கடவுளர்சூழ் யாகபங்கம்
பண்ணுவார் நெற்றிப் பழங்கனலும் எண்ணுவார்க்கு
எத்தனை பேத மெனினும்ஒரு வாதத்தால்
அத்தனையும் ஏழுவகை யாம். *24*

மக்கள் உடம்பில் பொருந்தும் வியாதிகளைத் தொகுத்துக் கூறிப் பின்னர் அவைகளை வகைப்படுத்தி அவற்றின் குணவேறுபாடுகளை விளக்குவர் மருத்துவமுறை அறிந்தோர். அம்முறைப்படி முதலில் சுர நோய்களின் பெயர்களைத் தொகுத்து அவற்றின் பண்புகள் வகைப்படுத்தப்படுகிறது. சுரம் என்பது உயிருக்கு இடமாகிய உடம்பில் உறும் நோய்களுக்குத் தலைமை யானதாகும்.

தேவர் யாவரும் சூழ்ந்திருந்த தக்க யாகத்தை அழிக்க வீர பத்திரரைத் தோற்றுவித்த கனலும், திரிபுரம் எரித்த கனலும், முருகன் அவதாரத்தில் தோன்றிய கனலும், மாரனை அழிக்கத் தோன்றிய கனலும், தேவி திருக்கண் புதைத்த காலத்தில் இருளை நீக்கத் திறந்த கண்ணின் கனலும், பதுமாசுரனை வரத்தின் வழி அவனாலேயே அவன் அழியுமாறு அருளிய கனலும்.

நக்கீரன் தருக்கை அழிக்க நெற்றி விழியின் வழியாக அவருடலைத் தாக்க விடுத்த கனலும் ஆக ஏழு வகையையும் ஒத்ததாக வாதத்திலேயே சுரங்கள் ஏழு வகையாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 23, 1. வியாதினிதான்,
2. உரைத்து,
3. சுரமென்பார் அதில், சுரமென்பார் ஆதி
4. வியாதிக்கரசனே, வியாதிக்கரசனை,
24, 1. எண் எல்லாம்.

சப்த சுரத்தின் பெயர்

வாதபித்த சிலேட்டுமமுதல்[1] வைத்தெண்ணிப் பூதமவி
காத மசிரணதொந் தம்காறும் - தீதாய்

வருத்துசுரம் ஏழங்கு[2] மாந்தர்செவிக்கு இன்பம்
பொருத்துசுரம் ஏழானாற் போல். 25

வாதம், பித்தம், சேத்துமம் மூன்று முதலாகவும், பூதசுரம், அபிகாதசுரம், அசீரணசுரம், தொந்தசுரம் என்னும் நான்கும் சார்பாகவும் கூட்டி எண்ணிக்கை இட, செவிக்கு இன்பத்தை உண்டாக்கும் இசைகள் ஏழு ஆனாற்போல் சுரங்களும் ஏழு வகையாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : **25.** 1. சேட்பமுதல்,
2. ஏழாகும்,

வாத சுரக்குணம்

மெய்வெதும்பு நீர்மலம்[1]வி டாதுகுளி ரும்தினவும்
செய்யும்பா ரிக்கும் திமிர்காட்டும் - பையமயிர்க்
கூச்செறியும் உதடு கறுத்துஉலரும் கூர்முகமை[2]
யாய்ச்செரியும் வாதசுரத் தால்[3] 26

உடல் வெப்பமாகும், சிறுநீரும், மலமும் கட்டும், குளிர் தினவு ஏற்படும். உடல் பாரிக்கும், திமிருண்டாகும், மயிர்க் கூச்செறியும், உதடு கறுத்து உலரும், முகம் மைபோல் கறுத்துக் காணும். இவை வாதசுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : **26.** 1. நோகுமலம்,
2. கூர்முக,
3. ஆச்சரியம் வாத சுரத்தால்.

பித்த சுரக்குணம்

தேகமுறு மூர்ச்சை மலமூத்தி ரம்சிவந்த
தாகமுறக் கம்வாந்தி சந்தாபம் - வாய்க்கசப்பு
பார்த்தெடுப் பார்போ லெழுந்தோடல் வாய்பிதற்றல்
பித்தசுர விக்கலுமாம் பேசு.[1] 27

உடம்பு மூர்ச்சை அடையும், மல மூத்திரங்கள் சிவந்த நிறமாகும். தாகம், உறக்கம், வாந்தி, வெப்பம், வாய்க்கசப்பு உண்டாகும். கண்டு வைத்த பொருளை எடுக்கச் செல்பவரைப் போல எழுந்து விரைந்து ஓடுவதும், வாய்ப் பிதற்றலும், விக்கலும் பித்த சுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 27. 1. பின்.

சிலேத்தும சுரக் குணம்

உருசி தெரியாதுவெளுக்கு மேமூக்கு நாக்கும்[1]
அருசி இரைப்பிருமல் தாகம்[2] - பெருகுவிக்கல்
மூச்சுவிடப் போகாத மிடறுமாச் சாரெனவும்[3]
மாச்சல்செய் யுஞ்சிலேட்டு மம்.[4] 28

உருசி தெரியாது, மூக்கும் நாக்கும் வெளுக்கும், சுவையின்மை, இரைப்பு, இருமல், தாகம், விக்கல், மூச்சுவிட முடியாமல் மார்பும் மிடறும் மாய்ச்சல் உண்டாகும். இவை சிலேத்தும சுரத்தின் குணமாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 28. 1. வேறா மூக்கு நாக்கும், வேறாக்குமே மூக்கி நாக்கி வெளுக்கும் மூக்கு நாக்கு.

2. மாறகழ், மற்றாகம், இரைப்பிருமல், தாகம்
3. மாசத் தினவு, மூச்சுவிடல், மூச்சுவிடப் போகாதுர மிடறும்
4. மாச்சலெனவும் சிலேஷ்மம்.

பூத சுரக் குணம்

போக்கும் குமரகண்டன் போலவே கண்ணுருட்டிப்[1]
பார்க்கும்சோ[2] பிக்கும்பா லின்சோற்றை[3] - நோக்கும்
திடனாக வாடும் சிரிக்கு[4] மயிர்க்கூச்ச
முடன்[5] பூத சுரமென்று ஓது. 29

குமர கண்டன் நோய்போல் உடல் வலிக்கும். கண்களை உருட்டிப் பார்க்கும் சோபமாகும். பால் சோற்றை விரும்பிப் பார்க்கும். வாட்டம் உண்டாகும். சிரிக்கும், மயிர்க்கூச்செறியும். இவை பூத சுரத்தின் குணங்களாகும்.

பாடவேறுபாடு :
பாடல் எண் 29. 1. போல்வலிக்குங் கண்ணுருட்டிப்
2. பார்க்குமே.
3. சோபிக்கும்போல் சோற்றை
4. சிரிக்கு, 5. முடனே

அபிகாத சுரக் குணம்

தூர நடந்தால் தொழின்மிகுந்தார் தான்மிகுதல்[1]
ஈரஉண வெடுத்தல்[2] பிர மித்திடுதல்[3] - பாரவுடல்
வேர்த்தல் வலித்தல் லோபம்[4] விளைந்திடுதல்
வார்த்த[6] வபி காதசுர மாம். 30

தூரவழி நடந்தாலும், வேலை அதிகம் செய்தாலும் சுரம் மிகுதல், குளிர்ந்த உணவில் விருப்பம், பிரமித்தல், உடல் வியர்த்தல், வலித்தல், உடல் வற்றல் ஆகியவை அபிகாத சுரக்குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 30. 1. தோழின்மீது தாவீர் ஆனபித்த,
2. உண்டொடுதல், உணவெடுத்தல் உண்டெடுத்தல்,
3. பிரமித்தல்,
4. ஆலோபம், 5. ஆத்த.

அசீரண சுரக் குணம்

வலிக்கும்[1] துடைஇரண்டு மந்தத்தால் விக்கல்
பலக்கவிளைப் பார்புளித்தேப் பத்தால் - சலிக்கவே
ஒண்ணாத வன்சுரம் உண்டாக[2] அசீரணமென்று
எண்ணாத வன்பேய னே. 31

தொடை இரண்டில் வலி, மந்தத்தினால் விக்கல், மிகுந்த சத்தத்துடன் கூடிய புளியேப்பம், மனம் சலித்தல், மிகுந்த சுரம் இவை அசீரண சுரக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 31. 1. வலிக்கத்,
2. எண்ணாத வன்சுரம்உண்டாம்.

வாத பித்த சுரக் குணம்

தாலம் கறுத்தல் மலம்வெளுத்தல் பந்தித்தல்1
மேலெங்கும் நோதல் இளைத்துறக்கம் - சாலப்
பிரலாபித் தல்வாத பித்தசுர மென்பார்
அறிவுகெடு மென்றே யரி.[2] 32

நாக்கு கறுத்தல், மலம் வெளுத்துக் கட்டுதல், உடல் நோதல், இளைத்தல், தூக்கம், மிகவும் பிரலாபித்தல், சுய அறிவு கெடுதல் இவை வாத பித்த சுரக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *32.* *1.* தாலம் கறத்தான் மலம் வெளுத்தான்.
பந்தித்தான் புந்தித்தான்.
2. வரலாபத் தான்மகிழ் வார்.

வாத சிலேத்தும சுரக் குணம்

ஒருவன் இருமலுடன் நித்தமுமல் லாடி[1]
வருநா வெளுக்குமயிர்க் கூச்சாம் - பொருமி[2]
யவசுவா சம்[3] தாக மாம்கழுத்து நோகுமே
சிவசிவா வாதசிலேட்டு மம்.[4] *33*

இந்நோயாளி தினமும் இருமலுடன் அல்லாடுவர். நாக்கு வெளுக்கும், மயிர் கூச்செறியும், பொருமல், மிகுமூச்சு, தாகம், கழுத்துவலி இவை வாத சிலேத்தும சுரத்தின் குறிகளாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *33.* *1.* நிதமுமல் லாடல்,
2. பொருமி,
3. வசுவாசம், சுவாசந்,
4. வாத சேட்பம்.

பித்த சிலேத்தும சுரக் குணம்

பித்தத்தில் சிலேத்துமசுரம் பித்துப் பிடித்ததிலே[1]
ஒத்தோத்துத்[2] தாகிக்கும் ஊங்கிருமு - மெத்தத்தான்[3]
மார்புக்குள் ளேநோம் மயிர்க்கூச் செறியும்தான்[4]
சோர்வுக்குள் ஆகாமல் சொல். *34*

பித்த சிலேத்தும சுரத்தில் பித்துப் பிடித்ததைப் போலிருக்கும். தாகம், உறக்கம், மார்புவலி, மயிர்க் கூச்செறிதல், சோர்வு இவை உண்டாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *34.* *1.* பித்ததும், வேர், பித்துப் பிதற்றி வியர்த்,
2. ஒத்தே,

3. மெத்தானம்,
4. செறியுமதன்.

அவபத்திய சுரக் குணம்

புளகம் குளிர் வயிறு போதல் இருமல்
இளகும்கை கால்மெய் எரிவு - வெளிருடம்பு
கண்விலாநோ வபத்தியம்[1] காதலுறக் கம்மார்போடு
ஒண்முகங்கள் வாடலின மும்.[2] 35

மயிர்க்கூச் செறிதல், குளிர், வயிற்றோட்டம், இருமல், கை, கால் உடல் இவற்றில் எரிச்சல், உடல் வெளிறல், கண், விலாப் புறம் நோதல், உறக்கம், மார்பு, முகம், கால் இவை வாடுதல் இவை அவபத்திய சுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 35. 1. கண்விலானோ மவபத்தியே
2. வாலின்னமும்

சந்தாப சுரக் குணம்

சந்தாபங் கைகால்[1] அசதி தான் பிறக்கும்[2]
செந்தா மரைக்கண்கள் செப்பின்[3] அந்தோ[4]
பசக்குமே கண்கள்தனைப்[4] பார்க்கில்[5] நகக் கண்கள்[6]
பிசக்குமே ரத்தமெனப் பேசு. 36

கை கால் அசதி, கண்கள், சிவந்து செந்தாமரை மலர்போல் பசந்து இருத்தல், நகக் கண்களும் பிசுபிசுத்து இரத்தம்போல் சிவந்திருக்கும். இவை சந்தாப சுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 36. 1. சந்தா வதைகால்,
2. தரிக்குமே,
3. செப்பின்
4. நடந்தோ,
5. கடமைப்பார்க்கில், 6. நகக்கண்.

ஆயுக சுரக் குணம்

எஞ்சுமொரு நாள் இருநாள் முன்னுநாள்[1] நாலாநாள்
அஞ்சுநாளை மூன்றே ஆறுநாள் - எஞ்சாத

மாறல் சுரம்வருநாள் வாதபித்த சிலேட்டுமசுரம்
கூறொத்த வாயுகமாம் கூறு. 37

ஒவ்வொரு நாள், இரண்டு நாள், மூன்றுநாள், நான்கு நாள். ஐந்து நாள், ஆறு நாள், விட்டு முறையாக வரும் வாதபித்த சேத்தும சுரங்கள் ஆயுக சுரம் எனப்படும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 37. 1. எஞ்சுமொரு நாளிருநாள் மூன்றா நாள் நாலா.

சரும சுரம்

தோல்சாற் றெலும்பு குருதிதசை பற்றுமிந்த
நால்வகை வெப்பை நவிலக்கேள் - வேல் போன்ற
நாடிநடை மந்தமாம் நச்சுத் தலைவலியுஞ்
சாடுமொரு சீர்காய்ச் சலும். 38

சில பிரதிகளில் இவ்வாறு காணப்படுகிறது

தோல்பற் றியசுரமெய்ப் பூத்துசுர மங்குருதிப்
பாலுற் றதுதசையைப் பற்றுசுரம் - நால்வகை
தாது மந்தமொடு சற்றே தலைவலியும்
ஓதும் சிரக்காய்ச் சலும்.

தோல், எலும்பு, குருதி தசை இவை நான்கில் உண்டாகும் சுரம், நாடி நடை அளவில் மந்தப்படும். நச்சுத் தலைவலி, சீரான அரம் இவை சரும சுரக்குறிகளாகும்.

இரத்த சுரம்

மேற்குளிர் தாகம் மிகப்பிரமை தான்வருத்தல்[1]
மூர்ச்சைஇளை புத்தாகம் மெய்வியர்வை[2] - பார்க்கில்
இரத்தசுரம் அங்கமெங்கு மேவலிபி ராந்தி
உரத்த சுரமடித்த லும் 39

மேலே குளிரும், உள் தாகம் , பிரமை, வருத்தம், மூர்ச்சை, இளைப்பு, உடல் வியர்வை, வலி, பயம், அதிக சுரம் இவை இரத்த சுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 39. 1. மேற்குளிரும் தாகம் மிகவே ஆக்கப்பட்ட அஸ்தி சுரம்.
2. மெய்நோவு.

மாங்கிச சுரக் குணம்

நினைப்புட.னே நூறை நீங்கினர்போ லாலோ
சனைப்படுதல் மூர்ச்சை சுவாசம் - அனைத்துமோர்[1]
ஓட்டம் புகைமயிர்க்[2] கூச்சம் உடனோவும்
வாட்டமுற மாங்கிச சுரம் வந்து.[3] 40

நூறு வயது முடிந்துவிட்டது போல் நினைவும், ஆலோசனையும் ஏற்படும். மூர்ச்சை, இளைப்பு, உடல் வாட்டம், மயிர்க் கூச்செறிதல், உடல் நோவு இவை மாங்கிச சுரத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 40. 1. வேரனைத்துமோர். அனைத்துமே
2. ஒட்டமுலரும் புகை மயிர்.
3. வாட்டமுற, வாட்ட மாங்கிஷசுரம் வந்து.

அத்தி சுரக்குணம்

அங்கமும்[1] நொந்தால் எரிந்து[2] குளுந் தால்பசந்தால்
பொங்குசுர மானால்மார் புங்கழுத்தும் - திங்கள்
வதனம் வியர்த்தால்மூர்ச் சைவந்தால் மயிர்க்கூச்
சதனம் பிராந்தியும் சேர்.[3] 41

அங்கம் நோதல், எரிச்சல், குளிர், மிகுசுரம், மார்பு, கழுத்து, முகம் இவற்றில் வியர்வை, மூர்ச்சை, மயிர்க் கூச்செறிதல், பயம் இவை அத்திசுரத்தின் குறி குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 41. 1. அங்க மெங்கும்.
2. அழுந்து
3. சதனமும் பிராந்தியு ஆனான்.

சன்னி பாதசுரம்

கண்சிவந்து தேகங் கனத்துக் குளிரெரிச்சல்
புண்தடிப்பு வேர்வை பிதற்றுதலும் - நண்ணவே
யொப்பா சயித்தியமு முண்டா மாடல்பாடல்
தப்பாது சன்னிபா தம். 42

கண்கள் சிவந்து, தேகம் கனத்துக் குளிரும், எரிச்சலும், புண், தடிப்பும் உண்டாகும். வியர்வை பிதற்றல் சயித்தியம் உண்டாகும். ஆடல் பாடல் கண்டால் இது சன்னிபாத சுரம் என்று அறியலாம்.

சன்னிபாத சுரம் (வேறு)

அடலை புடலை[1] இட்டாலும் பித்தத்தி னாலும்
நடலை சுவாசம் நடந்தாலும் - குடலை இழுத்து
எப்போதும் விக்கல் இருமல் எடுத்தாலும்
தப்பாது சன்னிபா தம்.[2] 43

வீண் வார்த்தை பேசுதல், பித்தத்தினால் கெட்ட சுவாசம், குடலை இழுத்துக் கொண்டு விக்கல், இருமல் இவை சன்னி பாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 43. 1. புலை, முடலை.
2. வாதம்.

சந்திக சன்னி (சன்னி பாதத்தின் பிரிவு - 13)

மெய்க்குத்து மெய்யெரிவு மெய்ச்சோபம் கால் வலியோடு
ஒக்கவிரைக்கும்[1] சிலேட்டுமம் உண்டாகும் - அக்கணமே
கண்திறவா மைகண்டால் சந்திகச் சன்னிஎன்று
கண்திறவா மைப்போற்றும் காண். 44

உடம்பில் குத்துவலி, எரிச்சல், சோபை, கால்வலி, உடல் விரைத்தல், சிலேத்துமம் உண்டாதல், கண் திறவாமை இவை கண்டால் சந்திக சன்னி என அறியலாம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 44. 1. வாய்மை

அந்தக சன்னி

வாந்திதலை சுற்றி வருதல் பிதற்றுதல்பி[1]
ராந்திஅதி தாகம் மீறிசுரம் [2]- தீர்ந்துவிடா
விக்கலையும் அந்தக சன்னிஎன்றே விள்ளுவார்
இக்கலையு ணர்ந்தவிய லோர்.[3] 45

வாந்தி, தலைசுற்றல், பிதற்றல், பயம், மயக்கம், அதிக தாகம், அதிக சுரம், தீராத விக்கல் ஆகிய குணங்கள் கண்டால் அந்தக சன்னி என மருத்துவர் அறிவர்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 45. 1. பித்ததிடுதல்,
2. அதிக சுரம்.
3. இக்கலை யும் வந்த வியலார், எக்கலையும்.

உருத்தாக சன்னி

பிரமை எரிவுபிர லாபம் உரைப்பார்
தருமிடத்து நோய்க்கிடைகொள் ளாமை - வருதலைசுற்று
ஓட்டமுலர் தல்நுத லும்கழுத்து வேர்த்திடுதல்
சாட்டி யுருத்தாகம் தான். 46

பிரமை, உடல் எரிச்சல், பிரலாபித்தல், படுக்கை கொள்ளாமை, தலைசுற்றல், உதடு உலர்தல், நெற்றி கழுத்து வியர்த்தல் இவை உருத்தாக சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 46. 1. ஓதுவார்.

சித்தவிப் பிரம சன்னி

சித்தவிப்பி ரமசன்னி செய்யும் குணம்வாதம்
பித்தமிகும் நேரம்வாய்ப் பிதற்றுமே - நித்தம்
இடுமே நினைக்குநினைவு எல்லாம் அழிந்து
விடுமேபா டத்துவக்கு மே. 47

சித்த விப்பிரம சன்னியில் வாதபித்தம் அதிகமாகும். அப்போது வாய்ப்பிதற்றல். நினைவுகள் அழியும். பாடல் பாடும் இவை சித்த விப்பிரம சன்னியின் குறி குணங்களாகும்.

சீதாங்க சன்னி

சீதாங்கச் சன்னிஎனில் தேகம் குளிர்ந்துஇருமல்
ஏதாங்க ஒட்டாது இரைக்குமே - தீதாம்
கழிச்சலுடன் மெய்நோதல் வாந்திகப மூர்ச்சை
அழுத்தலும் விக்கலும்உண் டாம். 48

சீதாங்க சன்னியில் உடல் குளிர்ந்திருக்கும். இரைச்சல், கழிச்சல், உடல்வலி, வாந்தி, மூர்ச்சை, உடல் அழுத்துதல், விக்கல் உண்டாகும்.

பாடல் வேறுபாடு :

பாடல் எண் : 48. 1. இரைப்பு வரும்.

தாந்திரிக சன்னி

மிகும்சுரம் தாகமும் கண்ணீர் விழுதல்[1]
தொகுமூச்சு[2] வாய்பிதற்றல் தாபம்[3] - மிகும்கழிச்சல்
நாய்முள்ளாய்க் காரென்று இதழ்[4]போ லுலர்ந்துதின
வாய்யுள்ளே தாந்திரிகத் தால்.[5] 49

அதிக சுரம், தாகம், கண் பருத்துக் கண்ணீர் வடிதல், மூச்சிரைப்பு. வாய் பிதற்றல், தாபம், மிகுதியான கழிச்சல், நாக்கில் நாமுள் போல் இருத்தல், கால்கள் தென்னை ஓலையைப் போல் உலர்தல், அரிப்பு இவை தாந்திரிக சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 49. 1. கண பருத்து நீர் வழிதல்.
2. நோகும், தொகும் சுவாச.
3. சோம்பல், சோப.
4. கன்றெரிதல்.
5. வாழ்.

கண்ட குப்ச சன்னி

கண்டகுப்ச சன்னி கழுத்து நரம்பிழுத்து[1]
மண்டுபி ராந்திபயம் வாந்திவிக்கல் - உண்டாம்
புலம்பும் தலைசுற்றிச் சோர்ந்திடும்மெய்[2] புண்பட்டு
உலர்ந்தநா வா[3] மூர்ச்சை உன்.[4] 50

கழுத்து நரம்புகளை இழுத்துக்கொள்ளும். பயம், வாந்தி, விக்கல், புலம்பல், தலை சுற்றல், சோர்வு, உடல் புண் போலாதல், நாக்கு உலர்தல், மூர்ச்சை இவை கண்ட குப்ச சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 50. 1. நரம்பிழுக்கும்.
2. சோர்ந்திடுமே.
3. உளந்தினவா.
4. உலர்ந்து நாவாய் மூர்ச்சையும்.
உலர்ந்த நா மூர்ச்சையும்.

கர்ன்னிக சன்னி

கீற்றாய் வெடித்த[1] நா கேளாச் செவிபித்தன்
மேற்றான் நிரைப்பிதற்றல்[2] விக்கல்[3] - ஆற்றது[4]
காட்டும் பிரலாப கர்ன்னிகச் சன்னிஎன்பார்
கூட்டும் பிரலாபங்கூர். [5] 51

கீற்றாக நாக்கு வெடித்தல், காது கேளாமை, பிதற்றல், மேல் இரைப்பு, விக்கல் இவை கர்ன்னிக சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 51. 1. வெடித்து.
2. நிரை பிசைதல்.
நிரைப்பசையா.
3. விக்கலுடன்
4. ஆற்றாது.
5. பிரலாபங் கொத்தது மென்.

புக்னநேத்திர சன்னி

திறந்த விழி இமையாச் சேதியா நாட்டம்[1]
மறைந்திடலாக் கண்ணீர் வரலா - இறந்தோர்
அனைய பிரலாபம் ஆகும் பிராந்தி
இனைபுக்ன நேத்திர மே. 52

திறந்த கண்கள் இமையாது. கண் பார்வை மறையும், கண்களில் நீர்வடியும், உயிர் போவதுபோல் பிரலாபிக்கும், ஆற்றாமை இவை புக்னநேத்திர சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 52. 1. செய்தியிநாட்டம். செய்தியார்
செய்தியார்நாட்ட

இரக்திட்டிவி சன்னி

நாவெடித்துக் காரமுள்ளாய் ஞானமின்றி சென்னிசுற்றும்
கூவவெதிற் சார்வெப்புக்[1] கொள்விக்கல் தாவசுரம்[2]
சித்தபிரமை சென்னீர் கழிதல்ரக் திட்டிவி
முத்த வெடிக்கும் உலர்ந்து.[3] 53

நாக்கு வெடித்து முள்போல் இருத்தல். அறிவு மயங்கித் தலை சுற்றல், அழைப்பை உணரமுடியாமை, அதிக சுரம், விக்கல் சித்தப் பிரமை, சிவந்து நீர் கழிதல் இவை இரத்திட்டிவி சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 53. 1. சொல்வெப்பு, சோர்வெப்பு.
2. தாவுசுரம்.
3. உலத்தும்.

பிரலாப சன்னி

வாய்ப்புலம்பு மெய்நடுக்கு மற்றுமுடல் நோகிருமும்
தூயவிக்கல் தாபச் சுரமுண்டாம்[1] - காயமெல்லாம்
பேராபிச் சுடாமல் பிரலாப சன்னிஎன[2]
யாரும் அறிவார் அறி.[3] 54

வாய் புலம்பும், உடம்பு நடுங்கும், உடல் நோதல், இருமல், விக்கல், தாபம், மிக்க சுரம், உடல் முழுதும் அதிகச் சூடு இவை பிரலாப சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 54. 1. உண்டாகும் :
2. பேராகிச் சூடாம் பிரலாப சன்னிக்கென.
3. ஆறாயென்றா ரறிவுளார்.

சிம்மக சன்னி

காதுகே ளாதிருத்தல் காலெரிவு கையெரிவோடு
ஓதும் சுவாசதாகம்[1] உட்டிணமும் - வாய்திறப்ப
தெங்கு[2] நாமுட்போல் வெடித்துக் கறுத்தால்[3]
தங்கு[4] சிம்மகசன்னி[5] தான் 55

காது கேளாமை, கை கால் எரிச்சல், மேல் சுவாசம், தாகம், உட்டிணம், வாய் திறக்க இயலாமை, நாக்கில் முள்போல் வெடித்துக் கறுத்தல் இவை சிம்மக சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 55. 1. சுவாசகாசம்.
2. தேங்கு,

3. எங்கு நாமுட்போல் வெடித்தால்
கருத்தால்.
4. தாங்கு,
5. சிங்குவாத, சிம்மக.

அபினியாச சன்னி

காற்றுமுதல் மூன்றும் கலந்துபல வண்ணநாக்கு
ஏற்றும் சுவாசபல வீனமோ[1] - ஆற்றிஉடல்
உண்டுநோய் தூக்கும்[2] சுரம்அபினி யாசசன்னி
என்றறியாய் நன்றறி வானே. 56

வளி, அழல், ஐயம் மூன்றும் நாடியில் கலந்து இருக்கும். நாக்கு பல நிறங்களில் தோன்றும், மேல் சுவாசம், பலவீனம். உடல் வலி, தூக்கம், சுரம் இவை அபினியாச சன்னியின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 56. 1. பலவீனவய.
2. தூக்கம்

சாத்திய சன்னி வகை

சருவிய சந்திகம் தாந்திரக சன்னி
திருவில்பிர லாபசன்னி[1] சித்தவிப்ரம - நிருணயமாய்
மாறுபடுங் கர்ன்னிகசன்னி சிம்மகசன்னி யோடு[2]
ஆறுவகை யும்சாத்திய மாம். 57

சந்திக சன்னி, தாந்திரிக சன்னி, பிரலாப சன்னி, சித்த விப்பிரம சன்னி, கர்ன்னிக சன்னி, சிம்மக சன்னி எனும் இந்த ஆறுவகை சன்னிகளும் தீரக் கூடியவையாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 57. 1. பிரலாப சன்னி.
2. சிம்மகமாம்,

அசாத்திய சன்னி வகை

நீக்கமில்அந்தகச் சன்னி புக்ன நேத்திரசன்னி
ஏக்கமுறு கண்டகுப்ச ரத்திட்டிவி[1] - நோக்கில்
அசாத்தருசீ தாங்கம் அபினியாச மிருத்தாகமொடு
அசாத்திய சன்னியே ழாம். 58

அந்தக சன்னி, புக்ன நேத்திர சன்னி, கண்டகுப்ச சன்னி, இரதிட்டிவி சன்னி, சீதாங்க சன்னி, அபினியாச சன்னி, உருத்தாக சன்னி எனும் இவை ஏழும் அசாத்தியமாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 58. 1. ரக்தஷ்டி

சன்னி சாத்தியா அசாத்தியம்

ஐந்தாநா ளேழாநாளாகு மிரண்டொன்பானாள்
முந்தாநாள் பன்னொன்றின் மூடுசன்னி - வந்ததெனிற்
தீர்ந்தாலுந் திருமது தீராமலே யதனால்
வீழ்ந்தாலும் வீழும் விளம்பு. 59

5, 7, 9, 11 ஆகிய நாட்களில் சன்னி ஏற்பட்டால் தீர்ந்தாலும் தீரலாம், அன்றித் தீராமலும் போகலாம்.

சன்னிக்கு நாளறிய

சந்திகச் சன்னிநாளே ழாமந் தகச்சன்னி
வந்திடுநாள் பத்துருத் தாகசன்னி - இந்தநாள்
இருபதாம்[1] சித்த விப்பிரமெழு மூன்றும்
வரு சீதாங் கம்[2] பதினைஞ் சாம். 60

எஞ்சிய தாந்திரிகம் ஏழுநா ளன்றியுமே[1]
அஞ்சுநாள் கண்டகுப்ச பதிமூன்றில் - அஞ்சுவரும்[2]
அட்டமாம் கர்ன்னிகசன் னிக்குநாள் தொண்ணூறும்
எட்டுநாள் புக்னநேத்தி ரம். 61

இரத்திட்டிவி ஈரைந்தாம்[1] ஈரேழு பிரலாபம்
மெய்த்தசிங்கு வாத[2] சன்னி யீரெட்டாம் - வைத்தபதின்
அஞ்சாநா ளாகும் அபினியாசம் நாள்கடந்து[3]
மிஞ்சினால் மூன்று நாளே. 62

பாடல் எண் : 60. 1. நீங்கிருபதாம்,
2. சீதாங்கசன்னி நாள். தாங்குசன்னி நாள்
61. 1. நாளுமன்றியுமை
2. மூன்றா - மிஞ்சிவரும், இஞ்சுவரா
62. 1. இரக்திட்டி, பிரத்தட்டி ஈரைந்தாம்
2. சிம்மக சன்னி
3. இந்த நாள் கடந்தால்

சன்னிக்கு நாளறிய

சன்னி	நாள் அளவு
சந்திக சன்னி	*7*
அந்தக சன்னி	*10*
உருத்தாக சன்னி	*20*
சித்த விப்ரம சன்னி	*21*
சீதாங்க சன்னி	*15*
தாந்திரிக சன்னி	*12*
கண்டகுப்ச சன்னி	*13*
கர்ன்னிக சன்னி	*90*
புக்ன நேத்திர சன்னி	*8*
இரக்திட்டிவி சன்னி	*10*
பிரலாப சன்னி	*14*
சிங்குவாத சன்னி	*16*
அபினியாச சன்னி	*15*

இவற்றில் தீரும், மிஞ்சினால் மேலும் 3 நாள்களில் தீரும்

ஏழுவிததோடப்பிறப்பு

தருணவெப்பில் பத்திய தாட்சிவந் தாலேழு
மரணவித் தோடம்வந் தெய்தும் - வருமாறு[1]
கைப்புளிப் பிழல்சிக கண்ட[2] தாம்பூலம்பால்[3]
அப்பால் பரிமளப்பூ வால்.[4] 63

தண்ணீர் சயித்தியமும் தையலார்[1] சங்கமமும்[2]
எண்ணீர்[3] வழிநடையோ டேஇசைத்தல்[4] - கண்ணீர்
வரவே அழுதல்மகா தோடம்ஆ மென்று
உரவோர் உரைத்தார் உகந்து. 64

சுகந்தமொடு சந்தனம்கற் பூரம் துவர்காய்
மிகுந்தசிவப் பாடைமோர் வெல்லம் - மிகுந் தெண்ணெய்[1]
பால்தயிர்நெய் கோடிமெத்தை பால்மொழியார்[2] சொல்லாடல்
கால்துயிலும் இல்லமுமா காது.[3] 65

பாட வேறுபாடு :

பாடல் எண் : 63. 1. வரும்வாறு, வருமாருக
2. புளிப் பழற்சி

3. தாம்பூலம்
4. பூவலால், நைப்புப் பரிமளப் பூவால்
64. 1. தையநல்லார்
2. சங்கமும்
3. மென்னீர்
4. நடையோடோட்டிசைத்தல்
65. 1. முகந்தெண்ணை
2. பண்மொழியார்
3. கால்துயிலுமில்லாமுமாகா

தருண சுரத்தில் அவபத்தியத்தினால் மரணத்தை உண்டாக்கும் ஏழுவகை தோடம் ஏற்படும்.

கைப்பு, புளிப்பு, தொண்டை அழற்சி, தாம்பூலம், மணவகை, பூ, தண்ணீர், பெண் சேர்க்கை, மிகுந்த நடை, கண்ணீர் பெருக அழுதல், சந்தனம், கற்பூரம், பாக்கு, சிவப்பு ஆடை, மோர், வெல்லம், எண்ணெய், பால், தயிர், நெய், புதுத் துணி, மெத்தை இவைகள் தோடத்தை உண்டாக்கும்.

அபத்திய தோடத்தின் இலட்சணம்

சோம்பல் களைமூர்ச்சை தோன்றாப்[1] பிரலாபம்
தேம்பியழு தல்தண்ணீர்[2] தேடல் - ஓம்புமுற
நொந்தால பத்தியத்தில் நோவா[3]ன தோடமெனச்
செந்தா மரைமுகத்தாய்[4] செப்பு. 66

சோம்பல், மூர்ச்சை, பிரலாபித்தல், தேம்பி அழுதல் இவை அபயத்திதோடக் குறிகளாம்.

பாட வேறுபாடு

பாடல் எண் : 66. 1. தொண்டர், தோன்றாய்
2. கண்ணீர்
3. நோவான
4. முகத்தாய்

சங்கமம் தோட இலட்சணம்

வெப்புத் தருணத்தில்[1] மெல்லியரைத் தோய்ந்தசன்னி
அப்போமெய் நொந்துடல ஆடுமே[2] - செப்புறத்தின்

உள்ளே எரித்தழுதல்[3] ஓங்கிஎழுந் தேமயங்கித்
தள்ளாங்கை கால்குளிரும் தான். 67

சுரமுள்ளபோது பெண் சேர்க்கையில் ஈடுபடுவதால் உடல் நோதல், நடுக்கல், உடல் எரிச்சல், எழுதல், மயங்கி வீழ்தல், கை கால் குளிர்தல் இவை சங்கம தோடத்தின் குறிகுணங்களாகும்.

பாட வேறுபாடு
பாடல் எண் :67. 1. வெப்பிறை குணத்தில்
2. நொந்துடல் மாளுமே
3. எரிந்தெழுதல்

விடம தோட இலட்சணம்

வெப்புமிகுந் தேஉழலை மென்மேலு மாய்நாடி
தப்பில் குடிலமாய்த் தானடைத்த - துப்புதரம்[1]
வெந்தே[2] மிகவெரிதல் வேர்த்தலொடு மூர்ச்சையும்
அந்தோ விடமதோடம் ஆம்.[3] 68

சுரம் மிகுந்து உழற்றல், நாடி சிதைதல், உதடு வெந்து எரிதல், வியர்த்தல், மூர்ச்சை இவை விடம தோட இலட்சணங்களாகும்.

பாட வேறுபாடு

பாடல் எண் : 68. 1. ஒப்புதரம்
2. வந்தால்
3. வரிலந்தோ விடஞ்சன்னியாம். அந்தோ விடசன்னியாம்

விட சீத தோட இலட்சணம்

நாளொன்றின் முக்காலரைக்கால் நளிர்வெப்புக்
கோளன்றி யேமயக்கம் கொள்தாகம் - தோள்சென்னி
நோதல்நா முள்போன்று நுண்மையின்றி[1] யேகடினம்
ஆத லேவிடச்சீ தம்.[2] 69

ஒருநாளில் முக்கல், குளிர் சுரம், மயக்கம், தாகம், தலைவலி, நாமுள் போன்று தடித்திருத்தல் இவை விடசீத தோடத்தின் குறிகளாம்.

பாட வேறுபாடு
பாடல் எண் : 69. 1. உண்மையின்றி
2. ஆதல் விஷம சீதமாம்

பீதசிம்மக தோட இலட்சணம்

பொன்னுரைத்தால் என்னப்[1] பொருந்துநா முள் போன்று
துன்னி வெடித்துநீர் தோன்றாமை - பின்வெதுப்பும்
மூர்ச்சை உழலை முகவியர்வாம் பீதசிம்மம்
ஆச்சரிய மீதென்று அறி. 70

நாக்கு கல்போல் கடினப்பட்டு முள்ளோடு வெடித்து நீர் வடியும், சுரம், மூர்ச்சை, உழலை, வியர்வை இவை பீதசிம்மக தோடத்தின் குறிகளாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 70, 1. அன்ன.

கிருட்டிண சிம்ம தோட இலட்சணம்

நாக்குக் கறுத்து நளிரின்றி[1] முள்போன்று
வேர்க்கும் தினவோடு மேன்மூச்சாம் - பார்க்குமெழு
மெத்த விழுமுழலை மென்மேலும் கிருட்டிணசிம்ம[2]
சித்த மயக்குமென்று தேர். 71

நாக்குக் கறுத்து, குளிர்ந்து முள்போன்றிருக்கும், வியர்வை, அரிப்பு மேல்மூச்சு எழுதல், வீழ்தல், உழலை இவை கிருட்டிண சிம்மதோடக் குறிகளாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 71. 1. நளிரின்றி
2. கிஷ்ணசிம்மஞ்

இரத்த சிம்மக தோட இலட்சணம்

தாலெங்கு மேசிவந்து[1] தண்ணீராய் முட்போன்று
மேலெங்கும் வெப்பாய் விதாகித்தால் - சாலவே
தாகமுழ லைதனைக்கண் டால்ரத்த சிம்மதோடம்[2]
ஆகு மெனவே அறி. 72

நாக்குச் சிவந்து, நீர் வடிந்து, முள் போன்றிருத்தல், சுரம், தாகம், உழலை இவை இரத்த சிம்மக தோடத்தின் குறி குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 72. 1. எங்குமே சிவந்த
2. சிம்ம

தோடங்களுக்கு நாள்

சொன்னோம் எழுவகையின் தோடவித நாள் சொல்லின்
முன்னேழ் கடினமன்றி மூவைந்தாம் கன்னலிலும்[1]
பாகடரு மின்சொல் பனிமொழியாய்[2] நூலறிந்த[3]
வாகடர்கள் சொன்ன வழி. 73

ஏழுவகை தோடங்கள் ஏழு நாள் பதினைந்து நாளில் தீரும்.

பாடவேறுபாடு :
பாடல் எண் : 73. 1. கன்னலினும்
2. பணிமொழியாய்
3. நூலறிந்து

அதிசார நிதானம்

கார மருந்தாலோ கண்கலங்கி ஓடியிடல்[1]
ஈரமுறும் பண்டம் இனி தருந்தல் - நேரே
பொருத்தமிலாப் பேதிப் பொருளைப் பொசித்தல்[2]
வருத்துமதி சாரம் வரும். 74

கார மருந்துகளை உட்கொள்ளல், கண்கலங்கல், ஓடுதல் ஈரத்தோடு இருத்தல், இனிப்புப் பண்டங்களை அருந்துதல், உடலுக்குப் பொருந்தாத பேதிப் பொருளை அருந்தல், அதிசார மாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 74. 1. மருந்தலொடு கண்கலங்க லோடலு
2. பொருளிப்போது புசிக்க.

வாதாதிசார இலட்சணம்

கறுத்த மலம்நுரைத்துக் கண்டா இறுகி
மறுத்த[1] முதரம்பொருமி வாய்வுப் - புறத்தே[2]
அடிக்கொரு கால்ப்போயடி வயறு மெய்நொந்தால்[3]
அருக்கியவா தாதிசா ரம். 75

மலம் கறுத்து நுரைத்து இறுகிப் போகும். வயிற்றுப் பொருமல், வாயு, அடிக்கடி மலம் கழிதல், அடிவயிறு உடல் நோதல் இவை வாதாதிசாரத்தின் குறி குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 75. 1. மறுத்த, 2. பரிந்தே
3. அடிவயறு மெய்நொந்தால்

பித்தாதிசார இலட்சணம்

ஒருக்கால் சிவந்த மலம்உட் டிணமும்[1]
ஒருக்கால் நுரைத்தல்[2] உழலை - சுரந்தாகம்
மார்புவலி மூர்ச்சை மயக்க முதடுலர்தல்
சாரவே பித்தாதி சாரம். 76

ஒரு சமயம் சிவந்து உட்டிணத்துடன் கழிதல் அல்லது ஒருவேளை நுரைத்துக் கழிதல், உழலை, சுரம், தாகம், மார்பு வலி, மூர்ச்சை, மயக்கம், உதடு உலர்தல் இவை பித்தாதி சாரத்தின் குறி குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 76. 1. மலமுஷ்ண மொருக்கால்
2. ஒருக்காலா யொருக்கா னுரைத்து,
ஒருக்கால் உரைத்தல்

சிலேட்டுமாதிசார இலட்சணம்

சீராய் உதரம் வலித்தலுடன் சேருமதி[1]
சாரகுணம் சீதமலந் தானருசி - நேராய்
இருத்தலுமாம் அப்பால்[2] புறங்குளிர உள்ளே[3]
எரித்தல் பொருமல் இளைப்பு. 77

வயிற்று வலியுடன் சீதமாய் கழிதல், ருசியின்மை, குடல் உள்ளே எரிச்சலும், வெளியில் குளிர்ச்சியுமாக இருக்கும், வயிறு பொருமல், இளைப்பு இவை சிலேத்துமாதிசார குறி குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 77. 1. சேர்மாதி, சிலேட்டும, சேட்பமதி
2. அப்பால் இருமல்
3. புறங்குளிர்தல்

தோடாதிசார இலட்சணம்

வாந்திபிரமை விக்கல் வாராமை நித்திரையுங்
காந்து இரத்தஞ் சீதமாய்க் கழிதல் - மாந்தரெழுந்
தோடல் கை கால் குளிர்தல் தொல்சுவாசம் வேர்வைமெய்
ஆடல் தோடாதி சாரம் 78

வாந்தி பிரமைவிக்கல் நித்திரை வாராமை வயிறு
இரைந்து இரத்தம் சீத மாய்க் - காந்தலொ

ஓடுதல் கைகால் குளிர் உற்சுவாசம் வயிறு
ஆடுதல்தோ டாதிசாரம்

வாந்தி, பிரமை, விக்கல், தூக்கம் வராதிருத்தல், எரிச்சலுடன் இரத்தம் சீதமாகக் கழிதல், எழுந்து ஓடல், கை, கால் குளிர்ந்திருத்தல், மூச்சு வாங்கல், வியர்வை, உடல் நடுக்கல் இவை தோடாதிசாரத்தின் குறி குணங்களாகும்.

அசாத்தி யாதிசாரஇலட்சணம்

வழிந்தவிளக் கெண்ணெய்போல் மாங்கிசம்போல் தேன்போல்
கழிந்தமல நாற்றத்தார்க் கண்டும் - மொழிந்த
கிழக்குரலாய்[1] கேட்கும் சாத்தியாதி சாரம்
வழக்கிதெனச் சொல்வார் வகுத்து. 79

விளக்கெண்ணெய் மாமிசம் தேன் இவை போல நாற்றத்துடன் கழிதல் கிழக் குரலுடன் பேசுதல் இவை அசாத்தியாதி சாரத்தின் குறி குணங்களாகும்.

பாட. வேறுபாடு :

பாடல் எண் : 79. 1. கிழக்குரலை

அசாத்திய அதிசாரம்

என்னிறமும் தேனிறமும்[1] இரத்தமுமாய் நாற்றமாய்
பின்னிளகல்[2] கட்டியுமாய்ப் பேதித்தால் - முன்னே
சலியாத சாத்தியாதி சாரமென்பார்[3] சிந்தை
மெலியாது சாற்றுமறிவீர்.[4] 80

பலநிறமாயும், தேன் போலும், இரத்தமாயும் நாற்றத்துடன் இளகலும், கட்டியுமாய் பேதியாதல் இவை அதிசாரத்தில் அசாத்தியாதிசாரக் குறி குணங்கள் ஆகும்.

பாட வேறுபாடு:

பாடல் எண் : 80. 1. தேனும்
2. பின்னிழக்கல்
3. சாரமென்பீர்
4. சாற்றியது அறிவீர்

சாத்தியாதிசாரம்

முல்லையரும் பாயஇரு கண்நீல மாய்முகமும்[1]
தொல்லைமருவைத் துடைத்தெழுந்த[2] - நல்ல
மதியாய்க் குயிலோசை வார்த்தையாய் ஒத்தக்
கெதியாக[3] நாடிக் கிளைத்து. 81

கஞ்சிகுடித்து மணமறிந்து காதும் கேட்டு
எஞ்சியவோர் தும்மல்தின வுஈரநாக் - குஞ்சோற்றில்
விச்சைநகக் கண்கை ரேகை யில்இரத்தம்[1]
வெச்சென்றும் சாத்தியமா மே. 82

கண்கள் முல்லை அரும்பாய் முகம் நீலமாய் உடல் வியர்வையுடன் குயில் ஓசையைப் போல வார்த்தையும் நாடி நடையும் அறிந்தால் அதிசாரம் சாத்தியமாகும்.

கஞ்சி குடித்து மணம் அறிந்து காது கேட்டு தும்மல் தினவு ஈரநாக்கு இரேகையில் இரத்தம் தெரிதல் இவை அதிசாரத்தின் சாத்தியக் குறிகள் ஆகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *81.* *1.* மாமுகமுங் கண்ணீலம்
2. தொல்லை மருவை தொடைத் தெழுந்தல்
3. கதியாய்
82. *1.* இசைந்த கைரேகை இரத்தம் கை கால்

அசாத்திய அதிசாரம்

கொப்பு ழுள்மார்பும் கைகால் குளிர்ந்துகுளிர்
வெப்பதிகம்[1] வாய்பிதற்றல் மேல்மூச்சோடு - எப்பொழுதும்
அற்பசுர கந்தம் அறியாழுக் குச்செவியில்
சொற்ப சுரமுமா காது. 83

கண்சிறுத்துக் காந்திமுகம் போலொழிந் துநக[1]
கண்கைகா லோடுஇரத்தம் காணாமை[2] கண்களிமை
யாதுருசி யாது வியர்த்துவியர் காதுகேளாது[3]
வாதமொரு பாகவலி யும்[4] 84

சோர்ந்து தலை சேத்துமம்[1] தொண்டையிலே வந்ததும்மல்
காந்தி கபிலநிறம் காட்டியுமே - நீந்தாத

விக்கலுடன் நாடி மெலிந்ததான் தொட்டவுடன்
சக்கரம்போல் சுற்றிவரும் தான்.[2] 85

முன்னோடும் வாதமும் பின்னோடும் பித்தமும்[1]
முன்னோடிச் சேத்துமமுன்[2] னோடுஇரண்டின்[3] - பின்னோடில்
சொல்லார் குடிலமாய் ஓடத் தொடங்கில் இவை
எல்லாம் சாத்தியமென்றேன். 86

பாட வேறுபாடு :

பாடல் எண் : 83. 1. வெப்பரிய
84. 1. கண்சிறுத்துப்போய் முகக்காந்தி யொழிந்துநக
2. காட்டிமற
3. வியர்க்காது கேளா
4. துதவாதுதவா துதவா
85. 1. சொந்தத்து உலையும்
2. சுற்றிவருந்தான்
86. 1. முன்னோடு வாதம் பின்னோடிற் பின்னோடுபித்தம்
2. சேட்ப
3. எல்லாம் சாத்தியமென்றே

தொப்புள், மார்பு, கைகால் குளிர்தல், அதிக சுரம், வாய் பிதற்றல், மேல்மூச்சு, எப்பொழுதும் அற்பசுரம், மணமறியாமை, மூக்கு காது சூடாக இருத்தல், கண் சிறுத்தல், முகம் ஒளிகுன்றல், நகக் கண், கை கால் இவற்றில் இரத்தம் குறைதல், கண்கள் இமையாதிருத்தல், சுவையின்மை, வியர்த்தல், காது கேளாமை உடலின் ஒரு பக்கத்தில் வலி, தலை சோர்தல், தொண்டையில் சளி சேர்தல், உடல் வெளுத்தல், விக்கல், நாடி மெலிந்து தொட்டால் சக்கரம் போல் சுற்றுதல், முதலில் வாதமும் பின்னால் பித்தமும், சேத்துமம் இவற்றின் பின்னால் சிதைந்து நாடி நடை நடந்தால் அசாத்திய அதிசாரம் என்று அறிய வேண்டும்.

நாடி விகற்பப்பட்ட வர்கள்

உண்டோன் மிகப்பசித்த வன்உறங்கி னோன் நடந்தோன்
நண்டு முயல்கோழிநா கம்தவளை - உண்டோன்
மதுவருந்தி னோன்வாயுத் தாரணை யாக[1]
மதுவருந்தி னோனன்றியும்.[2] 87

அமரகண்டம் பொற்கெந்த மாம்நனஞ் சுண்டோன்[1]
குமரகண்டம் கொண்டோன்பேய் கொண்டோன் - சுமைஎடுத்து[2]
உடலிளைத்தோன் நாடி செவ்வே டாதென் றெண்ணீர்[3]
கடலிளைத்த கல்வியீர் காள். 88

உணவு உண்டவர் அதிகமாகப் பசித்தவர், உறங்கினவர், நடந்தவர் முயல் கோழி நாகம் தவளை உண்டவர்கள், மது அருந்தியவர்கள், மூச்சுப் பயிற்சி செய்தவர்கள், அமர கண்டம், கெந்தகம் முதலிய நஞ்சு உண்டவர்கள், பேய் கொண்டவர்கள், சுமை எடுத்து உடல் இளைத்தவர்கள், இவர்களுக்கு நாடி நடை செவ்வையாக ஓடாது.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 87. 1. தாரனையானாக
2. னோனறியும்
88. 1. போற் கெந்தகமுத னஞ்சுண்டோன்
2. சுமையா
3. என்றேன்

இலங்கணத்திற்கு அபாத்திரர்கள்

வழங்குமதி சாரிக்கு கர்ப்பிணி விருத்திகன்[1]
குழந்தைசயம் கிராணிகண்ணோய் கொண்டோன் - விரைந்து[2]
வழிநடந்தோன் இளைத்தோன் கல்விபயில் வானும்
அழிவந்த[3] லங்கணமி லார். 89

அதிசார நோயுற்றவர், கர்ப்பிணி, வயோதிகர், குழந்தை, சயம், கிராணி, கண்ணோய், வேகமாக வழி நடந்தவர்கள், இளைத்தவர்கள், கல்வி பயில்வோர்கள் இவர்களுக்கு லங்கணம் இடுதல் கூடாது.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 89. 1. கெர்ப்பிணி வாயதீகன், கருப்பிணி விர்த்திகன்
2. கண்ணோய் - உழன்றோன்
3. அழிவந்த

சுரரோசி சிகிச்சை விபரம்

பழிசுரத்தில் மற்றநாள் பல்துலக்கி நாக்கு[1]
வழித்துவென்னீ ராலே வதனம் - கழுவிப்பின்னே[2]

காத்தொரு[3] நாளொன்றாய்க் காய்ந்த வென்னீர் சேர்த்தருந்தி
தேத்தான்வித் தொன்றுதின்ன வும்.[5] 90

அப்பால்மூன் றாநாள்நா லாநாளும் லங்கணமாய்த்
தப்பாதுஅஞ் சாநாள்ஆ றாநாளும் - நற்போதில்
கஞ்சிகுடித் தப்பால் அவிழ்தம்கொள் வார்கமல[1]
வஞ்சிகுடி கொண்டுவாழ் வார். 91

ஆதியிலே லங்கணமும் அந்தியத்தி லே[1]மருந்தும்
கோதி லிடை நடுவே கஞ்சியும் குடித்து - வாதம்
பாரணத்தில் சேத்துமமத்தி யானத்தில் பித்தம்
புறவானத்தில் கஞ்சி கொள்ளலாம்.[2] 92

ஏன்றதொரு வாத சுரத்துக்கு லங்கணநாள்
மூன்றுபித்த சேத்தும்[1] முறையாக - வான்றலகு
வான்றதொரு போசனமு மாங்கஞ்சி யும்பகரும்[2]
மூன்றதொரு வாய்ந்தோர் உரை.[3] 93

வாதசுரம் ஏழுநாள் வன்பித்தம் ஆறுநாள்[1]
ஓதும் கபத்துக்கு ஒன்பதுநாள் - தீதகலும்
தொந்தசுரம் பத்துநாள் தோன்றவே லங்கணம் வைத்து[2]
அந்தத்தி லேமருந்து மாம். 94

பாட வேறுபாடு :

பாடல் எண் : 90. 1. நாக்கை
2. கழீஇப்பின்னே
3. காத்தோராய்
4. சாத்தருந்த, சாத்தருந்தீர், சாத்தருந்தி, சன்றருந்தி.
5. வித்தொன்றெடுத்தின்
91. 1. கொள்வா ருரை கமல
92. 1. அந்தயத்திலே
2. நவநாழிகை வாதம் ஓதவே நற்பித்தம் தவளை கடும்பகலார்தின்
93. 1. சேட்ப
2. வானதொரு போஜனமும் வேண்டுவது வெங்கஞ்சி
3. மோனருரை யாய்ந்தே மொழி

94. 1. ஏழுநாள்
2. தோன்ற விலங்கனம் வை.

சுரம் தோன்றியவர்களுக்குக் காலையில் பல் துலக்கி நாக்கு, வழித்து, வெந்நீரால் முகம் கழுவி தேற்றான் கொட்டையை வெந்நீரிலிட்டு அந்த வெந்நீரை அருந்தவும். 3ம் நாளும், 4ம் நாளும் இலங்கணம் இடவேண்டும். 5ம் நாளும் 6ம் நாளும் கஞ்சி குடிக்க வேண்டும். இதன்பின் மருந்து கொடுக்கவேண்டும்.

முதலில் இலங்கணமும் கடைசியில் மருந்தும் நடுவில் கஞ்சியும் குடித்துக் காலையில் வாதத்திற்கும், மதியத்தில் சிலேத்துமத் திற்கும் அந்தியில் பித்தத்திற்கும் கஞ்சி கொடுக்க வேண்டும்.

வாதசுரத்திற்கு இலங்கணநாள் மூன்று, பித்தம் சிலேத்துமத் திற்கு முறையாக இலகுவான உணவும் கஞ்சியும் ஆகும். வாத சுரத்திற்கு ஏழுநாள், பித்த சுரத்திற்கு ஆறுநாள் : கபசுரத்திற்கு ஒன்பது நாள்: தொந்த சுரத்திற்கு பத்து நாள் இலங்கணம் வைத்துப்பிறகு மருந்து கொடுக்க வேண்டும்.

வைத்தியன் இலட்சணம்

திருமால் இசைபதத்தைச் சிந்தைமிசை வைத்தே[1]
உருவாகும் வாகடத்தை ஓர்ந்து[2] - தரும் ஆறு
உற்றானளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 95

தேயமும்[1] காலமுந் தேகத்தின் கோட்டுநிலை
ஆயும் வயதுபிணி ஆய்ந்தறிந்து - ஏயப்
பொருத்தும் வகையறிந்து புத்தியினால்[2] ஓர்ந்தோன்[3]
மருத்துவனே என்பார் மகிழ்ந்து. 96

திருமாலின் பாதத்தை நினைத்து, மருத்துவத்தை அறிந்து நோயாளியின் தன்மை, பிணியின் தன்மை, காலம் இவற்றை மனத்தில் கொண்டு மருத்துவம் புரிதல் வேண்டும்.

தேசமும், காலமும் தேகத்தின் நிலையும், வயதும் ஆய்ந்தறிந்து இவற்றிற்குப் பொருந்தும் வகையில் மருத்துவம் புரிபவரே மருத்துவர் என்பர்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 95. 1. திருவமருள் பதத்தைச் சிந்தைமிசை வைத்தே
2. உருவாகும் வாகடத்தை ஓர்ந்தே

96. 1. தேகமும்
2. புந்தியினால்
3. ஒன்றீந்தோன்

நோயாளியின் இலட்சணம்

பொருளுடை யோன்தனவான்[1] போந்த பிணியாவும்
தெருள்[2] உரைத் தேமருந்து தின்றோன்[3] - அருள்மருந்தின்
துன்பம் பொறுத்தோன்[4] தூயோன் வழுநீத்தோன்[5]
அன்புடையோன் நோயு மறும். 97

எளிதாய்ப் பலபிணிக்கும் ஏற்றதாய்க் கொள்ள
ஒளியாச் சுவைவீரம் உண்டாய்த்[1] - தெளிவோர்க்கு
வாகடத்தில் சொன்ன மருந்தே மருந்தாகத்[2]
தாகடத்துக்கு என்பார் அறிந்து. 98.

பொருளுடையவன் உற்ற துன்பங்களை உரைத்து மருந்தின் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மருத்துவர்கள் சொன்ன மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 97, 1. நாதனவன்
2. தெரிய
3. தின்னில்
4. பொறுத்தல்
5. வழிநீத்தல், வழிநின்றல்

98. 1. சுவைவீர முண்டாம்
2. மருந்தாகா

வாத நிதானம்

காப்புச் செய்யுள்

அருசு குருசுமயில் உலகமுடன் அவனியும் ஆ....
வரிசை யாக அணுமலை யாவையும் மற்றுள் சீவனையும்
பிரியமாய் அத்துடன் ஒளியால் பிறந்திடு நன்நபியே
துருசா யுகந்திட வாதவெண் பாவுக்குத் துணைமுக மதுவேகாப்பு. 99

ஐந்துகரந் தொந்திவயிற் றந்திமுகத் தந்தைமன
முந்திமகிழ் வந்துநித்த மூர்த்தியே - சிந்தைதனில்

ஏகமாய் பணிவேனே கருணையா லேயெனக்
காக வெண்பா வாகவிவை காப்பு. 100

முகமதுவிற்கும், கணபதிக்கும் வணக்கம் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பாடல்களும் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் உள்ள 282 எ. என்னும் சுவடியில் மட்டும் காணப்படுகிறது.

வாத நிதானம்

வெண்பாவைப் பண்பரனால் வேரியன்றா மரையில்[1]
கண்பாவைப்[2] போலவெனக் கண்பாவை - நண்பாக்கு
மாலயனும் சங்கரனும் வாழ்த்தியிடப் புண்டரீக
வாலையத்தின் வாழு மனம். 101

ஊர்த்துவவாதம்

சொல்லூர்தவ[1] வாதகுணம் தூக்குமேல் மூச்சிருமல்
பொல்லா வருசி[2] பொருமலுமே[3] - அல்லாமல்
மந்தவனல்[4] பந்தமலம் வாங்கும் உபரோதம்[5]
தந்துமனம் மூச்சை[6] செய் தால். 102

சரசுவதி, இலக்குமி, திருமால், சிவன் இவர்களின் வாழ்த்து வேண்டப்படுகிறது.

மேல்மூச்சு, இருமல், சுவையின்மை, பொருமல், மந்தம், அனல், மலபந்தம், மூர்ச்சை இவை ஊர்த்துவ வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 101, 1. வெறியென்றுரை மயில்
2. கண்பார்வை
102. 1. சொல்லுரைத்த
2. வஞ்சி
3. பொருமல்மிகும்
4. மந்தமணல்
5. முயரோகம்
6. இச்சை

சிரோவாதம்

நைய்யும் சிரோவாத நச்சுத் தலைவலியாய்ச்
செய்யுமென்பர் பட்சகம்[1] செம்பாதி - மெய்யும்நோம்[2]

தூக்கம் இரவின்றித் துன்புற்று ஓர்பசியால்[3]
ஏக்கமுறும் வாய்புலம்பும் என். 103

பாரிசச் சூலைவாதம்

பாரிசமாம் சூலைசொல்லில் பந்திக்கும் பாதியுடல்
கூரிசையா வேல்போலும் குத்தல்செயும்[1] - ஓரிரவும்
கண்படையும் கொள்ளாது கைகால் நடுக்கமுறும்
பண்படையா வேதனையாம் பார். 104

நச்சுத் தலைவலி, ஒருபக்கம் உடல் வலி உண்டாகும், இரவில் தூக்கம் இருக்காது. அதிகபசி, ஏக்கம் உண்டாகும். வாய் புலம்பும்.

உடலில் ஒரு பாகத்தை சூலைபோல் வலிக்கும். வேலால் குத்துவது போன்று குத்தல் உண்டாகும். இரவில் தூக்கம் வராது. கை கால் நடுக்கல் இவை பாரிசச் சூலைவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 103. 1. பட்சவாதம்
2. மெய்யும்நொந்து
3. துன்பத்துக்கு நோய் பசியா
104. 1. குத்துமே

கம்பவாதம்

கம்பவாதம் செப்பியிடின் கைகால் தலைநடுக்கும்
வெம்புமுட லும்சுழலும்[1] மெய்நோவாம் - அம்புவியில்
தூக்கம் இரவின்றித் தூலகாய மோவிளைக்கும்[2]
ஆக்கமின்றி[3] யேபுலம்பு மாம். 105

ஊர்த்த கம்பவாதம்

பன்னூர்த் தகம்பக்கால்[1] பந்திக்கும் சந்தெங்கு
முன்னூர கைகால் முழிபேரா[2] - துன்னுறும்[3]
தம்பிக்கும் காயம் தளர்ந்து மனமடிவாம்[4]
தும்பிக்கை காலனையாய் சொல்.[5] 106

கை கால், தலை நடுக்கம், உடல் சுழலல், வலி, இரவில் தூக்கம் இன்மை, வாய் புலம்பல் இவை கம்ப வாதத்தின் குணங்களாகும்.

வாதம் பந்திக்கும், சந்துகள் தோறும் கை கால், முழிகள் இவை தம்பிக்கும். உடல் தளர்ந்து, மனம் வாடும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 105. 1. வெப்பு முடலுஞ் சுழலு
2. வினைக்கு
3. மார்க்கமின்றி
106. 1. பன்னூர்த்தம்பக்கால்
2. மொழி பெயரா
3. தூன்றூற
4. மண்வடிவாம்
மனம்மடிவாம்
5. துன்

கிக்கிச வாதம்

கிக்கிச வாதம் கிளர்ந்து யரையிடத்துத்[1]
தொக்கிநின்று காலளவும் சூலிக்கு - மிக்கசந்து
கட்டும் பிடிக்கும் கடின மிருந்தெழுந்து
எட்டி நடக்கவொட்டாது எண். 107

சோண வாதம்

சோணவாதம் செய்குணங்கள் சோரிகக்கும் விக்கலெழு
நாணவரு மூர்ச்சை நடுக்குழலை[1] - காணவே
மெய்வடிவம் வேற்றுமையாய் வேறுவுரு காட்டுமே
பொய்வடிவம்[2] கொள்ளாமல் போற்று.[3] 108

இடுப்பிலிருந்து கால் வரை சூலை உண்டாகும். சந்துகள் கட்டுப்பட்டு கடினமாய் இருக்கும். எழுந்து நடக்கவிடாது. இவை கிக்கிச வாதத்தின் குணங்களாகும்.

இரத்தம் கக்கும். விக்கல், மூர்ச்சை உண்டாகும். உருவ வேற்றுமை ஏற்படும். இவை சோண வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 107. 1. கிளர்ந்தே மரையிடத்துத்
108. 1. நடுக்குழல்
2. மொய்வடிவம்
3. போத்தும், போற்றும், மேல்

ஆமிலவாதம்

ஆமில[1]வாத மருசிபசி மந்தம்
தேமினியவன்னஞ்[2] செரியாது - தாமிலது
உண்டுஎன்னும் சூலை உடலில் பிறந்துவரும்
கண்டென்னும் சொல்வாய் கழறு. 109

இரசுவாதம்

இரசுவாத மல்பகலும் ஏங்கிப் புலம்பும்
பரசுஎறிதல் போற்சூலை பண்ணும் - விரசமுறும்
தாகம் பிரமை தளர்மூர்ச்சை வேதனையும்
ஆகமுறும் என்றே அறி. 110

சுவையின்மை, பசிமந்தம், செரியாமை, உடல் முழுதும் சூலை இவை ஆமில வாதத்தின் குணங்களாகும்.

இரவும் பகலும் ஏங்கிப் புலம்பும், உடலில் சூலை உண்டாகும். தாகம், பிரமை, மூர்ச்சை, வேதனை இவை இரசு வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 109. 1. அயில்
2. உண்ண
110. 1. இரசவாத

சந்தியாவாதம்

சந்தியா வாதம் சமனாய்ப் பகல்முழுதும்
அந்தியிரவில்[1] சூலிக்கும் அங்கங்கள் - சந்துசந்தும்
குத்தல் நடுக்கல் குடைதல் அரற்றல்[2] செய்யும்
சத்தமின்றித் துஞ்சல்புகா தால். [3] 111

தனுர்வாதம்

தனுர்வாதம் வில்வளையாய் தானிழுக்கு[1] மெய்யைப்
பின்னுமோர் நடுக்கம் பெரிதாம்[2] - மனுவாகத்
தாகம் பசியில்லை தள்ளாடி மூர்ச்சிக்கும்
தேகம் பலவிதமாம் செப்பு. 112

இரவில் உடல் எங்கும் வலி, பொருத்துகள் தோறும் குத்தல், குடைதல், நடுக்கம், அரற்றல், தூக்கம் இன்மை இவை சந்தியா வாதத்தின் குணங்களாகும்.

உடலை வில்வளைவாய் வளைக்கும், உடல் நடுக்கம், தாகம், பசியின்மை, மூர்ச்சை இவை தனுர்வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : **111.** 1. மந்தியிரா
2. அத்தம்: குத்தல் குடைதல் நடுக்கலாற்றல் செயும்
3. துஞ்சலிலை சார்
112. 1. வாய்த்தா னிழக்கு
2. பெரிதாகும்

தமிர்வாதம்

திமிர்வாத மேல்தோல்[1] திமிரடையும் யானை
இமிர்தோலைப் போறபருமை எய்தும் - நிமிருடலா
அன்னநடை ஒப்பது[2] போ லாம்நடையும் தள்ளாடும்
இன்னலுறும் என்றே இசை. **113**

அந்திவாதம்

அந்திவாதம் மத்தகத்தில் ஆற்றா வலிபிளக்கும்
முந்துவினை என்றரற்று மூர்ச்சிக்கும் - நொந்து கொள்ளும்
சொல்லாடல் இன்றித் துயருரும் சோர்ந்திடுமே[1]
அல்லாமல் மெய்நடுக்கும் ஆம். **114**

மேல்தோல், யானைத்தோல் போல் தடிக்கும். நிமிர ஒட்டாது அன்ன நடைபோல் நடக்கும். தள்ளாடும், இவை திமிர்வாத குணங்களாகும்.

நெற்றியில் வலி, முன்வினை என்று அரற்றுதல், நொந்து கொள்ளுதல், பேச்சின்றி சோர்ந்திருக்கும். இவை அந்தி வாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : **113.** 1. மெய்த்தோல்
2. பெயர்வது, பேர்ப்பது
114. 1. மூக்குஞ் சோரிக்கும்

காகவாதம்

காகவாதம் சென்னியிரு கண்சுழன்று கைகாலும்
ஆக நடுங்கி அரற்றிவிழும்[1] - தேகக்
கருத்தின்றி வீழ்ந்து[2] கண்கலங்கி மூர்ச்சித்
துருத்துவலி தூர்த்தலும்[3] உண்டு. 115

நயனவாதம்

நயனத்தின் வாதம் நயனம் சிவக்கும்
கயமொத்து நீர்த்ததும்பிக் காணும்[1] - சயனிக்க
ஒட்டாது சூலிக்கும் உட்டிணமாம் பின்பதுதான்[2]
கட்டியுமே என்றறிந்து காண்.[3] 116

தலை, இரண்டு கண்கள் சுழன்று கைகால் நடுங்கி, அரற்றலுடன் கீழேவிழும், கண்கலங்கி மூர்ச்சை உண்டாகும். உடலில் வலி உண்டாகும். இவை காக வாதத்தின் குணங்களாகும்.

கண் சிவக்கும். கண்ணீர் ததும்பும், வலியும், உட்டிணமும் உண்டாகி பின் கட்டி தோன்றும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 115. 1. அடித்துவிழும்
2. அழிந்து, கருத்தனறிவிழந்து
3. தூர்த்தல், துரத்தல்

116. 1 காலும்
2. உண்பதுதான்
3. கட்டாயம் என்றிவை

உதர வாதம்

உதரத்தின் வாதம் உளையும் வயிறிரை[1]யும்
மதரொத்துக் கற்கடின மார்பாம் - விதமொக்கும்
நித்திரையும் வாராது நீளிரவில் வேதனைவேல்[2]
குத்தலெனும்[3] மெய்யெங்கும் கூர்ந்து. 117

நாசிக வாதம்

நாசிக் கிரணக்கால் நாசிகையின் வாதமாம்
ஏசார் முகவாதம் இப்பால்வாய் - பேசாமல்

கொட்டாவி விட்டவுடன் கூடி உதடும்பல்[1]
ஒட்டாமல் நிற்கும் உயர்ந்து. 118

வயிற்றில் உளைச்ச்ல் இரைச்சல், கல்போல் கடினமாதல், தூக்கம் இன்மை, இரவில் வேலால் குத்துதல் போன்ற வேதனை இவை உதர வாதத்தின் குணங்களாகும்.

வாய்பேசாமல் கொட்டாவி விட்டவுடன், உதடும் பல்லும் ஒட்டாமல் இருக்கும். இது நாசிகை வாதம் எனப்படும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 117. 1. வயிற்றை
2. வேர்
3. குத்தென்னும்
118. 1. கூட்டி யுதடும் போல்

அவையாங்க வாதம்

அவையாங்க வாதம் அவயங்கள் சந்தும்
கவையாய்ப்[1] பிடித்திழுத்துக் கட்டி - நவைசெய்யும்
தூக்கமிரவு இல்லையாம் சூலைசந்து நீர்மலமும்
தூக்கிப் பிடிக்கும் துயர். 119

சிம்மாங்க வாதம்

சிம்மாங்க நால்தம்பம் செய்யும் செவியிரைக்கு
மெய்யாம்[1] சுரந்தாக[2] மேலுழலை - அம்மாவி
ஆனவுடல் எங்கும் அடித்தஅடி போல்வலிக்கும்
பானலமொண் வாயாய் பகர்.[3] 120

பொருத்துகள் கவையால் பிடித்து இழுப்பதுபோல் வலி, இரவில் தூக்கம் இன்மை, வலி, நீர், மலம் கட்டும், இவை அவையாங்கவாத குணங்களாகும்.

காதிரைச்சல், சுரம், தாகம், உழலை, அடித்ததுபோல் வலி இவை சிம்மாங்க வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 119. 1. குகையாய், குவையாய்
120. 1. மெய்மார், மெய்யார்
2. சுரந்தாக்கும்
3. பாலை மேல்வாயாய் பகர்

நரவாதம், கர்ணவாதம்

நரவாதம்[1] பாம்புபோல் நாடிஎங்கும் ஓடி
உறவாகும்[2] சூலைசெயல் உண்டாட[3] - மருவுகர்ண
வாதம் இரைந்து வலியுண்டாய் மந்தித்துக்
காதுசெவிடு ஆக்கிவிடும் காண். 121

சர்ப்பவாதம் விருச்சிகவாதம்

சர்ப்பவாத மற்பசர்ப் பம்போல மெய்யூர்ந்து
துர்ப்பயங்கே சாதிபாதம்[1] சூலிக்கும் - விர்ச்சிகத்தின்
வாதங்கால் தேள்கடுப்பு வெப்புங்கை காலெரியும்
ஓதவங்க நோயும் உணர். 122

பாம்புபோல் நாடி எங்கும் ஓடிவலிக்கும், இது நரவாதத்தின் குணமாகும்.

காதிரைச்சல், வலி, மந்தம், காதை செவிடாக்கிவிடும். இது கர்ணவாதம்.

பாம்பு உடலில் ஊர்வது போல் தலையிலிருந்து பாதம்வரை வலிக்கும். இது சர்ப்ப வாதம்.

தேள் கொட்டியதுபோல் உடல் எங்கும் கடுப்பு, கை கால் எரிச்சல், வெப்பு இவை விருச்சிகவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 121. 1. நாவாதம்
2. உறவாக
3. உண்டா, உண்டாம்
122. 1. சேதியற்ப, சாதிபதம்
2. வங்கநோயும் உண்டு

முடக்குவாதம்

முடக்கிநல் வாத[1] முடக்கும் உடலை
அடக்கிக் குறளுருவாய் ஆக்கும் - நடக்கவே
தத்தடியாம் கால்கையும் சந்தும் குவிந்துவிடும்
இத்தகமெய் வாமனம்[2] போல் எண். 123

சன்னி வாதம்

சன்னிவா தம்வேர்வையின்றி தானழலாய் மெய்வெதும்பும்
துன்னும் உடலிளைத்துச் சோர்விக்கும் - பின்னுமலம்
கட்டிவிடும் போட்டபடி கால்கரமும் தானசையா
தொட்டிஎமன் கொள்வான் உயிர். 124

உடலை முடக்கும், முடக்கிய உடலை சிறிய உருவமாக்கும். நடக்க இயலாது. கால் கை சந்து, பொருத்துகள் முடங்கல் இவை முடக்கு வாத குணங்களாகும்.

உடல் வியர்வை இன்றி அழல் போல் உடல் வெதும்பும், இளைக்கும். சோர்வு உண்டாகும். மலக்கட்டு உண்டாகும். கை கால் அசையாது, உயிர் பிரியும், இவை சன்னிவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : **123. 1.** முக்கின்றவாதம்
முக்கன்றவாதம்
2. வானம்

அங்குலி வாதம்

அங்கு லியின்வாதம் அங்கை[1] விரல்சுருக்கிக்
குங்கு நரம்பிழுத்துக் கூச்சாட[2] - அங்கம்நோம்[3]
மாநிலத்தின் வாழ்நாளும் வாங்காம லேயிழந்து
மாநிலத்தின் வாழ்நாள்போம் மாண்பு. 125

பிரம வாதம்

வல்லபிரமன் வருவாத முடல்சுழன்று[1]
சொல்லாமல்[2] மூர்ச்சித்துச் சோர்ந்துவிழும் - அல்லாமல்
தாக முழலை தளர்ச்சி மனமடிவு[3]
மாக[4] விகாரமுற லாம். 126

கை விரல், சுருங்கி, நரம்பு இழுத்து வலிக்கும், மெதுவாக வாழ்நாள் குறையும். இவை அங்குலி வாதக் குணங்களாகும்.

உடல் சுழலல், மூர்ச்சை, சோர்ந்து விழல், தாகம், உழலை, தளர்ச்சி, விகாரமுறல் இவை பிரமவாதக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 125. 1. அகங்கை
2. குச்சமா, கூச்சமாய்
3. அங்கைநேர்
126. 1. மெய்கழன்று
2. சொல்லாடா
3. மனவடிவு
4. வாதம்

மலபந்தவாதம், மூத்திரவாதம்

மலபந்த வாத மலமூத்தி ரத்தைச்
செலவொட்டா வாயுபந்தம் செய்தல் - இலகுகுண்[1]
மூத்திரத்தின் வாத முறையிடநோம் நீர்க்கட்டும்
கோத்திருமல் கண்டமெழும் கொள்.[2] 127

குன்மவாதம்

குன்மத்தின் வாதம் குலைவயிறு குத்துவலி
துன்மந்தம்[1] சீரணம்சொல் வாந்தி[2] செயல் - கொன்விக்கல்[3]
தேக மிளைத்தல் சிரத்தின்வலி உண்டாதல்
சோக விகாரமுறல்[4] சொல். 128

மலம், மூத்திரம், வாயு கட்டுப்படும். இவை மலபந்தவாதக் குணங்களாகும்.

நீர்க்கட்டும் : இருமல் இவை மூத்திரவாத குணங்களாகும்.

வயிற்றில் குத்தல், வலி, மந்தம், அசீரணம், வாந்தி, விக்கல், உடல் இளைத்தல், தலைவலி, உடல் விகாரமடைதல் இவை குன்மவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 127. 1. குறை
2. காண்
128. 1. துன்மத்த
2. சோர்வாந்தி
3. துன்விக்கல்
4. விகாரமுதல், விகாரமுறச்

பாகுவாதம், பாரிசபாகுவாதம்

தூயோர் பாகுவாதம் இருதோளின் கடுப்பாம்
ஆயோகூவென்று அரற்றுபகல் அல்லும் - பயோர்பாதம்[1]
தூங்காமல் நோய்செய்யும் தோளொன்றி வாதமிகு
பாங்காகும் பாரீச பாகு. 129

பாத வாதம் விசூகை வாதம்

பாதவாதம் கால்குடைச்சல் பண்பாம் விசூகைஎனும்[1]
வாதமதி சாரசுரம் வாந்தியனல் - சீதம்
விதாகம் பிரமை விகாரம்பின் மூர்ச்சை[2]
புதாகமெனச் செய்யும் புலர்ந்து.[3] 130

இரு தோள்களிலும் கடுப்பு, இரவும் பகலும் அரற்றுதல் இவை பாகு வாதத்தின் குணங்களாகும்.

தூங்காமல் தோள் ஒன்றில் வலிக்கும். வாதம் மிகும், இவை பாரிச பாகுவாதத்தின் குணங்களாகும்.

கால்குடைச்சல் உண்டாகும். இது பாதவாத குணமாகும்.

அதிசாரம், சுரம், வாந்தி, அனல், தாகம், பிரமை, விகாரம் மூர்ச்சை இவை விசூகை வாதக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 129. 1. ஒவென்று ஆற்று பகவல்லும்
பயோ பாதம்
130. 1. விசூகை
2. மூர்ச்சையும்
3. உலர்ந்து

தூமவாதம் விதூமவாதம்

தூமவாத ஏப்பமிகுந்து[1] துய்த்தஅன்ன மோசெரியா
தேமவயிறு நோகச் செய்யும்வி[2] - தூமகுணம்
பொல்லாப் புளித்தேப்பம் பொய்ப்பொரும லாகியிடும்
நல்லாய்இவ் வாத நலம். 131

விச்சுவட்டவாதம், இரசசேட வாதம்

செப்பாரும் விச்சு வட்டத் திவ்வாதங்கள்[1]
தப்பாமல் மெய்எங்கும் தான் வலிக்கும் - இப்பாலாய்

மன்னுரச[2] சேடமாம் வாதம் தலைவலிக்கும்
தன்னுடலம் புன்மைசெயும் துன்.[3] 132

ஏப்பம் மிகும். உணவு செரியாது. வயிற்றுவலி இவை தூம வாதத்தின் குணங்களாகும்.

புளித்தேப்பம், பொருமல் இவை விதூமவாதத்தின் குணங்களாகும்.

விச்சு வட்டவாதத்தில் உடல் எங்கும் வலி உண்டாகும்.

தலைவலி, உடல் புண்ணாய் நோதல் இவை இரச சேடவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 131. 1. வெப்பமிகுந்
2. தேமவயிற்றின்நாத்தம் செய்யும்
132. 1. திவ்வாத மங்கங்கள்
2. மன்னூரச், 3. பூண்டுருவசெய்யுஞ் சொல்

சுரவாதம்

சுரவாதம் காதிரைக்கும் தும்மலுங் காய்ச்சல்
திறமாகி யேநடுக்கும் தேகம் - பிரவிளைக்கும்[1]
வாந்திதலை மெய்வலித்தல் வார்கழிச்சல் கொட்டாவி
சேர்ந்துசெயும் வேதனையாம் செப்பு. 133

சோபவாதம், சலவாதம்

சோபவாதம்[1] காய்ச்சலெழுந் துகதிக்கும்[2] புத்தி கெடும்
பாபவுடல் சூலிக்குப் பண்ணுகுணம் - கோப[3]
சலவாத மெய்நரம்பு தானோடும் சூலை
குலவாய் விறுவிறுப்பாய் கூறு. 134

காதிரைச்சல், தும்மல், காய்ச்சல், உடல் நடுக்கம், வாந்தி, தலை உடல்வலி, கழிச்சல், கொட்டாவி இவை சுரவாதக் குணங்களாகும்.

சுரம் மிகுந்து அதிகரிக்கும், புத்திகெடும், உடல் வலி உண்டாகும். இவை சோபவாத குணங்களாகும்.

நரம்புகளில் ஓடி வலிக்கும், வாய் விறுவிறுப்பாகும். இவை சலவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *133.* 1. போர்விளைக்கும்
134. 1. சொற்பவாதம்
2. துக்கிக்கும்
3. பார்ப்பவுடல் சலிக்கும் புண்ணுகுணம் - கெற்ப

அசீரண வாதம்

அசிரணத்தின் வாதம்அன்னம்[1] செரியாமந் தித்த
வசிரணமாம் சூலை அருசி[2] - வசீகரிக்கும்
காதிரைச்சல் செய்யும்[3] கண்கலங்க மாயாது[4]
தீதுபுனை இக்குணமாம் செப்பு. *135*

சயவாதம், சுட்கவாதம்

சயவாத மெய்யிளைக்கும் தாகம் சுரமந்தம்
இயலாப் பலம்கெடுக்கும் மென்சூலை[1] - சயகுணமாம்
சுட்கவாதம் வேர்வையிலைச் சோதிகெடு மங்கங்கள்[2]
மட்கிமந்த மாயிளைக்கு மாண்பு. *136*

உணவு செரியாது, மந்தம் உண்டாகும். அசீரணம், சூலை சுவையின்மை, காதிரைச்சல், கண் கலங்கல் இவை அசீரண வாதக் குணங்களாகும்.

உடல் இளைக்கும், தாகம், சுரம், மந்தம், உடல் பலம் குறைதல், சூலை இவை சயவாத குணங்களாகும்.

வியர்வை இருக்காது, கண் ஒளி மங்கும். மந்தம் உண்டாகும். உடல் இளைக்கும். இவை சுட்கவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *135.* 1. வாதமந்தம்
2. அஞ்சி
3. செய்யுநோய்
4. மாயாத்துந்
136. 1. பின் கெடுக்குஞ் சூலை
2. அங்கலின்

திவாவாதம்

திவாவாதம்[1] நற்பகலில் தேகம் சூலிக்கும்
தவா விரவில் சாந்தமுந் தானா[2] - ஆவாயத்தின்
துஞ்சலின் றிவேறே[3] தொழிலில்லை இக்குணமாம்
செஞ்சொல் மொழிநல்லாய் சொல்.[4] 137

சலவாதம்

சலவாத[1] நீர்கானால் தெங்குகுள்[2] மாறு
முலவாகக் கடல்கழியின் ஒன்றைக்[3] - குலவுவிழி
நோக்கில் விழுமூர்ச்சை நுவலதாக மெய்நடுக்கும்
ஆக்கிவியர்க் காதுசெவி டாம். 138

பகலில் உடலில் சூலை உண்டாகும். இரவில் குணமாகும். எப்போதும் தூக்கம் உண்டாகும். இவை திவாவாதத்தின் குணங்களாகும.

கானல்நீர், கடல், கழிமுகம் இவற்றில் ஒன்றைப் பார்க்க, மூர்ச்சித்து விழுதல், தாகம், உடல் நடுக்கம், வியர்வை, காது செவிடாதல் இவை சலவாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 137. 1. தீவிரவாதம்
2. தாவரையில் விற்சமனைத் தானும்
3. துஞ்ச்லின்றிடுவரே
4. தெளி
138. 1. சொல்வாத, செல்வாதம்
2. தொங்குகுள, சாருங்குள
3. ஒன்றரை

ஆதித்தவாதம்

ஆதித்தன் வாத[1] மருங்கோடை யாதித்தன்
சோதிவிழி நோகச்[2] சுழன்றுவிழும் - காதிரைச்சல்
கொண்டலையு மெய்யவத்தைக்[3] கொள்ளும் விகாரமுறும்
தண்டலையில் சேர்க்கப்போம் தான். 139

அக்கினி வதம்

அக்கினியின் வாதம் அனற்சோதி கண்டளவில்
துக்கிதனாய் மெய்நடுங்கிச் சோர்ந்துவிழும் - விக்கி விக்கி

கண்ணீர் சொரியக் கலங்கி விகாரமுறு
முன்னீர்மை யேதன்றியும். 140

கோடையில் சூரியனைப் பார்க்க கண்வலித்துச் சுழன்று விழுதல், காதில் இரைச்சல், உடல் அவத்தையும், விகாரமும் கொள்ளுதல் ஆதித்தவாத குணங்களாகும்.

அனலின் ஒளியைக் கண்டவுடன் துக்கம் உண்டாகி, உடல் நடுங்கிச் சோர்ந்துவிழுதல், விக்கி விக்கி அழுதல், விகாரமுறுதல், கண்ணீர் விழக் கலங்குதல் இவை அக்கினி வாதக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *139.* *1.* ஆதிபத்தி வாதம்
2. நோக்கச்
3. கொண்டலை மெய்யவதை

ததிவாதம்

ததிவாதம் சொல்லில் தயிர்கொள் ளின்வாத[1]
மதிகமாம் மூர்ச்சை மற்றவர்க்காகும்[2] - பொதிசூலை
வாந்தி விதாக மலபந்த மெய்வற்றல்
காந்திகெடல் கோபமெழல் காண். 141

மதுவாதம் ஸ்நானவாதம்

மதுவாதம் தேன்கொள்ளின்[1] வாதமிகும் தேகம்
விதுவிதுக்கும் தாகம் விகார - முறும்[2] குணமாம்[3]
தானத்தின் வாதம் தலைநனைய நீர்மூழ்க[4]
ஊனத் தலைவலியாம் ஒது. 142

தயிர் உட்கொண்டால் வாதம் அதிகரித்து மூர்ச்சை உண்டாகும். சூலை வாந்தி, தாகம், மலக்கட்டு, உடல் வற்றல், ஒளி கெடல், கோபம் எழல் ததிவாத குணங்களாகும்.

தேன் உட்கொள்ளுவதால் வாதம் அதிகரிக்கும். உடல் விது விதுக்கும். தாகம் உண்டாகும். உடல் விகாரமடையும் இது மது வாதத்தின் குணங்களாகும்.

தலை நனையும் படியாகத் தண்ணீரில் மூழ்க. தலைவலி உண்டாகும். இது ஸ்னான வாதம் எனப்படும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 141. 1 தயிர்கொள்ள வாதம்
2 சிலர்க்காம்
142. 1 தான்கொள்ளின்
2 விகாரமுறும்
3 வெதுவெதுக்குந் தாகம் விகாரம் - மது குணமாம்
4 ஸ்நானத்தின் வாதம் தலைமுழுக நீர் நனைய

உன்மாத வாதம், கடிவாதம்

உன்மாத வாதம்[1] உடம்பறியாதே பிதற்றி[2]
துன்பரந்து பேய்கொள்ளல் சொற்குணமாம்[3] - பின்பாம்
கடிவாதம் பின்னிடுப்பில்[4] கற்பார மேற்ற
வடிவாகிச் சூலிக்கு மாண்பு. 143

வாயு வாதம், சுக்கில வாதம்

வாயுவாதம் காற்றினிடை வந்தால் அவயங்கள்[1]
பாயுங்கால் வலிக்கும் பண்ணுகுணம் - காயத்தின்
சுக்கிலக் காலந்திரத்திற் துன்னுதுரிதமின்னம்[2]
புக்கிநிறத் தாதுகெட்டுப் போம். 144

பிதற்றல், பேய் கொண்டதுபோல் பேசுதல் இவை உன்மாத வாத குணங்களாகும்.

பின் இடுப்பில் கல்லைக் கட்டியது போன்ற பாரம் உண்டாகி வலிக்கும், இவை கடிவாதத்தின் குணங்களாககும்.

காற்றின் இடையில் வந்தால் உடல் வலிக்கும். இதுவே வாயுவாதம் எனப்படும்.

சுக்கிலம் விரைவில் வெளியாதல், தாது கெடல் இவை சுக்கிலவாத குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 143. 1 உன்மத வாதம், உன்மத வாதம் மிகுந்து
2. பித்தத்தின்
3. சொற் குணமாம்
4. வென்னிடுப்பில்

144. 1 வாயுவாதம் சுரத்தினிடை வந்தா
லவயவங்கள்
2 சுக்கிலக் காந்தரத்திற் துன்ன
தவானாகம்.

சம்போக வாதம்

சம்போக வாதமது[1] தையலார் சங்கமத்தின்[2]
வம்போக வீழ்வ தில்பிறக்கும் - அம்புந்[3]
தளருமூர்ச் சிக்கும்நீர்த் தாகம் பலம்போய்
உளறும்பின் நோயா ம்உரை. 145

கந்தவாதம் கீரவாதம்

கந்தத்தின் வாதங் கிளரும்[1] பரிமளத்தின்
கந்தத்தை மோப்பக்[2] கடுஞ்சூலை - வந்துபுக்கும்
கீரத்தின் வாதம்பால் சிர்பருந்தில்[3] வாந்திசெயு[4]
நேரத்தில் சூலையுறும் நேர்ந்து. 146

பெண் சேர்க்கையின் போது குறிதளர்தல், மூர்ச்சித்தல், தாகம் பலம் குறைதல் இவை சம்போகவாத குணங்களாகும்.

நல்ல மணத்தை நுகரச் சூலை உண்டாகும்.. இதுவே கந்த வாதம் எனப்படும்.

பால் அருந்த வாந்தி செய்யும். இது கீரவாதம் ஆகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : **145.** 1. சம்போக வாதமெழும்
2. சங்கமதி
3. கம்பம்
4. உளறும் பின் ஓயாமுறை

146. 1 கந்தத்தின் வாதங் களரும்
2. ஒப்பக்
3. பருத்தில்
4. சீர் பருனந்தல் வாந்தி

தாம்பூல வாதம்

தாம்பூல வாதமது[1] தாம்பூலம் கொண்டளவில்
சோம்பாகி மூர்ச்சைசெவி சொற்கேளா[2] தாம்போதின்

கண்டத்தில் வேர்க்கும் கலங்கும் பிரமிக்கும்
முண்டத்தைக் கக்கு மூலைந்து. 147

சீரான்ன வாதம்

சீரான்ன வாதமது தீம்பால்[1] சோ றுண்டளவில்
சேராமல் வாந்தி செயும் மூர்ச்சைப்[2] - போராகும்
காதிரைச்சல் செய்யும் கதிக்கும் வயிற்றுவலி
போதிரைச்சல் கொள்ளும் புலம்பும். 148

தாம்பூலம் கொண்டவுடன் மூர்ச்சை, காது -கேளாமை, கழுத்தில் வியர்வை, கலக்கம், பிரமை, உண்ட உணவை வாந்தி செய்தல், இவை தாம்பூல வாதக் குணங்களாகும்.

பால் சோறு உண்டவுடன் வாந்தி செய்து, மூர்ச்சை உண்டாகும். காதிரைச்சல், வயிற்றுவலி இவை சீரான்ன வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 147. 1 தாம்பூல வாதமெழும்
2 மூர்ச்சை செவிகேளா
3 முகர்ந்து
148. 1 க்ஷீரான்ன வாதமெழும்தம்பால்
2 மூர்ச்சையாம்

பூதவாதம்

பூதவாதம் ஓரிடத்தில் போகவையம் வேறொருவ[1]
ஆதரவு சொல்ல வரும்பயமும்[2] - வாதமாம்
பேயெடுக்கும் ஓடும் பிதற்றும்பின் மூர்ச்சை[3]
யாயெடுக்கும் வீழும் அறி. 149

மற்றும் சில வாதங்களின் நாமமும் அவற்றின் இலட்சணமும்

மோகனமுந் துக்கம் மொழிபவனங் கலகம்
மேகம் விரணமொடு மெய்சூலை - யேகட்கம்
சாக்கிரமும் மாத்மரியஞ் சார்கன்மந் தூம்பிரமும்
தாக்கும் கபாலமுடன் தான். 150

தானான நாட்டிய நித்திரைவாத தாம்வகைகள்
கானாங் குணங் காரணங் கேள்நீ - தேனான
மாதே யதனதன் மாறாத் தொழிலின்றி
வாதேது முண்டோ வரி. 151

பூதவாதத்தில் பயம், பிதற்றல், மூர்ச்சை உண்டாகும். இவை பூதவாதத்தின் குணங்களாகும்.

மற்றும் சில வாதங்களும் இலட்சணங்களும்

மோகனவாதம்	சாக்கிரவாதம்
துக்கவாதம்	ஆத்மரியவாதம்
பவனவாதம்	கன்மவாதம்
கலகவாதம்	தூம்பிரவாதம்
மேகவாதம்	கபாலவாதம்
இரணவாதம்	நாட்டியவாதம்
சூலைவாதம்	நித்திரைவாதம்
கடகவாதம்	

பாட வேறுபாடு

பாடல் எண் : *149.* *1* போத்தய்ய மோரொரு
2 தனிக்கும்
3 பித்தும் மூர்ச்சையா

மோகனவாதம்

மோகனத்தின் வாத மொழியின் உள்ளகத்தன்
ஆகநல மாம்பொருளை யாசித்து - மோகித்தல்
அப்பொருள் வந்துஎய்தாதெனில் காய்ச்சலெழும்
அப்பொருளின் மேல்விகாரம் என். *152*

பவனவாதம்

பவனவாதம் போகா பவனம் பிடித்துப்
புவனிநெடு நாளிருந்து போவா - தவறிரைக்கு
மன்னும் பவன மயங்கி உடலின்கண்
துன்னியிடும் வாதநோய் சொல். *153*

மனதில் தோன்றும் பொருட்களிடத்தில் மோகம் கொள்ளுதல், அப்பொருள் கிடைக்காது என்றால் காய்ச்சல், விகாரம் கொள்ளல் மோகன வாதத்தின் குணங்களாகும்.

குய்யத்தைப் பிடித்திழுத்து மலச்சிக்கல், மயக்கம், உடலில் வாதம் அதிகரித்தல் இவை பவன வாதமாகும்.

துக்கவாதம்

துக்கவாத மாரடித்துத் துன்புற்று வாய்அ ரற்றும்
தக்கவாதம் உண்டாம் தலைநடுக்கும் - மிக்கவுடல்
தன்போல்[1] குளிர்ந்துசென்னி தானிடித்து மூர்ச்சிக்கும்
ஒண்காது மேயிரைக்கு முன். 154

கலகவாதம்

கலகவாதம் கோபித்துக் கண்டித்து[1]
உலவ வெழுவாதம் ஓங்கி - நிலைதளரும்
காயம் இளைக்கும் கசிவெய்தி மூர்ச்சிக்கும்
மாயவிகா ரம்பயமு மாம். 155

மாரடித்து, துன்புறுதல், வாய் அரற்றல், வாதம் உண்டாகி தலை நடுக்கல், உடல் குளிர்ந்திருத்தல், தலைவலி, மூர்ச்சை, காதிரைச்சல் இவை துக்கவாத குணங்களாகும்.

கோபித்துக் கண்டித்தால் வாதம் அதிகரிக்கும், நிலை தளரும், உடல் இளைக்கும், இவை கலக வாத குணங்ளாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 154. 1. தண்மேல்
155 1 கண்டித்துவார்த்தை

மேகவாதம்

மேகவாதம் கார்காலம் மின்மழையைக் கண்டாலும்
மாகத்தின் சூழ்முகில் மந்தார - மாகவே
வாதமுண்டாய்ச் சூலைசெய்யும் மாரிவிட மஞ்ச கல
வேதமறப் போமே விரிந்து. 156

சூலை வாதம்

சூலைவாதம் சோறுண்டால் சூலிக்கும் கோபத்தின்
காலமுத லாய்விடியற் காலளவும் - பாலனைப்போல்
கோகோ[1] வென் றேஅரற்றும் கொண்டத சீரணமாம்
வாகேக வேர்த்து[2]விடு மாண்பு. 157

கார்காலத்தில் மின்னல், மழையைப் பார்த்தாலும், மேக மந்தாரத்தைக் கண்டாலும் வாதம் உண்டாகி வலிக்கும். மழைக்காலம் தீர நோய் தீரும். இவை மேக வாதத்தின் குணங்களாகும்.

உணவு உண்டால் வலி ஏற்படும். கோபத்தில் இரவு முதல் காலைவரை அரற்றும். அசீரணம் உண்டாகும். தேகம் வியர்க்கும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : **157.** 1 தோகோ
2 வாதேதவெர்த்து

கடகவாதம்

கட்கவாதம் கத்தியால் கள்ளர்முதல் யாரெனினு
முட்கவெட்டக் கண்டால் வாய்வுண்டா - மட்கமதி
கெட்டுச் சுழன்று கீழ்விழுந்து பேய்போன்று
துட்டவுரை பேசும் துலக்கு. *158*

இரணவாதம்

இரணவாதம் சண்டை எதிர்ப்படையை வெட்டிக்
கரணங்க லங்கிரத்தங் காண - விரணக்கால்
தோன்றும் விகாரம் துயர்மூர்ச்சை வேர்வைஎழும்
ஏன்ற பிரமைசெயும் என். *159*

கத்தியால் வெட்டுவதைக் கண்டால் வாதம் உண்டாகி தலைசுற்றி கீழே விழுந்து பேய்போல் அரற்றுதல் கட்கவாதக் குணங்களாகும்.

எதிரிப் படையுடன் சண்டை இட்டு, வெட்டிக் கொள்வதைக் காண்பதால் இரணவாதம் தோன்றும். விகாரம், மூர்ச்சை, வியர்வை, பிரமை ஏற்படும்.

சாக்கிர வாதம்

சாக்கிர வாதம் தனிவாத தேகிக்குச்
சாக்கிரமோ ஆகாது தான்செயின் - தூக்குங்கால்
ஆகம் வலிக்கு மசீரணமாய்க்[1] கொண்டவன்னம்
பாகம்செய் வன்னிகெடும் பண்பு. *160*

ஆத்மரியவாதம்

வாயுவினில் ஆத்து மரிய வாதமாகித்
தோயமெனத் தாகமிகத் தோன்றுமே - காயத்தி
நொந்துவிடல் நீர்விடுதல் நோனாமற் காய்ச்சலுறல்
விந்துவிடல் மெய்நடுக்கு மே. *161*

தூங்கும்போது உடல் வலிக்கும், அசீரணம் உண்டாகி உணவு செரிக்காது. வன்னி கெடும். இவை சாக்கிர வாதக் குணங்களாகும்.

அதிதாகம், உடல் நோதல், மிகு காய்ச்சல், விந்துவிடல், உடல் நடுக்கம் இவை ஆத்மரியவாதக் குணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *160. 1.* சீரமாய்

கன்மவாதம், நாட்டியவாதம்

கன்மவாதம் பாதகமாம் கன்மத்தின் உண்டாகும்
வன்மமுறு நாட்டியத்தின் வாதந்தான் - பன்மையாம்
கொட்டுகையால் பாடுகையால் கோலம் செய்து ஆடுகையால்
துட்டநோய் வாதமிகும் சொல். **162**

தூம்பிரவாதம்

தூம்பிரத்தின் வாதம் துகள்கரத்தி னாலாதல்
வாம்புரவி ஓட்டத்தால் வந்ததுகள் - காம்பொடிக்கு
மாதங்கங் கோக்குலங்கள் வந்ததுகள் கண்டாலும்
ஏதங்க வாயுவெழும் என். **163**

கன்மவாதம் பாதகமான கன்மத்தினால் உண்டாகும்.

கொட்டு ஒலியிலும், பாடுவதிலும், ஆடுவதாலும் உண்டான நோய், நாட்டியவாதம்.

குதிரை ஓட்டத்தினால் பசுக்கள் கூட்டத்தைப் பார்ப்பதினால் வாயு எழும், இதுவே தூம்பிர வாதம்.

கபாலவாதம்

தொட்டிகொண்டு வெட்டல்[1] போல் தோன்றும் கபாலத்தை
வாட்டும் கபாலத்தின் வாதமே - நாட்டமிலா
அல்பகலும்[2] தூக்கம் அறியா வலிமிகுதிச்
சொல்வதென்னைச் செய்யும் துயர். **164**

நித்திரை வாதம்

நித்திரையின் வாத நிறைவாத தேகத்தின்
மத்திமமாம் வன்னிபசி மந்தமாம் - நித்திரைக்கு

கண்மூடின் மெய்பதைக்கும் காட்டும் விகாரங்கள்
பண்மூடிச் செய்குணமில் பாங்கு. 165

ஆயுதத்தால் தலையை வெட்டுதல் போல் தோன்றும். இரவும் பகலும் தூக்கம் இராது. மிகுந்த வலி ஏற்படும். இதுவே கபால வாதம் ஆகும்.

உடலில் அதிகச் சூடு. பசிமந்தம், உறக்கத்திற்காகக் கண்ணை மூடினால் உடல் பதைக்கும், உடல் விகாரம் ஏற்படும். இவை நித்திரை வாதத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 164. 1. வெண்டல்
2. அல்லும்பகலும்

பித்த நிதானம்

அசீரண பித்தம்

ஆகந் திரும்பும் அரியவிழி தான்சுழலும்
தேகம்வேர்த் தேநடுக்கும்[1] செய்மூர்ச்சை – தாதமுறு
மெத்தமல நீர்கழியும் மேவுமசீரண
பித்தமெனத் தேர்ந்தறியப் பேசு. 166

விவர்ண பித்தம்

சென்னிசுற்றும் காந்திகெடும் தேகமா சாந்தாகம்
துன்னுமயிர் தானுதிரும்[1] துர்கந்தம் – பண்ணியமெய்
வேர்வை மிகுதி விவர்ண[2] பித்தமென்றறிந்து
சோர்வைவிட வேதெரியச் சொல். 167

உடல் திரும்பும், கண் சுழலும், வியர்க்கும், நடுக்கல் ஏற்படும். மூர்ச்சை உண்டாகும். மலம்நீர் வெளியாகும். அசீரணம் உண்டாகும். இவை அசீரண பித்தம் எனப்படும்.

தலைசுற்றல், ஒளி கெடல், தாகம், மயிர் உதிர்தல், துர்க்கந்தம், வியர்வை இவை விவர்ண பித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 166. 1 கடுக்கும்
167. 1 துன்னு மயிருதிர்ந்து
2 விவன்ன பித்தமென இவ்வண்ணம்

சூரியவர்ண பித்தம்

பார்கன்றன் சோதியினைப் பார்க்கவொட்டா தாகமிகு
மேற்கும்[1] விழிசுழலும் மேன்மூர்ச்சை - நீர்கடலின்
பேர்சூ ரியவர்ணப் பித்தமெனப் பேசுவார்கள்
தார்மாலை நல்லாய் தரித்து. 168

காமாலை பித்தம்

முகமும்இரு கண்மலரும் மூத்திரத்தி னோடே
நகமு மலமுமே நாடிப்[1] - புகுமஞ்சள்
ஏமம்[2] பசியில்லை எப்போதும் தாகமுறும்
நாமங்கா மாலைபித்தம் நாடு. 169

ஒளியைப் பார்க்க முடியாது. அதிக தாகம், கண்சுழலல், மூர்ச்சை இக்குணங்கள் கண்டால் சூரிய வர்ண பித்தம் எனப்படும்.

முகமும் கண்களும், சிறுநீரும், நகமும், மலமும் மஞ்சளிக்கும். பசியின்மை. அதிக தாகம் இவை காமாலை பித்தத்தின் குறிகுணங்களாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 168. 1. ஒக்கும்
169. 1 மலமுமேல் நாடி, ரெத்தமும் மலமுமே நாடி
2 ஏப்பம்

ஆமில பித்தம்

காந்திகெடும் தாகமுறும் கைக்கு மரோசிகமும்
ஏந்திப் புளித்தேப்பம் இசையுமே[1] - போந்தினிய
சிங்குவையின் தோலுரியும் தேறா மல்பித்தம்
தங்கு கணமிதுவே தான். 170

இரத்த பித்தம்

சேர்ந்தரத்த பித்தத்தைச் செப்பில் குருதிதனை
வாந்திசெயும் விக்கல் வருவிக்கும் - போந்தினிய
ஆகமெங்கும் வேதனையா மாகும் சீரணமாம்[1]
மோகமில்லை தாம்பூலம் ஓர்.[2] 171

ஒளிகெடும், தாகம் உண்டாகும், அரோசகம் ஏற்படும். புளித்த ஏப்பம், நாக்கில் தோல் உரிதல் இவை அமில பித்தத்தின் குணங்கள்.

இரத்தவாந்தி, விக்கல், உடல் வேதனை, அசீரணம் இவை இரத்த பித்தத்தின் குறி குணங்கள்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *170.* 1 இச்சையுமே
171. 1 வாகமெங்கும் வேதனையா மாகு
பிடாரவிகார
2 நாவுலரு மென்றே நவில்

சுவேத பித்தம்

அங்கமெங்கும் வேர்வை அருவிபோ லேஇழியும்
தங்கும் பிலமனைத்தும் தாழ்வாகும் - பொங்குமுடல்
தண்ணீர்க் குடம்போலே தான்குளிர்ந்த தேஇருந்தால்
எண்ணீர் சுவேதபித்தம் என்று. 172

கீர பித்தம்

பாலாகா வாந்தி பரிசரமு[1] மூர்ச்சைவரு
மேலாமல நீரி ழியுமே[2] - சால
விகார மிகுதி விளையுமே கீரபித்தம்
நகாரவினை யாமே நவில். 173

உடல் முழுவதும் அருவியைப் போல் வியர்வை வழியும். உடல் வன்மை குறையும். குளிர்ந்திருக்கும். இவை சுவேத பித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

பால் ஒவ்வாது. வாந்தி உண்டாகும். திடீரென மூர்ச்சை உண்டாகும். மலமும் நீரும் கழியும். விகாரமும் ஏற்படும். இவை கீர பித்தத்தின் குணங்கள் ஆகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : *173.* 1 பரிச்சிரமு
2 நீருவழியுமே
நீரிமிழியுமே

புண்டரீக பித்தம்

கண்டுகட்டு தேகமெங்கும் கார்மயிரின் கூச்செரியும்
மண்டுமணல் தாமுறும்[1] வன்சிரங்கும் - உண்டாகும்

பேசிலோர் புண்டரீகப் பித்தமென்று இவ்வுலகில்
மாசிலோர் சொல் வார்:[2] 174

புசங்கபித்த மாகமெங்கும் போகித்தோல்[1] போலும்
மசங்கிஉடல் மரத்தலாம் தாகம் - கசங்கியே
வன்ன[2] மிவன்னமாய் வாய்ந்தபழ நோய்போலும்
பன்ன சாத்தியமாம் பார்.[3] 175

உடலின் மயிர்க்கால்கள் கூச்சரிதல், அனல், தாகம், சிரங்குகள் உண்டாகும். இவை புண்டரீக பித்தத்தின் குணங்கள் ஆகும்.

உடல் கசங்கி மரத்தல், தாகம் இவை புசங்க பித்தத்தின் குணங்களாகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 174. 1 தாகமிகும்
2 சொல்லா
மாசில்லார் சொல்லாம் சொல்லீர்
175. 1 பொரித்தோல்
2 வன்னி
3 மன்னவ சாத்தியமு மாம்

கரபாத பித்தம்

அங்கைகாலு மெரியும் ஆம்தாதும் தோடிக்கும்[1]
எங்கும் வருத்தமுமே எய்துமாந்[2] - தங்கும்
கரபாத பித்தமெனக் காட்டியே நிற்கும்
இரவாதார் செய்யார் இசை.[3] 176

சீத பித்தம்

சீதம் பிரமைமிகும் சின்மய ரோசிகமா[1]
மேதமுறு மூர்ச்சையின்மே லீரமுறு[2] - மோதரிய
மந்தாக் கினியோடும் வந்ததெனில் சீதபித்தம்
கொந்தார் குழல்மடவாய் கூறு. 177

உள்ளங்கை, காலும் எரியும், நரம்புகளில் தோடம் உண்டாகும். உடல் வருத்தமும் உண்டாகும். குணங்கள் கரபாத பித்தத்தின் குணங்களாகும்.

பிரமை, குளிர்ச்சி, அரோசகம், மூர்ச்சை, அக்கினிமந்தம் இவை சீத பித்தத்தின் குறிகளாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 176. 1 தோஷிக்கும்
2 எங்கும் வேதனைபீடை எய்திகந்
3 மிரவாதா செய்யா மிசை
177. 1 செம்மைய ரோசிகமு
2 மூர்ச்சை வீரமுறு

மூர்ச்சை பித்தம்

வாந்திஅ ரோசிகமும் வாய்நீர் தலைசுழற்றல்[1]
மாந்திவாய் தித்தித்தல் வன்மூர்ச்சை - காந்திபுக
உய்யுமுடல் ரோமங்கள் ஊசிபோல் சிலிர்த்தல்[2]
அய்யமிலை மூர்ச்சை பித்தமாம். 178

குசும பித்தம், குரோத பித்தம்

நாசியில்ரத் தம்வீழும் நல்தாகம் வெய்யில்புதின்[1]
கூசியிடு மென்பர் குசுமபித்தம் - பேசியபின்
வேகநடை கோபம் விளம்பும் பழிவார்த்தை
தாகம் குரோதபித்தம் தான். 179

வாந்தி, அரோசிகம், வாய் நீர் ஊறல், தலைசுற்றல், வாய் தித்தித்தல், மூர்ச்சை, மயிர்க்கால்கள் ஊசிபோல் சிலிர்த்தல் இவை மூர்ச்சை பித்தத்தின் குணங்களாகும்.

மூக்கில் இரத்தம் வருதல், தாகம், வெய்யிலில் போனால் கண் கூசுதல் இவை குசும பித்தத்தின் குறிகுணங்கள் ஆகும்.

வேகநடை, கோபம், பழிவார்த்தைபேசுதல், தாகம் அதுவே குரோத பித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 178. 1 தலைசுத்தல்
2 உள்போய் சிலுத்தால்
179. 1 நாத்தாகம் வெய்யிலுரின்

பிரமை பித்தம், சென்னி பித்தம்

பொல்லா நினைவு பொருந்தும் அப்பிரமை[1]
கொல்லார் பிரமைபித்தம் கோபமிகும்[2] - சொல்லாத

வாந்தி தலைசுற்றல் வானீர் அருசிபின்[3]
மாந்தியிடாச் சென்னிபித்த மாம். 180

சுதாகபித்தம், திருட்டின பித்தம்

அன்னம் செரிக்கும் அதிதீ பனம்தாகம்[1]
துன்னும் சுதாகபித்தம் சொல்குணமே - இன்னமொரு[2]
காலமே தாகம் கழுத்தெரிவு மார்பெரிவு
சாலும் திருட்டிணபித்தம் சாற்று. 181

நினைவு மாறல், மிகுகோபம், பிரமை பித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

வாந்தி, தலைசுற்றல், வாய்நீர்ஊறல், சுவையின்மை இவை சென்னி பித்தத்தின் குறிகுணங்கள் ஆகும்.

உணவு செரிக்கும். அதிக பசி தாகம் உண்டாகும். இவை சுதாக பித்தத்தின் குறிகுணங்கள் ஆகும்.

தாகம், கழுத்து எறிவு, மார்பு எரிச்சல் இவை திருட்டின பித்தத்தின் குணங்கள் ஆகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 180. 1 அவப்பிரமை
2 கோரமிகும்
3 வாய்நீ ரருசிபிளி
181. 1 அதிதீபனம்விதாகம்
2 இன்னமுமே

துர்ப்படா பித்தம், சரும பித்தம்

துர்ப்பாடாம் பித்தம் துயிலில் பிதற்றியிடும்
சொற்பாரு நட்பில்லைத் துர்ப்பாசை - அற்பகுணம்
சருமபித்தம் கைகாலின் தோலும் உரியுமே[1]
சிறுசிரங்காம்[2] கட்டுமலம் சொல். 182

துர்க்கந்த பித்தம், மதன பித்தம்

துர்க்கந்த பித்தம் துலையாத நாற்றமாம்
விற்பனைமாய் உள்ளெரிவு மேல்தாகம் - பிற்பின்
மதனபித்தம் சென்னிசுற்றல் மாமூர்ச்சை வேர்வை
மதனமூறியே மிகமே முன்.[1] 183

சொல்சூ ரியவர்ணம் துன்னு மசிரணமும்
வெல்லா மிலங்கா மிலரத்தம் - புல்லவிவர்ணம்[2]
புண்டரீகம் கீரம்[2] புசங்கங் கரபாதம்
அண்டும் சுவேதகீத மாம். *184*

மாமூர்ச்சை யுங்குசுமம் வன்குரோதம் அப்பிரமை
தேமுறும் சென்னிசுதாக திருட்டிணபித்தம் - நாமீறும்
துர்ப்பானட சருமமோடு துர்க்கந்த மேமதனம்
மேற்பாக யெந்திரமோடு எண். *185*

[x]எண்ணும் இருபத் துநான்கு[1] பித்தமென
மண்ணில் பெரியோர் வகுத்தார்கள் - கன்னியறி
இந்தக் குணங்கள் இசைந்தால்இப் பித்தமெனத்
தந்துரைத்தார் நல்லோ ரதற்கு. *186*

[x]24 வகை பித்த நோய்களில் 23 பித்த நோய்க்குக் குறி குணம் கூறப்பட்டுள்ளது. இறுதியில் உள்ள எந்திர பித்தத்திற்குக் குணம் கூறப்படவில்லை.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *182.* 1 சொன்பித்தம் கைகாலும் தோலு முரியும்.
2 துன்சிரங்காம்
183. 1 மதனமுறும் பாக்கருசி மன்
184. 1 புல்லமிவன்னம்
2 கிரம்பு
186. 1 இருபத்தோடிரண்டு

தூங்கும்போது பிதற்றல் நட்பில்லாத துர்வார்த்தை பேசுதல், அற்பகுணம் இவை துர்பாடாபித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

கைகாலின் தோல் உரிதல், சிறு கிரங்குகள் தோன்றுதல் இவை சரும பித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

நீங்காத நாற்றம் ஏற்படும். உள்ளரிவு, தாகம் இவை துர்க்கந்த பித்தத்தின் குறிகுணங்கள் ஆகும்.

தலைசுற்றல், மூர்ச்சை, வியர்வை, மதனம் மிகுதல் இவை மதனபித்தத்தின் குறி குணங்கள் ஆகும்.

இந்திர பித்தத்திற்கு குணம் கூறப்படவில்லை.

×சிலேத்தும நிதானம்

வாத சிலேத்துமம்

தலைநோய் நடுக்கலும் தாகம்வேர்வை வாந்தி
சிலையார்க் கபமார்பில் சொல்வறளை - நிலையான
பாதவயிறுப்பல் பல்லுதடும் கருத்தல்
வாத சிலேத்துமகுண மாண்பு. 1

பித்த சிலேத்துமம்

வாந்தி இருமலிரைப்பு வாங்குமேல் மூச்சுடனே
காந்தி வயிறுப் பல்கபம் கட்டல் - ஏந்திழையே
சுத்தத் தலைசுழலல் சேரபல் சுரம்வியர்வை
பித்த சிலேத்தும குணம் பேசு. 1

தலைவலி, நடுக்கல், தாகம், வியர்வை, வாந்தி, மார்பில் வரட்சி, வய உப்பல், பல்லும் உதடும் கறுத்தல் இவை வாத சிலேத்துமத்த குறிகுணங்களாகும்.

வாந்தி, இருமல், இளைப்பு, மேல்மூச்சு, வயிறுஉப்பல், கபம்கட்ட தலைசுற்றல், சுரம், வியர்வை, இவை பித்த சிலேத்தும குணங்களாகும்.

× சிலேத்தும நிதானப் பாடல்கள் 16ம் தஞ்சை மத்திய சித்த ஆயுர்வே ஆய்வு மையத்தில் சுவடி எண் 127 இல் மட்டும் உள்ளன.

சிக்குவா சிலேத்துமம்

சிக்வா சிலேத்தும மிரைப்புலர்தல் துர்பலம்
விக்கல் தருகண்ணீர் வாய்புளித்தல் - மிக்கவே
சர்வாங்க வேதனையாய்ச் சார்மார்பில் குத்தலொடு
நிர்வாக சத்தியிவை நேர். 189

இரத்த சிலேத்துமம்

இரத்த சிலேத்தும யிரத்தவாந்தி கோழை
கரத்தெரிச்சல் காந்தல் சுவாசம் - மரத்தல்மெய்
காதிரைச்சல் மூர்ச்சையும் கண்சுழலல் காந்திகுன்றல்
ஆதிதலை குத்தலுமே ஆம். 190

உத்கார சிலேத்துமம்

பித்தமொடு சேர்ந்துவிழும் பேரெரிச்சல் சீதளமாம்
வித்தசுரம் வீக்கம் வியர்வையுமாம் - உத்கார
மாஞ்சேட்ப மேப்பம் மலபந்த மாலசியம்
தாஞ்சூலை தாகமாந் தான். 191

நாக்கு உலர்தல், மலம் கட்டல், விக்கல், கண்ணீர், வாய் புளித்தல், உடல் எங்கும் வேதனை, மார்பில் குத்தல், வாந்தி இவை சிக்குவா பித்த குணங்கள் ஆகும்.

இரத்த வாந்தி, கோழை, கை எரிச்சல், காந்தல், சுவாசம், உடல் மரத்தல், காது இரைச்சல், மூர்ச்சை, கண் சுழலல், ஒளி குன்றல், தலை குத்தல் இவை இரத்த சிலேத்தும குறிகளாகும்.

பித்தத்தோடு சோர்ந்துவிடுதல், எரிச்சல், குளிர்ச்சி, சுரம், வீக்கம், வியர்வை, ஏப்பம், மலக்கட்டு, வலி, தாகம் இவை உட்கார சிலேத்துமத்தின் குணங்களாகும்.

கோச சிலேத்துமம், சுவேத சிலேத்துமம்

கோச சிலேத்துமமது கொள்தொனியொடு வெங்கலமாய்
கோசிக்கும் கோட்டாவி கூரிருமல் - தோசமாம்
சுவேத சிலேத்துமம் சுருக்கலு மெய்விக்கல்
சுவேதமலக் கட்டாகும் சொல். 192

சுர சிலேத்துமம்

பேராம் சுரசிலேத்துமம் பொங்கும் சுரப்பிரமை
நேராகும் தேகநிறம் குன்றல் - சோர்வுடனே
கொட்டாவி ஏப்பம் குலையெரிதல் கோழையுடன்
கட்டா வறள்தாகம் கண். 193

குரல் வெண்கலத்தைபோல் ஒலிக்கும், கொட்டாவி, இருமல் இவை கோச சிலேத்துமத்தின் குறி குணங்கள் ஆகும்.

உடல் சுருங்கல், விக்கல் மலக்கட்டு இவை சுவேத சிலேத்து மத்தின் குறி குணங்கள் ஆகும்.

சுரம், பிரமை, உடல் நிறம் குறைதல், கொட்டாவி, ஏப்பம், குலை எரிச்சல், கோழைக்கட்டு, வரட்சி, தாகம் இவை சுர சிலேத்துமத்தின் குறி குணங்கள் ஆகும்.

சுக்கில சிலேத்துமம்

மேன்மூச்சு நோவிருமல் மெய்சூம்பல் கண்ணோதல்
ஈனத் தொனியும் சீரணமாம் - மேன்கழுத்து
சுட்கித்து மார்புநோம் சீரெரிச்சல் தாகமுமாம்
சுக்கில சிலேத்துமமெனச் சொல். 194

துக்க சிலேத்துமம், தொனி சிலேத்துமம்

துக்க சிலேத்துமந் துயர்சூலை கால்நோவாம்
மிக்கிருமல் துர்ப்பலம் மெய்மெலிதல் - அக்கரையாய்
தொனியாம் சிலேத்தும குணம்தீ தெரிச்சல் மந்தத்
தொனியாம் சுரம்குளிரும் தான். 195

மேல்மூச்சு, வலி, இருமல், உடல் இளைத்தல், கண்வலி, குரல் கம்மல், அசீரணம், மேல்கழுத்து சுருங்குதல், மார்புவலி, எரிச்சல், தாகம் இவை சுக்கில சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

உடல் சூலை, கால்வலி, இருமல், வன்மை குறைதல், உடல் இளைத்தல், இவை துக்க சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

எரிச்சல், மந்ததொனி, சுரம், குளிர் இவை தொனி சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

மகர சிலேத்துமம்

காசஞ் சுவாசம் குளிர் வியர்வை நோவுமாம்
வீசுஎரிச்சல் குத்தல் வயிறுப்பல் - நேசமதாய்
தாகம் அக்கினிமந்தம் தார்குழலே தன்மையதை
மகா சிலேத்தும மாகும் மதி. 196

பேன சிலேத்துமம்

பேன சிலேத்துமம் வியர்வைபேர் நுரையும் கோழையும்
தானசுரம் துர்ப்பலமும் தங்கிருமல் - ஊனமுறும்
மார்பெரிச்சல் மந்தம் மலபந்தம் ஒக்காளம்
சார் சீதளமும் சாற்று. 197

காசம், சுவாசம், குளிர், வியர்வை, வலி, எரிச்சல், குத்தல், வயிறு உப்பல், தாகம், அக்கினிமந்தம் இவை மகா சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

வியர்வை, நுரையுடன் கோழை கக்கல், சுரம், வன்மை குறைதல், இருமல், மார்பு எரிச்சல், மந்தம், மலக்கட்டு, ஒக்காளம், குளிர்ச்சி இவை போன்ற சிலேத்துமத்தின் குறி குணங்கள் ஆகும்.

மூகை சிலேத்துமம்

கண்டத் தொனிஊமை கோழை சுரமார்பு
துண்டு வலிநா உலர்தல் துர்ப்பலமாம் - விண்டு சொல்லா
யூகை மதியாளே உருவாய்க் கசப்புமுரு
மூகை சிலேத்துமா முன். **198**

மூர்ச்சை சிலேத்துமம்

மூர்ச்சை சிலேத்துமம் முழந்தாள் வலிமூர்ச்சை
பார்த்திடவே கோழைசுரம் பிரமை - கோத்திடவே
சோர்தலை சுழலல் சுவாசம் எரிச்சலும்
சார்தல் அசீரணமாம் சால். **199**

குரல் ஒலி ஊமையைப் போலிருத்தல், கோழை, சுரம், மார்புவலி, நா உலர்தல், வன்மை குறைதல், வாய்க்கசப்பு இவை மூகை சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

முழந்தாள் வலி, மூர்ச்சை, கோழை, சுரம், பிரமை, தலைசுற்றல், சுவாசம், எரிச்சல், அசீரணம், மூர்ச்சை சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

வமன சிலேத்துமம், சீண சிலேத்துமம்

மாறா வாந்தியுடன் மார்க்குத்து எரிச்சலுடன்
கூறாத சீரணம் கொட்டாவி - பேர்வமனம்
சீணசிலேத்துமத்தால் சேரும் பலக்குறைவு
வீணிரைப்பு விக்கலுமாம் விள். **200**

சய சிலேத்துமம்

ஈனத் தொனிமயக்க உள்மூச்சு பந்தமலம்
ஊனத்த சீரணமோர் மூர்ச்சை - கானவிடாய்
கயமீறு கண்டம் கருதுசுரம் காந்தல்
சயமாம் சிலேத்துமச் சதி. **201**

சோட சிலேத்துமம்

சோட சிலேத்துமத்தில் சோர்வுகுளிர் கொட்டாவி
தோட மதிசீதளம் தீவியர்வை - வேடமாம்
வீக்கம் சுரம்பித்தம் வேதனையா என்னாளும்
ஏக்க முறச்செய்யு மே. 202

குறிப்பு : சிலேத்தும ரோகநிதானப் பாடல்கள் மத்திய சித்த ஆயுர்வேத ஆராய்ச்சி மையத்தின் சுவடி எண். 127 இல் மட்டும் உள்ளன.

வாந்தி, மார்பு குத்தல், எரிச்சல், அசீரணம், கொட்டாவி, இவை வமன சிலேத்துமத்தின் குறிகளாகும்.

உடல் வன்மை குறைதல், இரைப்பு, விக்கல் இவை சீண சிலேத்துமத்தின் குறிகளாகும்.

குரல் கம்மல், மயக்கம், உள்மூச்சு, மலக்கட்டு, அசீரணம், மூர்ச்சை, தாகம், சுரம், எரிச்சல் இவை சயசிலேத்துமத்தின் குறிகளாகும்.

சோர்வு, குளிர், கொட்டாவி, குளிர்ச்சி, வியர்வை, விக்கல், சுரம், பித்தம் இவை சோட சிலேத்துமத்தின் குறி குணங்களாகும்.

வாதசுரக் கியாழம் - 1

தழுதாழை சங்கம்வேர் தான்றி கடுநெல்லி
குழுவாம் கிரந்திவேர்க் கொம்பு - பழுதறவே
நேராய் இருநாழி நீரில்வைக்க எட்டொன்றாய்ப்
பேராத வாதசுரம் போம். 203

சேரும் சரக்குகள் :

தழுதாழை, சங்கம் வேர்,
தான்றிக்காய், கடுக்காய்,
நெல்லிக்காய், கிரந்திதகரம்,
சுக்கு, - சம அளவு

செய்முறை : சரக்குகளை ஒன்றிரண்டாகத் தட்டி 2. படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி 1/8 ஆகக் குறுக்கி வடிகட்டிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய் : வாதசுரம்

வாதசுரக் கியாழம் - 2

சீராரும் சந்தனமும் சீந்திலுடன் வேர்க்கொம்பும்
காராரும் முத்தம்சிறு காஞ்சொறிவேர் - நேராகக்[1]
கூட்டுமே என்றும் குடிநீர் குடிக்காமுன்
ஒட்டுமே வாதசுரம் ஓர்ந்து. **204**

சேரும் சரக்குகள் :
சந்தனம், சீந்தில், சுக்கு,
முத்தக்காசு, சிறுகாஞ்சொறி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : வாதசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : **204, 1** நேராய்

வாதசுரக் கியாழம் - 3

சீந்திமுத்தம் சுக்குச் சிறுகாஞ் சொரிந்து
போந்தமருந்து ஓர்பலமாய்ப் பொங்குபுனல் - ஆய்ந்துவிட்டே
எட்டொன்றாய்க் காய்ச்சும் இயல்கோதம் தானருந்தில்
விட்டுவிடும் வாதசுரம் விரைந்து. **205**

சேரும் சரக்குகள் :
சீந்தில், முத்தக்காசு, சுக்கு,
சிறுகாஞ்சொறி, சந்தனம், - வகைக்கு 1 பலம்

செய்முறை : சரக்குகளைச் சுத்தி செய்து 8 பங்கு தண்ணீர் சேர்த்து 1 பங்காக வற்றும் வரைக் காய்ச்சி வடிகட்டிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய் : வாதசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : **205. 1** வியந்து
வீழ்ந்து

வாதசுரக் கியாழம் - 4

சுக்கு தழுதாழை தூயஆ மணக்கம்வேர்
தக்க செப்படிக்[1] கூத் தன்குதம்பை - மிக்கவே

. 101

கோதமாய் காய்ச்சிக் குடித்திடவே[2] வாதசுரம்
பேதமற போமே பிரிந்து. 206

சேரும் சாக்குகள் :

சுக்கு, தழுதாழை, ஆமணக்குவேர்,
செருப்படை, கூத்தன்குதம்பை, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து குடிக்க வேண்டும்.

தீரும் முறை : வாதசுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 206. 1 செருப்பபடை
2 குடிநீரிடவே

வாதசுரக் கியாழம் - 5

ஆற்றுமுள்ளி பேராமுட்டி ஆத்தி இலந்தைவேர்
ஏற்றகடுக் காய்சுக்கோடு இவ்வாறும் - போற்றியே
சாடிதனில் காய்குடிநீர் தங்காம லேகுடிக்க[1]
ஓடிவிடும் வாதசுரம் ஓர்ந்து. 207

சேரும் சரக்குகள் :

ஆற்றுமுள்ளி, பேராமுட்டி, ஆத்தி,
இலந்தைவேர், கடுக்காய், சுக்கு - சம அளவு

செய்முறை : இச்சரக்குகளை முறைப்படிக் குடிநீர் செய்து செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : வாதசுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 207. 1 கொடுக்க

வாதசுரக் கியாழம் - 6

காட்டா மணக்குச்சுக்கு கான்ற[1] தழுதாழை
கூட்டாம் திரிபலைகள் துடர்கண்ணன் - நீட்டியவேர்[2]
ஓண்குடிநீ ரில்கரைத்துள்ள உண்டிடுகில்[3] வாதசுரம்[4]
விண்ணடையப்[5] போமே விரைந்து. 208

சேரும் சரக்குகள் :

காட்டாமணக்கு, சுக்கு, தழுதாழை,
கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய், கண்ணன்வேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.

திரும் நோய் : வாதசுரம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 208. 1 கானல்
2 நீட்டிடுவர்
3 உண்ணமே
4 தாபசுரம்
5 விண்ணடைந்து

வாதசுரக் கியாழம் - 7

வெட்டிவேர் ஆலம் விழுது தழுதாழை
தட்டுசுக்குத் தான்றிக்காய் தான் அவுரி - வெட்டு மஞ்சள்
காய்ந்தகுடி நீர்குடிக்கக் கண்டுஅலறி வாதசுரம்
மாய்ந்துவிடும் சொல்லாய் மகிழ்ந்து. 209

சேரும் சரக்குகள் : வெட்டிவேர், ஆலம்விழுது, தழுதாழை, சுக்கு, தான்றிக்காய், அவுரி, மஞ்சள், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து குடிக்க வேண்டும்.

தீரும் நோய் : வாதசுரம்

பித்தசுரக் கியாழம் - 1

சதகுப்பை கொத்தமல்லி தண்ணீர்விட்டான் முத்தம்
அதிமதுரம் சுக்கோடு ஆடாதோடை் - இதமுசுக்கை
வெட்டிவேர் நேராக வெந்தகுடி நீர்குடிக்கக்
கெட்டுவிடும் பித்தசுரம் கேள். 210

சேரும் சரக்குகள் : சதகுப்பை, கொத்துமல்லி, தண்ணீர்விட்டான், முத்துக்காசு, அதிமதுரம், சுக்கு, ஆடாதோடை, முசுமுசுக்கை, வெட்டிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பித்தசுரக் கியாழம் - 2

சீந்திகணம்[1] நன்னாரி சிற்றாமுட்டி முந்திரிகை
தேய்ந்தசந்துப் பற்பாடம்[2] சேர்ந்தமுத்தம் - ஆய்ந்துசமன்
நானாழி நீருரியாய் நாமருந்த பித்தசுரம்
தானழிந்து[3] போமே தளர்ந்து. 211

சேரும் சரக்குகள் : சீந்தில், திப்பிலி, நன்னாரி, சிற்றாமுட்டி, முந்திரிகை, சந்தனம், பற்பாடகம், முத்தக்காசு, - சம அளவு

செய்முறை : இவற்றுடன் 4 படி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி 1 படி ஆனவுடன் வடிகட்டிக் குடிக்கவேண்டும்.

தீரும் தோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 211
1 கணை
2 பற்பாடகம்
3 தானாழி

பித்தசுரக் கியாழம் - 3

கண்டஞ் சிறுதேக்கு காஞ்சொறிவேர் வெட்டிவேர்[1]
தண்டுரித்த சீந்திசுக்குத் தானேராய்க் - கொண்டுநீர்
மெய்வெதுப்பக்[2] காய்ச்சி மென்பொழியாய்[3] திப்பிலி
இட்டிடவே வெதுப்பைஒட்ட வருந்து.[4] 212

சேரும் சரக்குகள் : கண்டங்கத்தரி, சிறுதேக்கு, காஞ்சொறிவேர், வெட்டிவேர், சீந்தில், சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து அதில் திப்பிலி பொடியைத் தூவிக் குடிக்க வேண்டும்

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 212
1 காஞ்சொரி வெட்டிவேர்
2 மெய்வெதும்ப
3 மெய்மொழியாம்
4 (அ) வேதுப்பஒட்ட (ஆ) வெதுப்பிப் போட.

பித்தசுரக்கியாழம் - 4

திப்பிலி வட்டத் திருப்பி விலாமிச்சம்
துப்பில் இருவேலி தன்சீந்தில் - பற்படாம்[1]
வேர்க்கொம்பு கண்டங்கார் வெந்தகுடி நீர்குடிக்க
போர்க்குமே[2] பித்தசுரம் போம். *213*

சேரும் சரக்குகள் :
திப்பிலி, வட்டத்திருப்பி, விலாமிச்சவேர், வெட்டிவேர், சீந்தில், பற்பாடகம், சுக்கு, கண்டங்கத்திரி, - சம அளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படிக் குடிநீர் செய்து அருந்த வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : *213.* *1* பற்பகடம்
2 பேராத, பேராகு

பித்தசுரக் கியாழம் -5

வெப்பாலை தோலரிசி வேர்க்கொம்பு பேய்ப்புடோல்
கொப்பார்செந் தொட்டிமுத்தம் கோட்டமுடன் - நப்பாக
பூநிம்பம் சீந்தில் பொருந்துதொடை[1] பற்படாம்[2]
தானபித்தத் தோடமறுந் தான்.[3] *214*

சேரும் சரக்குகள் :
வெட்பாலை அரிசி, சுக்கு, பேய்ப்புடல், செந்தொட்டி, முத்தக்காசு, கோட்டம், வேப்பம்பூ, சீந்தில், ஆடாதோடை, பற்பாடகம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : *214.* *1* பொருந்துதொடை
2 பற்படகந்
3 தானருந்தில் தோடமருந்தான்

பித்தசுரக் கியாழம் - 6

வெட்டிவேர்பே ராமுட்டிவேர்சீர கம்சிற்றா
முட்டிவேர் சீந்திமுத்தம் முந்துசுக்கு - மட்டனைய
சுத்தக் கரும்பயறாம் சொல்குடிநீர் வைத்தருந்தில்
பித்தசுரம் போமே பிரிந்து. 215

சேரும் சரக்குகள் :

வெட்டிவேர், பேராமுட்டிவேர், சீரகம்,
சிற்றாமுட்டிவேர், சீந்தில், முத்தக்காசு
சுக்கு, கருப்புப்பயறு, - சம அளவு

செய்முறை : இச்சரக்குகளை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பித்தசுரக் கியாழம் - 7

கோட்டம் விலாமிச்சம் கூர்சந்த னம்சீந்தில்
நாட்டுசுக்கு முத்தமுடன் நற்கோதம்[1] - வாட்டியிடும்
பித்தசுரம் அத்தனையும் போர்ந்துவிடும்[2] இம்மருந்தை
உத்தமமாய்ச் சொன்னேன் உகந்து. 216

சேரும் சரக்குகள் :

கோட்டம், விலாமிச்சவேர், சந்தனம், சீந்தில்,
சுக்கு, முத்தக்காசு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 216. 1 முத்தமுடனாற்கோதம்
2. போற்றுவிடு

பித்தசுரக் கியாழம் - 8

கொத்தமல்லிபேராமுட்டி கொடிப்பாற் சொற்றிமுத்த[1]
மொத்தசுக்கு[2] நெல்லிமுள்ளி பொன்றுமணந் - சத்து விலாம்[3]
மிச்சங் குடிநீர்க்குப் பித்தசுரம் பாரியிடும்
கச்சின் இளமுலையாய்க் காண். 217

சேரும் சரக்குகள் :
கொத்துமல்லி, பேராமுட்டி, பால்சொற்றி,
முத்தக்காசு, சுக்கு, நெல்லிமுள்ளி,
சந்தனம், விலாமிச்சை, - சம அளவு

செய்முறை : இச்சரக்குகளை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண : 217. 1 பேராமுட்டி கோபிபாற் சோற்றி முத்த
2 முத்தமோரர்
3 சுத்தவிலா

பித்தசுரக் கியாழம் - 9

அரத்தை அதிமதுரம் ஆனசத குப்பை
நரிபயத்தம் வேர்முத்தம் நல்கூர்ந் - திருபுடம்சீர்
வெட்டிவேர் கோதமுணில் மேற்பித்த வெப்பகலும்
திட்டமுறச் சொல்வீர் தெரிந்து. 218

சேரும் சரக்குகள் : அரத்தை, அதிமதுரம், சதகுப்பை,
நரிபயற்றம்வேர், முத்தக்காசு,
வெட்டிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்.

பித்தசுரக் கியாழம் - 10

கறுத்தப்பா சிப்பயறு காண்[1]சீந்தி மாஞ்சில்
நிறுத்தமுத்தம்பேராமுட்டி நீங்கா - துறு[2] மதுரம்
தான்கூர்ந் திருபுடம் சீரகம்[3] கோதம்[4] கொண்டளவில்
மேண்கோபித் தசுரமீ ளும். 219

சேரும் சரக்குகள் : கறுத்த பாசிப்பயிறு, சீந்தில், சடாமாஞ்சில்,
முத்தக்காசு, பேராமுட்டி, சீரகம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்த சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 219. 1 காணஞ்
2 நீங்கா தூறு
3 திருபுடஞ்சிரதம்
4 கோதமை

சிலேத்தும சுரக்கியாழம் - 1

ஆடா தொடையீர்(க்) கோடு ஆற்றுமுள்ளி கான்முள்ளி
காடாறு[1] முள்ளுமுக்கா வேளைவேர் - வாடாத
செம்முள்ளி யாங்குடிநீர் தேன்கணத்தூள் இட்டருந்தில்[2]
விம்மிப்போம் சிலேட்டுசுரம்[3] விள்ளு 220

சேரும் சரக்குகள் : ஆடாதோடை ஈர்க்கு, ஆற்றுமுள்ளி, முட்க்காவேளை வேர், செம்முள்ளி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து. திப்பிலித்தூள், தேன் கலந்து அருந்த வேண்டும்

தீரும் நோய் : சிலேத்தும சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 220. 1 கடாறு, நாடாறு
2 உள்ளிட்ட
3 சேட்பசுரம், சென்ம சுரம்

சிலேத்துமசுரக் கியாழம் - 2

வாச யிலைஈர்க்கு[1] வன்கடுகு ரோகணியும்
தேசுகண்டம் கார்வசம்பு சேர்பிரண்டை - மாசுக்கு[2]
சேர்ந்தகசா யத்தின்நீர்[3] தேன் திப்பிலித்தூள் இட்டருந்தில்[4]
தேர்ந்துடன்போம் சிலேட்டுமசுரம் தேய்ந்து. 221

சேரும் சரக்குகள் : ஆடாதொடை ஈர்க்கு, கடுகுரோகணி, கண்டங்கத்திரி, பிரண்டை, சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து, தேன், திப்பிலி கலந்து அருந்த வேண்டும்.

திரும் நோய் : சிலேத்தும சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 221. 1 வாசையிலை பீர்க்கு
2 மாரிசுக்கு, மாசிசுக்கு
3 கஷாயத்தின் நீர்
4 விட்டருந்தில்

சிலேத்துமசுரக்கியாழம் - 3

தூது வளைமுழுதும் தூயகண்டங் கார்முள்ளி
கோதில்செம் முள்ளிவேர் கோதத்தி[1]ல் - தீதில்தேன்[2]
திப்பிலித்தூ ளிட்டருந்த சிலேட்டுமசுரம்போமதுக்கு[3]
தப்பிலைகாண் மெய்யே தகும்.[4] 222

சேரும் சரக்குகள் : தூதுவளைசமூலம், கண்டங்கத்திரி,
செம்முள்ளிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து, தேன், திப்பிலி தூளுடன் கலந்து அருந்த வேண்டும்.

திரும் நோய் : சிலேத்தும சுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 222. 1 கொத்ததிர
2 தீதென - தீர்வதென
3 சேட்பசுரம் போமிதற்குத்
4 மெய்தகும்

சிலேத்துமசுரக்கியாழம் - 4

சுக்குமுள்ளி கண்டந்[1] தொடையீர்க்கு ரோகணியும்
சிக்குமர மஞ்சள் திரிபலைபேய் - தொக்குபுடல்
காட்டா மணக்கம்வேர் காய்ந்தகுடி நீருழக்குக்
கூட்டாய்ப்போம் சிலேட்டுமசுரம்[2] கூர்ந்து. 223

சேரும் சரக்குகள் : சுக்கு, முள்ளி, கண்டங்கத்திரி,
ஆடாதொடை ஈர்க்கு,
கடுகுரோகணி, மரமஞ்சள்,
கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய், பேய்ப்புடல்,
காட்டாமணக்குவேர் - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து அருந்த வேண்டும்
தீரும் நோய் : சிலேத்தும சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 223. 1 கண்டத்
2 சேட்பசுரம்

சிலேத்துமசுரக்கியாழம் - 5

ஓமம்[1] வசம்புசுக்கு ஓங்குகண்டங் கத்தரிவேர்
நாமம் பெருங்குமிழ்வேர் நல்லசங்கு - ஏமமுறும்
கையாந் தகரைவேர்[2] காய்ந்தகசா யம்தனக்கு
மெய்யகலும் சிலேட்டுசுரம் விள்ளு.[3] 224

சேரும் சரக்குகள் : ஓமம், வசம்பு, சுக்கு, கண்டங்கத்திரி வேர், பெருங்குமிழ்வேர், சங்கங்குப்பி, கையான்தகரை வேர், - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து குடிக்க வேண்டும்.
தீரும் நோய் : சிலேத்தும சுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 224. 1 உயர்ஓமம்
2 நீர்
3. சேட்பசுரம் விள், விண்டு

வாதபித்த சுரக்கியாழம்

ஆமணக்கம் வேர்சீந்தில் ஆன தழுதாழை
தாமணக்கும் சுக்குகூத் தன்குதம்பை - தேமணக்கு
முத்தம்பாற் சொற்றி[1] நிரை மொய்குடிநீ ராம்வாத
பித்தவெப்பை ஓட்டும் பிரித்து.[2] 225

சேரும் சரக்குகள் : ஆமணக்குவேர், சீந்தில், தழுதாழை, சுக்கு, கூத்தன் குதம்பை, முத்தக்காசு, பாற்சொற்றி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து அருந்த வேண்டும்.
தீரும் நோய் : வாத பித்தசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 225. 1 சோதி
2 பிரிந்து, அறிந்து

வாத சிலேத்துமசுரக் கியாழம்

காய்க்கும் திரிபலைகள் காண்கடுகு ரோகணியும்
வாய்க்கும்வேப் பீர்க்குசுக்கு வன்சீந்தி - பேய்ப்புடல்
ஏற்கும் குடிநீரை ஏத்த ருந்தில் ஓர்வாத
சேற்பசுரம் போமே திகைத்து. 226

சேரும சரக்குகள் : கடுக்காய், நெல்லிக்காய்,, தான்றிக்காய், கடுகுரோகிணி, வேப்பீர்க்கு, சுக்கு, சீந்தில், பேய்ப்புடல், - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : வாதசிலேத்துமசுரம்

பித்த சிலேத்தும சுரக்கியாழம்

விலாமிச்சம் கொத்தமல்லி வேர்கொம்பு கண்டம்
சுலாவும் திரிபலைபாற் சொற்றி - குலாவியிடும்[1]
செந்தொட்டிக் காய்குடிநீர் சேர்பித்த சிலேட்டும வெப்பைச்
சிந்திடவே ஓட்டும் சினந்து. 227

சேரும் சரக்குகள் : விலாமிச்சவேர், கொத்துமல்லி, சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பாற் சொற்றி, செந்தொட்டி, - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : பித்த சிலேத்தும சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 227. 1 குலாவிவரும்

தொந்தசுரக் கியாழம்

கூத்தன்கு தம்பைசுக்கு கூர்கடுக்காய் சீந்திமுத்தம்[1]
பார்த்தநில வேம்புநல்ல பாற்சொற்றி - ஏத்தகுணம்
வந்ததொரு பேர்முட்டி வன்குடிநீர் வாய்மடுக்கத்[2]
தொந்தசுரம் போமே தொகுத்து. 228

சேரும் சரக்குகள் : கூத்தன்குதம்பை, சுக்கு, கடுக்காய், சீந்தில், முத்தக்காசு, நிலவேம்பு, பாற்சொற்றி, பேராமுட்டி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

பாட வேறுபாடு :
பாடல் எண். 228. 1 சீந்தி
2 வாய்முக்க

சன்னிபாத சுரக் கியாழம்

வாசை[1] வளர்சீந்தில் மன்னுவேம்பு பற்படகம்
தேசாவரம்[2] வேர்க்கொம்பு செந்தொட்டி - நேசமாய்ச்
சித்தமுட்டி இரண்டிரண்டு[3] தேரமூன்று[4] நான்கைந்து
மத்தநிறை ஆறேழு மாம். 229

ஏழும் பொடித்தே எடுத்தே ஒருபலத்தை
வாழும் குடிநீராய் வாய்மடுக்கத் - தாழ்வான
வாதையொடு மூர்ச்சை மயக்கம் தளர்சன்னி
பாதசுரம் போமே பறந்து. 230

சேரும் சரக்குகள் :

ஆடாதொடை	- 2 பலம்
சீந்தில்	- 2 பலம்
வேம்பு	- 3 பலம்
பற்படகம்	- 4 பலம்
சுக்கு	- 5 பலம்
செந்தொட்டி	- 6 பலம்
சிற்றாமுட்டி	- 7 பலம்

செய்முறை : மேற்கண்ட 7 சரக்குகளையும் இடித்துக் குடிநீராய் செய்து அருந்தவேண்டும்.

தீரும் நோய் : மூர்ச்சை, மயக்கம், சன்னிபாத சுரம்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 229. 1 வாகை
2 தேசு
3 யொன்றிரண்டு
4 தேர்மூன்று

ச்ன்னிபாத சுரக்கியாழம் (வேறு)

கானப் பெருங்குமிழ்வேர் காண்சித்தி ரமூலம்[1]
ஆன அரத்தை அழிஞ்சில்வேர் - தான்செவியம்
ஏதமில்லாப் பேர்முட்டி ஏன்றகுடி நீர்சன்னி
பாதசுரம் போமே பறந்து.[2] 231

சேரும் சரக்குகள் : பெருங்குமிழ்வேர், சித்திரமூலம், அரத்தை,
அழிஞ்சில் வேர், செவ்வியம்,
பேராமுட்டி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னிபாத சுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 231. 1 கனசித்திரமூலம்
2 வாதமதை நீக்கும் பரிந்து.

தருண சுரக் கியாழம்

சந்துவிலாம் பிச்சமுத்தம் தான்சுக்குக் கண்டடங்கார்[1]
செந்தொட்டி வேப்பலகு சீந்திலொடு - உந்துசுவ
ரொட்டி வேர்க்கடுகு ஒன்பா திரிநீர்க்கு[2]
நட்டடந் தருணசுரம் நாடு. 232

சேரும் சரக்குகள் : சந்தனம், விலாமிச்சவேர், முத்தக்காசு,
சுக்கு, கண்டங்கத்திரி, செந்தொட்டி,
வேப்பலகு, சீந்தில், சுவரொட்டிவேர்,
கடுகு, பாதிரிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்: தருண சுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 232. 1 கண்டங்கூர்
2 நடத்தகுண சுரம்னாடு, நிற்கு

புராண சுரக்கியாழம்

பேராமுட்டி முந்திரிகை பேர்வடுகில்[1] பாற்சொற்றி
பார வமுதவல்லிப் பருஞ்சுக்கு - ஏரும்[2]

திராணிதரும் சீதாஞ்[3] செங்கழுநீர் கோதம்
புராணவெப்பை ஓட்டும் புகுந்து. ***233***

சேரும் சரக்குகள் : பேராமுட்டி, முந்திரிகை, பாற்சொற்றி, சீந்தில், சுக்கு, சீதேவி செங்கழுநீர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : புராண சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 233. 1 பேரழகாம்
2 ஏரிந்
3 சீதம்

புராண சுரக்கியாழம்

சுக்கு மரமஞ்சள் சொல்வசம் பேலம்சீந்தி
தக்கதொரு கண்டஞ் சமூலமாம் - கக்குமணம்
காட்டுத் துளசிபே ராமுட்டி யாம்காண்[1]
வீட்டும்[2] புராணசுரம்போ மேந்து[3] ***234***

சேரும் சரக்குகள் : சுக்கு, மரமஞ்சள், வசம்பு, ஏலம், சீந்தில், கண்டங்கத்திரிசமூலம், காட்டுத்துளசி, பேராமுட்டி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : புராண சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 234. 1 பேராமுட்டி கிஷாயம், கஷாயந்தா
2 ஒட்டும்
3 போமேபுகுந்து

அசீரண சுரக்கியாழம்

திரிபலைவெண் சங்கம்வேர் சேர்கொடிய வேலி
உரிய திரிகடுகோடு ஓமம் - பருவசம்பு
திப்பிலிமூ லம்குடிநீர் சேரும்அ சீரணமாம்
வெப்பகல ஓட்டும் விரும்பு. ***235***

சேரும் சரக்குகள் : கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெண்சங்கம்வேர், கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வசம்பு, திப்பிலிமூலம், - சம அளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : அசீரண சுரம்.

தாப சுரக்கியாழம் - 1

சந்துக்கோ ரைக்கிழங்கு தான்வெட்டி வேர்சுக்குப்
பந்திவிலா மிச்சம்பற் பாடகம்[1] - வெந்தநீர்[2]
காவின் குயில்மொழியாய்க் கண்டபொழு தேகுடிக்கத்[3]
தாபசுரம் போயேகும் தான்.[4] 236

சேரும் சரக்குகள் : சந்தனம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சுக்கு, விலாமிச்சம்வேர், பற்பாடகம், - சம அளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : தாபசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 236. 1 பற்படகம்,
2 சந்ததமும்,
3 குடிநீர்,
4 தாபசுரம் போமே தணிந்து.

தாபசுரக்கியாழம் (வேறு)

வாசையிலை வில்வவேர் வன்கடுகு ரோகணியும்
நேசமொடு முள்ளி நிலவேம்பு - ஆசையாம்[1]
பற்படாகங் கோதத்தில்[2] பாளிதமிட் டேகுடிக்க
வெப்புதாப சுரம்போம் விள்[3] 237

சேரும் சரக்குகள் : ஆடாதோடைவேர், வில்வவேர், கடுகரோகணி, நீர்முள்ளி, நிலவேம்பு, பற்பாடகம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து, சர்க்கரை சேர்த்து அருந்த வேண்டும்.

115

திரும் நோய் : தாபசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 237. 1 நேசமுடன்முள்ளும் நிலவேம்பும் - மாசையாய்
2 பற்படகக் கோதத்திற
3 தப்பாது தாபசுரந்தான்

தாக சுரக்கியாழம்

முந்திரிகை கற்சூர முன்கடுகு ரோகணியும்
முந்துநெய்தல் பற்படகம் ஒண்சீந்தில் - தந்தநீர்
தாகம் புலம்பல் தளர்மூர்ச்சை மெய்மயக்கம்
ஆகவெப்போ டேபித்த மறும்.[1] 238

சேரும் சரக்குகள் : முந்திரிகை, பேரீந்து, கடுகுரோகணி,
நெய்தல்கிழங்கு, பற்பாடகம்,
சீந்தில், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : தாகம், புலம்பல், மூர்ச்சை, மயக்கம், மேகவெட்பு. பித்தம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 238. 1 மோகவெப்பு பித்தமறும்.

அத்தி சுரக்கியாழம்

பேய்ப்புடோல் பற்படகம் பேரோ கணிமுத்தம்
வாய்ப்புடைய ஓலம்சீந்தி[1] வளமையுள - தாய்ப்பிரிய
மானசிற்றாமுட்டி வேர்குடிநீர் ஆத்திசுரம்
தானதுபோம் கொள்வாய் தணிந்து.[2] 239

சேரும் சரக்குகள் : பேய்ப்புடல், பற்பாடகம், கடுகுரோகணி,
முத்தக்காசு, ஏலரிசி, சீந்தில்,
சிற்றாமட்டிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அத்திசுரம்

பாட வேறுபாடு :

பாடல்எண் : 239. 1 வேலம், சத்தி, சந்திவெண்மை
2 ததிர்ந்து, தனித்து.

இரத்த சுரக்கியாழம்

வெள்ளறுகு பேராமுட்டி[1] வேர்க்கொம்பு அசுவகெந்தி
விள்ளும் கொடிவேலி விரல்வசம்பு - கள்ளார்ந்[2]
தரத்த வனசவிலை[3] யுள்குடிநீர் உண்ணில்[4]
இரத்தசுரம் போமே இடைந்து. 240

சேரும் சரக்குகள் : வெள்ளறுகு, பேராமுட்டி, சுக்கு, அமுக்கரா, கொடிவேலி, வசம்பு, துளசிஇலை, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து அருந்த வேண்டும்.

தீரும் நோய் : இரத்த சுரம்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 240. 1 பேர்முட்டி
2 கள்ளார்ந்த
3 துர்த்த வசைமிவை
4 கொள்ளில்.

அபத்திய சுரக்கியாழம்

சொல்லும் திரிபாலைகள் சூழ்ரோ கணிசுக்கு
வெல்லும் அனுப்பாலை மருட்கிழங்கு - கெல்லியிடும்
வெல்சீந்தில்[1] இரண்டுமுட்டி வேருங்குடி நீரருந்தில்[2]
தொல்ல[3] பத்திய சுரம்போம் தோற்று. 241

சேரும் சரக்குகள் : கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி, சுக்கு, பாலைவேர், மருள்கிழங்கு, சீந்தில், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அபத்தியசுரம்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 241. 1 வேலமசீந்தில், வேல்சீந்தில்
2 நீர்குடித்த : நீர்க்கு
3 தோல்.

117

விடசுரக்கியாழம்

வெள்ளுள்ளி பேய்ப்புடோல் வேப்பீர்க்கு பற்படகம்[1]
உள்ளுகொடி[2] வேலிசுக்கு பொன்முசுட்டை - உள்ள தெல்லாம்
போட்டகுடி நீர்குடிக்கப்[3] போகா விடசுரம்[4]
நாட்டமறப்[5] போமே நடந்து. 242

சேரும் சரக்குகள் : வெள்ளுள்ளி, பேய்ப்புடல், வேர்ப்பீர்க்கு, பற்பாடகம், கொடிவேலி, சுக்கு, பொன்முசுட்டை, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : விடசுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 242. 1 பற்பாடகம்
2 புள்ளுகொடி
3 நீர்குடித்த
4 விடசுரமும்
5 தூட்டாமல்

விடசுரக்கியாழம் (வேறு)

செந்தொட்டி பற்படகம்[1] சேர்செவியம் செண்பகப்பூ[2]
தந்தகொடி வேலி தழுதாழை - உந்தி
அடருநில வேம்புசுக்கு ஆனகுடி நீர்க்கு[3]
விடசுரம் போமே விரைந்து[4] 243

சேரும் சரக்குகள் : செந்தொட்டி, பற்பாடகம், செவ்வியம், செண்பகப்பூ, கொடிவேலி, தழுதாழை, நிலவேம்பு, சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : விடசுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 243. 1 பற்பாடகம்
2 செம்முசுட்டை
3 நீர்குடிக்க
4 விட சுரம் போமே விரிந்து

விடமசீதசுரக்கியாழம்

தோற்றும் மனுப்பாலை துளசிப் பெருங்குறிஞ்சி
வீற்ற இரண்டுமுட்டி வேலம் சீந்தி[1] - ஏற்று
மட்டில்வன்னி வட்டத் திருப்பியடு நீர்க்கு
விடமசீ தசுரம்போம்[2] விட்டு. 244

சேரும் சரக்குகள் : பாலைவேர், துளசி, பெருங்குறிஞ்சி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஏலம், சீந்தில், கொடிவேலி, வட்டத்திருப்பி, - சம அளவு

செய் முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : விடமசீதசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 244. 1 வேல்சந்தி
2 வெப்பும்போம்

தோடசுரக்கியாழம் 1

கண்டங்கார் நெய்தலின் சுந்தம் அமுகவல்லி
கொண்டங்கு இருநாழி கோதமூழ்கக் கொண்டவுடன்
வாதசிலேட்டு மம்அதனால் வந்தசுரம் தோடசுரம்
தீதகன்று போமே திகைத்து. 245

சேரும் சரக்குகள் : கண்டங்கத்திரி, நெய்தல் கிழங்கு, சீந்தில், சம அளவு - தண்ணீர் 2 படி

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : வாதசிலேத்துமசுரம், தோடசுரம்,

தோடசுரக்கியாழம் 2

வில்வவேர் நொச்சியிலை வெண்சங்கம் வேர்சுக் கோடு[1]
ஒல்[2]கொடி வேலி உமரிவேர்-நல்கூத்
தன்குதம்பை இரண்டும் தனிக்கோதம் தோடசுரம்[3]
முன்னடுங்கி ஒடு முனிந்து.[4] 246

சேரும் சரக்குகள் : வில்வவேர், நொச்சிஇலை, சங்கம்வேர், கொடிவேலி, குமரிவேர், கூத்தன்குதம்பை, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : தோடசுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 246. 1 வேர்சுக்கு
2 ஏலம்
3 தானிரண்டும் தாங்குகோதந் தோஷசுரம்
4 ஒட்டுமுனிந்து

தோடசுரக்கியாழம் 3

எருக்கம்வேர் சுக்குகண்டம் ஏர்வசம்பு சங்கு
செருப்படியின் வேர் குமிழ்வேர் சேரும் - விருப்பமாய்
காடமரும் பேராமுட்டி காய்ந்தகுடி நீர்குடிக்கத்
தோடசுரம் போமே துலைந்து. 247

சேரும் சரக்குகள் : எருக்கம்வேர், சுக்கு, கண்டங்கத்திரி, வசம்பு, சங்கம்வேர், செருப்படிவேர், குமிழ்வேர், பேராமுட்டி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : தோடசுரம்.

திரிதோடக்கியாழம்

முத்தம் திரிபலை முள்ளிகண்டம் வேப்பலகு
கொத்தமல்லி சீந்தில் கொடிசுக்கு-பித்தபுடோல்
பற்படாம் வாய்விளங்கம் பார்நெய்தல் பூநிம்பம்
திப்பிலிமூ லம்இன்னும்சேர். 248

சேர்கடுகு ரோகணியும் தேன்கலந்து கொள்குடிநீர்
தீர்வாதம் சேத்துமம் திரிதோடம் - மூரலிடக்[1]
காரார் குழலாய் கலன்புனை மாமுலையாய்ப்[2]
போராது போமே புலம்பி.[3] 249

சேரும் சரக்குகள் : முத்தக்காசு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முள்ளி, கண்டங்கத்திரி, வேப்பலகு, கொத்தமல்லி, சீந்தில், சுக்கு, பேய்ப்புடல், பற்பாடகம், வாய்விளங்கம், நெய்தல் கிழங்கு, வேப்பம்பூ, திப்பிலிமூலம், கடுகுரோகணி, - சம் அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும். தேன் கலந்து அருந்த வேண்டும்.
தீரும் நோய்கள் : வாதம். சிலேத்துமம். திரிதோடம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 249. 1 மூரவிட்டு, ஊர்விட்டுக்
2 கலன்புனையுங் கொங்கையளாய்
3 புலைந்து, பிரிந்து

ஒருநாள் மாறல் சுரக்கியாழம்

பேராமுட்டி வேர்க்கொம்பு பீடுமனுப் பாலைவேர்
சீரா நிலவேம்பு திரிபலைகள் - பாரில்
வரும்கூர் பாலைவேர்[1] வைத்தகுடி நீர்க்கு[2]
ஒருமாறல் வெப்பகலும் ஓது. 250

சேரும் சரக்குகள் : பேராமுட்டி, சுக்கு, அனுப்பாலைவேர், நிலவேம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கூர்ப்பாலைவேர், - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : ஒரு மாறல் சுரம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 250. 1 குடசப்பாலை
2 நீர்க்காம்

ஒரு நாள் மாறல் சுரக்கியாழம்

கொம்மட்டி வேர்க்கொம்பு பீடுமனுப்பாலை வேர்சீறுநில
வேம்பு திரிபலைகள் பாரில்வரு - கூழ்ப்பாலை
வேர்வைத்த குடிநீர்க்காம் ஒரு
மாறல் வெப்பகலு மோது. 251

சேரும் சரக்குகள் : கொம்மட்டிவேர், சுக்கு, அனுப்பாலைவேர், நிலவேம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கூழ்பாலைவேர், - சம அளவு
செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்துகொள்ள வேண்டும்.
தீரும் நோய் : ஒரு நாள் மாறல் சுரம்

இரண்டு நாள் மாறல் சுரக்கியாழம்

சிந்திமுத்தக் காசுக்கு சேர்ந்தகைப்பு பேய்ப்புடோல்
சாய்ந்தசிறு தும்மட்டி தன்வேர்கள்[1] - ஏந்தியிடும்

/ 121

பப்படகம் கோதத்தில்[2] பார்கணத்தூள் தேனுடனே
துப்பவிரு[3] மாறல்போம் தோற்று.[4] 252

சேரும் சரக்குகள் : சீந்தில், முத்தக்காசு, சுக்கு, பேய்ப்புடல், சிறுதும்மட்டி வேர், பற்பாடகம், - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து, திப்பிலித்தூள், தேன் கலந்து அருந்த வேண்டும்.

தீரும் நோய் : இருநாள் மாறல் சுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 252. 1 தன்வேரும்
2 கோத்தில்
3 துய்ப்பவரு
4 தோய்ந்து

மூன்று நாள் மாறல் சுரக்கியாழம்

முந்திரிகை பேராமுட்டி மொய்ச்சகா தேவிசுக்கு
வந்தசிறு தும்மட்டி வன்வேர்கள் - இந்தநிலம்
தோன்று பறங்கித்[1] துளசி குடிநீர்க்கு
மூன்றுமாறல் சுரம்போம்[2] ஒய்ந்து. 253

சேரும் சரக்குகள் : முந்திரிகை, பேராமுட்டி, நெய்ச்சீட்டி, சுக்கு, சிறுதும்மட்டி, பரங்கிப்பட்டை, துளசி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : மூன்றுநாள் மாறல் சுரக்கியாழம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 253. 1 பாரங்கி
2 தாம்போம், சுரம் போமுன்

நான்கு நாள் மாறல் சுரக்கியாழம்

பேர்முட்டி வேலம்சீந்தில் பேய்ப்புடல் நற்சிவியம்
கார்த்துளசி சுக்கினொடு கண்ணவேர் - பார் அனுப்
பாலைவேர் போட்டகுடி நீர்குடிக்கப் பற்றுகின்ற
நாலுமா றல்சுரம்போ நைந்து.[1] 254

சேரும் சரக்குகள் : பேராமுட்டி, வேலம்பட்டை, சீந்தில்,
பேய்ப்புடல், செவ்வியம், துளசி, சுக்கு,
கண்ணன் வேர், அனுப்பாலைவேர், - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : நான்குநாள் மாறல் சுரம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 254. 1 மறைந்து

சர்வமாறல் சுரக்கியாழம் - 1

சிறுதேக்கு அமுதவல்லி செந்தொட்டி கோட்டம்
தெறிசுக்கு பற்படாந் திப்பிலியும் - முறுநிலத்தில்
நிம்பம் ஆடாதோடை முத்தம் நேராய் குடிநீரை
நம்பியே கொள்வீர் நயந்து. 255

நயமாம் சீரணமு நானாளை மாறல்
பயமாரு மேசன்னி பாதம் - வலமாய்
அடலடைந் தனெப்பு மொருமாறல் மூன்றும்
கடலடைந்து போமே கடிந்து. 256

சேரும் சரக்குகள் : சிறுதேக்கு, சீந்தில், செந்தொட்டி, கோட்டம்,
சுக்கு, பற்பாடகம், திப்பிலி, வேம்பு,
ஆடாதோடை, முத்தக்காக, - சம அளவு
செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய்கள் : அசீரணம், நான்குநாள் மாறல்சுரம், சன்னி, ஒரு மாறல் சுரம்.

சர்வமாறல் சுரக்கியாழம் - 2

வேப்பீர்க்கு மூன்றுமுட்டி மிக்கநில வேம்புசுக்கு
தோப்பு நிலப்பனையின் சொல்கிழங்கு - மூப்புக்கொடி
வேலிகிசா யம்குடிக்க வெப்பாம் ஒருமாறல்
மேலும் இரு மாறலாம் வேறு. 257

வேறு மூணாமா றல்வேக நாலா மாறல்[1]
ஏறுஅஞ்சா மாறல்[2] இரவுதனில் - மீறிவரும்[3]
வெப்புமுதல் வாய்களும்[4] விட்டோடும் மேதினியில்
துப்புரவாய்க் கொள்வீர் துணிந்து. 258

சேரும் சரக்குகள் : வேப்பீர்க்கு, பேராமுட்டி, சிற்றாமுட்டி, நிலவேம்பு, சுக்கு, நிலப்பனைகிழங்கு, கொடிவேலி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: ஒருநாள் மாறல்சுரம், இருநாள் மாறல் சுரம், 3-ம் மாறல்சுரம், 4-ம் மாறல்சுரம், இரவு சுரம், வாயு என்பன தீரும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 258. 1 மூன்றா மாறல் வேக நாலா மாறல் வேறு
2 ஏன்ற மஞ்சா மாறல்
3 ஊன்றி வரும்
4 வெப்பு முதலாயுகமும்

சீதசுரக்கியாழம் - 1

காட்டுத் துளசிசுக்கு கான்வேலம்[1] சீந்திகண்ணன்
நீட்டியவேர் பேர்முட்டி நீள்வேர்கள் - ஈட்டுசம
பாகம் கொதித்ததைப் பருக சீத சுரம்போம்[2]
வேகபழங் காய்ச்சலும்போம் விண்டு.[3] 259

சேரும் சரக்குகள் : காட்டுத்துளசி, சுக்கு, வேலம்பட்டை, சீந்தில், கண்ணன்வேர், பேராமுட்டி, - சம அளவு

செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சீதசுரம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 259. 1 கனவேலம்
2 பாகங் கோதத்தைப் பருகவே சீதசுரம்
3 விட்டு, விள்.

சீதசுரக்கியாழம் - 2

சுக்குவேப் பீர்க்குச் சுடுவசம்பு வேல்சீந்தி
தொக்கியிடும் பேர்முட்டி தொல்வேர்கள்[1] - மிக்க அரசம்[2]
பட்டை[3] சமபாகம் பண்குடிநீர் தானருந்தித்[4]
துட்டசீத சுரம்போம் தோற்று. 260

சேரும் சரக்குகள் : சுக்கு, வேப்பீர்க்கு, வசம்பு, வேலம்பட்டை, சீந்தில், பேராமுட்டிவேர், அரசம்பட்டை, - சம அளவு

செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
திரும் நோய் : சீதசுரம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 260. 1 சொல்வேர்கள்
2 தோல்வேர்கள் - மிக்கொடைதான்
3 விட்டு
4 வெந்தகுடி நீரருந்த
5 சுரம் போம் தோர்ந்து, வெப்புப்போம் தோற்று.

சீதச் சுரக்கியாழம் - 3

சுக்கு நிலவேம்பு சொல்சீதா செங்கழுநீர்
தக்ககூழ் பாலை[1] தன்வேர்கள் - மிக்ககண்ணன்
வேர்குடிநீ ரில்தேனும் விட்டுகணத் தூளுடனே[2]
பார்க்குசீத்[3] சுரம்போம் பண்பு. 261

சேரும் சரக்குகள்: சுக்கு, நிலவேம்பு, சீதாசெங்கழுநீர், கூழ்பாலைவேர், கண்ணன்வேர், - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து தேன், திப்பிலி தூள் கலந்து அருந்த வேண்டும்.
திரும் நோய் : சீதசுரம்
பாடவேறுபாடு :
பாடல் எண் : 261. 1 குடப்பாலை
2 விட்டுகணைத் தூளுடனே
3 பார்சீத

சீத சுரக்கியாழம் - 4

முட்டிரெண்டு வேல்சீந்தி முத்தம் இலந்தையிலை
பட்டசகா தேவிசுக்கு பற்படாம் - சிட்டினப்
பொட்டிளவேர் தன் கூழ்ப்பாலை புகல்குடிநீர்
கிட்டிடசி தசுரம்போம் கேள். 262

சேரும் சரக்குகள் : பேராமுட்டி, சிற்றாமுட்டி, வேலம்பட்டை, சீந்தில், முத்தக்காசு, இலந்தைவிதை, நெய்ச்சட்டி, சுக்கு, பற்பாடகம், கூழ்ப்பாலைவேர், - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
திரும் நோய் : சீதசுரம்

மாலை சுரக்கியாழம்

நெல்லிமுள்ளி பேய்ப்புடோல் நேர்ரோக ணிச்சுக்கு
வல்லநில வேம்பு மருள்கிழங்கு - நல்லகணம்[1]
நேயசிறு தும்மட்டிவேர்[2] நீடுகசா யம்குடிக்கில்[3]
சாயங்கால சுரம்போம் தாழ்ந்து.[4] 263

சேரும் சரக்குகள் : நெல்லிமுள்ளி, பேய்ப்புடல், கடுகரோகணி, சுக்கு, நிலவேம்பு, மருள்கிழங்கு, திப்பிலி, சிறுதும்மட்டிவேர், - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : மாலைசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 263. 1 நல்லகணை
2 நீலிசிறுதும்மட்டி
3 குடிக்க
4 மால்சுரம் போகுமடிந்து.

இராச்சுரக்கியாழம் - 1

கிராந்திசுக்கு வேலம்சீந்திக் கீரைஅனுப் பாலை[1]
திராந்தமுன் மூன்றுமுட்டிச் சீராய்ப் - பிராந்தி
வருகடுகு ரோகணியும்[2] வன்குடிநீர் கொள்ளில்
இரவில் வருஞ்சுரம்போம் இற்று. 264

சேரும் சரக்குகள் : கிரந்திதகரம், சுக்கு, வேலம்பட்டை, சீந்தில் இலை, அனுப்பாலைவேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி, கடுகரோகணி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : இராச்சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 264. 1 வேல்சந்தி கீள்நல் மனுப்பாலை
2 ரோகணிதன்

தோட சுரக்கியாழம் - 2

சுக்குக் கூழ்பாலை[1] சொல்சீதா செங்கழுநீர்
மிக்கசிறு தும்மட்டி வேர்மிளகு - தக்க[2]

பெருமுட்டி மனுப்பாலை முதிர்குடிநீர் தன்னில்
வருதோடசுரம் போமே துலைந்து. 265

சேரும் சரக்குகள் : சுக்கு, கூழ்பாலை, சீதாசெங்கழுநீர்,
சிறுதும்மட்டிவேர், மிளகு, பேராமுட்டி,
அனுப்பாலை, - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : இராச்சுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 265. 1 குடசப்பாலை
2 தக்கபெருமுட்டி மனுப்பாலை முதிர் குடிநீர்
தன்னிரவில் தொட்ட சுரம் போக்குந் துலைந்து

சர்வசுரக்கியாழம் - 1

மூன்றுமுட்டி ரோகிணியும் மோதும் திரிபலைசுக்
கான்றகூத் தன்குதம்பை காணிரண்டு - மேன்ற
உறுதிமுத்தம் பாற்சொற்றி ஒண்குடி நீர்[1] குடிக்க
சருவவெப்பும் போமே சலித்து.[2] 266

சேரும் சரக்குகள் : சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி,
கடுகுரோகணி, கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய், கூத்தன்குதம்பை, முத்தக்காசு,
பாற்சொற்றி, - சம அளவு
செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி குடிநீர்
செய்துகொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சர்வசுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 266. 1 ஒன்றகுடிநீர்
2 தரித்து, தணிந்து

சர்வ சுரக்கியாழம் - 2

செவியம் கொடிவேலி சீந்தில் நிலவேம்பு
குவியம் கிராந்திவேர்க் கொம்பு - புவியில்
உகமுக்கா வேளை யருங்குடிநீர் வைக்கில்[1]
சகலவெப்பும் போமே சலித்து. 267

சேரும் சரக்குகள் : செவ்வியம், கொடிவேலி, சீந்தில், நிலவேம்பு,
கிரந்திதகரம், சுக்கு, முட்காய்வேளை, - சம அளவு

செய்முறை : இச்சரக்குகளை முறைப்படிக் குடிநீர்செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வசுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 267. 1 வேகவைத்தே அருந்த, வேளை கணிக் குடிநீர் வைக்கில்

2 சடைந்து.

சர்வசுரக்கியாழம் - 3

பேர்முட்டி சீந்திகண்டம் பேசுங்கூத் தன்குதம்பை
வேர்நில வேம்பு வெப்பீர்க்கு - மாறவே
வெந்தகுடி நீரருந்தில்[1] வேதனையே செய்கின்ற
எந்தவெப்பும் போமே இசைந்து. 268

சேரும் சரக்குகள் : பேராமுட்டி, சீந்தில், கண்டங்கத்தரி, கூத்தன்குதம்பை, நிலவேம்பு, வேப்பீர்க்கு, - சம அளவு

செய்முறை : இச்சரக்குகளை முறைப்படி குடிநீரிட்டுக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வசுரம்

பாட வேறுபாடு : 268. 1 நீர் குடிக்க

சர்வசுரக்கியாழம் - 4

சீந்திசங்கம் வேர்சுக்கு சீரா மணக்கம்வேர்
ஏந்துகின்ற பற்படகம் ஏர்முத்தம் - காந்துகின்ற
பொல்லாக் கொடிவேலி போந்தகுடி நீர்குடிக்க
எல்லாச் சுரங்களும்போம் எண். 269

சேரும் சரக்குகள் : சீந்தில், சங்கம்வேர், சுக்கு, ஆமணக்குவேர், பற்பாடகம், கொடிவேலி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வசுரம்

சர்வசுரக்கியாழம் - 5

கொன்றைப் பழத்துவித்துக் கொத்தமல்லிப் பேய்ப்புடோல்
நன்றுசிறு காஞ்சொறி நன்முத்தம் - ஒன்றுசுக்கு
துப்பா தொடையீர்க்குச் சொல்குடிநீர் வைத்தருந்த
வெப்பெல்லாம் ஓடும்[1] விரைந்து. 270

சேரும் சரக்குகள் : கொன்றைப்பழவிதை, கொத்துமல்லி, பேய்ப்புடல், சிறுகாஞ்சொறி, முத்தக்காசு, சுக்கு, ஆடாதொடை ஈர்க்கு, - சம அளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி குடி நீரிட்டு அருந்த வேண்டும்.

தீரும் நோய் : சர்வசுரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : போமே ஒட்டும்

சந்திக சன்னிக்கியாழம்

சிறுகாஞ் சொறிநொச்சி சேருமிரி வன்னி
பொறுபா திரிபேய்ப் புடோலும் - நறுஞ்சுக்கு
வெந்தேறு கோதம் விரும்பியுண வேவருத்தும்[1]
சந்திக சன்னிகெடும் தான். 271

சேரும் சரக்குகள் : சிறுகாஞ்சொறி, நொச்சி, உமரி, வன்னி, பாதிரி, பேய்ப்புடல், சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிச் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சந்திகசன்னி

பாட வேறுபாடு :
பாடல் எண் : 271. 1. வருந்தும்

அந்தக சன்னிக்கியாழம்

வாழ்திப் பிலிமூலம் வன்னெருஞ்சி வேர்செவியம்
காழ்ச்சித் திரமூலம் கைப்புடோல் - சூழ்கடுகு
வந்த திரிகடுகு வைத்தகுடி நீரருந்த
அந்தகமாம் சன்னிகெடும் ஆங்கு. 272

சேரும் சரக்குகள் : திப்பிலிமூலம், நெருஞ்சில்வேர், செவ்வியம், சித்திரமூலம், பேய்ப்புடல், கடுகு, மிளகு, சுக்கு, திப்பிலி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அந்தகசன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 272. 1 கைப்புலுஞ்
2 நீர்குடிக்க

உருத்தாக சன்னிக்கியாழம்

வெண்சங்கம் வேர்கொடிய வேலி கருஞ்சங்கு
பண்ணுமரிகற்பம் பற்படகம்[1] - நண்ணு
குறகொங்குத் தோல்சுக்குக் கொள்குடிநீர் கொண்டால்
உருத்தாக சன்னிகெடும் ஓர்ந்து. **273**

சேரும் சரக்குகள் : வெண்சங்குவேர், கொடிவேலி, கருஞ்சங்கு, உமரி, பற்பாடகம், கோங்குப்பட்டை, சுக்கு, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : உருத்தாக சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 273. 1 கற்பாட்சிபற்படவம், தீப்படலம்
2 ஆங்கு, ஏந்து

சித்தவிப்ரம சன்னிக்கியாழம்

மையாறு முள்ளி மருகா நொச்சியிலை
மெய்யாந் திரிகடுகும் வெள்ளுள்ளி - கொய்யவே
துன்னுந் திரிபாலைநீர் தூசித்த விப்பிரம
சன்னியை யோட்டிவிடும் சார்ந்து. **27**

சேரும் சரக்குகள் : முள்ளிப்பழவிதை, நொச்சி இலை, சுக்கு, மிளகு, திப்பிலி, பூண்டு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், - சம அளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : சித்தவிப்ரமசன்னி

சீதாங்க சன்னிக்கியாழம்

பற்படகம் பேய்ப்புடோல் பாரங்கி பன்னுமரி
திப்பிலிமூ லம்செவியஞ் சேர்வன்னி - ஒப்பாம்[1]
திரிகடுகோ டேகுடிநீர்[2] சேரச்சீ தாங்க
முரியசன்னி போமே முரிந்து.[3] 275

சேரும் சரக்குகள் : பற்பாடகம், பேய்ப்புடல், பரங்கிசக்கை, குமரி, திப்பிலிமூலம், செவ்வியம், கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, - சம அளவு

செய்முறை : சரக்குகளை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : சீதாங்கசன்னி.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 275. 1 ஒப்பார்
2 டேகும்நீர்
3 உடைந்து

தாந்திரிக சன்னிக்கியாழம்

நற்கருவே லந்ததோல்[1] ஓர்தேவ தூப[2]
முறுக்குபஞ்ச கோலமுமரி - சிறக்கவே
மன்னுகுடி நீரதனில் ஒட்டரைத்தூள் மாடயெடை[3]
தன்னிலிடத் தாந்திரிகம் போம். 276

சேரும் சரக்குகள் : கருவேலம்பட்டை, குங்கிலியம், சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலிமூலம், திப்பிலி, உமரி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொண்டு அதில் ஒட்டடைத்தூள் ஊளுந்தளவு போட்டு அருந்தவும்.

தீரும் நோய் : தாந்திரிக சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 276. 1 ஓர்குரு வெரிந்த தோல்
2 உரக்குரு வேரின் தோலும் மோர்தேவ தாரம்
3 மாடையெடை

கண்டகுப்ச சன்னிக்கியாழம்

பாதிரிவேர் வில்வவேர் பற்படகம் பேய்ப்புடோல்
சோதிப் பெருங்குமிழ்வேர் சுக்குகண்டம்[1] - வேதனையை
விண்டசெவி யங்குடிநீர் விள்ளவே சன்னிஎன்னும்
கண்டகுப்சம் போமே கரைந்து. 277

சேரும் சரக்குகள் : பாதிரிவேர், வில்வவேர், பற்பாடகம், பேய்புடல், பெருங்குமிழ்வேர், சுக்கு, கண்டங்கத்திரி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்

தீரும் நோய் : கண்டகுப்ச சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 277. 1 கோதிலா கண்டங் குமிழ்சுக்கு

கர்ன்னிக சன்னிக்கியாழம்

அள்ளு கணமூலம் அல்லெருக்கம்[1] வேர்கண்டம்
தெள்ளும் அனுப்பாலை திரிகடுகு - விள்ளும்
திறமுடைய மூன்றுமுட்டி சீர்குடிநீர் காய்க்க[2]
கர்ன்னிகமாம் சன்னிகெடும் காண். 278

சேரும் சரக்குகள் : திப்பிலிமூலம், எருக்கம்வேர், கண்டங்கத்திரி, அனுப்பாலை, சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : கர்ன்னிக சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 278. 1 மலரெருக்கம்
2 வர்க்கமர் மூன்றுமுட்டி வார்குடிநீர் காய்ச்சியக்கால்.

புக்னநேத்திர சன்னிக்கியாழம்

நொச்சியிலை முத்தம் நுவலெருக்கம் வேர்சுக்கு
பச்சை நெருஞ்சிவேர் பற்படகம் - இச்சையாய்[1]
தொக்க[2] கணமூலம் சொல்குடிநீர் சத்தருந்த
புக்னநேத் திரம்போம் புகல். 279

சேரும் சரக்குகள் : நொச்சி இலை, முத்தக்காசு, எருக்கம்வேர்,
சுக்கு, நெருஞ்சிவேர், பற்பாடகம்,
திப்பிலிமூலம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : புக்னநேத்திர சன்னி.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 279. 1 மிச்சையாய்
2 தொக்கு
3 புக்னநேத்திரமும் போமே

இரத்திட்டிவி சன்னிக்கியாழம்

வல்லெருக்கம் வேர்சுக்கு வன்பா திரியின்வேர்
புல்லுத் திரிபலைகள் போந்தகைப்பே[1] - சொல்லு புடோல்
வைத்தோட்டில் நீர்விடுத்து வன்குடிநீர் தானருந்த[2]
இரத்திட்டவி சன்னிபோம்[3] அன்று.[4] 280

சேரும் சரக்குகள் : எருக்கம்வேர், சுக்கு, பாதிரிவேர், கடுக்காய்,
நெல்லிக்காய், தான்றிக்காய்,
பேய்ப்புடல், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : இரத்திட்டிவி சன்னி

பாடவேறுபாடு :

பாடல் எண் : 280. 1 போர்ந்தகைப்பே
2 வன்கோதம் மாந்த
3 எத்தறத் தோட சன்னிபோம்
4 பிரண்டு

பிரலாப சன்னிக்கியாழம்

கணமூலஞ் சீந்திசுக்குக் கைப்புடோல் வன்னி
குணமுமரி வேரழிஞ்சில்[1] கூறவே[2] - மணமார்நீர்[3]
நிரமாமரமஞ்சள் நேர்குடி நீர்போடப்
பிரலாப சன்னிகெடும் பேசு. 281

சேரும் சரக்குகள் : திப்பிலிமூலம், சீந்தில், சுக்கு, பேய்ப்புடல், கொடிவேலி, உமரி, அழிஞ்சில்வேர், மரமஞ்சள், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பிரலாப சன்னி.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 281. 1 விலாமிச்சு
2 கூர்வேர்
3 மணமாரதி நீர், மணமார்

சிம்மக சன்னிக்கியாழம்

சங்கிரண்டு மூன்றுமுட்டிச் சார்செவி யம்சுக்கு[1]
மங்குகணமூ லம்வளர்ந்த வன்னி - தங்காரைக்
கோங்குத்தோல் கோதத்தில் கூர்கணத்தூள் தூவியிட[2]
தீங்குசிம்மக சன்னி தீரும்.[3] 282

சேரும் சரக்குகள் : வெண்சங்கன்வேர், கருஞ்சங்கன்வேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி, செவ்வியம், சுக்கு , திப்பிலிமூலம், கொடிவேலி, காரை, கோங்குப்பட்டை, - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து திப்பிலித் தூள் தூவி அருந்த வேண்டும்.

தீரும் நோய் : சிம்மக சன்னி.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 282. 1 சுக்குகண
2 கூட்டியுடன்
3 தீங்குசிங்குவாத சன்னி தீர்

அபினியாச சன்னிக்கியாழம்

மூன்றுமுட்டி சங்கிரண்டு முள்ளிரண்டு வன்னிகணம்
தின்றுகண் மூலம் திரிபலைகள் - ஊன்றுசுக்கு[1]
நேசவசம் பேசெவியம் நேர்குடிநீ ராம் அபிநி
யாசசன்னி யேயோட்டும் ஆய்ந்து.[2] 283

சேரும் சரக்குகள் : சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி,
வெண்சங்கன்வேர், கருஞ்சங்கன்வேர்,
முள்ளி, நீர்முள்ளி, கொடிவேலி, திப்பிலி,
திப்பிலிமூலம், கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய், சுக்கு, வசம்பு,
செவ்வியம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அபினியாச சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 283. 1 உண்டுசுக்கு
2 யாச சன்னியாளி யறி

சர்வ சன்னிக்கியாழம்

ஓமம் நிலவேம்பு ஓராம்பேய்ப்பு டோல்கணம்[1]
ஏம தழுதாழை யின்வேர்கள் - தூமநிறப்
பற்படகம் தோதம் பருகச் சருவசன்னி
அப்பொழுதே போகும்[2] அதிர்ந்து[3] 284

சேரும் சரக்குகள் : ஓமம், நிலவேம்பு, பேய்ப்புடல், திப்பிலி,
தழுதாழைவேர், பற்பாடகம், - சம அளவு

செய்முறை : மேற்சொன்ன சரக்குகளை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வசன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 284. 1 பேய்ப்புடல் கணமும்
2 ஏகும்
3 தீர்ந்து

சர்வசன்னி தசமூலக்கியாழம்

முட்டி தழுதாழை முள்ளிகண்டம் பாதிரிவேர்
வெட்டுங்காட் டாமணக்கு வேர்வில்வம் - மட்டிடும்[1]
கூத்தன் குதம்பை இரண்டு குமிழ்தான்[2] தீச்மூலம்
பார்த்தருந்த[3] சன்னியறும் பாஙகு. 285

சேரும் சரக்குகள் : சிற்றாமுட்டி, தழுதாழை, நீர்முள்ளி, கண்டங்கத்திரி, பாதிரிவேர், காட்டாமணக்குவேர், வில்வவேர், கூத்தன்குதம்பை, சிறுகுமிழ், பெரும்குமிழ், - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வ சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 285. 1 மட்டிவேர், மட்டிடுதன்
2 தானாம்
3 பண்குடிநீர்

சர்வசன்னி பஞ்சமூலக்கியாழம்

வில்வம் தழதாழை வேர்பாதி ரிகுமிழ்வேர்
ஒல்லுகாட் டாமணக்காம்[1] ஓரைந்தும் - சொல்லுபஞ்ச
மூலமென் பார்கூட மூரிசுக்கும்[2] கோதமிடச்
சாலவே ஏகியிடும் சன்னி. 286

சேரும் சரக்குகள் : வில்வவேர், தழுதாழைவேர், பாதிரிவேர், குமிழ்வேர், காட்டாமணக்குவேர், சுக்கு - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வ சன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 286. 1 காட்டாமணக்கு
2 முசிறிசுக்கும்

சர்வசன்னி அட்டமூலக்கியாழம்

முள்ளிகண்டாய் கத்திரிவேர் மூன்றுமுட்டிவில்வவேர்
தள்ளுகூத் தன்குதம்பை தாளிரண்டு[1] - உள்ளவெட்டு
அட்டமூலம் என்பர் குடிநீரில் சுக்கு
மிட்டவுடன் சன்னியறும் மெலிந்து.[2] 287

சேரும் சரக்குகள் : நீர்முள்ளி, கண்டங்கத்திரிவேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி, வில்வவேர், கூத்தன்குதம்பை, தாளிவேர், - சம அளவு
செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சர்வசன்னி
பாட வேறுபாடு :
பாடல் எண் : 287. 1 தாளிரண்டு
2 ஏந்து, மேய்ந்து

சர்வசன்னி அட்டா தசமூலக்கியாழம்

சங்கிரண்டு வேலித்[1] தழுதாழை மூன்றுமுட்டி
தங்குகண்ட முள்ளிநொச்சித் தான்முருங்கை - பைங்குமிழ்வேர்[2]
தன்குதம்பை இண்டுவில்வம்[3] தாங்கு மனுபாலை
பன்னுமரி பாதிரியாம் பண்பு. 288

பண்பாம் உரைக்கும்[1] பதினெட்டு மூலிகையும்
நண்பாய் வடமொழியில் நாட்டும்பேர் - ஒண்பாவாய்
அட்டா தசமூலம் அக்குடிநீர் சன்னியதைக்
கிட்டாமல் ஓட்டும்[2] கிளர்ந்து. 289

சேரும் சரக்குகள் : வெண்சங்கு, கருஞ்சங்கு, கொடிவேலி, தழுதாழை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விடமுட்டி, கண்டங்கத்திரி, முள்ளி, நொச்சி, முருங்கை, குமிழ், கூத்தன்குதம்பை, வில்வம், அனுப்பாலை, உமரி, பாதிரி, இண்டு, - சம அளவு
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும்நோய் : சர்வசன்னி
பாட வேறுபாடு :
பாடல் எண் : 288. 1 சங்கிரண்டமரகதத்
2 பைங்குமிழ்கூத்
3 பாண்டுவில்வம்
289. 1 உதிர்க்கும்
2 ஓடும்

சர்வசன்னி பஞ்சகோலக்கியாழம்

திப்பிலிமூ லம்செவியம் சித்திரமூ லம்கணமோடு
ஒப்பரிய சுக்கோடு உயர்ச்சியாய்ச்[1] - செப்புபஞ்ச
கோலக் கிசாய்[2] மெனக் கூறுவார் சன்னிசுரம்
சாலவே ஏகிவிடும்[3] தான் 290

சேரும் சரக்குகள் : திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், திப்பிலி, சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சர்வசன்னி

பாட வேறுபாடு :

பாடல் எண் : 290. 1 ஊர்ச்சிதமாய்
2 சொல்க்கிஷாயம்
3 ஏகியிடும்

வாந்தி விக்கல் கியாழம் - 1

அதிமதுரம் கொத்தமல்லி யானவில்வம் ஏலம்
மதியும் விலாமிச்ச மனுப்பாலை[1] - பதிவடகில்[2]
என்குல[3] வாமேழும் இசைந்தகுடி நீர்குடிக்க
அன்றுவிக்கல் வாந்தியும்போம் ஆம்[4] 291

சேரும் சரக்குகள் : அதிமதுரம், கொத்தமல்லி, வில்வம், ஏலம், விலாமிச்சம், அகில், அனுப்பாலை,

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : வாந்தி, விக்கல்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 291. 1 மதியும் விலாமிச்சம் மனுபாலை
2 பதிவமகில்
3 என்றாறு
4 வாந்தியும் போம் அகன்று

வாந்தி விக்கல் கியாழம் - 2

இலவங்கத் தோலரத்தை ஏலம்[1] அனுப்பாலை
குலவு விலாமிச்சம் கூர்மதுர[2] - முலவுவில்வ

மிக்க சமன்குடிநீர் மெய்ப்பாகம்[3] தானருந்தில்
விக்கலுடன் வாந்தியும்போம் விண்டு. 292

சேரும் சரக்குகள் : இலவங்கப்பட்டை, அரத்தை, ஏலம், அனுப்பாலை, இலவு, விலாமிச்சம், அதிமதுரம், வில்வம், - சம அளவ

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : வாந்தி, விக்கல்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 292. 1 இயலும்
2 மலிவிலாமிச்சம் மதுரம்
3 மெய்யாகத்

வாந்தி விக்கல் கியாழம் - 3

திமிரு[1] மருக்கொழுந்து சீரகமும் கோட்டம்
நிமிருமனுப் பாலைவேர் நேர்மதுரம் - அமருவெட்டி
கொத்தமல்லி கோதம் குடிக்கஅந்திரத்[2] தாகமுடன்
சத்திவிக்கல் தானும்போம் தாழ்ந்து. 293

சேரும் சரக்குகள் : மருக்கொழுந்து, சீரகம், கோட்டம், அனுப்பாலைவேர், அதிமதுரம், வெட்டிவேர், கொத்துமல்லி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : வாந்தி, விக்கல்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 293. 1 சிமிசு, உவந்த
2 வந்த

அந்தரதாகக் கியாழம் - 1

கோட்டம் அதிமதுரம் கூர்விலா மிச்சுவெட்டி
தோட்டமுள்ள கொத்தமல்லி சீரகங்கள் - நாட்டதனில்
வந்தசத குப்பைவிரை[1] வன்குடிநீர் வைத்தருந்த
அந்தர தாகம்போம் அழிந்து[2] 294

சேரும் சரக்குகள் : கோட்டம், அதிமதுரம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், கொத்தமல்லி, சீரகம், சதகுப்பை, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அந்தரதாகம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : *294.* 1 வந்த சதாபிவிதை
2 உத்துமந்தரதாகம் போம்

அந்தரதாகக் கியாழம் - 2

பாதிரியின் பூமதுரம் பார்த்தாம ரைவளையம்
சீதநெல்லி யின்பருப்பு சீர்கோட்டம் - ஓதுவிலா
மிச்சங் குடிநீர்க்கு மேலந்தர தாகம்போம்[1]
உச்சிதமாய்ச் சொன்னார் உகந்து.[2] *295*

சேரும் சரக்குகள் : பாதிரிப்பூ, அதிமதுரம், தாமரைவளையம் நெல்லிப்பருப்பு, கோட்டம், விலாமிச்சவேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அந்தரதாகம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : *295.* 1 பேசும் அந்தரதாகம்
2 தட்சணமே போகுந் தளர்ந்து

அந்தரதாகக் கியாழம் - 2

ஆலீச்சு நாவ லரசுமா மரம்ஐந்தின்[1]
தோலதுநீர்[2] சீரகமும் சொல்மதுரம் - மேலாய்ப்
பொருந்துகுடி நீர்குடிக்கப் போகாமல் நின்று
வருத்தும்அந்தர தாகம்போம் வாய்ப்பு. *296*

சேரும் சரக்குகள் : ஆல், ஈச்சு, நாவல், அரசு, மா, ஆகியவற்றின் பட்டை, சீரகம், அதிமதுரம், சமூலம், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

திரும் நோய் : அந்தர தாகம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 296. 1 மாவைந்தின்

2 தோல்துளிரும்

சூலைக் கியாழம் - 1

வெண்சங் கிலைமிளகு வீழும் கலங்கொம்பு[1]
பண்காயம் வெள்ளுள்ளி பார்சுக்கு - வண்மையுடன்
நேர்சம னாம்குடிநீர் நேர்ந்திட்டவே தான்குடிக்கப்[2]
போர்சூலை போகியிடும் பொற்பு. 297

சேரும் சரக்குகள் : வெண்சங்கிலை, மிளகு, மான்கொம்பு, பெருங்காயம், வெள்ளுள்ளி, சுக்கு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

திரும் நோய் : சூலை

பாடவேறுபாடு :

பாடல் எண் : 297. 1 வீறாங் கலைக்கொம்பு

2 தானணுகும்

சூலைக் கியாழம் - 2

வன்கருணை கந்தம் வசம்புசுக்கு வெள்ளுள்ளி
பின்முருங்கைத் தோல்திப் பிலிமூலம் - பன்னுவன்னி
வட்டத் திருப்பியெட்டும் வைத்த குடிநீர்கரத்தில்[1]
தொட்டவுடன் சூலைகள்போம் தோற்று. 298

சேரும் சரக்குகள்: கருணைக்கிழங்கு, வசம்பு, சுக்கு, வெள்ளுள்ளி, முருங்கைப் பட்டை, திப்பிலிமூலம், கொடிவேலி, வட்டத்திருப்பி, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

திரும் நோய் : சூலை.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 298. 1 குடிநீர் காரத்தில், கோதத்தில்

சூலைக்கியாழம் - 3

முட்டிரெண்டு[1] நன்னாரி மாகாளி வராகி
அட்டிமது ரஞ்சுக்கு அமுதாரம் - வெட்டிவேர்
கோலிமுத்தம் செம்புளிச்சை கொள்தேன் விலாமிச்சை
சூலிவெப்புக் கோதமெனச் சொல். 299

சேரும் சரக்குகள் : சிற்றாமுட்டி, பேராமுட்டி, நன்னாரி, மாகாளி, நிலப்பனங்கிழங்கு, அதிமதுரம், சுக்கு, பூனைக்காலிவேர், வெட்டிவேர், முத்தக்காசு, செம்புளிச்சை, விலாமிச்சம்வேர், - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சூலை சுரம்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 299. 1 மட்டிரண்டு

பிரசவித்தபெண் சுரக்கியாழம்

சிற்றாமுட்டி பேராமுட்டி சீந்திசுக்கு திப்பிலியும்
பற்ற நிலவேம்பு வைத்தநீர் - பெற்றங்கார்[1]
பத்தறையில் வந்தசுரம் பாவை[2] பருகிடவே
சுத்தமுற விட்டோடும் சொல். 300

சேரும் சரக்குகள் : சிற்றாமுட்டி, பேராமுட்டி, சீந்தில், சுக்கு, திப்பிலி, நிலவேம்பு, - சம அளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பிரசவித்தபின் அறையில் ஏற்படும் சுரம்

பாடவேறுபாடு:

பாடல் எண் : 300. 1 பொற்றங்கார்
2 பார்வை

மூர்ச்சைக்கியாழம்

நெருஞ்சில் அசுவகெந்தி நேர்மற் கடிதன்[1]
நரிப்பயத்தம் வேர்சுக்கு நல்ல - தொருசதா
வேரிகந்தம் சீரகமும் வெந்தகிசா யம் குடிக்கச்
சேருகின்ற மூர்ச்சைகள்போம் தேர்ந்து.[2] 301

சேரும் சரக்குகள் : நெருஞ்சில், அமுக்ரா, பூனைக்காலி வேர்,
நரிபயற்றின் வேர், சுக்கு,
தண்ணீர் விட்டான் கிழங்கு,
சீரகம், - சம அளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : மூர்ச்சை

பாட வேறுபாடு :
பாடல் எண் : 301. 1 நேராகும் முத்தம்
2 சென்று

கிராணிக்கியாழம் - 1

சுக்குமுத் தக்காசு தூய அதிவிடையம்
தக்க அமுதவல்லித் தான்கூட்டி[1] - மிக்குடிநீர்
மந்தவலி ஆமவலி மாறாக் கிராணிகுதம்
இந்தவகை போமென்று இசை. **302**

சேரும் சரக்குகள் : சுக்கு, முத்தக்காசு, அதிவிடையம்,
சிந்தில், - சம அளவு
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய்கள் : மாந்தவகை, வயிற்றுவலி, கிராணி.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 302. 1 தான்கூட்டு

கிராணிக்கியாழம் - 2

சீந்தில் அதிவிடையம் சேர்முத்தம் வேர்க்கொம்பு
காய்ந்த குடிநீர் கலந்தூக்கி[1] - ஏந்திரவாய்
வைக்க அருசிமுதல் மந்தம் கிராணிஇவை
மிக்க[2] ஐந்து நாளில் விடும். **303**

சேரும் சரக்குகள் : சீந்தில், அதிவிடையம் , முத்தக்காசு,
சுக்கு, - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சுவையின்மை, மந்தம், கிராணி 5 நாட்களில் தீரும்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 303. 1 கலந்தூற்றியே
2 மெய்க்க.

அசீரணசுரக்கியாழம்

கண்டங் கனஞ்சீந்தி[1] காய்ச்சுக்கு காய்ச்சியதில்
உண்டுங்[2] கணத்தை அரத்தைதனை - உண்டவுடன்
வெப்பில் அசீரணமும் மேன்சுவா சங்காசம்
தப்பிலங்கி மந்தமும்போம் தான். 304

சேரும் சரக்குகள் : கண்டத் திப்பிலி, சீந்தில், சுக்கு, - சம அளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து திப்பிலி அரத்தையை பொடி செய்து தூவ வேண்டும்.
தீரும் நோய்கள் : சுரத்தில் உண்டாகும் அசீரணம், மேல் சுவாசம், காசம், மந்தம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 304. 1 கணைசீந்தி
2 வண்டு

அசீரண வாயுக்கியாழம்

வறுத்த கழல்பருப்பு மாமிங்கு[1] முள்ளி
தெரித்தசுக்கு வென்னீரில் சேரப்[2] - பொருத்தரைத்து
ஆதரவாய்க் கொள்ள அசீரணத்தோடு ஆமவலி
வாதவலி போமே மருண்டு. 305

சேரும் சரக்குகள் : வறுத்த கழற்சிப்பருப்பு, ஈண்டு, முள்ளி, சுக்கு, - சம அளவு
செய்முறை : இவற்றை வெந்நீரில் அரைத்து குடிக்க வேண்டும்.
தீரும் நோய்கள் : அசீரணம், வயிற்றுவலி, வாதவலி
பாட வேறுபாடு :
பாடல் எண் : 305. 1 மாமிங்கி
2 சேர்

தீபனக்கியாழம்

ஓமம் கொடிவேலி ஒண்சுக்கோ டுஇந்துப்பு
தாமம் கிளர்நொச்சி தன்கொழுந்து - நாமரைத்து
மோர்கரைத்துக் காய்ச்சி முகந்திட்டால் தீபனமாம்
மாறமந்த மோடு மலைந்து[1] 306

சேரும் சரக்குகள் : ஓமம், கொடிவேலி, சுக்கு, இந்துப்பு, நொச்சிக்கொழுந்து, - சம அளவு

செய்முறை : இவ்ற்றை அரைத்து மோரில் கரைத்துக் காய்ச்சிக் குடிக்கவேண்டும்.
திரும் நோய் : மந்தம் திரும், பசி உண்டாகும்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 306. 1 அகன்று

பூச்சிக்கியாழம்

முத்தம் எலிச்செவியும் முள்முருங்கை நல்வேரும்
அந்தம் திரிபலையோ டாங்குடிநீர் - ஒத்தகணம்
வாய்விளங்கம் மேற்தூவி மாந்தம் வயிற்றினுள்ளே[1]
தாய்விளங்கும் பூச்சிவிழும் தான்[2] 307

சேரும் சரக்குகள் : முத்தக்காசு, எலிச்செவிவேர், முள்முருங்கைவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், - சம அளவு
செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்து திப்பிலி, வாய்விளங் கத்தூள் சேர்த்து அருந்த வேண்டும்.
தீரும் நோய் : வயிற்றில் உள்ள பூச்சி
பாடவேறுபாடு :
பாடல் எண் : 307. 1 வயிற்றிலுள்ள
2 சாம்

வாதக்கியாழம்

அங்கமெங்கும் வாதம் அழிக்குதென்று மானிடர்கள்[1]
பொங்கிக் கிடந்து புலம்பாதே - சங்கையின்றி
வாசைவேர்[2] சீந்திவேர் வைத்தகுடி நீரோடு
ஆசைவிளக் கெண்ணெய் அருந்து. 308

சேரும் சரக்குகள் : ஆடாதொடைவேர், சீந்தில் - சமஅளவு
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து விளக்கெண்ணெய் கலந்து அருந்த வேண்டும்.
தீரும் நோய் : உடலைப் பற்றிய வாதம்
பாடவேறுபாடு :
பாடல் எண் : 308. 1 மானிடர்காள்
2 வாசைவளர்

சர்வாங்க வாதக்கியாழம்

கொள்ளிமுள்ளி கண்டம்கொம் மட்டிமா தளைவில்வம்
தெள்சிறிய ஆமணக்கும் சிறு பூளை - உள்வேர்கள்
ஈங்கு திரிகடுகோடு[1] எவட்சரம் இந்துப்பு
தாங்கியநீர் மேல்[2] பொடியாம் தான்.[3] 309

தானாமுன் வேராறும் தளராத திரிகடுகு
மானே குடிநீராய் வைத்ததன்மேல் - ஊனமில்லா
மும்மருந்து மேற்றாவி முகவேழு[1] நாள்வாதம்
பம்முசர் வாங்கமும்போம் பார். 310

சேரும் சரக்குகள் : முள்ளி, கண்டங்கத்தரி, கொம்மட்டி
மாதுளை, வில்வம், சிற்றாமணக்கு,
சிறுபூளை, ஆகியவற்றின் வேர்கள்; சுக்கு,
மிளகு, திப்பிலி, நவச்சாரம், இந்துப்பு, - சம அளவு

செய்முறை : முதலில் உள்ள ஆறுவேர்களை முறைப் படியும், திரிகடுகையும் குடிநீரிட்டுக் கொண்டு, பின் உள்ள நவச்சாரம், இந்துப்பைப் பொடி செய்து தூவி அருந்த வேண்டும். ஏழு நாட்கள் அருந்தவேண்டும்

தீரும் நோய்கள் : வாதம், சர்வாங்க வாதம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 309. 1 திப்பிலி கடுகோடு
2 நிறமேல்
3 மேல்பொடியும் தான்

310. 1 முக்க

வீக்கக்கியாழம் - 1

கடுஞ்சீந்தில் சாரணைவேர் கான்ற[1] மரமஞ்சள்
பொடியாகக் குங்கிலியம் போட்ட - குடிநீர்[2] கொள்
தூண்டு முதற்நோய் தோல்தோடமெய் வீக்கம்[3]
பாண்டுமுதல் ஓடும்பறந்து. 311

சேரும் சரக்குகள் : சீந்தில், சாரணைவேர், மரமஞ்சள், குங்கிலியப் பொடி - சமஅளவு

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : தோல்நோய், உடல் வீக்கம், பாண்டு,

பாட வேறுபாடு :
பாட்ல் எண் : 311. 1 கானற்
2 அருநீர்
3 தூண்டு முதார்வத்தம் தோல் தொடவே வீக்க

வீக்கக்கியாழம் - 2

சாரணைவேர் வெள்ளறுகுதாள்கொன்றை வேர்சுக்கு
பாரணையும் கையான்[1] பண்பிரமி - வேர்வன்னி[2]
ஆகவே ஏழும் தன்குடிநீர்[3] வைத்தருந்த
வேகமுடன் வீக்கம்போம் விட்டு. 312

சேரும் சரக்குகள் : சாரணைவேர் வெள்ளறுகு கொன்றைவேர் கையாந்தகரை பிரமி கொடிவேலி (சம அளவு)
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : வீக்கம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 312. 1 கையின்றி
2 யேர்வன்னி
3 யேழுமதன் குடிநீர்

பாண்டுசோபைக் கியாழம் - 1

வெண்சார ணை[1] சுக்கு வீழ்ச துரக் கள்ளியின்வேர்
பண்காவெண் சங்கியிலை பார்கடுக்காய் - நண்பு வன்னி[2]
வார்கோதம் கோசலத்தில் வைத்திடவே வாதிக்கும்
சேர்பாண்டு சோகையும்போம் சேர்ந்து. 313

சேரும் சரக்குகள் : வெண்சாரணைவேர் சுக்கு சதுரக்கள்ளி வேர் வெண் சங்கிலை கடுக்காய் கொடி வேலி (சமஅளவு)
செய்முறை : இவற்றைக் குடிநீரிட்டு பசுநீருடன் அருந்த வேண்டும்.
தீரும் நோய்கள் : பாண்டு, சோபை
பாட வேறுபாடு :
பாடல் எண் : 313. 1 வெண்சாரட்டை
2 நம்புவன்னி, நண்டுவன்னி

பாண்டுசோபைக் கியாழம் - 2

பிரமி திரிபலைகள் போந்த[1] கிட்டம் வன்னி
பரவுசுக்குச் சாரணைவேர் பாங்காய் - நிரவுசமன்

தான்மருந்து கோசலத்தில் தப்பாமல் கோதமிட
மேன்பாண்டு சோபையும் போம் விண்டு.[2] 314

சேரும் சரக்குகள் : பிரமிஇலை கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கிட்டம் கொடிவேலி சுக்கு சாரணைவேர் (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி பசுநீரில் குடிநீரிட்டுக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : பாண்டு, சோபை

பாடவேறுபாடு :

பாடல் எண் : 314. 1 பேர்ந்த
2 வெருண்டு, வீழ்ந்து, வேறு

பாண்டு சோபைக்கியாழம் - 3

இரண்டுமுள் ளிச் சாரணைவேர் ஏர்பிரமி சுக்குப்
பரந்தகடுக் காய்அரசம் பட்டை - மருந்தெல்லாம்
வெள்ளாட்டு மூத்திரத்தில் வெந்தகுடி நீரருந்த
உள்பாண்டுச் சோகையும்போம் உன்.[1] 315

சேரும் சரக்குகள் : கறிமுள்ளி நீர்முள்ளி சாரணைவேர் பிரமி சுக்கு கடுக்காய் அரசம்பட்டை (சமஅளவு)

செய்முறை : இவற்றை வெள்ளாட்டு நீரில் குடிநீரிட்டு கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : பாண்டு, சோபை

பாடவேறுபாடு :

பாடல் எண் : 315. 1 சோபை போமுண்ணு

பாண்டுசோபைக் கியாழம் - 4

பாரரசம் பட்டை பழங்கிட்டம் மாச்சுக்கு
சாரணையா மோதாய்ச் சமூல[1] - மேற்குடிநீர்
ஏற்றிடும்வெள் ளாட்டின்நேர் மூத்திரத் தில்வைக்க[2]
பாரியிடும் சோபைசுரம் பாண்டு. 316

சேரும் சரக்குகள் : அரசம்பட்டை பழைய கிட்டம் சுக்கு சாரணைச் சமூலம் (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி வெள்ளாட்டு நீரில் குடி நீரிட்டுக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : சோபை, சுரம், பாண்டு

பாடவேறுபாடு :
பாடல் எண் : 316. 1 சமூலமாம்
2 எண்மூத்திரத்தில் வைக்கப்

அதிசாரக்கியாழம் - 1

பெருமரத்தின் பட்டைசுக்குப் பேசரிய முத்தம்
உரியவில்வ மாதளையி னோடு - தெரியப்
பதிசா ரதிவிடையம்[1] பாணீயம் போட
அதிசாரம் ஓடும் அலைந்து. **317**

சேரும் சரக்குகள் : பெருமரப்பட்டை சுக்கு முத்தக்காசு வில்வம் மாவிலை அதிவிடயம் (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம்

பாடவேறுபாடு :
பாடல் எண் : 317. 1 பதிசார் விடையம்

அதிசாரக்கியாழம் - 2

பொன்முசுட்டை கொத்தமல்லி போர்ந்தசுக்கு பற்படகம்
என்னும் விலாமிச்சம் இருவேலி - நன்னீர்[1]
சீந்தில் நிலவேம்பு செந்தொட்டிக் காய்ந்துகொள்ள
வாய்ந்தஅதி சாரமறும்.[2] **318**

சேரும் சரக்குகள் : பொன்முசுட்டை கொத்தமல்லி சுக்கு பற்பாடகம் விலாமிச்சவேர் வெட்டிவேர் நன்னாரி சீந்தில் நில வேம்பு செந்தட்டி (சம அளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம்

பாடவேறுபாடு :
பாடல் எண் : 318. 1 நன்னீரில்
2 அதிசாரசுரம் மாறும்

அதிசாரக்கியாழம் - 3

அதிவிடயம் சுக்கோடு அமுதவல்லி முத்தம்
பதிகுட சாப்பாலை[1] பூநிம்பம் - நதிநீர்[2]

149
உருகவேகாய்ச்சி உழக்காம் குடிநீர்
பருகஅதி சாரம் படும். 319

சேரும் சரக்குகள் : அதிவிடையம் சுக்கு சீந்தில் முத்தக்காசு குடசப் பாலை வேப்பம்பூ (சமஅளவு)
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீரிட்டு உழக்களவு ஆக்கிக் கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : அதிசாரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 319. 1 புதிகுடசப்பாலை
2 அந்தநீர், தீநீர்

அதிசாரக்கியாழம் - 4

மஞ்சள் அதிமதுரம் வன்குடசப் பாலைத்தோல்
துஞ்சு மரமஞ்சள் தொடையீர்க்கு - அஞ்சு
மதிசாரம் கொள்ள வருங்குடிநீர்[1] கொள்ளில்
பதிசாரம் போமே பறந்து.[2] 320

சேரும் சரக்குகள் : மஞ்சள் அதிமதுரம் குடசப்பாலை பட்டை மரமஞ்சள் ஆடாதொடை ஈர்க்கு (சமஅளவு)
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 320. 1 அது குடிநீர்
2 புயந்து

அதிசாரக்கியாழம் - 5

வில்வ நறுங்கனியும் வெட்டிவேர் ஆத்திமலர்
கொள்யானைத் திப்பிலியும் கொள்புங்கின்[1] - நல்லதோல்
நெல்பொரித்தூள் தேன்கூடில் நில்லாது அதிசாரம்
சொல்பெரியோர் பாலர்க்கும் சொல். 321

சேரும் சரக்குகள் : வில்வப்பழச்சதை வெட்டிவேர் அத்திப்பூ யானைத் திப்பிலி புங்கம்பட்டை நெற்பொரி (சமஅளவு)
செய்முறை : இவற்றைக் குடிநீரிட்டுத் தேன்கூட்டி அருந்த வேண்டும்.

திரும் நோய் : பெரியவர்களுக்கும். சிறியவர்களுக்கும் வரும் அதிசாரம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 321. 1 பேரரசின், கொள்ளரசு

அதிசாரக்கியாழம் - 6

நன்னாரி பொன்முசுட்டை நாகரமு முத்தமொடு
பன்னார் அமுதவல்லிப் பாய்குடிநீர் - இன்னிலத்தில்[1]
வெப்பாம் அதிசாரம் மேவிக் குடித்தக்கால்
தப்பாமல் போமே தளர்ந்து. 322

சேரும் சரக்குகள் : நன்னாரி பொன்முசுட்டை சுக்கு முத்தக்காசு சீந்தில் (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : வெப்பு, அதிசாரம்

பாடல் எண் : 322. 1 நன்னிலத்தில்

அதிசாரக்கியாழம் - 7

துத்திவேர் சுக்கு சொல்மா தளையரும்பு
கொத்தூர் சாதிக்காய் குடசத்தோல் - சத்தூரு
முள்ளிலவம் தன்பிசினு மொய்ம்புகுடி நீர்குடிக்க
விள்ளு மதிசாரம் விட்டு.[1] 323

சேரும் சரக்குகள் : துத்திவேர் சுக்கு மாதுளைஅரும்பு சாதிக்காய் குடசப்பாலைப்பட்டை முள்இலவம்பிசின் (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

திரும் நோய் : அதிசாரம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 323. 1 துத்தூரருவா

அதிசாரக்கியாழம் - 8

கஞ்சா விரைவில்வங் கான்விடயம் சுக்கேல
மஞ்சா நிலவேம்பு மடார்சீந்தில் - மிஞ்சிவில்வச்
செங்கனியின் வற்றலத்தில்[2] லவங்கப் பத்திரிகோ
தங்களதி சாரம்போம் தாங்கு. 324

சேரும் சரக்குகள் : கஞ்சாவிதை வில்வம் அதிவிடையம் சுக்கு ஏலம் நிலவேம்பு சீந்தில் வில்வப்பழ வற்றல் இலவங்கப் பத்திரி (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 324. 1 மிஞ்சிலவ

2 வற்றல்திறல்

அதிசாரக்கியாழம் - 9

பெருமரத்தோல் சுக்குமுத்தம் பேர்குடசப் பாலை
அருமா தளையின் அரும்பு - வருமா
விடயம்காட் டாத்திப்பூ வின்குடிநீர்¹ கொள்ளில்
அடையும்அதி சாரம்போம் அன்று 325

சேரும் சரக்குகள் : பெருமரப்பட்டை சுக்கு முத்தக்காசு குடசப்பாலை மாதுளைஅரும்பு அதிவிடையம் காட்டாத்திப்பூ (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் அதிசாரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 325. 1 வேல்குடிநீர்

அதிசாரக்கியாழம் - 10

மாதளையின் பிஞ்சுசுக்கு மாவிடயம் சீந்திமுத்தம்
தாதுவில்வம் செங்கனியின் தன்வற்றல் - மோதுசடா
மாஞ்சிபெருமரத்தோல் வன்கிசா யம்குடிக்கப்
பாஞ்சவதி சாரம்போம் பாங்கு. 326

சேரும் சரக்குகள் : மாதுளைபிஞ்சு சுக்கு, அதிவிடையம் சீந்தில் முத்தக்காசு வில்வப்பழ வற்றல் சடாமாஞ்சில் பெருமரப் புட்டை (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம்

அதிசார சுரக்கியாழம் - 1

அதிவிடைய முத்தம் அசமோ தம்[1] சுக்குப்
பதிகுடசப் பாலைமேற் பட்டை - மதமாம்[2]
பெருமரத்தின் தோல்குடிநீர் பெருமதி சாரம்
கருமவெப்பும் போமே கடிந்து. 327

சேரும் சரக்குகள் : அதிவிடையம் முத்தக்காசு ஓமம் சுக்கு குடசப் பாலை பட்டை பெருமரத்தின் தோல் (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து உழக்காக கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசார சுரம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 327. 1 அதமோதகஞ்
2 மதிகுடசப்பால் மேற்பட்டைமதுமாம்
மதிகுடசப்பால் மேற்பட்டை - மதுமாம்

அதிசார சுரக்கியாழம் - 2

மாதளைவே ரோடு மருவும் அதிவிடையம்
கோதம் குடசமுத்தம் கொள்சுக்கு - போதருந்த
சீதவலி இரத்தமாய்ச் சேர்ந்த வதிசாரம்[1]
காதவழி போமே கடிந்து. 328

சேரும் சரக்குகள் : மாதளைவேர் அதிவிடையம் குடசப்பாலை முத்தக்காசு சுக்கு சமஅளவு

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சீதவலி, இரத்த சீத அதிசார சுரம் போகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 328. 1 சேருமதி சாரசுரம்

அதிசார சுரக்கியாழம் - 3

சுக்குக்கூழ்ப்பாலைத்[1] தோல்சீந்திப் பூநிம்பம்
தக்க விடயம் தகுமுத்தம் - மிக்கசமன்
செப்பும்கிசா யம்குடிக்கத் தேக மதைவருத்தும்
வெப்பதிசா ரம்போ குமே.[2] 329

சேரும் சரக்குகள் : சுக்கு கூழ்ப்பாலைபட்டை சீந்தில் வேப்பம்பூ அதிவிடையம் முத்தக்காசு சமஅளவு

செய்முறை : இவற்றை முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசார சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 329. 1 குடசப்பாலை

2 வெப்புமதி சாரம் போமென்

அதிசார சுரக்கியாழம் - 4

மாம்பட்டை சுக்குமுத்த மாதளையின் நல்அரும்பும்
காம்பட்ட வில்வக் கனிவற்றல் - தேம்புநில
வேம்பு பெருமரத்தோல் விள்ளும் குடிநீர்க்குத்
தீம்பதிசா ரச்சுரம்போம் தீர்ந்து. 330

சேரும் சரக்குகள் : மாம்பட்டை, சுக்கு முத்தக்காசு, மாதுளை அரும்பு, வில்வப்பழவற்றல் நிலவேம்பு, பெருமரப்பட்டை - சம அளவு,

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசார சுரம்

அதிசார சுரக்கியாழம் - 5

வில்வப் பழவற்றல் மேல்மாத ளைஅரும்பு
சொல்லுங்குட சப்பாலைத்[1] தோல்[2] சுக்கு - நல்லமாங்
கொட்டைப் பெருமரத்தோல் கூறு குடிநீர்க்குத்
தொட்டதி[3] சா ரசுரம் போம் சோர்ந்து.[4] 331

சேரும் சரக்குகள் : வில்வப்பழ வற்றல் மாதுளைஅரும்பு குடசப்பாலை வற்றல் சுக்கு மாங்கொட்டை பெருமரப்பட்டை (சம அளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அதிசார சுரம்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 331. 1 குடசமும்

2 தழுதாழை, அ. தொல்

3 தோடாதி
4 நட்டு மதிசார சுரம் நைந்து

அதிசார சுரக்கியாழம் -6

காட்டாத்திப் பூமுத்தம் கான்மா தளை அரும்பு
கோட்டாரப்[1] பெருமரத்தோல் கூவிளையின் - நீட்டுகனி
வற்றல்[2] குட சப்பாலை வன்குடிநீர் உண்டிடுகில்[3]
உற்றதிசா ரசுரம்போ மோடி.[4] 332

சேரும் சரக்குகள் : காட்டாத்திப்பூ முத்தக்காசு, மாதுளை அரும்பு, பெருமரப்பட்டை, வில்வப்பழவற்றல், குடசப்பாலை, - சம அளவு
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : அதிசார சுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 332. 1 கூட்டார்
2 வார்
3 கேகுமதி
4 சார் சுரம் போமே சலித்து

அதிசார சுரக்கியாழம் - 7

விடயம் குடசத்தோல் மென்சீந்தில் சுக்கோடு
அடவிகாட் டாத்திப்பூ வல்லால் - படிகடப்பம்
தோல்சாதிப் பத்திரிகை தோல்கிசா யங்குடிக்க[1]
மேலதிசா ரச்சுரம்போம் விள்.[2] 333

சேரும் சரக்குகள் : அதிவிடையம், குடசப்பாலைப்பட்டை சீந்தில், சுக்கு காட்டாத்திப்பூ, கடப்பன் பட்டை சாதிப்பத்திரி, - சம அளவு
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : அதிசார சுரம்
பாட வேறுபாடு :
பாடல் எண் : 333. 1 சொல்கஷாயங் குடிக்க
2 மதிசாரம்போம் விண்டு.
காலதிசார சுரங்காண்.

அதிசார சுரக்கியாழம் - 8

முருங்கைத்தோல் வெள்ளுள்ளி மொய்ம்புசுக் கோடோமம்
கருஞ்சீர கம்சமமாய்க் காய்ச்சித் - தருகோதம்
நாலொன்றாய்த் தானிறுத்து நாடியதில் இந்துப்பு
மேல்குடசம் சுக்குவிட யம்.[1] 334

விடயமுதல் நன்மருந்தை[1] மேல்சமமாய்ப் போட்டுக்[2]
கடுமை திரும்பவுந்தான் காய்ச்சீ - வடிகொண்டு
கொள்ளவதி சாரம்போம் கோதாய் அதிசாரத்து
உள்ளெழுந்த சூலைபோம் உன். 335

சேரும் சரக்குகள் : முருங்கைப்பட்டை வெள்ளுள்ளி சுக்கு ஓமம் கருஞ்சீரகம் (சமஅளவு)

செய்முறை : இவற்றைமுறைப்படி குடிநீரிட்டுக்கொண்டு அதில் இந்துப்பு, குடசப்பாலை, சுக்கு, அதிவிடையம் சமமாகப் போட்டு மறுபடியும் காய்ச்சி வடிகட்டி அருந்தவேண்டும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 334. 1 விடையமளி

335. 1 தன்மருந்தை

2 சொல்

பால அதிசாரக்கியாழம்

காட்டாத்திப் பூவுங் கருங்காலி வேர்ப்பட்டை
கோட்டானைத் திப்பிலியுங் கூவிளவேர் - கூட்டுநீர்
பால ரதிசாரமது பாறியிடத் தேன்விட்டக்
காலமதி சாரம்விடுங் காண். 336

சேரும் சரக்குகள் : காட்டாத்திப்பூ கருங்காலிவேர்ப்பட்டை கோட்டம் திப்பிலி வில்வவேர் (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து தேன் விட்டு அருந்த வேண்டும்.

தீரும் நோய் : குழந்தைகளுக்கான அதிசாரம் தீரும்.

உதரநோய் கியாழம்

சுக்குக் கொடிவேலித் துய்ய[1] முத்தம் செம்புளிச்சை
தக்க சிறுதேக்குச் சாரணைவேர் - மிக்ககணம்

திப்பிலிமூ லங்குடிநீர் தாக்குஉதர[2] நோய்வீக்கம்
வெப்புளதி சாரம் விடும். *337*

சேரம் சரக்குகள் : சுக்கு கொடிவேலி முத்தக்காசு செம்புளிச்சை சிறு தேக்கு சாரணைவேர் திப்பிலி திப்பிலிமூலம் (சமஅளவு)
செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்
தீரும் நோய்கள் : வயிற்றுநோய், வீக்கம், அதிசாரம்.
பாடவேறுபாடு :
பாடல் எண் : *337.* 1 தூய
2 தேக்குதர

தோடாதிசாரக்கியாழம் - 1

சீந்தில் கழல்பருப்பு சீரம்[1] வேர்க் கொம்புமுத்தம்[2]
போந்த நிலவேம்பு புதுவிடயம் - சேந்தவில்வக்
கோட்டா கனி[3] வற்றல் கூர்குடசம் கோதமுண்ணத்
தோடாதி சாரம்போம் தோற்று. *338*

சேரும் சரக்குகள் : சீந்தில் கழற்சிப்பருப்பு சீரகம் முத்தக்காசு நிலவேம்பு அதிவிடையம் வில்வப்பழவற்றல் குடசப் பாலைபட்டை (சம அளவு)
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : தோடாதிசாரம்.
பாடவேறுபாடு :
பாடல் எண் : *338.* 1 சீரகம்
2 முத்தும்
3 கோடாரக்கனி

தோடாதி சாரக்கியாழம் - 2

கூத்தன் குதம்பை குடசத்தோல் சீந்திமுத்தம்
மேத்தநில வேம்புசுக்கோ டேவிடயம் - பூத்தவில்வம்
ஓடாறு கனிகஞ்சா உற்றவிரைக் கோதமுண்ண
தோடாதி சாரம்போம் சொல். *339*

சேரும் சரக்குகள் : கூத்தன்குதம்பை குடசப்பாலைபட்டை சீந்தில் முத்தக்காசு நிலவேம்பு சுக்கு அதிவிடையம் வில்வப்பழ சதை கஞ்சா விதை (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : தோடாதிசாரம்.

இரத்த பித்தக் கியாழம் - 1

முத்தம் விலாமிச்சை மூங்கிலிலை வெட்டிவேர்
ஒத்தமா தளைஅரும்போடு ஒண்சுக்கு - நித்தமுற
திருக்குமெனக் கூத்திருணான்நன்னாரி புடமாம் கோத
இரத்தபித்த போமே இனி. 340

சேரும் சரக்குகள் : முத்தக்காசு விலாமிச்சை மூங்கில்இலை வெட்டி வேர் மாதுளைஅரும்பு சுக்கு நன்னாரி (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : இரத்தபித்தம்.

சிலேத்துமரோகம். பிரமேகம் இவற்றுக்குக்கியாழம்

திரிபலைபேய்த் தும்மட்டி செம்புளிச்சை முத்தம்
உரியகுடிநீர் சிலேட்டுமம்[1] ஓட்டும் - பிரமேகம்
மஞ்சள் பொடிதூவி மாட்சிகமும் விட்டருந்த
எஞ்சாமல் ஓடிவிடுமாம்.[2] 341

சேரும் சரக்குகள் : கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் பேய்த்தும் மட்டி செம்புளிச்சை (சமஅளவு)

செய்முறை : முறைப்படி குடிநீர் செய்து மஞ்சள் தூள், தேன் விட்டு அருந்த வேண்டும்.

தீரும் நோய்கள் : சிலேத்தும ரோகம், பிரமேகம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 341. 1 சேட்பம்
2 ஓடிவிடும்

மூத்திரக்கிரிச்சிரக்கியாழம்

கொன்றை நறுங்கனியும் குலவுகடு நொச்சிவேர்
துன்றுசிறு பூளைவேர் தோடையிலையு - மன்றுதேன்[1]
விட்டகுடி நீர்குடிக்க மெய்மூத்தி ரக்கிரீச்சம்[2]
தட்டிவிடும் நீர்க்கடுப்பும் தான். 342

சேரும் சரக்குகள் : கொன்றைப்பழம் கடுக்காய் நொச்சிவேர் சிறுபூளை வேர் ஆடாதோடைஇலை (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர்செய்து தேன் கலந்து அருந்தவேண்டும்.
தீரும் நோய் : மூத்திரக் கிரீச்சம், நீர்க்கடுப்பு
பாடவேறுபாடு :
பாடல் எண் : 342. 1 மண்டுதேன், ஒன்றுதேன்
2 கிரிச்சிரம்

சர்வரோகக்கியாழம் - 1

கோட்டம் அரத்தைக் கொடிவேலி நற்செவியம்
நீட்டுகண மூலம் நெருஞ்சிசுக்கு - காட்டசுவ
கந்தி நரிபயத்தம் வேர்குடிநீர் கேட்டவுடன்[1]
எந்தரோ கங்களும்போம் ஏங்கி.[2] 343

தீரும் சரக்குகள் : கோட்டம் அரத்தை கொடிவேலி திப்பிலிமூலம் செவ்வியம் நெருஞ்சில் சுக்கு அமுக்கரா நரிப் பயற்றம்வேர் (சம அளவு)
செய்முறை : முறைப்படிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சர்வரோகம்.
பாட வேறுபாடு :
பாடல் எண் : 343. 1 கந்தி நரிப்பயற்றைக் கான்வேர் குடிநீர்க்கு.
2 ஏய்ந்து.

சர்வரோகக்கியாழம் - 2

ஆற்றுமுள்ளி முள்ளியலர் நெருஞ்சி[1] வேர்சுக்குத்
தேற்றுமனுப் பாலை திரிபலைகள் - போற்றி
மருவும் சதகுப்பை வன்குடிநீர் காணில்
வருஞ்சகல ரோகமும்போம் வாடி.[2] 344

சேரும் சரக்குகள் . ஆற்றுமுள்ளி கறிமுள்ளி நெருஞ்சில்வேர் சுக்கு அனுப்பாலை கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக் காய் சதகுப்பை (சம அளவு)
செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சர்வரோகம்
பாடவேறுபாடு
பாடல் எண் : 344. 1 ஆல்நெருஞ்சி
2 வாழ்

மேகக்கியாழம்

ஏலம் இலவங்கம் ஏர்பா திரிமுத்தம்[1]
சீலவிலா மிச்சைவேர் சீர்சந்து - சால
வருமுந்திரி வெட்டி வேர்குடிநீர் வைக்கில்
இருபதுமே கங்களும்போம் இற்று. 345

சேரும் சரக்குகள் : ஏலம் இலவங்கம் பாதிரி முத்தக்காசு விலாமிச்சை வேர் சந்தனம் முந்திரிகை வெட்டிவேர்(சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : இருபது வகை மேகம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 345. 1 இரு பாதிரி முத்தம்

அபிவாதசுரக்கியாழம்

மனக்கவலை மாற்றி மறுக்காத் திரிகடுகும்
வனத்துத் தழுதாழை வன்வேம்பும் - புனக்கிரந்தி
அபிகாய கோதம் அருந்தினவர்க் கன்றே
யபிகாதம் போமே யலர்ந்து. 346

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி தழுதாழை வேம்பு கிரந்தி தகரம் (சம அளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : அபிகாத சுரம்.

மாங்கிச சுரக்கியாழம்

பேர்முட்டி நாகமல்லிப் பேய்ச்சோற்றிப் பாலைவேர்
சாரத் திரிபலையுஞ் சிற்றாமுட்டி - தாரணியில்
ஓங்குசுக்கு ரோகணியு முற்றமருட் கோதத்தால்
மாங்கிசத்தின் வெப்பேகுமால். 347

சேரும் சரக்குகள் : பேராமுட்டிவேர் நாகமல்லிவேர் பேய்சோற்றி, பாலைவேர் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சுக்கு கடுகரோகணி (சமஅளவு)

செய்முறை : இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

சேரும் சரக்குகள் : மாங்கிசச் சுரம்.

மகா ஏலாதிச் சூரணம்

ஏலந் திரிகடுகோ டேமதுரம்[1] சந்தனந்தக்
கோலஞ்சேர்நாகப்பூ[2] கொத்தமல்லி - சீலமுள்ள
கோட்டம் அதிவிடையம் கூர்முத்த மாஞ்சிமஞ்சள்[3]
நாட்டுசிறு தேக்குமாம்[4] நன்கு. 348

நன்வெட்டி வேர்மிச்சம்[1] நல்லவங்க மாந்திரயம்[2]
மன்ரோகணி[3] தா மரைவளைய - மென்கூகை
நீறுகழு னீர்க்கிழங்கு நெல்லிமுள்ளி கற்பூரம்
தேறுமர மஞ்சள் சாதிக்காய். 349

காயுந்தாளீ சஞ்சீந்தில் காணங் கருங்காலி
தூயமுந் திரிவேப்பந் தோல்சீ - ராய்ந்தசுவ[1]
கெந்திகற் பூரம் கழல்[2] சா ரணையின்வேர்
இந்துநிலப் பனையாம் ஏந்து. 350

ஏந்து சமன் தூள்மகா ஏலாதி சூரணமாம்
சேந்த நெய்யில் சர்க்கரையில் தின்றிடுகில் - காந்த பித்தம்
வாதகபம் பாண்டுசயம் வன்பீனிச மூலம்
பேதபித்த குன்மம்போம் பின். 351

பின்வீக்கம் சூலை[1]பிரமேகம் காமாலை
துன்னு சுவாசகாசம் தோல்சுரங்கள் - வன்னருசி
செல்முத்திரக் கிரீச்சம் சேர்விழியின் மேற்தடிப்பு[2]
சொல்பேத ரோகம்போம் சோர்ந்து. 352

பாடவேறுபாடு :

பாடல் எண் : 348. 1 ஏர்மதுரம்
2 சிறுநாகப்பூ
3 மரமஞ்சள்
4 தேக்குவர்
5 நான்கு

349. 1 விலாமிச்சம்
2 மாந்திரியம்
3 மன்ரோகனி

350. 1 சீராம் தேயசுவ
2 கிழ்

161

352. 1 சூசி
2 மேற்துடிப்பு

சோர்ந்ததேகம் பிலக்குந் தொண்டை தொனி யுண்டாம்
சேர்ந்த பசிவிரவும்[1] செம்மையாய்ப் - பூந்திருவே
நாகரிக மாயிருந்தே நந்தாமல் யாவருக்கும்
யோகமுடன் சொல்வாய் உகந்து. 353

பாட வேறுபாடு :
பாடல் எண் : 353. 1 விரைவாம்

இதில் மகா ஏலாதிச் சூரணத்தின் செய் முறை விளக்கப்படுகிறது.

சேரும் சரக்குகள் : ஏலரிசி சுக்கு மிளகு திப்பிலி அதிமதுரம் சந்தனம் சிறுநாகப்பூ கொத்துமல்லி கோட்டம் அதிவிடையம் முத்தக்காசு சடாமாஞ்சி மஞ்சள் சிறுதேக்கு வெட்டிவேர் இலவங்கப்பட்டை இலவங்கப் பத்திரி இலவங்கம் கடுகுரோகணி தாமரை வளையம் கூகைநீறு செங்கழுநீர்க்கிழங்கு நெல்லிமுள்ளி பேரீஞ்சு மரமஞ்சள் சாதிக்காய் [illegible]சப்பத்திரி சீந்தில் கருங்காலி முந்திரி வேப்பந்தோல் அமுக்கரா கற்பூரம் சாரணை நிலப் பனங்கிழங்கு

செய்முறை : சரக்குகளைச் சுத்தி செய்து உலர்த்தி இடித்துச் சலித்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் : நெய், சர்க்கரை

தீரும் நோய் : பித்தம், வாதகபம், பாண்டு சயம் பீனிசம், மூலம் பித்தகுன்மம், வீக்கம், சூலை, பிரமேகம், காமாலை, சுவாச காசம், சுரம், அருசி, மூத்திரக்கிரீச்சரம், இமைத்தடிப்பு இவை தீரும். உடல் பலமுண்டாகும். பசி உண்டாகும்.

மகா ஏலாதிச் சூரணம்

ஏல மதிமதுரம் ஏர்தாமரை வளையம்
கோலநில வேம்புமுத்தம் கொத்துமல்லி - சீலவகில்
வெட்டிவேர் கோட்டம் விளங்குமலாக் காய்சந்துக்
துட்டுசடா மாஞ்சி கருது. 354

கருதுதண் ணீர்விட்டான் கமழசுவ கெந்தி[1]
முருகுநிலப்பனையும்[2] மூன்றின் - வருகிழங்கு
சிற்றேலம் நன்னாரி தேன்முந்திரி லவங்கம்
கொற்றாம் நெருஞ்சிவேர் கூட்டு. 355

கூட்டு திரிகடுகு கூர்தாளிச விலைகள்
நாட்டு கருநெய்தல் நறுங்கிழங்கு - நீட்டுமிரு
சீரகம் சாதிக்காய் திகழ்நெல்லி யின்பருப்பு
பாரமுள கக்சோலம்[1] பாங்கு. 356

பாங்கு தவச்சாரம்[1] பண்புடைய தக்கோலம்
ஓங்குவகைக் கோரரையாம் ஒண்பலங்கள் - தாங்குமணக்
கத்தூரிக் குங்குமப்பூ கற்பூரம் ஓர்வகைக்கே
ஏத்ததா மரையிடக மிட்டு. 357

இட்டபொடிக்கண்ணே ரியல்சர்க் கரைகலந்து[1]
திட்டமுடன் அருந்தில் தீபனமாம் - தொட்டசத்தி
வாதபித்தம் பாண்டு வருமேகம் நெஞ்சொிவு
பேதகலா ரோகம்பின் பேசு. 358

பேசு மருசி பெய்மூத் திரக்கிரிச்சந்
தேசுகரங் கால்வயிறு சேர்ந்தெரிவு - மாசுபடா[1]
தேகம் படபடப்பு தீரா துருநோவு
தாகமுடன் அத்திசுரம் தானும். 359

பாட வேறுபாடு :
பாடல் எண் : 355. 1 கழரசுவகெந்தி
2 நிலப்பனைகள்
356. 1 சொல்லும்
357. 1 பாங்குபெறு சத்தும்
358. 1 தானேரிசைச் சர்க்கரை கூட்டு
2 அருந்து
359. 1 மாசுபடாத

தானுமது பீனிசங்கள் தாரணியில் ஒட்டிவிடும்
ஆனதிந்தச் சூரணப்பேராங்கூறில் - மாறுமகா
ஏலாதி சூரணமா மெல்லவர்க்கு மாமமுத
வாலாய மாயருந்த வாங்கு. 360

:163

இதில் மகா ஏலாதிச் சூரணத்தின் இன்னொரு முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : ஏலரிசி அதிமதுரம் தாமரைவளையம் நிலவேம்பு முத்தக்காசு கொத்துமல்லி அகில் வெட்டிவேர் கோட்டம் சந்தனம் சடாமாஞ்சி தண்ணீர் விட்டான் கிழங்கு அசவகந்தி கிழங்கு நிலப்பனை கிழங்கு சிற்றேலம் நன்னாரி முந்திரிகை இலவங்கம் நெருஞ்சில்வேர் சுக்கு மிளகு திப்பிலி தாளிசபத்திரி நெய்தல் கிழங்கு கருஞ்சீரகம் சீரகம் சாதிக்காய் நெல்லிப்பருப்பு கச்சோலம் எவச்சாரம் தக்கோலம் (வகைக்கு 1/2 பலம்). கத்தூரி குங்குமப்பூ கற்பூரம் (வகைக்கு 1/2 நிடகம்)

செய்முறை : சரக்குகளைச் சுத்தி செய்து காயவைத்து இடித்துச் சூரணித்து கடைச் சரக்குகளையும் சேர்த்து இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : சர்க்கரை

தீரும் நோய்கள் : பசி உண்டாகும், வாந்தி, வாதபித்தப் பாண்டு, மேகம், நெஞ்செரிவு, சுவையின்மை, மூத்திரக்கிரிசரம், கால், கை, வயிறு எரிச்சல், தேகப்படபடப்பு, உடல்வலி, தாகம், என்பைப் பற்றிய சுரம், பீனிசம் இவை தீரும்.

இலகு ஏலாதிச் சூரணம்

ஏலம்நறுஞ் சீரகத்தோ டிலவங்க மரமஞ்சள்
கோலவிலாம் பிச்சம் கொள்கடுக்காய் - ஞாலமுத்தம்
நெற்பொரி[1] சின்னாகப்பூ[2] நீடும்[3] பெருங் காயம்
சொற்சமனாய் சூரணப்பேர் சொல். 361

சொல்லுலகு[1] ஏலாதி சூரணமாம் சர்க்கரைதேன்
நல்லநெய்யில் உண்டிடுகில் நல்வாந்தி - வெல்லும்
இருபது மே கங்களனலெண் மூன்று[2] பித்தம்
மருவியிடு முப்பிசமும் மாளும்.[3] 362

இதில் இலகு ஏலாதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : ஏலம் சீரகம் இலவங்கம் மரமஞ்சள் விலாமிச்சம் வேர் கடுக்காய் முத்தக்காசு நெற்பொரி சிறுநாகப் பூ பெருங்காயம் (சம எடை)

செய்முறை : சுத்தித்து இடித்துச் சலித்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.
அனுபானம் : சர்க்கரை, தேன், நெய்
தீரும் நோய்கள் : வாந்தி, இருபது வகை மேகம், இருபத்து நான்கு வகைப் பித்தம், உப்பிசம் இவை நீங்கும்.

பாடவேறுபாடு :
பாடல் எண் : 361. 1 நெற்பொரியும்
2 நாகப்பூ
3 நீளும்
362. 1 சொல்லுசிறு
2 லெனமூன்று
3 மாண்டு

இலகு ஏலாதி சூரணம் (வேறு)

ஏலம் இல வங்கமுத்த மோ[1] தா மரைவளையம்[2]
ஞாலம் அரைஞாழல் நறுஞ்சாந்து - கோலமிகு
கற்பூரம் நெற்பொரி கானிலந்தை வித்து
விருப்பூரத் தான்சமனாய் விள். 363

விள்பொடிக்குத்[1] தான்சமனாய் மிக்க சர்க்கரை சேர்த்து
உள்மகிழ் யோக உரைத்திடுகில்[2] - கொள்இலகு
ஏலாதி சூரணமாம் ஏந்தியிடும்[3] தேனிலுண
மேலான சத்திகள்போம்[4] விண்டு. 364

இதில் இலகு ஏலாதிச் சூரணத்தின் மற்றுமொரு செய்முறை கூறப் படுகிறது.

சேரும் சரக்குகள் : ஏலம் இலவங்கம் முத்தக்காசு தாமரை வளையம் குங்குமப்பூ சந்தனம் கற்பூரம் நெற்பொரி இலந்தை விதை பச்சைக்கற்பூரம் இரச கற்பூரம் (வகைக்கு சமஅளவு)
செய்முறை : சரக்குகளை சுத்தித்துச் சூரணித்து சலித்து அதற்குச் சமன் சர்க்கரை சேர்த்து கொள்ள வேண்டும்.
அனுபானம் : தேன்
தீரும் நோய் : வாந்தி

பாடவேறுபாடு :
பாடல் எண் : 363. 1 ஓர்
2 தாமரைத்தாது

364. 1 விள்பொட்டிலுக்கு
2 உரைத்திடவோ
3 ஏத்தியிடும்
4 சத்தியள்போம்

தாலிசபத்திரிச் சூரணம்

சீர்தாளிச மிளகு செவ்வியமோர் வகைக்கே
ஓர்பலமாம் பேடசம்[1] ஓர் மூன்று - வார்கணமோடு[2]
ஒண்திப்பிலிமூலம் ஓங்குவகைக் கீர்பலமும்
பண்லவங்கப் பத்திரியாம் பண்பு.[3] 365

பண்பேலந் தானுதிற[1] பார்வைக்கோர்நால்குநிட்கம்
நன்பா ளிதம்பலமுன் நான்குவிதம் - பண்பாகு
மந்தவகைச்[2] சூரணம்புட் டாகவைத்தே யாமலகந்
தந்தகனி போலுருட்டாய் தான். 366

தானந்த[1] உண்டைதனை தப்பாமல் தானருந்தில்[2]
ஊனந்த மாகு[3] சயம் உட்காய்ச்சல் - மேனிரண்டு[4]
வாளீரும் போன்றிருமல்[5] வாராமல்போம் பொடிப்பேர்[6]
தாளீச சூரணமாம் சாற்று. 367

பாட வேறுபாடு :
பாடல் எண் : 365. 1 பெச்சம், பேடசமுமே
2 வராகனொடு
3 பண்லவங்கமாம் திரையம் பண்பு
366. 1 தானுசிரம்
2 மந்தகைச்
367. 1 தானருந்த
2 தப்பாமலேயருந்தில்
3 ஊனந்தமாக்கு
4 மேல்வறண்டு
5 பாண்டுஇருமல்
6 பொடிப்போம்

இதில் தாளிசபத்திரிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : தாளிசபத்திரி மிளகு செவ்வியம் வகைக்கு 3 பலம் திப்பிலி திப்பிலிமூலம் வகைக்கு 2 பலம் இலவங்கப்பத்திரி ஏலரிசி வகைக்கு 4 பலம் சர்க்கரை 12 பலம்

செய்முறை : சரக்குகளை சுத்தித்துச் சூரணித்து சர்க்கரை சேர்த்துப் பிட்டவியலாகச் செய்து அதனை நெல்லிக்காயளவு உருண்டைகளாக உருட்டி உட்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், உட்காய்ச்சல், இருமல்

அட்டசூரணம்

இருசீரகம் ஓமம் இந்து திரிகடுகு
கருவேப் பிலைசமமாம் காண - வருமிதுக்கு[1]
எட்டிலொன்றாங் காய மிது[2]சிவக்க வேவறுத்து
இட்டமுடன் சூரணமாய் ஏந்து[3] 368

ஏந்துமட்ட சூரணத்தை யேசோற்றின்மேல்வைத்துச்
சேந்தநெய்யும் விட்டருந்தத் தீபனமாம் - சாந்தகுன்மம்
வாதம் அகன்றுவிடும் வன்னிமந்தம் ஏகிவிடும்
பேதமல சுத்தியுமாம்[1] பேசு. 369

இதில் அட்ட சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : சீரகம் கருஞ்சீரகம் ஓமம் இந்துப்பு சுக்கு மிளகு திப்பிலி காய்ந்தகருவேப்பிலை (வகைக்கு 1 பங்கு) வறுத்த பெருங்காயம் 1/8 பங்கு

செய்முறை : இவை அனைத்தையும் சுத்தித்து இடித்துச் சூரணித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம் : சோற்றின் மேல் வைத்து நெய்யுடன் கலந்து உண்ண வேண்டும்.

தீரும் நோய்கள் : பசி உண்டாகும். குன்மம், வாதம் பித்த மந்தம் இவை தீரும். மலசுத்தியாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : 368. 1 வருமிழுது
2 எட்டிலொன்றும் காணமிது
3 ஏற்று
369. 1 சுத்தியாம்

அட்ட சூரணம் (வேறு)

இங்குதிரி கடுகும் ஒங்கும்[1] இரு சீரகமும்
தங்கும சமோதமிந்து தான்சமனாய்ப் - பொங்குபொடி

167

நாமமட்ட சூரணமாம் நாமருந்தப் போசனத்தில்
தூமவன்னி மந்தம்போம் சொல். 370

இதில் அட்ட சூரணத்தின் மற்றுமொரு செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : பெருங்காயம் சுக்கு மிளகு திப்பிலி சீரகம் கருஞ் சீரகம் ஓமம் இந்துப்பு (சமஅளவு)

செய்முறை : சுத்தித்து இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : உணவுடன் அருந்த வேண்டும்.

தீரும் நோய் : பித்தமந்தம்

பாடவேறுபாடு :

பாடல் எண் : 370. 1 ஈர்க்கும், ஏற்கும்

அசுவகெந்தாதிச் சூரணம்

பன்னசுவ கெந்தியறு பத்துநான்காஞ் சுக்கோடு
என்னான்கு திப்பிலியும் ஈரெட்டு - நன்நிடகம்
ஏலம்சிறு னாகப்பூ[1] இலவங்கமா மிளகு
நாலிரண்டு எட்டொன்றாய் நாடு. 371

நாடுசமன் பாளிதம்சேர் நல்லசுவ கெந்தாதி
பீடுபோ[1] மத்திசுரம் பித்தசயம் - நீடுங்கால்
பாண்டுகப[2] மருசி பாடுசெய்யு மூலமுதல்
கீண்டு துரத்திடுமாங் கேள்.[3] 372

இதில் அசவகெந்தாதிச் சூரணம் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் :

அமுக்கராக்கிழங்கு	64 பங்கு
சுக்கு	32 பங்கு
திப்பிலி	16 பங்கு
ஏலம்	8 பங்கு
சிறுநாகப் பூ	4 பங்கு
இலவங்கம்	2 பங்கு
மிளகு	1 பங்கு
சர்க்கரை	சரியளவு

செய்முறை : சரக்குகளைச் சுத்திகரித்து வறுத்து இடித்துச் சலித்துச் சூரணம் செய்து அத்துடன் சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

திரும் நோய்கள் : என்பைப் பற்றிய சுரம், பித்தசயம் பாண்டு, கபம், சுவையின்மை, மூலம், இவை தீரும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *371.* 1 ஏலம்நாகப்பூ
372. 1 யிடுபொடி
2 பாண்டுரோக
3 துரத்துமாங் கொள்

கண்டாத்திரிகச் சூரணம்

இஞ்சி சருக்கரையும் ஈரெண்பலம்[1] வகைக்கோர்
அஞ்சுமிள காறிரட்டி யாம்நிடக - மிஞ்சுகணம்
திப்பிலி மூலம்நிட கம்சேர்ந்தவகைக் கோரெட்டாம்
ஒப்புநிடக மஞ்சாம்[2] ஒது. **373**

ஓதும் கொடிவேலிவேர் ஒன்றுபட்டை சாதிக்காய்
தீதகலு மாங்காட்டு எருமைப்பால் - வாதுசெய்யு
மேல்முதலாம் வகைக்கோர் நிடகம் ஒன்றேகால்[1]
சாலனெய்யும் எண்பலமாம் சாற்று. **374**

சாற்றுமிஞ்சி யாம்சிறுகத் தானரிந்து நெய்யதனில்
சேர்த்துவறு மேல்பசக்கச் சேர்பொடிசெய்[1] - தோற்றுகற்க
மேன்பொடியிற் சேர்த்திட்டு[2] மீந்தநெய்யும் கூடவிட்டு
தான்கலசம் வையாய் தனித்து. **375**

தனித்திருக்கு மாம்பெயரும்[1] சார்கண்டாத் திரிகம்
தொனித்தருந்த தேன்மொழியீர் சொல்லீர்[2] - அனைவரும்[3]
மந்தாக்கினி கிராணி மாறுசெய்யும் வாயுவும்[4]
வந்தாறிப் போமே மறைந்து. **376**

பாடவேறுபாடு :

பாடல் எண் : *373.* 1 ஈரெட்டுபலம்
2 அஞ்சாகும் ஒது
374. 1 ஏலமுதலாம் வகைக்கோ ரென்ற
375. 1 பொடியாய்
2 சோற்றிட்டு
376. 1 பெரும்
2 சொல்வீர்கள்

3 கனைத்துவரும்
4 வாய்வுமேல்

இதில் கண்டாத்திரிகச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் :	இஞ்சி	- 16 பலம்
	சர்க்கரை	- 16 பலம்
	மிளகு	- 10 பலம்
	திப்பிலி	- 8 பலம்
	திப்பிலிமூலம்	- 5 பலம்
	கொடிவேலி வேர்ப்பட்டை	- 1 1/4 பலம்
	சாதிக்காய்	- 1 1/4 பலம்
	எருமைப்பால்	- 1 1/4 பலம்
	நெய்	- 8 பலம்

செய்முறை : இஞ்சியைத் தோல்சீவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் வறுத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளை பாலில் வேகவைத்து காயவைத்து சூரணம் செய்து இஞ்சித்தூளுடன் கலந்து. மீதமுள்ள நெய்யை யும் அதனுடன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : அக்கினி மந்தம், கிராணி, வாய்வு

கண்டாத்திரிகச் சூரணம் (வேறு)

இஞ்சிபலம் நாற்பதுசீ ரோகணந் தேசாவரங்கள்[1]
மிஞ்சுசுக்கு சீரகமாம் விள்வகைக்கோ - ரஞ்சுபலம்
ஏலமிள கொன்றுக் கேஏந்தும் பலமுக்காலாம்[2]
மாலவங்கத் தோலிவையா மன்[3] 377

மன்னியிடு நெல்லிமுள்ளி வந்தவகைக் கரையாம்[1]
துன்னுபலஞ் சாதிக்காய் சொல்மதுரம் - சொன்னசிறு
நாகப்பூ நல்லவங்கம் நற்றாளி[2] கள்வறுத்துக்
கூகைநீரோர் வகைக்காம்கூறு. 378

கூறுபலம் காலாம்நெய் கொள்படியும்[1] தானரையாம்
ஊறும் சருக்கரையும்[2] ஓர்பத்தாம் - ஏறுபலம்
முந்தவிஞ்சி தானரிந்து மூசுநெய்யில் தான்வறுத்துத்
தொந்தமுடன் இடித்தே தூள். 379

தூளும்பின் கற்கத்தூள் தோன்றவொன்றாய்த் தான்கலந்தா
லாளுங்கண் டாத்திரிக மாம்பெயராம் - கேளுமினி
உண்ணவன்னி மந்தம்போம் உட்டிணமாம்வாயுசயம்
நண்ணும்[1] பைத்தியம்போம் நாடு. 380

பாட வேறுபாடு :

பாடல் எண் : 377. 1 ஏர்கனையோ டொண் மூலம்
2 மேல்மிளகுக் கொன்றுக்கே ஏந்துபல முக்கால்
3 மாலவங்கத் தோலிலையா மன்

378. 1 வகைக்கட்கரையாம்
2 நற்றாளிதான்

379. 1 படிகள்
2 சர்க்கரையள்

380. 1 நண்ணாய், நன்றாய்

இதில் கண்டாத்திரிகச் சூரணத்தின் இன்னுமொரு செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் :	இஞ்சி - **40** பலம்	
	கடுகுரோகணி திப்பிலிமூலம்	வகைக்கு
	சுக்கு சீரகம்	**5** பலம்
	ஏலம் மிளகு வகைக்கு	**3/4** பலம்
	இலவங்கப்பத்திரி	வகைக்கு
	நெல்லிமுள்ளி	**1/2** பலம்
	சாதிக்காய் அதிமதுரம்	
	சிறுநாகப்பூ இலவங்கம்	வகைக்கு
	தாளிசபத்திரி கூகைநீறு	**1/4** பலம்
	நெய் **1/2** படி	
	சர்க்கரை **1** பலம்	

செய்முறை : இஞ்சியைத் தோல் சீவி சிறுக அரிந்து நெய்யில் வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின் இதனையும் மற்ற சரக்கு களையும் இடித்துச் சலித்து சர்க்கரையுடன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பித்தமந்தம், உட்டிணவாயு, சயம், பைத்தியம்.

சிவதைவேர்ச் சூரணம்

மிக்க உயர்சிவதை மேலாந் திரிபலைகள்
தக்கசிறு நாகப்பூ தானேலம் - மிக்கும்

இலவங்கப் பட்டை யிலைவாய் விளங்கம்
குலவும் திரிகடுகாம் கூறு. 381

கூறியது சூரணமாம் கொண்டனிறை பாளிதம்சேர்
தூரிவருஞ் சிவதைத் தூள்மூன்று - வேறுபொடி
ஒன்று மருந்தையிடி லோர்[1] பேதியுமாம்
என்றும் பொடிசரியாம் ஏந்து. 382

ஏந்து பொடியருந்தில் ஓரிரண்டு மூன்றுவிசை
போந்து மலமிறங்கும் பேர்சிவதை[1] - காந்துபொடி[2]
ஒன்றாக மற்றதூள் ஓரிரண்டாய்த்[3] தானருந்தில்
நன்றா மதின்மலம்போம் நாடு. 383

இதில் சிவதை வேர்ச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : சிவதை 3 பங்கு
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சிறுநாகப்பூ ஏலம் இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி வாய் விளங்கம் சுக்கு மிளகு திப்பிலி (வகைக்கு 1 பங்கு)
சர்க்கரை - சரியளவு

செய்முறை : சரக்குகளை வறுத்து சூரணம் செய்து சர்க்கரை யுடன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பயன் : சிவதைத்தூள் ஒரு பங்கும், மற்ற தூள் 2 பங்கு மாக அருந்த அதிக மலம் போகும். மேற்கண்ட சூரணத்தை அருந்த ஒரிரு முறை மலம் போகும்.

பாடவேறுபாடு :
பாடல் எண் : 382. 1 ஓராப்
2 ஆறும் பேதியுமாம்
3 ஒன்றும்
383. 1 போர்சிவதை
2 ஆந்தூளும்
3 மூவெடையாய்

தாடிமமாதிச்சூரணம்

மாதளைநல் கூவிளைதின் வல்விளா வின்பிஞ்சு
தாதளைக் காட் டாத்திப்பூத் தன்கடுகு - சாதிக்காய்
பொன்முசுட்டை முத்தம் புளியவிரைத்[1] தோல் லவங்கம்[2]
துன்னிலவின் மேற்பிசினாம் துப்பு. 384

துப்பிரண்டாம் ஓமம் துலங்குந் திரிகடுகு
வெப்பாலை யின்னரிசி மேலானைத் - திப்பிலிதன்
நாவல்ப் பெருமரத்தோல் நல்லவங்கத் தோலிந்து
மாவின் கழற்சிவிரை மன்னு. 385

மன்னுகருங் காலிவைரம் வெள்ளிலோத் திரந்தான்
பண்ணுநீர் முள்ளிவிரை பார்விடையம் - பின்னுமிரு
சீரகம்கா சுக்கட்டி சேர்சமன தாகவறு
சாரவிள வரையாய்த் தான். 386

தான்விளாவின் கன்னீர் தம்பா[1] லதையரைத்து
தூள்பொடிதா டிமமாதிச்[2] சூரணமாம் - தேன்தயிரில்
கொள்வயிற்றி னுட்கடுப்பும் கூர்வாய்வும் கிராணி
உள்பலநோய் வாய்வும்போம் உன். 387

பாட வேறுபாடு :

பாடல் எண் : 384. 1 புளியமரத்
2 தோல்வங்கம்
386. 1 சாரவிளவறலாந்தான்
387. 1 தப்பாமல் - தான்
2 தாடிமபாதி

இதில் தாடிமமாதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : மாதுளம்பிஞ்சு வில்வப்பிஞ்சு விளாம்பிஞ்சு காட்டாத்திப்பூ சாதிக்காய் பொன்முசுட்டை முத்தக்காசு புளியவிரைத்தோல் இலவங்கம் இளவம்பிசின் ஓமம் சுக்கு மிளகு திப்பிலி வெட்பாலையரிசி யானைத்திப்பிலி நாவற் பட்டை பெருமரப்பட்டை இலவங்கப் பத்திரி இந்துப்பு கழற்சிவிரை கருங் காலிப்பட்டை வெள்ளிலோத் திரம் நீர்முள்ளிவிதை அதிவிடயம் கருஞ்சீரகம் சீரகம் காசுக்கட்டி (சமஅளவு)

செய்முறை : சரக்குகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துக் கொள்ளவேண்டும். விளாம் பழச்சாற்றில் அரைத்து காயவைத்துக் கொள்ளவேண்டும்.

அனுபானம் : தேன், தயிர்

தீரும் நோய் : வயிற்றுக்கடுப்பு, வாய்வு, கிராணி.

திராட்சாதிச் சூரணம்

முந்திரிகை திப்பிலியா மூலந் திரிகடுகு
சந்துகமு னீர்க்கிழங்கு சாதிக்காய் - அந்தமுள்ள
வெட்டிவேர்க் கட்டை விலாமிச்சந் தக்கோலம்
புட்டி லதிமதுரம் போற்று. 388

போற்றுமுத்தஞ் சொல்லிலுப்பைப் பூவேலம் கொத்தமல்லி
ஏத்துந்திரி பலைநெல் ஏந்துபொரி - தோற்றுகின்ற
பற்படகம் கற்சூரம் பச்சைக் கருப்பூரம்[1]
செப்புரையும் கற்கண்டாம் செப்பு. 389

செப்பும் இலவங்கத் திரையஞ் சின்னாகப்பூ
ஒப்பூகான் மேதிப்பால் ஒண்சீராம் - எப்பிணியும்
தீர்க்குமினி தாஞ்சரள தேவதருச்[1] சொன்னதெல்லாம்
சேர்த்துச் சமன்பொடியாய்ச் செய். 390

செய்தநிறை பாளிதங்கள்[1] சேர்த்துத் தினமருந்தின்
கைவயிறு காலெரிவு காண்குட்டம் - நை[2] மூர்ச்சை
நீண்டபித்த பாண்டுசுரம் நீரிரத்தம்[3] பித்தசத்தி
தூண்டுதலை சுத்துகள்போம் சூழ்ந்து. 391

சூழ்ந்திந்த நோய்தீர்க்கும் சூரணத்தின் பெயரதனை[1]
தாழ்ந்த கருங்குழலாய் தானுரைக்கில் - வாழ்ந்திருந்த[2]
திராட்சாதி சூரணமாம் தேசத்தில் யாவருக்கும்[3]
இராப்பகலாய்ச் சொல்வீர் உகந்து.[4] 392

பாடவேறுபாடு :

பாடல் எண் : 389. 1 கற்பூரமொடு
390. 1 தேவதாரு
2 மறை
3 நீளிரத்தம்
392. 1 சூழ்ந்திந்த நோய்காணும் சூரணமாம் இப்பெயர்கள்
2 வாழ்ந்த
3 யாருக்கும்
4 இருந்து

இதில் திராட்சாதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : திராட்சை திப்பிலிமூலம் சுக்கு மிளகு திப்பிலி செங்கழுநீர்க்கிழங்கு சாதிக்காய் வெட்டிவேர் விலாமிச்சைவேர் தக்கோலம் அதிமதுரம் முத்தக் காசு இலுப்பைப்பூ ஏலம் கொத்தமல்லி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் நெற்பொரி பற்பாட கம் பேரீந்து பச்சைக்கற்பூரம் கற்கண்டு இலவங்கம் இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி எருமைப் பால் சீரகம் சரளதேவதாரு (சரியளவு) சர்க்கரை (நேரெடை)

செய்முறை : சரக்குகளை சுத்தித்து இடித்துச் சலித்து சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : கை, கால், வயிறு இவற்றில் தோன்றும் எரிச்சல், குட்டம், மூர்ச்சை, பித்த பாண்டு, சுரம், நீரில் இரத்தம் காணல், பித்தவாந்தி, தலைசுற்றல் இவை தீரும்.

யோகராச குக்குலு

மைசாட்சி ஈரைந்து மாண்புகண்டு மோரைந்து[1]
கையா திருவோமம் காண்செவிய - மெய்வசம்பு
சுட்டபற்பம் வாய்விளங்கம் சுக்குசிறு தேக்கோடு
இட்டயிரு சீரகமாம்[2] ஏந்து. 393

ஏந்து மதிவிடையம் ஏர்சித்திர மூலம்
காந்துபெருங் காயம் கடுகுகறி - சேந்தகெச
திப்பிலி திப்பிலிமூலம்[1] சேருமருட் கிழங்கு[2]
செப்புபங்கம் பாளைவேர் சேர். 394

சேரோகணி தானு[1] தேரினத்துக் கோரரைக்கால்
ஓர்திரிபலைக ளிந்தவகைக் - கோர்முக்கால்
இந்ததொகை[2] பலமாய் இத்தனையும் சூரணம்செய்து
அந்தமுடன் கொள்வாய் அறிந்து. 395

அறிந்திருந்த[1] ரோகங்களாம்[2] நடுக்கும் வாதம்
பிறந்த[3] தனுர்வாதம் பின்மேல்[4] - நிறைந்ததிமிர்
வாதம் புறவீச்சு வன்சோனித வாதம்
தீதுமத வாதமின்னஞ்[5] செப்பு. 396

175

செப்பு சிரோவாதம் சொல்மூத்திரக் கிரிச்சம்
மப்புமுடற் சூலைபோம் வன்பெயர்கள் - இப்புவியில்
வாதயோக ராசகுக்கில் வார்சூரண மிதனை[1]
நீதமுடன் கெள்வாய் நிலைத்து.[2] 397

பாட வேறுபாடு :

பாடல் எண் : 393. 1 கனமோரைமது
2 சீரகமாய்
394. 1 மாமூலம்
2 கருக்கிழங்கு
395. 1 ரேணு
2 தோகை
396. 1 அறிந்திறுத்த
2 ரோகங்கம்ப
3 வாதம்
4 பிறந்த தனுவாதம்
5 வாதமின்னமாஞ்
397. 1 மாயோக ராசமிளகு மூவிரண்டு கோலு
மாயோக ராசகுக்கில் சூரணமாம் மன்னியுணு
மாயோக மின்னே மகிழ்ந்து
2 கடுக்காய் பொடியாங் குண்

இதில் யோகராசக் குக்குலுவின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : மைசாட்சி குங்கிலியம் 10 பலம் கற்கண்டு 5 பலம் ஓமம் அசமதாஓமம் செவியம் வசம்பு சுட்ட சாம்பல் வாய்விளங்கம் சுக்கு சிறுதேக்கு சீரகம் கருஞ் சீரகம் அதிவிடையம் கொடிவேலி பெருங்காயம் கடுகு யானைத்திப்பிலி திப்பிலிமூலம் மருள்கிழங்கு ஆடுதீண்டாப்பாளைவேர் கடுகுரோணி (வகைக்கு 1/8 பலம்) கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் (வகைக்கு 3/4 பலம்)

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து இடித்துச் சலித்து சூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : நடுக்குவாதம், வில்வாதம், திமிர்வாதம், புறவீச்சு, சோணிதவாதம், மதவாதம், சிரோவாதம், மூத்திரக்கிரிச்சம், சூலை.

யோகராசக்குக்குலு (வேறு)

சுத்தி செந்த[1] மை சாட்சிசொல்லு பலம்ரொன்பான்
வெத்திசிறு தேக்கேலம் வேளைவேர் - உத்தயிங்கு
வாய்விளங்கம் பொன்முசுட்டை வாய்த்த திரிகடுகு
தூய் வசம்புவெண் கடுகாஞ் சொல். **398**

சொல்சித்திர மூலம் சூழ்செவியமாங் குடசம்
வல்லதிப்பிலி மூலம் வன்னோமம் - நல்சதுரக்
கள்ளிமருக் காரை காண்டகனி சீரகம்சேர்[1]
புள்ளிவகைக் காற்பலம் பூணு. **399**

பூணுந் திரிபலைகள் போந்தினந்துக் கானாலு
தோணுபல மெல்லாந்தான் சூரணமாய் - காணுந்திசங்[1]
கோல்யோக ராசனெனும் குக்குலுவா மிப்பெயர்கள
ஏல்புடனே இம்மருந்தை ஏந்து. **400**

ஏந்தியுணச் சூலைமு வேழ்மேக வாதங்கள்
காந்திடுமெண் சோணிதமாங் காண்வாதந் - தீந்துவிடு
மால்மருக னேந்துசெய மாசூரனைப் பொருத[1]
வேல்தனையும்[2] வென்றகண்ணாய் விள். **401**

பாட வேறுபாடு :
பாடல் எண் : 398. 1 சுத்திசெய்யு
399. 1 கண்டாங்கணிசீரகம் சேர்
400. 1 காணுந்திசெங்
401. 1 ஞாலமதில் உள்ளோர்க்கு நலமருந்தாகுமிதை சூரணத்தையுமேயருந்த
2 வேலதனை, சூலைமூவேள்

இதில் யோகராச குக்குலுவின் மற்றுமொரு செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : மைசாட்சி குங்கிலியம் - 18 பலம்
சிறுதேக்கு ஏலம் வேளைவேர் இசங்கு வாய்விளங்கம்
பொன்முசுட்டை சுக்கு மிளகு திப்பிலி
வசம்பு வெண்கடுகு கொடிவேலி செவியம் குடசப்
பாலை திப்பிலிமூலம் ஓமம் சதுரக்கள்ளி மருக்காரை
காரை சீரகம் சோம்பு பூண்டு (வகைக்கு 1/4 பலம்)
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் (4 பலம்)

செய்முறை : சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சலித்து சூரணித்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சூலை, 21 மேகம், வாதம், சோணித வாதம் இவை தீரும்.

குக்குலுச் சூரணம்

குக்கி லிருமூன்று சூர்பரங்கித் தோல்நான்கு
தக்கதொரு கெந்தகமும்[1] தானிரண்டு - மிக்கதொரு
தேசாவரமோமம் சித்திரமூ லஞ்சுக்கு
பேசாத வாய்விளங்கம் பின். 402

பின்திப்பிலி சுசுக்கும்[1] பேய்ப்புடோ லொவ்வொன்றுப்
பொன்முசுட்டை செம்புளிச்சைப் பொற்சீரம்[2] - தன்வகைக்கு
ஓரரையாம் ரோகணிசீ ருற்றதிரி பலைகள்
பேரினத்துக் காலாகும்[3] பேசு. 403

பேசுசிவ னார்வேம்பு பீடுடைய வெள்ளறுகு
தேசுசங்கு பூலாத்தி[1] சேர்ந்தவகை - யாசிவரைக்
கால்தொகைகள் நற்பலமாம்[2] கண்டதிந்தத் தூள்பெயர்கள்
மாக்குக்குலு சூரணமாம்[3] மாண்பு. 404

மாண்புடைய பேரருந்தில்[1] வன்னிமந்த மேற்சூலை
வீண்கிரந்தி[2] வாயு விரணங்கள் - காண்பெரிய
என்பதுவாம்[3] வாத[4]முத லெல்லாம் அகன்றுவிடும்
பண்புவியோர்க் கெல்லாம் பகர்.[5] 405

பாட வேறுபாடு

பாடல் எண் : 402. 1 கெந்தகங்கள்

403. 1 சுக்கு
2 பொற்சீராம்
3 பாலாமாம்

404. 1 சங்குகூளாத்தி, சங்கும் மாதவியும்
2 நற்பலங்கள்
3 சூரண

405. 1 பொருந்தில்
2 கீர்த்தி
3 எண்பதுனால்
4 கீழ்வாதம்
5 புகழ்

இதில் குக்குலுச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : குங்கிலியம் - 6 பலம்
பரங்கிப்பட்டை - 4 பலம்
கந்தகம் - 2 பலம்
திப்பிலிமூலம் ஓமம் கொடிவேலி சுக்கு வாய்
விளங்கம் திப்பிலி பேய்ப்புடல்
பொன்முசுட்டை புளிச்சை
சீரகம் வகைக்கு 1/4 பலம்
கடுகுரோகணி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்
காய் வகைக்கு 1/4 பலம்
சிவனார்வேம்பு வெள்ளறுகு சங்கு
பூலாத்தி (வகைக்கு 1/8 பலம்)

செய்முறை : முறைப்படி சரக்குகளைத் தூய்மை செய்து உலர்த்தி இடித்துப் பொடித்து சலித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வன்னிமந்தம், சூலை, கிரந்தி, வாயு, விரணங்கள், 80 வகை வாதநோய்கள் இவை தீரும்.

சிங்காதிச் சூரணம்

கற்கடக சிங்கிகடுக் காய் கண்டங் கத்திரிவேர்
நற்சிறு தேக் காம ணக்கின் நல்வேர்கள்[1] பொற்சடா
மாஞ்சி திரிகடுகு மாசகலு மிந்துப்பு
தேஞ்சபெருந் தானிக்காய் செப்பு. 406

செப்புமிது[1] சமனாய்ச் சேர்ந்திடித்த யோகப்போர்[2]
சொல்புவியில்[3] சிங்காதி சூரணமாம் - ஒப்பியுண்
கக்குவான் பீனிசங்கள் காச சுவாசசயம்
விக்கலுடன் வாய்வும்போம் விண்டு.[4] 407

இதில் சிங்காதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : கற்கடகசிங்கி கடுக்காய் கண்டங்கத்தரிவேர் சிறு தேக்கு ஆமணக்குவேர் சடாமாஞ்சில் சுக்கு மிளகு திப்பிலி இந்துப்பு தான்றிக்காய் (வகைக்கு சமஅளவு)

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை சுத்தம் செய்து பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : கக்குவான், பீனிசம், காசம், சுவாசம், சயம், விக்கல்

பாட வேறுபாடு :

பாடல் எண் : 406. 1 வேர்கள்

407. 1 செப்புமிவை

2 தேர்ந்த யோகப்பேர்

3 சேர் புவியில்

4 விள்

சூரணராசன்

காய்மிளகு மஞ்சள் காவேளைவேர் வாள்[1] நொச்
சியின்வேர்[2] பொன்முசுட்டை வேர்ஓமம் - தூயவிரு
சீரகம்வெண் சாரணைவேர் சேர்ந்த[3] திரிபலைகள்
ஏர்பஞ்ச கோலமாம் ஏந்து. 408

ஏந்தநில வேம்பொடு எவச்சார மஞ்சுப்பு
சேந்த வறட் சுண்டிகெச திப்பிலியும்[1] - போந்தபுங்கு
வேர்கருணை யின்கிழங்கு மேலலவங்க மாமணக்கு
சேர்மரத்தின்[2] மஞ்சளாஞ் சீர்.[3] 409

சீர்சத்தி சாரஞ்செறிந்த[1] அதிவிடையம்
வார்பெரிய தாங்குறிஞ்சா வன்வேர்கள் - சேர்சமமாம்[2]
தூள்[3] சூரண ராசன் சொன்னோம் நாமிம்மருந்து[4]
நீள்வாத[5] குன்மம்சயம் நீற்று. 410

நீற்றுசல கூர்கம்பம் நீள்பாண்டு பலிகைதான்
சீற்ற பஞ்சகாசம் சலக்கோர்வை ஏற்றமுள்ள
வாதபித்த சேத்துமம் வருஞ்சோபை உன்மாதம்
தீதுசிரோ வாயுசுரம் தேர்ந்து. 411

தேர்கவிசை வன்னிமந்தத் தேர்ந்த[1] சிறுபுழுக்கள்
சேர்[2] சூலை ஓங்கு சலோதரங்கள்[3] - போர்புரிந்து
தாக்கும்[4] சீரணங்கள் தான்சருவ ரோகமுமே
நீக்குமிதற்[5] கொப்பில்லைகா ணேர். 412

பாடவேறுபாடு :

பாடல் எண் : 408. 1 காவிள வாளம்

2 ஈயவேர், யேயவேர்

3 சீராம்

409. 1 திப்பிலிதன்

2 மாரவேர்

3 சேர்ஓமம் மஞ்சளாஞ் சீர்

410. 1 எவச்சாரம் சிறந்த, சேர்ந்த
2 சேர்சமனாய்
3 தூளா
4 நாமிருந்து, கேழின்மருந்து
5 கீழ்வாத
411. 1 சாற்று
2 சொல்கோர்வை
3 தேர்
412. 1 தீரா
2 கார்
3 சிரரோகங்கள்

இதில் சூரணராசன் எனும் சூரணத்தின் செய்முறை கூறப் படுகிறது.

சேரும் சரக்குகள் : மிளகு மஞ்சள் முட்காய்வேளை நேர் வாளம் நொச்சிவேர் பொன்முசுட்டை வேர் ஓமம் சீரகம் கருஞ்சீரகம் சாரணைவேர் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சுக்கு திப்பிலி திப்பிலி மூலம் செவியம் சித்திரமூலம் நிலவேம்பு எவச்சாரம் இந்துப்பு கல்லுப்பு கறியுப்பு வளையலுப்பு வெடி-யுப்பு வறட்சுண்டி யானைத் திப்பிலி புங்குவேர் கருணைக் கிழங்கு இலவங்கம் ஆமணக்குவேர் மரமஞ்சள் சத்திச்சாரம் அதிவிடையம் குறிஞ்சாவேர் (சமஅளவு)

செய்முறை : முறைப்படி சரக்குகளைச் செய்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வாத குன்மம், சயம், சலக்கம்பம், பாண்டு பீலிகை, 5 வகை காசம், நீர்க்கோவை, உன்மாதம் தலைநோய், சுரம், கவிசை, வன்னிமந்தம், வயிற்றுப்புழு, சூலை, சலோதரம், அசீரணம் ஆகிய அனைத்து நோய்களும் தீரும்.

கந்தகச் சூரணம்

கந்தகந்தான் அஞ்சுபலம் கேடில் திரிகடுகு
சிந்து சாதுர்சாத திரிபலைகள் - செந்தே'ன்

அடருசிறு நாகப்பூ வஞ்சு நிடகம் பச்சைப்
படலைப் பலமிரண்டாம் காண். 413

காணிறைக்குத் தான்சர்க்கரை கலந்த சூரணப்பேர்
பூணகெந்தக நாமம் போற்றியுணில் - நீண்மேகம்
உள்ளதெல்லா[1] மேகுமுடல்[2] கலந்த வாதமும்போம்
கள்ளமருங் கோதாய் கருது. 414

இதில் கந்தகச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : கந்தகம் - 5 பலம்
சுக்கு மிளகு திப்பிலி ஏலம் இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் பச்சைக்கடலை (வகைக்கு 2 பலம்)

செய்முறை : சரக்குகளை சுத்தம் செய்து இடித்துச் சலித்து பத்திரப்படுத்த வேண்டும்.

தீரும் நோய்கள் : மேகம், வாதம்

குறிப்பு : இதில் சாதுர் சாதத்தில் ஒருமுறையும் தனியே ஒரு முறையும் ஆக இருமுறை சிறுநாகப்பூ கூறப் பட்டுள்ளது.

பாட வேறுபாடு :

படல் எண் : 413. 1 செந்தேன்
414. 1 எல்லாம்
2 ஏகும்

கந்தகச் சூரணம் (வேறு)

கந்தகந்தான்[1] ஆறுபலம் கேள்சித்திர மூலம்
வந்ததிரி பலைகள் வாய்விளங்க - நந்தேலஞ்[2]
சேந்த திரிகடுகு சீர்லவங்கப் பட்டையிலை
காந்து சேங்கொட்டைக்[3] கருது. 415

கருதுவகை ஒன்றுக்குக்[1] காண்பலங்கள் ஒன்றாம்[2]
தருசூரணப் பெயரும்[3] சாற்றில் - இருநிலத்தில்
கந்தகச் சூரணமாம்[4] கேட்டீ ரிதைநெய்தேன்
அந்தவெண்ணெய் சர்க்கரையி லாதல்.[5] 416

ஆதரித்துக்[1] கொண்டவுடன் அட்ட குன்மம் வன்னிமந்தம்
தீதுகுட்டம்[2] தன்மூத் திரகிரீச்சம் - பேதமல[3]
பந்த[4] மகோதரங்கள் பாறிவிடும் பின்னுடலில்[5]
அந்தி[6] பெலம் உண்டாம் அடர்ந்து.[7] 417

அடர்ந்தபரி யோட்டமா யோடே நாளும்
படர்ந்தவிண்ணிலெங்கும் பறக்கும்[1] - தொடர்ந்தவெகு
தையலரைக் கூடியிட[2] தாதுவிர்த்தி காயசித்தி
மெய்யடா உண்டாம் விளம்பு. 418

பாட வேறுபாடு :

பாடல் எண் : 415. 1 கெந்தகமோ, கந்தகங்கள்
2 நந்தேலம்
3 செங்கொட்டை
416. 1 தனக்கு
2 ஒன்றாகும்
3 பெயர்கள்
4 நற்சூரணமாம்
5 ஆம்
417. 1 ஆமன்பாய்
2 தீம்புகுட்டம்
3 தேம்புமல
4 பத்த
5 பாள்கிராணி பாரியும்பின்
6 அத்தி
7 வந்தபிலமா மடர்ந்து
418. 1 பரிக்குற்
2 கூடுதற்கு

இதில் கந்தகச் சூரணத்தின் மற்றொரு செய்முறை கூறப்படுகிறது.

சேரும்சரக்குகள் : கந்தகம் - 6 பலம்
சித்திரமூலம் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்
வாய்விளங்கம் ஏலம் சுக்கு மிளகு திப்பிலி இலவங்
கப்பட்டை இலவங்கப்பத்திரி சேராங்கொட்டை

அனுபானம் : நெய், தேன், வெண்ணெய், சர்க்கரை

தீரும் நோய்கள் : எட்டுவித குன்மம், வன்னிமந்தம் குட்டம் மூத்திரக் கிரிச்சம், மலக்கட்டு, மகோதரம் இவை தீரும், உடல் பலமுண்டாகும். தாதுவிருத்தியும், காய சித்தியும் உண்டாகும்.

சௌபாக்கிய சொண்டிச் சூரணம்

சுக்குநான் கைந்துபலம் தோல்சீவியே யதனைத்
தொக்குகண்டங் கார்துளசி தூதுவளை - தக்கநுணா
நொச்சி எருக்கு நுவலுங் கையாந்தகரை
மிச்சமுள்ள சாரணையா மேல். 419

மேல்வாசை யாமிலைகள் மேவுனீர் புங்கம்வேர்ப்
பால்முருங்கைப் பட்டையினீர் பாவனைசெய் - எல்லாம்[1]
தனித்தனிநீர் கொண்டுநாள் தானிடித்துத் தூளை
இனிக்கு[2] எலும் பிச்சனீ ரிஞ்சி. 420

இஞ்சியந்த நீரிரண்டு மேற்றுமொவ்வோர் நாளாய
மிஞ்சிடவே பாவனைசெய் மேற்கற்க - மெஞ்சிடவே
பாரங்கி வாய்விளங்கம் பார்திப்பிலி மூல
மேருந் திரிகடுகா மேர். 421

ஏரேலம் ஓமம் இலவங்கத் தோலிலைகள்
சீருளந் தாளீசந் திரிபலைகள் - தேரும்
இருசீரகம் வகைக்கே ஏந்துபல மொன்றாய்
வருசூரணங் கலந்தே வை. 422

வைத்து வெருகடிகை வாங்கித் தினமருந்தில்
உத்ததொரு சூசிகையா மோர்வாய்வாங் - கொத்தாய்
புவனமெல்லா மோடும் பொருந்து பொடிபெயர்கேள்
சவுபாக்கிய சொண்டிஎனச் சாற்று. 423

சாற்று மசீரணங்கள் சார்குன்ம ரோகங்கள்
கூற்று சூலைநோயும் கொள்பேதி - யாற்றலியவா
சீதசுர மந்தசுரம் செந்திருவே மற்றசுரம்
காதவழி போமே கடிந்து. 424

பாட வேறுபாடு :

பாடல் எண் : 420. 1 ஏலம் எலாம் தனித்தனியாய்
2 சினக்கும்
423. 1 பொடிப்பெயராம்

இதில் சவுபாக்கிய சொண்டிச் சூரணச் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : தோல் சீவிய சுக்கு (20 பலம்) கண்டங்கத்திரிச் சாறு துளசிச்சாறு தூதுவளைச் சாறு நுணாச்சாறு நொச்சிச்சாறு எருக்கஞ் சாறு கையாந்தகரைச் சாறு சாரணைச் சாறு ஆடாதொடைச் சாறு புங்கப்பால் முருங்கப்பட்டைச் சாறு எலுமிச்சைச் சாறு இஞ்சிச் சாறு (சம அளவு)

மேற்கண்ட சாறுகளில் இஞ்சியை ஒவ்வொரு நாள் ஊற வைத்து எடுத்து உலர்த்தி சூரணித்துக் கொள்ள வேண்டும்.

பரங்கிப்பட்டை வாய்விளங்கம் திப்பிலிமூலம் சுக்கு மிளகு திப்பிலி ஏலரிசி ஓமம் இலவங்கப்பட்டை இலவங்கப் பத்திரி தாளிசபத்திரி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சீரகம் கருஞ்சீரகம் (வகைக்கு 1 பலம்)

இச்சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து சூரணித்து மேற்கண்ட இஞ்சி சூரணத்துடன் கலந்துகொள்ள வேண்டும்.

அளவு : வெருகடி

திரும் நோய்கள் : சூசிகாவாயு, அசீரணம், குன்மம், வயிற்று நோய், பேதி, சீதசுரம், மந்தகரம், மற்ற சுரங்களும் அகன்று போகும்.

சமன் சூரணம்

இந்துப்புக் காயம் எவச்சாரங் கல்லுப்பு
வந்தகடுக் காய்சுக்கு வாய்விளங்கம் - நந்துசத்திச்
சாரங் கொடிவேலி சர்திப்பிலி நிலத்தில்
ஆரும்[1] குரோசாணி ஓமம். 425

ஓமமுதற் சமனாய் உள்வறுத்த[1] தூள்சோற்றில்
நேமமுட னெய்யுடனே நித்தமுணில்[2] தாமவன்னி
மந்த மசீரணங்கள் மாறும்பித்தம் பாண்டுகுன்மம்
வந்தவயி றுப்பல்கா மாலை.[3] 426

மாலையல்லாற் காச மருவு சுவாசங்கள்
சூலை விசூழி[1] துறந்தோடும் - சாலவுந்தான்

சிக்குமல சுத்தியாம் சேர்தூளின் பேருமது[2]
மிக்கசமன் சூரணமாம் விள். 427

பாட வேறுபாடு :
பாடல் எண் : 425. 1 ஊரும்
426. 1 உள்வறுப்பாம்
2 நித்தமுனிரத
3 அந்தவயறுப்பலு மாலை
427. 1 விசூகை
2 சேந்தத்தூள் பெயர்கள்

இதில் சமன் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : இந்துப்பு பெருங்காயம் எவச்சாரம் கல்லுப்பு கடுக்காய் சுக்கு வாய்விளங்கம் குரோசனி ஓமம் (சம அளவு)

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை வறுத்துத் தூள் செய்து கொள்ள வேண்டும்.

பயன்முறை : சூரணத்தை சோற்றுடன் நெய் கலந்து உண்ண வேண்டும்.

தீரும் நோய்கள் : வன்னிமந்தம், அசீரணம், பித்தம், பாண்டு, குன்மம், வயிற்றுப்பிசம், காமாலை, காசம் சுவாசம், சூலை, விசூழி இவை தீரும், மலசுத்தி ஆகும்.

முத்தாதிச் சூரணம்

கோரைக் கிழங்கு கொடிவேலி வாய்விளங்கம்
தூரு[1] விலாம் பிச்சஞ் துதிசந்து - பார்சாதிக்
காய்சரள்[2] தேவதரு காய்திப்பிலி மூலம்
தேய்சிறு னாகப்பூவாம் தேர். 428

தேர்சா துர் சாதம் திரிகடுகு தீன்மதுரம்
பாரசுவ கெந்தி பருங்கிழங்கு[1] - ஏறுங்
கிரந்தி தகரம் கிளருமிது வெல்லாம்
தெரிந்துசம னிறைத்தூள் செப்பு. 429

செப்பு மிதற்குநிறை[1] சேரும் சர்க்கரையாந்
தப்புவார் நற்கருப்பஞ் சாறுவிட்டு - செப்பமுடன்

பாவனைசெய் தேநிழலிற் பாகமுட னுலர்த்திக்
கோவினுட நெய்யதிலே கொள். 430

கொள்ளத்தான் காந்திபலம் கூட்டுமெய்யில் ரெத்த முண்டாம்
விள்ளுகுட்டஞ் சோபை வெறிவாந்தி - தள்ளுபித்த
பாண்டுகள் ரோகம் பாறியிடும் முத்தாதி
பூண்டதொரு சூரணமாம் போற்று.[1] 431

இச் சூரணத்தில் சிறுநாகப்பூ இருமுறை கூறப்பட்டுள்ளது.

பாடவேறுபாடு:

பாடல் எண்: 428. 1 தூதி
2 சாலந்
429, 1 பருந்தோலு
430. 1 நிகர்
431. 1 பூரணமாம் பொற்பு

இதில் முத்தாதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : கோரைக்கிழங்கு கொடிவேலி வாய் விளங்கம் விலாமிச்சம் வேர் சந்தனச் சிராய் சாதிக்காய் சரளதேவதாரு திப்பிலிமூலம் சிறுநாகப்பூ இலவங்கப் பட்டை இலவங்கப்பத்திரி ஏலம் சுக்கு மிளகு திப்பிலி அதிமதுரம் அமுக்கராங் கிழங்கு கிரந்திதகரம் (சம அளவு) சர்க்கரை - நேரளவு

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை சுத்தித்து இடித்துச் சூரணித்து சர்க்கரை கலந்து பின் கருப்பஞ் சாறு விட்டு நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : நெய்

தீரும் நோய்கள் : உடல் பலம் உண்டாகும், உடலில் இரத்த விருத்தி உண்டாகும், குட்டம், சோபை, வெறி நோய், வாந்தி, பித்தபாண்டு இவை தீரும்.

சாரணைவேர்ச் சூரணம்

சாரணைவேர் முற்றனதைத் தான்கரணை யாய்நறுக்கிப்
பாறுபசு வெள்ளாட்டுப் பாலாதல் - மீறிவிட்டுச்

சூழெரியில் வேகவைத்தே சுத்தி நிழலுலர்த்தி
ஏழுதரம் அப்படியே ஏற்று. 432

ஏற்றியபின் சூரணமாய் ஏந்திவெல்லம் நெய்யாதல்
போற்றியுணப் பாண்டுகுன்மம் போர்வாய்வுச் - சாற்றியிடு
துன்மாங்கிச மருசி சூழும கோதரங்கள்
வன்காச குட்டமும்[1]போம் வாடி. 433

இதில் சாரணைவேர்ச் சூரணம் கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் :
செய்முறை : முற்றியச் சாரணைவேரை கரணைகளாக நறுக்கி பசுவின் பால், வெள்ளாட்டுப் பாலில் தனித் தனியே மூழ்கும்படி விட்டு வேக வைத்து எடுக்க வேண்டும். இவ்விதம் ஏழுமுறை செய்ய சுத்தியாகும் பின் இதனை உலர்த்தி, இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : வெல்லம், நெய்
தீரும் நோய்கள் : பாண்டு, குன்மம், வாய்வு, துன்மாங்கிசம், ருசி யின்மை, மகோதரம், காசம், குட்டம் இவைகள் வாடிப்போகும்.

பாட வேறுபாடு :
பாடல் எண் : 432, 1 ஊறவிட்டு
433, 1 சயமும்

கற்சூராதி சூரணம்

கற்சூர மிந்துப்புக் காண்சடா மாஞ்சிமஞ்சள்
நற்சீரகம் கோட்டம் நல்லசந்து - தற்கோலம்
குங்குமப்பூ நெல்லிமுள்ளி கொத்தமல்லி சாதிக்காய்
தங்குஇலுப்பைப் பூமதுரம் சாற்று. 434

சாற்று சாதுர்சாதந் தான்தாளிச விலைகள்
தோற்று சிறுனாகப்பூச் சொல்விடையம் - போற்றுசிலா
சித்து தகரந் திரட்சை[1] யசுவகெந்தி
வித்துகருங் காலித்தோல் விள். 435

விள்கூகை நீறும் விளங்கும் ரேணுகமும்[1]
பின்வாழைப் பூவத்திப் பிஞ்சுமுத்த - முள்சீந்தில்

ஆடாதோடைக் கொழுந்தோ டாங்கசக்கும் வேப்பீர்க்கு
காடாரு[2] சீனக கந்தம்.[3] 436

கந்தமுள்ள வேர்பொன்னாங் காணிசிறு பூளைவேர்
விந்தைவிலாம் மிச்சைவேர்[1] வெட்டிவேர் - தந்தசிறு
கீரை நெருஞ்சி வேர்ப்பாற் குமிழவேர்[2]
மேரைகழு னீர்க்கிழங்காம் மெய்.[3] 437

மெய்யாகுமேதண்ணீர் விட்டான் கிழங்குசமன்
கையால் இடித்துப்பொடி காரணப்பேரி - தையாகற்
சூராதி சூரணமாம் சொல்நெருஞ்சி குடிநீர்
வேராரும்[1] தாழை விழுது. 438

விழுனீரி னீத்திருக்கும்[1] மெய்பச் சரிசிக்[2]
கழுநீ ரில்அருந்தக் காணும் - கழல்கரங்கள்[3]
மெய்யெரிவு நீர்க்கட்டு மேன்மூத்திரக் கிரீச்சம்
துய்யபெண்கள்[4] யோனிபெருஞ் சூலை.[5] 439

பாட வேறுபாடு :

பாடல் எண் : 435. 1 திராய்

436. 1 ரேணுகங்கள்
2 காடாசுவ, காடாசுவ கெந்திகந்தம்
3 காடாரு கனகந்தங் காண்

437. 1 விலாம்பிச்சை
2 கேள்பார்க்குமிளவேர்
3 கிழங்காமே

438. 1 தேராரும், வேரருந்த

439. 1 னீர்த்திருக்கும்
2 மெய்யாமரிசி
3 கழலங்கள்
4 தைய்யலார்
5 யோனி சூலைதான்

சூலையல்லால் மங்கையர்க்குத் தோன்றிரத்த[1] மேகங்கள்
மேலை இருபது மேகங்கள் - சாலலிங்கத்
தோடமுதல் தானதும்போம் தோகையரே இம்மருந்தை
நாடிடுவாய் சொன்னோம் நயந்து. 440

இதில் கற்சூராதிச் சூரணத்தின் செயல்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : பேரீந்து இந்துப்பு சடாமாஞ்சில் மஞ்சள் சீரகம் கோட்டம் சந்தனம் தக்கோலம் குங்குமப்பூ நெல்லிமுள்ளி கொத்தமல்லி சாதிக்காய் இலுப் பைப்பூ அதிமதுரம் இலவங்கப்பட்டை இலவங் கப்பத்திரி சிறுநாகப்பூ ஏலம் தாளிசபத்திரி அதி விடையம் சிலாசத்து கிரந்திதகரம் திராட்சை அசுவகந்தி கருங்காலிப்பட்டை கூகைநீறு மிளகு வாழைப்பூ அத்திப்பிஞ்சு முத்தக்காசு சீந்தில் ஆடாதோடை வேப்பீர்க்கு பரங்கிப்பட்டை பொன்னாங்காணி சிறுபூளைவேர் விலாமிச்சை வேர் வெட்டிவேர் சிறுகீரை நெருஞ்சில் வேர் குமிழ்வேர் செங்கழுநீர்க்கிழங்கு தண்ணீர் விட் டான்கிழங்கு (சம அளவு)

குறிப்பு : இம்முறையிலும் இருமுறை சிறுநாகப்பூ கூறப்பட்டுள்ளது.

பாட் வேறுபாடு :

பாடல் எண் : 440. 1 தோன்றுகிற

செய்முறை : சரக்குகளை சுத்தித்து இடித்துச் சலித்து பொடி யாக்கி வைத்துக்கொள்ளவேண்டும்.

அனுபானம் நெருஞ்சில் குடிநீர், தாழைவிழுது நீர், பச்சை யரிசி கழுவிய நீர்.

தீரும் நோய் : கைகால் எரிச்சல், உடல் எரிவு நீர்க்கட்டு மூத்திரக் கிரிச்சம் யோனிச்சூலை 20 வகை மேகம், ஆண்குறி நோய்கள்.

தாபவனலச் சூரணம்

அசமோத மைந்துப் போடான்[1] மரமஞ்சள்
நிசதிப்பிலி மூலம் நீளு - மிசைமஞ்சள்
முள்ளிகண்டம்[2] வேர்கோட்ட முத்தஞ்சிறுதேக்கு
துள்ளுமிரு சீரகமாஞ் சொல். 441

சொல்லும் திரிகடுகு தோன்று திரிபலைகள்
வல்லகெச திப்பிலியாம் வாய்விளங்கம் - நல்லபெருங்
காயம் கொடிவேலி காந்தவிடையம்[1] செவியம்
தூயசத்தி சாரந் துடங்கு.[2] 442

துடங்கும்[1] எவச்சாரம் துலங்கு பங்கம்பாளை
அடங்கு[2] பெருமரத்தோ லல்லால் - துடங்கு[3] வளர்
வெப்பாலை தன்னரிசி விள்பொடிக்கு சர்க்கரைசேர்
தப்பாமல் ஒன்றாகத்[4] தான். 443

தான்சூரணப் பெயர்கள் தாபா வனலமென்
ஆனெய்யி[1] லுண்கில் அசீரணங்கள்[2] - மேன்சூலை
சீதசுர பாண்டு திமிர்வாயு வாந்திசன்னி
பேத[3]சுவா சங்காசம் பேசு. 444

பேசும் சயமிருமல் பேதிகிராணீ குன்மம்
மாசடருங்[1] காமாலை வாயூதல் - தேசகலு
மூலமுத லானதும்போ முன்னீ ்ரதிற் பிறக்கு
மால்விழி நல்லா யறி. 445

பாட வேறுபாடு :

பாடல் எண் : *441.* *1* போடன, பேரிரண்டான
2 முள்ளுகண்டம்
442. *1* காயவிடையம்
2 துடர்
443. *1* துடரும்
2 அடரும்
3 துடங்கி
4 மூன்றிலொன்றாம்
444. *1* பார் நெய்யில்
2 சிரணங்கள்
3 பேதி
445. *1* மாசடங், மாசாட்டங்

சேரும் சரக்குகள் : அசமதாஓமம் கல்லுப்பு கறியுப்பு வளையலுப்பு வெடியுப்பு இந்துப்பு மரமஞ்சள் திப்பிலிமூலம் மஞ்சள் முள்ளிவேர் கோட்டம் முத்தக்காசு சிறு தேக்கு கருஞ்சீரகம் சீரகம் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் யானைத் திப்பிலி வாய்விளங்கம் பெருங்காயம் கொடி வேலி அதிவிடையம் செவியம் சத்திச்சாரம் எவச்சாரம் ஆடு தீண்டாப்பாளை பெருமரத் தோல் வெட்பாலை அரிசி சம அளவு
சர்க்கரை - நேரளவு

செய்முறை : சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சலித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : பசு நெய்

தீரும் நோய்கள் : அசீரணம், சூலை, சுரப்பாண்டு, திமிர் வாயு, வாந்தி, சன்னி, சுவாசகாசம், சயம், இருமல், பேதி, கிராணி, குன்மம், காமாலை, வாயூறல், மூலம்.

காற்பாசயாதிச் சூரணம்

கானப்பருத்தி வித்தேலம் கமழ்[1] முன்னை வேர் கணங்கள்[2]
தானெற் பொரிசமனாய் தந்தபொடி - மேனிதற்குச்
சர்க்கரைநேர் கூட்டியுணச் சத்திகள்போம் காற்பாசயாதி
மிக்கதொரு சூரணமாம் விள். 446

இதில் காற்பாசயாதிச் சூரணத்தின் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : பருத்திவிதை ஏலரிசி முன்னைவேர் நெற்பொறி சமஅளவு சர்க்கரை சரியளவு

செய்முறை : சரக்குகளைச் சூரணம் செய்து சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய் : வாந்தி.

குறிப்பு : இப்பாடல் த. ப. சு. சுவடி 1305ல் சந்தனாதிச் சூரணத்தை அடுத்து உள்ளது.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 446. 1 கமள, கம்பூ, கால்
2 கணமும்

சந்தனாதிச் சூரணம்

நற்சந்தனங் கோட்டம் நன்னாரி ரோகணியும்[1]
கற்பூரம் சீந்திமுத்தக் காசுமஞ்சள் - பொற்பிலுப்பைப்
பூமுந்திரி மதுரம் பூலாங் கிழங்கேலம்[2]
தாமுளரித் தன்வளையம் தான். 447

தானெய்தற்[1] கீழ்க்கிழங்கு தாங்கு மரமஞ்சள்
கானவிலா மிச்சை னெல்லி காய்வற்றல் மானனையீர்

சொன்னசமன் தூள்தனக்குத் தூயசர்க் கரைசமனாய்
தன்னிலிடும் யோகப்பேர் சாற்று. 448

சாற்றுசந்த னாதியென்னும் சூரணமாந் தான்வெண்ணெய்
ஏற்றபசும் பாலிலுண்ண[1] வென்னேரம் - முற்றியிடும்
சீயிரத்த மேக மிருபதும்போம் தீராத
வாயுரத்தம் பித்தமும்போம் வாங்கி. 449

பாட வேறுபாடு :

பாடல் எண் : 447. 1 ரோகனிநீள்
2 கிழங்கெல்லா
448. 1 தானாம் நெய்தற்
449. 1 பாலிலிட

சேரும் சரக்குகள் : சந்தனம் கோட்டம் நன்னாரி கடுகு ரோகணி கற்பூரம் சீந்தில் முத்தக்காசு மஞ்சள் இலுப்பைப்பூ முந்திரி அதிமதுரம் பூலாங்கிழங்கு ஏலரிசி தாமரை வளையம் நெய்தற்கிழங்கு மரமஞ்சள் விலாமிச்சை வேர் நெல்லிவற்றல் (சம அளவு)
சர்க்கரை (சரியளவு)

செய்முறை : சரக்குகளைச் சுத்தி செய்து இடித்துச் சலித்துச் சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்

அனுபானம் : பசுவின் பால்

தீரும் நோய்கள் : சீமேகம், இரத்தமேகம், முதலான 20 வகை மேகம், வாயு, இரத்த பித்தம்.

தாசணப் பொடி

கொம்பரக்கு மாசிக்காய் கூறுகொடுக் காய்புளிசீர்
பம்புபடிக் காரம் பகர்துருசி - நம்புவகைக்
கொன்றாம் வராகனெடை ஓர்கடுக்காய்த் தான்றிக்காய்
குன்றா தரப்பொடி[1] தான்கூறு. 450

கூறுதனக் காழுன்று கொல்நிட கந்தாமெலுமிச்ச[1]
ஊறுரசம் விட்டே உலரவே - வீறாய்
அரைத்தபொடி தாசணையாம் அன்னமே பல்லிலுள்[2]
உரைத்தந்த ரோகம்போம் முன். 451

சேரும் சரக்குகள் : கொம்பரக்கு மாசிக்காய் கொடுக்காப்புளி படிகாரம் துருசு (வகைக்கு 1 வராகனெடை)
கடுக்காய் தான்றிக்காய் அரப்பொடி (வகைக்கு 1 பலம்)

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை எலுமிச்சம்பழச் சாற்றில் பாவனை செய்து காயவைத்து பின் இடித்துச் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : பல் நோய்கள்

பாட வேறுபாடு :
பாடல் எண் : 450. 1 குன்றாதரைப் பொடி
451. 1 நிடகந்தபிச்சை
2 ஏறா

சாரத்தூலாதிச் சூரணம்

வன்சித்திர மூலம் வந்திப் பிலி[1] ஓமம்
நன்மிளகு கொத்துமல்லி நற்சீராம் - பொன்முசுட்டை
இங்குசடா மாஞ்சி ஏர்திப் பிலிமூலம்
பொங்குகட லைந்துப்பாம் போற்று. 452

போற்றுபொடி வன்னிமந்தம் போர்புரியும்[1] குன்மபித்தம்
மாற்றலதி சார மசீரணங்கள் - மாற்றுமந்த[2]
மேலான யோகப்பேர் மேதினியி லோதுசாரத்
தூலாதிச் சூரணமாம் சொல். 453

இதில் சாரத்தூலாதிச் சூரணம் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : கொடிவேலி திப்பிலி ஓமம் மிளகு கொத்துமல்லி சீரகம் பொன்முசுட்டை சடாமாஞ்சில் திப்பிலி மூலம் கல்லுப்பு கறியுப்பு இந்துப்பு வளையலுப்பு வெடியுப்பு (சம எடை)

செய்முறை : சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சூரணித்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வன்னிமந்தம், பித்த குன்மம், அதிசாரம், அசீரணங்கள்

பாடவேறுபாபாடு :
பாடல் எண் : 452. 1 வார்திப்பிலி

453. 1 போர் புரிய
2 ஏற்றுமந்த, மாற்றுமந்தம்

திப்பிலியாதிச் சூரணம்

கணமிளகு சுக்கு கடுகுமுத்தக் காசு
மணனெல்லிக் காய்வற்றல் மஞ்சள் - துணர்கடுக்காய்
தான்றியிலைக் கள்ளிவேர் தானா மரமஞ்சள்
ஊன்றிவளர் செவ்வியம் ஓது. 454

ஓதியிடு சூரணப்பே ரோர்திப் பிலியாதி
நிதியுடன் நெய்யிலுண்ண நேர்கவிசை - மோதுசயம்
வாந்திவிக்கல் குட்டம் வளர்பீலிகை சோபை
சேந்தவெப்பு நீராமை தேறு. 455

தேறு குடல்வாதம் செறிமூலம் சென்னிநோய்
ஊறும கோதரங்க ளுற்ற குளிர் - மீறுசுரம்
வன்னுதர்[1] தோடமெல்லா மாறியிடு இம்மருந்தை
நன்னுதலே கொள்வாய் நயந்து.[2] 456

பாடவேறுபாடு :
பாடல் எண் : 456. 1 வன்னமகா
2 உகந்து

சேரும் சரக்குகள் : திப்பிலி மிளகு சுக்கு கடுகு முத்தக்காசு நெல்லி வற்றல் மஞ்சள் கடுக்காய் தான்றிக்காய் இலைக் கள்ளிவேர் மரமஞ்சள் செவ்வியம் (சம அளவு)

செய்முறை : சுத்தித்து முறைப்படி சூரணித்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம் : நெய்

தீரும் நோய்கள் : கவிசை, சயம், வாந்தி, விக்கல், குட்டம், பீலிக நோய், சோகை, வெப்பு, நீராமை, குடல் வாதம், மூலம், தலைநோய், மகோதரம், குளிர்சுரம், வயிற்றைப் பற்றிய தோடம் இவை மாறும்.

அசுவகெந்தாதிச் சூரணம்

கண்டங்கார் முள்ளி கருஞ்சா ரணைஓமம்
திண்டங் கொடிவேலி திரிகடுகு - மண்டுமெவச்

சாரம் திரிபலைகள் தன்திப் பிலிமூலம்
பாரங்கு ஐந்துப்பாம் பார். 457

பார்சத்திச் சாரம் பகருமிரு சீரகங்கள்
ஓர்வகைக்குக் கால்பலமா உற்றசமன் - சீரசுவ
கெந்திகந்தந்[1] தான்கலந்து கண்டபொடி[2] நெய்யிலுண
வந்தபித்தம் போமே வணங்கி. 458

சேரும் சரக்குகள் : கண்டங்கத்திரிவேர் முள்ளிவேர் சாரணை ஓமம் கொடிவேலி சுக்கு மிளகு திப்பிலி எவச்சாரம் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் திப்பிலிமூலம் வளையலுப்பு இந்துப்பு கறியுப்பு கல்லுப்பு வெடியுப்பு சத்திச்சாரம் சீரகம் கருஞ்சீரகம் (வகைக்கு 1/4 பலம்)
அமுக்கரா (சம அளவு)

செய்முறை : சுத்தி செய்ய வேண்டிய சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து காய வைத்து வறுத்து இடித்துச் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : நெய்யில் உண்ண பித்தம் போகும். இஞ்சிச்சாறு தேன்

தீரும் நோய்கள் : பித்தம், வன்னிமந்தம், வாய்வு

பாட வேறுபாடு :

பாடல் எண் : 458. 1 கெந்திதனை
2 கிண்டபொடி, குண்டபொடி
3 வணங்கு

பரங்கிப் பட்டைச் சூரணம்

கொடிவேலி சூளாத்தி சூர்சதுரக் கள்ளி
வடிப்பாண்டம் வைத்ததில்நீர் வார்த்தே - படிவாயில்
மேல்சீலைக் கட்டியதின் மேல்பரங்கித் தோல்வைத்து
தான்மூடிச் சட்டிதனைத் தாக்கு.[1] 459

தாங்குசந்து வாய்க்குமண் சார்[1] சீலை செய்தடுப்பில்
சாங்கமுடன் வைத்தொருநாள் தானெரித்துப் - பாங்குடனே
பின்னெடுத்துத் தின்றிடுகிற்[2] போர்கிரந்தி புண்சூலை
தன்னிடத்தில் போமே தளர்ந்து. 460

தளர்ந்திதுக்கு பத்தியங்கேள்[1] தானுப்பு மாகா
தெளிந்தபுளி கைப்புரைப்பு நீக்கி[2] - வளர்ந்தருவென்
னீர்சோறு தானருந்தும் நேர்பத்து நாள்மேல்மோர்
கூர்மிளகு முப்புமாங் கூறு. 461

பா[illegible]வேறுபாடு

[illegible]ல் எண் : 459. 1 தூக்கு
460. 1 சாய்
2 தின்றுவர
3 போங்கிரந்தி
461. 1 பத்தியங்கள்
2 நீக்கு

சேரும் சரக்குகள் : கொடிவேலி கூளாத்தி சதுரக்கள்ளி (சம அளவு)

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு சட்டியில் போட்டு [illegible]வை மூழ்கும்படி தண்ணீர் விடவேண்டும். அச்சட்டியின் வாயை [illegible] மெல்லியத்[illegible]ணியால் வேடு கட்டி அதன்மேல் பரங்கிப் [illegible]யை வைதது மேல் சட்டி கொண்டு மூடி இரண்டு சட்டி வாய்க்கும் இடைப்பட்ட இடத்திற்குச் சீலை மண் செய்து மூடி காயவைக்க வேண்டும். இந்தச் சட்டியை அடுப்பில் வைத்து ஒருநாள் முழுவதும் எரித்து எடுக்கவேண்டும். பின் பரங்கிப் பட்டையை எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : கிரந்தி, புண், சூலை,
பத்தியம் : உப்பு, புளிப்பு, கைப்பு, உரப்பு ஆகாது, வெந்நீரும் சோறும் உண்ண வேண்டும். 10 நாள் இவ்வாறு இருந்த பின் மோர், மிளகு, உப்பு சேர்க்க வேண்டும்

பரங்கிப்பட்டைச் சூரணம் (வேறு)

[illegible]கித் தோலொன்று பலமரைத்துத் தானோர்
[illegible]கோர் துமைமாச் சேர்த்து - நற்சதுரக்[1]
[illegible]ர் சட்டி[illegible]ர் சுணவித்த பிட்டதனை
[illegible] ஏழ்நாள் [illegible]. 462

ஆய்ந்துமப்பா ஏழுனாள் ஆனமறு பத்தியங்கார்
ஒய்ந்ததிந்த நாள்முழுதும் உப்பாகா - வாய்ந்த வென்னீர்
சோறு மருந்தியிடிற் சூழ்ந்தகிரந்தி புண்சூலை
ஆறுமது கண்டீர் அறி. 463

பாடவேறுபாடு :

பாடல் எண் : *465.* 1 பாட்டிலே யோட்டி
2 ஆய்ந்துப்பட்டை
466. 1 காலினிலும்
467. 1 உண்டு
2 பெயர்

பரங்கிப்பட்டைச் சூரணம் (வேறு)

ஒரு தோண்டியில் கூளாத்தி வேரைப் போட்டு ஒரு துளையிட்ட மடக்கில் பரங்கிப்பட்டையை அடைத்து வைத்து, அதன் மேல் ஒரு தோண்டி வைத்து, இரண்டு தோண்டிகளையும் வாய்ப்புறம் சேர்ந்திருக்கும்படி சீலைமண் செய்து சுற்றி மூடிவிட வேண்டும். கூளாத்திவேர் இருக்கும் பகுதியை அடுப்பில் வைத்து எரிக்க பரங்கிப் பட்டை வெந்து புகையாய் மேற்சட்டியில் படிந்திருக்கும். இதனை சேர்ந்து வைத்துக்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : கிரந்தி, சூலை, கை கால் எரிச்சல், கறுப்பு இவை போகும்.

பத்தியம் : 10 நாள் மருந்துண்ண வேண்டும். உப்பு, புளிப்பு நீக்கி உணவு உண்ண வேண்டும்.

மணிமந்திராதிச் சூரணம்

இந்துப்பி லொன்று இயல்சீ ரகம்இரண்டு
தந்தவச மோதந் தான்மூன்று - நந்துசுக்கு
நாலுகணம் அஞ்சு நவில்மிளகு மூவிரண்டு
கோலுகடுக் காய்ப்பொடியாங் கூறு. 468

கூறுமிரு பத்தொன்று கூட்டுபொடி வென்னீரில்
தேறியுணச் சூலைபோம் தீபனமாம் - மாறுபடும்
குன்மம் வயிற்றுநோய் கொள்மூல மேற்கும்பேர்
வன்மமணி மந்திராதி வாகு. 469

சேரும் சரக்குகள் : இந்துப்பு - 1 சிரகம் - 2 அசமதாஓமம் - 3 சுக்கு-4 திப்பிலி - 5 மிளகு - 6 கடுக்காய் - 21

செய்முறை : சரக்குகளைச் சுத்தித்து இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம் : வென்னீர்
தீரும் நோய்கள் : சூலை, குன்மம், வயிற்று நோய், மூலம் இவை தீரும். பசி உண்டாகும்.
குறிப்பு : அறிஞர் அண்ண மருத்துவமனைச் சுவடி எண். 512ல் உள்ள செய்முறை.

வார்பத்தியாதி சூரணம்

நாறும் இலவங்கப் பத்திரிசின் னாகப்பூ
தேறு விலாமிச்சு திரிகடுகு - கூறுசம
னாயிடித்தே இதனுக்கு[1] நல்லவெல்லம் நேர்கூட்டி
யேயிரண்டும் பிட்டுவைத்தே ஏந்து. 470

ஏந்துநெல்லிக் காய்அளவில் ஒக்க[1]உண்டை செய்தொன்று
சேந்தவிள வென்னீரில் தின்றிடுகல்[2] - வாந்தி
வயிற்றுப் பொருமல் உருகழிச்சல் பாண்டோ
டியற்று சுவாசகாசம் ஏற்று. 471

ஏற்றுகுன்ம மார்புவலி ஏகாத வன்னிமந்தம்
தோற்றுவிடும் இப்பொடிப்பேர் சொல்லிஇடில் - ஆற்றலுள
வார்பத்தி யாதியெனும் சூரணமாம் வாங்கியுண்
வோர் பத்தியத்தோ டிருந்து. 472

சேரும்சரக்குகள் : இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ விலாமிச்சைவேர் சுக்கு மிளகு திப்பிலி (சம அளவு)
வெல்லம் - சரியளவு

செய்முறை : சரக்குகளை இடித்துச் சூரணித்து வெல்லத்துடன் கலந்து பிட்டவியல் செய்து நெல்லிக்காயளவு உரு.ண்டை செய்து வைத்துக் கொள்ளவேண்டும்

அனுபானம் : இளவெந்நீர்.
தீரும் நோய்கள் : வாந்தி, வயிற்றுப்பொருமல், கழிச்சல், பாண்டு, சுவாசகாசம், குன்மம், மார்பு வலி, வன்னிமந்தம்.

பாடவேறுபாடு :
பாடல் எண் : 470. 1 இத்தினுக்கு
471. 1 ஏற்க
2 தின்றிடவே

நாகர்ராதிச் சூரணம்

சுக்குபங்கம் பாளை துடரும் அதிவிடையம்
எக்கு கணமூலம் இந்துப்பு - நெக்குகண
மாங்கொட்டை யின்பருப்பு வன்குடசப் பாலைத்தோல்
தாங்குகொடி வேலியாம் சாற்று. **473**

சாற்றுகருஞ் சீரகமும்[1] சார்ந்தமுத்தம்[2] கூவிளையின்
ஏற்றகனி யீற்குமே இலவின்[3] - தோற்றுபிசின்[4]
பூமாதுளம் பிஞ்சு பூண்சிவந்த சாதிப்பூ
வேமாம் விளங்கனியின்[5] ஈர்க்கு. **474**

ஈர்க்கு கோம மத்தினியு ஏந்துபொடி தேனில்[1]
ஏற்குந்[2] தயிரில் இதுகொள்ளத் - தீர்க்கமுள
வாகஅதி சார மறுகிராணி[3] குன்மம்போம்
நாகராதிப் பொடியாம் நன்று. **475**

சேரும் சரக்குகள் : சுக்கு ஆடுதீண்டாப்பாளை அதிவிடையம் திப்பிலிமூலம் இந்துப்பு மாங்கொட்டைப் பருப்பு குடசப்பாலைத்தோல் இலவம்பிசின் மாதுளம் பிஞ்சு சாதிப்பத்திரி விளாம்பழ ஈர்க்கு (சமஅளவு)

செய்முறை : சரக்குகளை சுத்தித்துக் காயவைத்து இடித்துச் சலித்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம் : தேன், தயிர்.

தீரும் நோய்கள் : அதிசாரம், கிராணி, குன்மம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 474. 1 கருஞ்சீரகங்கள்
2 தந்முத்தம்
3 இலவணம்
4 தேற்ற பிசின்
5 விளங்கனி

475. 1 நெய்தேனில்
2 ஏர்க்கத்
3 மருவுங்கிராணி

வடகம்

கந்தக வடகம்

அஞ்சுபலம் கெந்தகந்தான் ஆன திரிகடுகு
மிஞ்சுசா துர்சாத மேல்விளங்கம் - விஞ்சு
திரிபலைசின் னாகப்பூ சேர்வகைக்காம் நிடகம்
உரியவஞ்சுக் குக்குலுவாம்[1] உன். 476

உன்னுபலம் இரண்டாரையா மோர்சித் திரமூலம்
பன்னுபலம் ஒன்றேகால் பார்த்தரைத்து - மின்னேகேள்
தாணிக்காய் போல்வடகம் தானருந்தில் மேற்சூலை
நாணிப்போம் மேகமுடன் நாடு. 477

சேரும் சரக்குகள் : கந்தகம் (5 பலம்) சுக்கு மிளகு திப்பிலி ஏலம் இலவங்கப்பட்டை இலவங்கப் பத்திரி சிறுநாகப் பூ வாய்விளங்கம் கடுக்காய் நெல்லிக்காய் (5 நிடகம்)
குங்கிலியம் (2 1/2 பலம்)
சித்திரமூலம் (1 1/4 பலம்)
இவற்றை முறைப்படி சுத்தி செய்து அரைத்துத் தான்றிக் காயளவு வடகம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சூலை, மேகம்

பாடவேறுபாடு :
பாடல் எண் : 476. 1 குக்குலுமா

காங்கைய வடகம்

சுக்கு கடுக்காய் துலங்குவகைக் கைந்துகணம்
மிக்கநறுஞ் சீரக[1] மிளகுமொவ்வோர் - மெய்க்கவொன்றாஞ்
சித்திரமூ லம்நான்கு சேர்செவியம் ஓர்மூன்று
சுத்தளவட் சாரந் துடங்கு. 478

துடங்கு கணமூலம் சொல்வகைக் கிரண்டா[1]
முடங்கு கருணைக்கிழங்கு முற்றி - யுடனுலர்ந்து[2]
வற்றல் வருகோட்டம் வன்னினத்துக் கோரெட்டாம்
உற்றதொகை உண்பலமாம் உன். 479

உன்னி யிது[1] இடித்து ஓர் தூளுடன்பழைய[2] மன்னியிடில்
துன்னுவெல்லம்[3] நாற்பதுவாஞ் சொல்பலங்கள்[4] மன்னியிட[5]

சேர்த்துப் பிசைந்துருட்டி தின்கடுக்காய் தன்னளவு[6]
மாத்திரை உண்டவர்க்கு மற்று.[7] 480

மற்றுங்குழம்பு மோர் வாங்கிக் குடித்திடிலோ[1]
உற்றவித மூலமெல்லாம் ஓடிவிடு - மிற்றரம்பேர்
சொல்காங் கையவடகம் தொல்லுலகில் யாவருக்கும்
நல்காய் மயிலே நயந்து. 481

பாடவேறுபாடு :

பாடல் எண் : 478. 1 நறுஞ்சீரா
479. 1 சொல்வகைக்கேரண்டா
2 கரணையது முற்றியுலர்ந்ததொரு
480. 1 உன்னி
2 பழசுத்து
3 கன்னலது
4 காண்பலங்கள்
5 மண்ணியிட்டு
6 சேர்த்துருட்டி நன்றாய் சின் கடுக்காய் தன்னளவில்
7 மாத்திர முண்டேயுடனே மற்று
481. 1 குடித்திடிகில்

சேரும் சரக்குகள் : சுக்கு கடுக்காய் (வகைக்கு 5 பலம்) திப்பிலி சீரகம் மிளகு (வகைக்கு 1 பலம்) சித்திரமூலம் (4 பலம்) செவ்வியம் (3 பலம்) எவச்சாரம் திப்பிலிமூலம் வகைக்கு (2 பலம்) கருணைக்கிழங்கு வற்றல் கோட்டம் (வகைக்கு 8 பலம்) - வெல்லம் - (40 பலம்)

செய்முறை : கடைச் சரக்குகளை சுத்தி செய்து தூளாக்கி அத்துடன் வெல்லம் சேர்த்துப் பிசைந்து கடுக்காய் அளவு மாத்திரைகளாகச் செய்துகொள்ள வேண்டும்.

தீரும் நோய் : மூலம்

தாளிசபத்திரி வடகம்

சேர்ந்ததொரு தாளிசம் செயி மிளகுவகைக்கு
ஆர்ந்தபல மொன்றுசுக்காம் ஆறு பலம்[1] - தேர்ந்தகணம்
நான்குபலம்[2] பிச்சம்வேர் நாறும்சா துர்சாதம்
தான்பலம்ஒவ் வோரையாம் சாற்று. 482

சாற்றும் சர்க்கரையும்[1] தான் மூவிரண்டுபலம்
ஏற்றுமது புட்டாக்கி யேகடுக்காய்த் - தோற்று முண்டை
செய்தருந்தில் சத்திவிக்கல் சேரருசி வாயூறல்
அயசய[2] காச மும்போம் அற்று. 483

அற்றதிரி தோடம் அடங்கலும்போம் தேகபல
முற்று மழகுதரும் உண்மையதாம் - சொற்றபெயர்
வன்தாளிசப் பத்திரி வார்வடக[1] மன்னருக்கு
நன்யோகம் சொல்வாய்[2] நயந்து.[3] 484

சேரும் சரக்குகள் : தாளிசபத்திரி செவ்வியம் மிளகு (வகைக்கு 1 பலம்) சுக்கு (6 பலம்) திப்பிலிமூலம் (4 பலம்) விலாமிச்சம் வேர் (1/2 பலம்) ஏலம் இலவங்கப் பட்டை இலவங்கப் பத்திரி சிறுநாகப்பூ (வகைக்கு 1/2 பலம்) சர்க்கரை (6 பலம்)

பாடவேறுபாடு :

பாடல் எண் : 482. 1 ஆறுநிடகம்
2 நான்கு நிடகம்

483. 1 சர்க்கரையன்
2 ஐயசயமும்

484. 1 மாவடக
2 சேர்வாய்
3 பொன்யோகம் என்பார் புனைத்து

சர்க்கரை தவிர மற்ற சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்து சூரணமாக்கி சலித்து இத்துடன் சர்க்கரையையும் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றை புட்டவியல் முறையில் வேக வைத்து எடுத்துக்கொண்டு அதனைக் கடுக்காய் அளவு உருட்டி நிழலிலுலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை 3 வேளை வாயிலடக்கிக் கொண்டு உமிழ்நீரை மட்டும் விழுங்கலாம்.

தீரும் நோய்கள் : வாந்தி, விக்கல், சுவையின்மை, வாய் நீரூறல், இளைப்பிருமல், முத்தோடமிகுதி நீங்கும், உடலுக்கு அழகும் பலமும் உண்டாகும்.

மண்டூர வடகம்

மண்டூரம் லோகபற்பம் மாஞ்செவியம் வெள்ளுள்ளி
திண்டுகொடி வெலியிரு சீரகங்கள் - விண்டயிரு
திப்பிலி இந்துப்புத் திரிகடுகு வேந்திமுத்தம்
ஒப்புச்சத குப்பைகண மூலம். 485

மூலமுடன் ஏலம் முடிய யிதையிடித்தே[1]
கோலகுப்பை மேனிசங்கு கூறுநொச்சில்[2] - நீலநிறக்[3]
கையாந் தகரை கீழ்க்காய் நெல்லி பூவரசு
பையார் தழுதாழை பண்.[4] 486

மண்ணுமுள்ள நீரெழுனாள் பார்த்துவிட்டு மத்தித்தே
உண்ணுநெல்லிக் காயளவில் உண்டைசெய்து - நன்னிழலில்
காயவைத்தே உண்டிடுகில்[1] காசசயங் காமாலை
வாயுவிக்கல் சேர்சோகைகுன்மம் வார். 487

பாடவேறுபாடு :

பாடல் எண் : 486. 1 மூலமெல்லா லேலை முடியவது இடித்தே
2 கூறுநொச்சில் 3 நீலனீர்
4 பன்மை, பன்னம்.
487. 1 உண்டிடவே 2 குன்மம்வாந்தி

வார்வாந்தியல்லால்[1] நெஞ்சுவலி வன்னந்தா நாவெட்டி
சேர்ந்தவிடப் பாகம் திரண்டோடும் - ஆர்ந்தபெயர்[2]
மண்டூர மாம்வடகம் மாலழிக்கும் சேயிழையே
திண்டோ ளரசருக்கே செப்பு. 488

சேரும் சரக்குகள் : மண்டூர பற்பம் அயபற்பம் செவ்வியம் வெள்ளுள்ளி கொடிவேலி சீரகம் கருஞ்சீரகம் அரிசித்திப்பிலி கண்டத்திப்பிலி இந்துப்பு சுக்கு மிளகு திப்பிலி முத்தக்காசு சதகுப்பை திப்பிலிமூலம் ஏலம் சம அளவு

இவற்றைச் சுத்திக்க வேண்டியவைகளைச் சுத்தித்து இடித்துப்பின்.

குப்பைமேனி சங்கங்குப்பி நொச்சி கையான்தகரை
கீழாநெல்லி பூவரசு தழுதாழை

இவற்றின் குடிநீரில் ஏழுநாள் அரைத்து நெல்லிக்காயளவு உருண்டை உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : காசம், சயம், காமாலை, வாயு, விக்கல், சோகை, குன்மம், வாந்தி, நெஞ்சுவலி, எட்டி விதையினால் உண்டாகும் விடம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : 488. 1 வாந்தியல்லால்
2 போந்தபெயர்

செவ்விய வடகம்

செவிய மிலுப்பைப்பூ திப்பிலியின் மூலம்
குவிவிலாம் பிச்சம்வேர்க் கொம்பு - நவிலும்
நிலவேம்பு அதிமதுரம் நெய்தற் கிழங்கு
நலவெட்டி வேர்சந் தனம். 489

சந்தனந்தான் அல்லாமற் சாதுர்சா தம்மிளகு
முந்துதா ளீசவிலை முற்றுமே - இந்தமருந்து
எல்லாம் சமன்சேர்த்து இடித்த பொடிக்குநிகர்
வெல்லம் கலந்திடித்தே மேல். 490

மேலுண்டைப் பாக்களவு மேவவுருட்டி உண்டாலே
காலும் இருமல் கயமருசி - தோலும்
கிராணிசத்தி பாண்டு கிளர்மார்பின் வலியும்[1]
அரணிழந்து போமே அகன்று. 491

அகன்றவுடன் தீபனமாம் அகமதிற் காந்தி
மிகுந்துவருந் தாதுகளும் விருத்தி - உகந்தபெயர்
தான்செவ் வியவடகம் தாரணியில் யாவருக்கும்
வேண்டும் கனிவாய்[1] விளம்பு. 492

பாடவேறுபாடு :

பாடல் எண் : 491. 1 கிளர்மார் வலியும்
492. 1 கணல்வாய், காண்நல்லாய்

சேரும் சரக்குகள் : செவ்வியம் இலுப்பைப்பூ திப்பிலிமூலம் விலா மிச்சை சுக்கு நிலவேம்பு அதிமதுரம் நெய்தற் கிழங்கு வெட்டிவேர் சந்தனம் ஏலம் இலவங் கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ மிளகு தாளிசபத்திரி

இவற்றை முறைப்படி சுத்தித்து இடித்துப் பொடித்து இதற்குச் சரியளவு வெல்லம் சேர்த்து மேலும் இடித்து பாக்களவு உருண்டை உருட்டி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : இருமல், சயம், உருசியின்மை, கிராணி, வாந்தி, பாண்டு, மார்புவலி இவை தீரும், பசிதீபனம் உண்டாகும். உடலுக்கு ஒளியும் தாதுவிருத்தியும் சேரும்.

ஏலாதி வடகம்

ஏலம் இலவங்கம் இதன்தோலு முந்திரிகை
ஞால கணம் வகைக்கு[1] நாற்பலங்கள்[2] - கோலுமுறை
தீவின்வரு முந்திரி மதுரம் ராயபுரி
மேவும் சருக்கரையா மேல் **493**

மேலும் கச் சூரம் விளம்புவகைக்கு ஓர்பலம்சேர்
சால இடித் துத்தேனில் தான்குழைத்து - கோலக்
கழற்சிவிறை நேருருட்டி காலமே உண்ண
உழைக்குஞ்சய முரநோ யுன். **494**

உன்னும் தலைசுற்று உள்பிரமை சோனிதமும்
வன்னி மந்தம் பித்தம் வயிற்றுவலி - மின்னடலோர்
பாலான சூலை பகர்காசம் போமிதன்பேர்
ஏலாதி யாம்வடக மே. **495**

சேரும் சரக்குகள் : ஏலரிசி இலவங்கம் இலவங்கப்பத்திரி உலர்ந்த திராட்சை (வகைக்கு 4 பலம்) முந்திரி அதிமதுரம் இராயபுரி சர்க்கரை பேரீச்சம்பழம் (வகைக்கு 1 பலம்)

பாடவேறுபாடு :

பாடல் எண் : 493. 1 வகைக்கும்
2 ஆறாம் நற்பலங்கள்
494. உழைக்கு சயமார்பு நோயுண்
495. ஏலாதி மாத்திரை யாமே

செய்முறை : இவற்றை முறைப்படி சுத்தி செய்து இடித்துத் தேனில் குழைத்துக் கழற்சி அளவு உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், மார்புநோய், தலை சுற்றல், பிரமை
சோணித நோய், அக்கினிமந்தம், பித்தம்
வயிற்றுவலி, பக்க சூலை, காசம்.

பாவன கடுக்காய்

நன்கடுக்காய் நூறுகழு நன்னீரில் ஊறவைத்து[1]
தன்தினமூன்[2] றாம்பிறகு தானிறுத்துச் - சொன்னபடி
மூன்றுமுறை வைத்திறுத்து முற்றுமந்தக் காய் நறுக்கித்
தோன்றுவிரை போக்கித் துணிந்து. 496

துணிந்தபுளி மோர்தனித் துன்னவிட்டுக் காய்க்குத்
தனிந்தநா லொன்றுகடல் சாலப் - பணிந்தவுப்புத்
தானதி லட்டுப்புத்[1] தன்னாதல் கூடவிட்டுக்
கானார் விறகழலிற் கர்ய்ச்சு. 497

காய்ச்சியே[1] நீர்சுவறக் காண்பிறகு[2] கார்மிளகு
வாய்ச்சதொரு இந்துப்பு வன்வசம்புத் - தேய்சுக்கோடு[3]
ஓமம்பலங்கள் எட்டாகும் ஓங்கும்[4] வகைக்குப்பின்
தாமம் கொடிவேலி சாற்று. 498

சாற்றும் கணஞ் செவ்வியம் சார்திப் பிலிமூலம்
தோற்றும்வகைக் கோர்நான்காம்[1] சொல்பலங்கள்[2] போற்றும்பொடித்
தூவிஉலும் மிச்சைரசம் தோன்றவிட்டு மேல்பிசறி
வாயுநிழல் எரியில்[3] வைத்து. 499

வைத்துலர்த்தி செம்பீரம் வன்னிஞ்சி யின்னீரு
மொத்தநா னாழியாம் ஓர்வகைக்கு - தத்தவிட்டுக்
கையால் பிசறிக் கலந்தரசம் சுவற
மெய்யாய் நிழலுலர்த்தி மீது. 500

பாடவேறுபாடு :

பாடல் எண் : 496. 1 நன்கடுக்காய் நூறுவெகு நாள்காடியில் ஊற வைத்துத்தான்
2. தினதின் மூன்றாம்

497. 1 தானாத விந்துப்பு

498. 1 காய்ச்சுவிடு 2 காகரணை 3 தேசுக் கோடு
4 ஓமம் பத்தாம் நிடகம் மாங்கும்.

499. 1 வகைக்கோ ரைந்தும் 2 சொல் நிடகம்
3 வெய்யிலும்

மீது வெயிலும் உலர்த்தி[1] விள்ளுகடுக் காயினுக்குப்
பாதிஇன்னங்[2] கொள்பொழுதும் பாரிரவி - மோதி
விழுநேர மும்உதய வேளையிலும் கொள்ளில்
ஏழுசூலை வாந்தி குன்மம் ஏகும்.[3] 501

ஏகுமல்லால் முத்தோடம் ஏற்சுவா சம்காசம்[1]
தேகசுரம் கிராணி சேர்மூலம் - நோகவரும்
நாசிகா பீடம்[2] நல்வீக்கம் பாண்டருசி
மூசிதைய சூலைபோம் முந்து.[3] 502

முந்த வயிற்றினுள் மூண்ட வியாதிகள்போம்[1]
சந்தத மெய்ப் படியுந்[2] தாதுவிருத்தி - இந்தக்
கனமருந்தின் யோகப் பேர் காசினியிற் சொல்பா
வனகடுக்காய் என்றே வழுத்து. 503

கடுக்காய் - 100 எண்ணிக்கை, இதனைக் கழுநீரில் 3 நாள் ஊற வைத்து வடிகட்டி, இதுபோன்று 3 முறை செய்து, இறுத்து, காய்களை உடைத்து விதைகளை நீக்கிக் கொள்ள வேண்டும். பின் இக்கடுக்காய்த் தோலை பானையிலிட்டு இது மூழ்குமளவு புளித்த மோர்விட்டு, அத்துடன் காயளவிற்கு 1/4 பங்கு கறியுப்பு, அட்டுப்பு சமன்கூட்டி, அடுப்பிலிட்டு நீர் சுவற எரித்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்துடன்

மிளகு இந்துப்பு வசம்பு சுக்கு ஓமம் (வகைக்கு 8 பலம்)
கொடிவேலி செவ்வியம் திப்பிலிமூலம் (வகைக்கு 4 பலம்)

பொடித்து எலும்பிச்சம்பழச் சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு 4 படி சுவறவிட்டு நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : 1 விள்ளல் - காலை - மாலை

திரும் நோய்கள் : எழுசூலை, வாந்தி, குன்மம், முத்தோடம், சுவாசு காசம், சுரம், கிராணி, மூலம் நாசிகாபீடம், வீக்கம், பாண்டு, அருசி, சூலை, வயிற்றுநோய் இவை நீங்கும். தாது விருத்தி உண்டாகும்.

பாட வேறுபாடு :

பாடல் எண் : *501. 1 வெயிலுமுணர்த்தி 2 பாதியன்னம் 3 போகும்.*

502. 1 காசமுடன் 2 பீடமுடன் 3 முந்தி
503. 1 முந்தில வயிற்றிலதில் மூண்டவிதனங்களும் போம்
1 முந்திய தினத்தில் மூன்று விதனங்களும் போம்
2 புட்டியுமாந்

வைரோசனாதி வடகம்

காண்சிவதை மூவெட்டாம் கற்கடக சிங்கிபத்தாம்[1]
மேன்சிறுகாஞ் சொரிவேர் விள்முத்தம் - வான் கடுக்காய்
தேசாவரம் ஓமம் சேர்ந்தயிரு கணங்கள்
மூசாவகைக் கொள்வோர்[2] மூன்று. 504

மூன்றாந் தொகைகள்[1] முற்றும் வராகனெடை
நான்ற பொடியுடனே நல்லவெல்லம் - போன்றபலம்
பத்துங் கலந்திடித்துப் பார்சூடுறு பதத்தில்
உத்தகழற் காயளவாம் உண்டை. 505

உண்டைபிடித் தோருருண்டை உண்டவர்க்கு[1] வன்னிமந்த
மண்டிருந்த ரோக மலபந்தம் - விண்டுவிடும்
நாளும் வயிரோச னாதிவடகமென்பார்
கேளுமிதன் மாத்திரைப்பேர்க் கிட்டி.[2] 506

பாட வேறுபாடு :
பாடல் எண் : 504. 1 பத்து
2 வகைக்கோர்
505. 1 முன்திது தொகைகள்
506. 1 உண்டை உண்டிடுகில்
2 கேளிதன் பேர்க்குங்

சேரும் சரக்குகள் : சிவதை - 28 பலம் கற்கடகசிங்கி - 10 பலம்
சிறுகாஞ்சொரி முத்தக்காசு கடுக்காய் தேசாவரம்
ஓமம் (வகைக்கு 1 வராகனெடை)
வெல்லம் - 10 பலம்

இவற்றைச் சேர்த்திடித்துக் கழற்சி அளவு உருண்டை உருட்டிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : அக்கினிமந்தம், வயிற்றுநோய், மலக்கட்டு.

அமுச மண்டூரம்

திரிபலைக் கோரைக்கிழங்கு சேர்ந்தபஞ்ச கோல
மரமஞ்சள் வாய்விளங்க மாதே - சரளதேவ
தார மிளகு சமன்தான் இதுக்குமண்
டூரஞ் சமனாம் உரை. 507

உரையாயின் கோமியத்தில் ஓரிதனை விட்டே
ஏரியாயி லேகியமாம் ஏந்தி - வருமா
மிலந்தைக் கனிநே ரெனஉருட்டி மோரிற்
கலந்துகொள்ளச் சோபைபோம் காண். 508

காண்பாட்டு சூலை கணமூலம் காமாலை
தூண்போல வீங்கும் தொடைவீக்கம் - மாண்டுபோம்
இன்மருந்தின் பேர்தான் இயலமுச மண்டூரம்
நன்மோரு பத்தியமாம் நன்று.[1] 509

பாட வேறுபாடு :

பாடல் எண் : 509. 1 அகன்று

சேரும்சரக்குகள் : கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கோரைக் கிழங்கு சுக்கு திப்பிலி திப்பிலி மூலம் செவ்வியம் சித்திரமூலம் மரமஞ்சள் வாய்விளங்கம் சரளதேவ தாரு மிளகு (சம எடை)
மண்டூரம் - நேரெடை

இவற்றை பசுநீரில் எரித்து இலேகிய பதத்தில் இறக்கி இலந்தைப் பழ அளவு உருட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம் : மோர்

தீரும் நோய்கள் : சோபை, பாண்டு, சூலை, மூலம், காமாலை தொடை வீக்கம்.

பத்தியம் : மோரும், சோறும்.

திரிகடுகாதி மண்டூரம்

திரிகடுகு மாஞ்சி திரிபலை சாதிக்காய்
இருசீரகம் இலந்தை யின்வேர் - மரமஞ்சள்
:

சிங்கி லவங்கப்பத் திரிவாய் விளங்கமில
வங்கம சமதாக மஞ்சள். 510

மஞ்சளல்லால் சாதிப்பூ வன்திப்பிலி மூலம்
முஞ்செவிய முத்தமுடன் அரத்தை - மிஞ்சுபொன்மு
சுட்டை இதெல்லாம் சமனாய் சூரணம்செய்ய பொடிநேர்
திட்டமாய் மண்டூரஞ் சேர். 511

சேர்க்குமிந்த மண்டூர த்திற்பாதி லோகம்
சேர்த்தொக்க கையாந் தகரைசாறு - வார்த்தரைத்து ஓர்
உண்டையிலந் தைப்பழநேர் உண்ணும் அனுபானம்
கொண்டிடுதேன் சர்க்கரைமோர் கூர்ந்து. 512

கூர்பாண்டு காமாலை கொற்றதிரி தோடம்
சேர்சயம்போம் தீபனமும் செய்யுமிதன் - பேர்தான்
திரிகடு காதிமண் டூரமெனத் தேர்ந்தோர்
உரைசெய்வார் நாளும் உவந்து. 513

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி சடாமாஞ்சில் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சாதிக்காய் சீரகம் கருஞ்சீரகம் இலந்தைவேர் மரமஞ்சள் இலவங்கப் பத்திரி வாய்விளங்கம் இலவங்கம் மஞ்சள் அசமதாகம் சாதிப்பத்திரி திப்பிலிமூலம் செவ்வியம் முத்தக்காசு அரத்தை பொன்முசுட்டை (சம எடை) அயம் - பாதியளவு

இவற்றைச் சூரணித்துக் கையாந்தகரைச்சாற்றில் அரைத்து இலந்தைப்பழ அளவு உருட்டிக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : தேன், சர்க்கரை, மோர்.

தீரும் நோய்கள் : பாண்டு, காமாலை, திரிதோடம், சயம் இவை போகும். பசிதீபனமுண்டாகும்.

மதுஸ்னுகி இரசாயனம்

பண்பரங்கிப் பட்டை பகர்பாளிதம் வகைக்கு
நன்பலங்கள் தானேழு நற்செவியம் - நன்னாரி
கோட்ட மதிமதுரம் கூறுந் திரிகடுகு
நட்டும் திரிபலைகள் நாடு. 514

நாடும் கணமூலம் நல்லசிறு தேக்குஅரத்தை
தேடு விளாவரிசி தேரோமம்[1] - பீடுநறு
வெப்பாலை தன்னரிசி வெஞ்சிரம்[2] வாய்விளங்கம்
செப்புமிரு சீரகமாம் சேர். **515**

சேரு நிலப்பனைசெங் கத்தாரி கொத்துமல்லி
சீருசாதுர் சாதஞ் சேர்மாஞ்சி - பாரசுவ
கெந்திவகைக் காற்பலமாங் கேள்பசுவின் நெய்யதனில்[1]
நந்து ரசாயனமாம் நாட்டு.[2] **516**

நாட்டு மதுஸ்னுகி நாமம் ரசாயனத்தைக்
கூட்டியுண மேகசுரம் குட்டசய - மோட்டும்
வெடிசூலை புண்கிரந்தி மெய்ச்சொறிகள் மந்தங்
குடிபோகு மென்றே குறி. **517**

பாட வேறுபாடு :

பாடல் எண் : 515. 1 தேடுமிலாம் பிச்சை சேரோமம்
2 ஒருசிரம், வெஞ்சீரம்
516. 1 கெந்தி விளலரசி கேள்வகைக்கு கால் பலங்கள்
2 நந்துபசுவின் நெய்தனில் நாட்டு.

சேரும் சரக்குகள் : *பரங்கிப்பட்டை (7 பலம்) சர்க்கரை (7 பலம்) செவ்வியம் நன்னாரி கோட்டம் அதிமதுரம் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக் காய் திப்பிலிமூலம் சிறுதேக்கு அரத்தை வளாவரிசி ஓமம் (வகைக்கு 1/4 பலம்)*
வெட்பாலை அரிசி வாய்விளங்கம் சீரகம் கருஞ் சீரகம் நிலப்பனை செங்கத்தாரி கொத்துமல்லி சிறுநாகப்பூ இலவங்கப் பட்டை இலவங்கப் பத்திரி ஏலம் சடாமாஞ்சில் அமுக்கராங்கிழங்கு (வகைக்கு 1/4 பலம்)

செய்முறை : *சரக்குகளைச் சுத்தித்துச் சூரணித்து அத்துடன் சர்க்கரை நெய் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.*

தீரும் நோய்கள் : *மேகசுரம், குட்டம், சயம், வெடிசூலை, புண், கிரந்தி, உடல்சொறி, மந்தம்.*

மதுஸ்னுகி இரசாயனம் (வேறு)

சீர்பரங்கிப் பட்டை திகழசுவ கெந்திகந்தம்
ஓர்வகைக்கோ ரெண்பலமா[1] மொண்செவியம் பேரரத்தை
வாட்டமில்லா நன்னாரி வாய்விளங்க மோடோமம்
கோட்ட மதிமதுரம் கூறு. 518

கூறும் திரிகடுகு கூரிருசீ ராமாஞ்சி
தேறுசிறு தேக்கு திரிபலைகள் - நாறுகொடி
வேலிச்சாதுர் சாதம் வெண்விலாம் பிச்சைவேர்
சாலநிலப் பனையாஞ் சாற்று. 519

சாற்றும் கணமூலத் தான்வகைக்கா மோர்பலங்கள்
ஊற்றுகின்றநெய்தேன்கள்ஓர் வகைக்காம் - ஏற்றபடி
ஒன்றாகு மக்காரம் ஒண்பலங்கள் ஐந்தில்
நன்றா ரசாயனமாம் நாட்டு. 520

நாட்டு மதுஸ்னுகி நாமம் ரசாயனத்தை
கேட்டவுடன் சூலை கிரந்திகுட்டம் - வாட்டுகின்ற
அக்கினிமந்தம் மேகம் அஸ்திசுர மஞ்சி[1]
ரெக்கியிடுந் தாதுண்டாம் நேடு. 521

பாட வேறுபாடு :

பாடல் எண் : 518. 1 ஓர்வகைக்கா ரெண்பலமாம்
521. 1 அருசி

சேரும் சரக்குகள் : பரங்கிப்பட்டை (8 பலம்)
அமுக்கராக்கிழங்கு (8 பலம்)
செவ்வியம் பேரரத்தை நன்னாரி வாய்விளங்கம்,
ஓமம் கோட்டம் அதி மதுரம் சுக்கு மிளகு திப்பிலி
சீரகம் கருஞ்சீரகம் சடாமாஞ்சில் சிறுதேக்கு
தேக்கு கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்
கொடிவேலி சிறுநாகப்பூ இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி ஏலம் விலாமிச்சைவேர் நிலப்
பனை திப்பிலி மூலம் (வகைக்கு 1 பலம்)
நெய் 1 படி தேன் 1 படி
சர்க்கரை - 5 பலம்

செய்முறை : சரக்குகளைச் சுத்தி செய்து சூரணித்து அத்துடன் நெய், தேன், சர்க்கரை சேர்த்துக் கிளறி வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சூலை, கிரந்தி, குட்டம், அக்கினிமந்தம் மேகம், என்பைப்பற்றிய சுரம் நீங்கும் தாதுவிருத்தி உண்டாகும்.

திப்பிலி இரசாயனம்

திப்பிலி ஈரெட்டுச் செவியஞ் சிறுதேக்கு
செப்பு மிளகாஞ்சுக்குச் சீரகமும் - ஒப்பில்
விளங்கம்வகைக் காம்நான்கு மேல்கணமா மூலம்
தளம்பொருந்து கைய்யாந் தகரை. 522

தகரையல்லா லோகந் தன்னுட[1] செந்தூரம்
பகரும்வன்னி யாம்வகைக்கு பண்பாய் - நிகரிரண்டு
இந்தத் தொகைபலமாம் ஏல்நிடக[2] மோரிரண்டு
நந்தப்[3] பொடிசெய் நயந்து. 523

நயந்து சருக்கரைசேர் நற்பலமாம் எட்டே[1]
உயர்ந்த விருபடிதேன் ஊற்றி - முயன்ற
வலிமையாய் செய்யு மாயோகம் வன்திப்
பிலிரசா யனமென்றே பேர். 524

பேருரைக்கிற் குன்மம் பெருஞ்சத்தி மேலிளைப்புச்
சார்சுவாசங் காசந் தான்சயங்கள் - ஓரருசி
வாய்வுமுத லானவையும் மாற்றிவிடு மிம்மருந்தைத்
தேயுமிடை நல்லாய்நீ[1] தேடு. 525

பாடவேறுபாடு :

பாடல் எண் : 523. 1 தன்துளசி
2 பலமாமேலநிடக
3 அந்தந்த மந்த
524. 1 மீரெட்டாய்
525. 1 நல்வாளீ

சேரும் சரக்குகள் : திப்பிலி - 16 பலம்
செவ்வியம் சிறுதேக்கு மிளகு சுக்கு சீரகம் வாய் விளங்கம் (வகைக்கு 4 பலம்) திப்பிலிமூலம்

கையாந்தகரை அயச் செந்தூரம் இலவங்கச் செந்தூரம் (வகைக்கு 2 பலம்)
சர்க்கரை - 8 பலம்
தேன் - 2 படி

செய்முறை : சரக்குகளை சூரணித்துச் செந்தூரங்களைச் சேர்த்து, அவற்றுடன் சர்க்கரை, தேன் சேர்த்து அரைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : குன்மம், வாந்தி, மேலிளைப்பு, சுவாச காசம், சுவையின்மை, வாய்வு,

வல்லாதி இரசாயனம்

சேங்கொட்டை நூறுபலம் செங்கலப்பால் மேற்பிசறி
யாங்கோணி கைப்பட்டினாற்தேய்த்து - தாங்கி இதை
நீரிற் கழுவி நிரைநீரி விட்டெரித்து
யாறவதை எடுத்தே யாற்று. 526

ஆற்றியதை ஒன்றிரண்டாக வெட்டித் தூணிநீர்
ஊற்றிலதி லட்டெரித்தே ஒன்றுபடப் - போற்றி
அறுநாழி யாயேந்தி யாம்பதக்குப் பால்விட்டு
உறுபழைய வெல்லனிறை[1] யோது. 527

ஓதுபல மைம்பதுவோ டொக்கனலில் காய்ந்துவரில்
ஆதரவாய்ப் பொடிமூ வைந்துபலந் - தீதகலும்
முத்தந் திரிகடுகோ டோங்குகடுக் காய்வகைக்கு
நத்தமுற நெல்லிமுள்ளி நாடு. 528

நாடுமது நானாழி நத்தவிடித் தேதூவி
ஊடு பதத்திறக்கி ஊற்றியிடித்து - நாடியதில்
விட்டுக் கிளறி விரைந்ததி சயிக்கத்தக்க
மட்டிலுணக் குட்டமெல்லா மாறும். 529

மாறுமல்லாற் செவ்வட்டை மற்றுமுள வண்டுகடி
கூறுமிது எல்லாம் குணமாகும் - தேறிடவே
பத்தியமு மிச்சையாம் பாவையர்கள் சங்கமுமா
மெத்த வியாப் புத்தியுண்டாம் விள். 530

பாட வேறுபாடு :

பாடல் எண் : 526. 1 ரங்கோணி
527. 1 நிரை

-சேரும் சரக்குகள் : சேராங்கொட்டை - 100 பலம்
பால் - 1 கலம்

சேராங்கொட்டையை பாலில் பிசறி வைத்துப் பின் சாக்கிலிட்டுத் தேய்த்துத் துடைத்து அதே அளவு நீரில் போட்டு எரித்து எடுத்து ஆறியபின் ஒன்றிரண்டாக வெட்டி அதில் ஒரு தூணி நீர்விட்டு 6 நாழிகை எரித்து பால் - 1 ஆழாக்கு பழைய வெல்லம் 50 பலம் ஆகிய வற்றைச் சேர்த்து அனலில் எரித்து அத்துடன்.

முத்தக்காசு சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லி
முள்ளி (வகைக்கு 15 பலம்) தேன் - 1 நாழி

சூரணச் சரக்குகளை இடித்துப் பொடி செய்து சேர்த்து இறக்கித் தேன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : குட்டம், செவ்வட்டைக்கடி, வண்டுகடி,
பத்தியம் : இச்சாபத்தியம்.

பரங்கிப்பட்டை இரசாயனம் (வேறு)
(மதுஸ்நுகி இரசாயனம்)

வெண்பரங்கிப் பட்டை விழைசர்க்கரை ஒவ்வோர்
நன்பலங்கள் ஐந்து கந்தம் நாலிரெண்டு - வண்[1] நிடகம்
குக்கில் பலமூன்று கொள்திப் பிலியும்
திக்குள்தே சாவரங்கள் சேர். 531

சேர்கிரந்தி யின்தகரம் தேறுகொட்டை யாங்கரந்தை
வார்வெள்ளைப் பூண்டு வகைக்கொவ்வோர் - தேர்பலங்கள்
ஆவினறு நெய்யும் ஆனபடி ஒன்றரைகள்
மேவுமிது வெல்லாம் விரைந்து. 532

விரைந்து ரசாயனம்செய் விள்பரங்கிப் பட்டை
புரிந்த[1] ரசாயனப்பேர் பண்ணும் - அருந்தியிடில்
மெய்மேகம் புண்கிரந்தி மேற்சூலை வாதங்கள்
அய்மேகம் செல்லும் அகன்று. 533

217
பாட வேறுபாடு :
பாடல் எண் : 531. 1 விண்ண
533. 1 பரிந்த

சேரும் சரக்குகள் : பரங்கிப்பட்டை 5 பலம் சர்க்கரை 5 பலம்
கந்தகம் 8 பலம்
குங்கிலியம் 3 பலம்
திப்பிலி கிரந்திதகரம் கொட்டைக் கரந்தை
வெள்ளைப்பூண்டு (வகைக்கு 1 பலம்)
நெய் - $1\frac{1}{2}$ படி

செய்முறை : சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து சூரணித்து அத்துடன் சர்க்கரை, நெய் கலந்து கிளறி வைத்துக் கொள்ளவேண்டும்

தீரும் நோய்கள் : மேகப்புண், கிரந்தி, சூலைவாதம், மேகம்.

வல்லாதகி இரசாயனம் (வேறு)

அறுபத்து னாலுபல மான சேங்கொட்டை
மறுவற்ற கோணிகையில் வைத்தே - உறுசெங்கல்
நற்பொடியுங் கூட்டியரை நாழிகைதான் தேய்த்தெடுத்து
கற்குளிர்ந்த நீரிற் கழுவி 534

கழுவி நிழலலுலர்த்தி காணவதை[1] வெட்டி
தழுவுபதி னாறுபடி தண்ணீர் - விடுத்து
நாலுபடி யாய்க்காய்ச்சி நன்றாய் வடித்ததில்
மேலும்பால் நாலுபடி விட்டு. 535

விட்டிரண்டு மாகாணி யாய்க்காய்ச்சி மித்தநெய்[1]
கொட்டுபடி[2] ஒன்றரையே கூடவிட்டு - இட்டபதம்
சிக்கன மாய்காய்ச்சி திகழ்நெல்லிக் காய்ச்சாறும்
ஒக்கவிடு நாழி உகந்து. 536

உகந்தன லில்காய்ச்சி உலருமகிற் கட்டை
பகர்கடுக் காய் வாய்விளங்கம் பண்ணு - மிகல்பரவி
ஓங்கும் திரிகடுகோ டொத்தவகைக் கோர்பலங்கால்
தாங்குபொடி தூவியும்பின் சாற்று. 537

சாற்றியிடும் ராயபுரி சர்க்கரைஎண் நான்கு[1] பலத்
தேற்றமுடன்[2] விடுத்துத் துழாவியே - ஏற்றமுடன்

தானிறக்கி ஆறவிட்டுத் தக்கதொரு நாழித்தேன்
மேனிறக்க விட்டே விரைந்து. 538

விரைந்தருந்த வண்டுகடி வேகவிட்டுப் புண்கள்
படர்ந்தகடி குட்டம்எல்லாம் பாறும் - நிரந்தரம்போர்
வல்லாதகி ரசாயன மென்பார் வார்குழலே
சொல்லாய்[1] எவர்க்கும் துணிந்து. 539

பாட வேறுபாடு :

பாடல் எண் : *535.* 1 காண் வகைக்கு
536. 1 மித்தநற்
2 கொண்டுபடி
3 நெய், ஒன்றரையே
538. 1 ஒன்னான்கு
2 தேர்ந்தமுடன்
539. 1 சொல்லார்

சேரும் சரக்குகள் : சேராங்கொட்டை - *64* பலம்

சாக்கில் வைத்து செங்கல் தூளுடன் அரை நாழிகை தேய்த்தெடுத்துக் குளிர்ந்த நீரில் கழுவி எடுத்து நிழலில் உலர்த்தி வெட்டி 16 படி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி, 4 படியாக வற்றியதும், 4படி பால் சேர்த்து மாகாணி அளவுக்குக் காய்ச்சிக் கொண்டு அத்துடன் நெய் ½ படி, நெல்லிக்காய்ச்சாறு 1 நாழி விட்டுக் காய்ச்ச வேண்டும்.

அகிற்கட்டை கடுக்காய் வாய்விளங்கம் சுக்கு
மிளகு திப்பிலி (வகைக்கு 1/4 பலம்)

இவற்றைப் பொடி செய்து மேற்கண்ட கலவையில் தூவி, இராயபுரிச் சர்க்கரை - 32 பலம் சேர்த்துத் தூவி இறக்கி ஆற விட்டுத் தேன் - 1 நாழி மேலே விட்டுக் கலந்து வைத்துக் கொள்ள் வேண்டும்.

தீரும் நோய்கள் : வண்டுகடி தீப்புண்கள், படர்தாமரை குட்டம்.

கந்தக இரசாயனம்

கெந்தகந் தேசாவரங்கள் கேள்சிரகம் தான்றி
தந்தினத்துக்கொன் றரையாம்[1] தாளீசம் வந்தனெல்லி
வத்தல் லவங்கத்தோல் வாரேலம் ஓர்வகைக்கே
ஒத்தரைத்தே கூகைநீ ரோது. 540

ஓதுமி லவங்கயிலை ஓரினத்துக் கோரொன்று
வாதுகண மூன்றாம் வருமிளகு - தீதகலும்
ˣரேணுகங்கள் ஒவ்வோ ரியலிரண்டு வாய்விளங்கம்
ஊதுகடுக் காய்வகைக்கே உண். 541

உண்ணுமுக்கால் நாகரமும் ஒன்றேகால் சர்க்கரையும்
பண்ணுபத்தா மித்தொகையில்[1] பண்பலமாந் தண்லவங்கம்
ஒன்றரையா நிடக முயர்விடையஞ்[2] சுட்டகரி
நன்னிடக மூன்றாம் நவில். 542

நவில்சூரணந் தன்னி நற்றேனும்[1] நெய்யும்
ˣˣஉவவிடுத்து[2] மத்தித்தே யுண்ணில் - பவமேகம்
கட்டியிடும் சூலை கண்[3]ரோகம் வன்னிமந்தம்
தொட்டகம்ப வாதம் துரந்து 543

துரந்த சிறுசிரங்கு சூழ்சோ ணிதங்கள்
பரந்த திமிர்வாதம் பரிக்கும் - கிரந்தி
இறுத்த ரோகங்கள் இசைசிரோ வாத
மறித்துவிடும் பீலிகை வாய்வு. 544

வாய்வுமுத லானதும்போம் வன்ரசாயனப் பேர்கேள்
தூயகெந் தகயோகம் சொல்லியிடின் - சேய்முருகன்
ஏவுமயில் வேலுமிணை வாளும் போல்விழியே
நாவலர் முன் சொல்வாய் நயந்து. 545

பாட வேறுபாடு :

பாடல் எண் : 540. 1 தினத்துக் கொன்றாம்
542. 1 இந்தோகையள் இத்தோகையள்
2 முயவிடையம்
543. 1 அந்ததேனும் 2 மேவவிடுத்து
3 களர், கள்.
545. 1 நாவில்.

சேரும் சரக்குகள் : கந்தகம் திப்பிலிமூலம் சீரகம் தான்றிகாய்
(வகைக்கு 1 ½ பலம்)
தாளிசபத்திரி நெல்லிவற்றல் இலவங்கப்

ˣ ரேணுகம் என்பதும், கடுக்காய் என்பதும் ஒரே சரக்காகும்
ˣˣ உவவிடுத்து - தப்பவிட்டு.

பட்டை ஏலரிசி சூகைநீறு இலவங்கப் பத்திரி
(வகைக்கு 1 பலம்)
திப்பிலி (3 பலம்)
மிளகு கடுக்காய் (வகைக்கு 2 பலம்)
வாய்விளங்கம் கடுக்காய் (வகைக்கு ¾பலம்)
சுக்கு 1¼ பலம்
சரக்கரை 10 பலம்
இலவங்கம் 1½ பலம்
அதிவிடையம் சுட்டகரி 3 பலம்

செய்முறை : மேற்கண்ட சரக்குகளில் சுத்தி செய்ய வேண்டிய வைகளை முறைப்படி சுத்தி செய்து தூளாக்கி வைத்துக் கொண்டு அதில் தேன், நெய் சரியளவு விட்டு மத்தித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : மேகம், சூலை, அக்கினிமந்தம், கம்ப வாதம், சிறுசிரங்கு, சோணிதவாதம், திமிர்வாதம், கிரந்தி, சிரோவாதம், பீலிகைவாய்வு.

கந்தக இரசாயனம் (வேறு)

கந்தகம்ஓ ரொன்றுபலங் கேளரத்தை வால்மிளகு
நந்துசிறு[1] நாகப்பூ நல்லேலம் - வந்தசிறு
தேக்கு திரிகடுகு சீரகந் தேசா வரங்கள்
தாக்குகெச திப்பிலியுந்[2] தான். **546**

தான்சாதிக் காய்லவங்கந் தக்கோலம் கச்சோலம்
வாந்தா[1] ளிசவிலைகள் வாய்விளங்க - மானே
இரண்டுஓம மில்வகைக்கே ஏந்துபலங் காலாம்
திரண்டபரங் கித்தோல் தான் தேர்ந்து. **547**

தேர்ந்தபலம் இரண்டாம் சேர்ந்தபொடிக் கேசரியாய்
ஆர்ந்த சருக்கரையெலாங் கலந்தே - சாந்தமாய்
நெய்தேன் அனுபானம் நேசமுடன்[1] கொண்டிடிகில்
மெய்மேகச் சூலை விரணம். **548**

விரணமல்லால் சோணிதங்கள் வீண்கிரந்தி கம்பந்
திரண திமிர்வாதம் சிரங்கு - கரணசிரோ
வாதங்க ளாம்ரோகம் வல்லிறுத்த ரோகமுதல்
கோதகலப் போமே குறித்து. **549**

குறித்தவன்னி மந்தமும்போம் கொள்தேக புட்டி
பொறுத்த ரசாயனப்பேர் பொற்பாய் - நிறுத்துவிடும்
கெந்தகமே என்பர் கிளிமொழியீ ரிம்மருந்தை
சுந்தரமாய்க் கொள்வீர் துணிந்து. 550

கரணம் - காது

பாடவேறுபாடு :

பாடல் எண் : *546.* 1 நற்றசிறு
2 திப்பிலியாம்
548. 1 நேமமுடன்
2 மெய்க்குஞ்

சேரும் சரக்குகள் : கந்தகம் - 1 பலம்
அரத்தை வால்மிளகு சிறுநாகப்பூ ஏலரிசி சிறு தேக்கு சுக்கு மிளகு திப்பிலி சீரகம் யானைத் திப்பிலி சாதிக்காய் இலவங்கம் தக்கோலம் கச் சோலம் தாளிசபத்திரி வாய்விளங்கம் அசமதா ஓமம் ஓமம் (வகைக்கு ¼ பலம்)
பரங்கிப்பட்டை - 2 பலம்

செய்முறை : மேற்கண்ட சரக்குகளை இடித்துச் சூரணித்து அத்துடன் நெய், தேன், சர்க்கரை கலந்து கிளறிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : மேகசூலை, விரணம், சோணிதவாதம், கிரந்தி, கம்பவாதம், திமிர்வாதம், சிரங்கு, சிரோவாதம், அக்கினிமந்தம், இவை தீரும் தேகபுஷ்டி உண்டாகும்.

வல்லாதகி இரசாயனம் (வேறு)

சேங்கொட்டை நாற்பதுவாம் சேந்திருக்கும் நல்லவெல்லம்
பாங்குபலம் பத்தாம் பகரெள்ளு - தாங்குபடி
ஒன்றிதுகள் மூன்றும் உரலி லிடித்தெடுத்து
நன்றுதினங் கொள்வாய் நயந்து. 551

நயந்தருந்த வண்டுகடி நற்றேகக்[1] குட்டம்
இயந்த விரண மிட்டேகும் - உயர்ந்த

பசிதீபன முண்டாம் பத்தியங்க ளிச்சை
சசிநேர் முகத்தணங்கே[1] சார்ந்து. **552**

சேரும் சரக்குகள் : சேங்கொட்டை - *40* பலம்
வெல்லம் - *10* பலம்
எள் - *1* படி

செய்முறை : சேங்கொட்டையைத் தூய்மை செய்து எள், வெல்லம் சேர்த்து உரலிலிட்டு இடித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வண்டுகடி, குட்டம், விரணம் தீரும். பசி உண்டாகும்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

பாடவேறுபாடு :

பாடல் எண் : *552. 1* கடிந்ததேகு நற்றேகு
2 முகத்தானங்கே.

பாடாக்கிர அரிதகி

பொன்முசுட்டை வேப்பந்தோல் புங்குமுத்தம் வேளைவேர்
தின்சாரணைபூ திணியஞ்சார் - தன்பலங்கள்
சேர்வகைக்கு வெள்ளுள்ளி சீர்நாற் பதுபலமாம்
பார்கடுக்காய் நூற்றைம்பான் பாங்கு. **553**

பாங்குபெரு மரத்தோல் பண்கரு வேப்பீர்க்கழுநீர்
ஓங்குகொடி வேலிஒன்றுக் கோர்பத்தாந் - தாங்கு
பலஞ்சுக்கு மூவைந்துபலஞ் சொல்கூ விளமா
மேல்கனி[1] யாறுபலம் காண். **554**

காணுமுக்கா வேளைவேர் காண்பிரிய ஆறுபலம்
ஈனிடும்[1] மாதளையோ ரேழுபலம் - தோணவெல்லாம்[2]
பாண்டமதிற் சேர்விதியின் பாணியந் தான்விடுத்தே
யாண்டகுழனீ ரெட்டொன்று ஆக்கு. **555**

ஆக்குங் குடிநீரில் ஆனஉள்ளித் தோலுரித்துப்
போக்கியதிற் போடுசுக்குப் பொறக்கடுக்காய் - நீக்கிரெண்டும்
ஆட்டுரலில் தானரைத்தே யக்குடிநீ ரில்விடுத்து
நாட்டுமே நெய்யும்வார் நாழி.[1] **556**

நாழியல்லால் தான்பதக்கு நற்றயிர்க[1] ளாம்விடுத்துத்
தாழிதனில் காய்ச்சே தான்கற்க -மூழின்
வருநொய்த்தரத்தை[2] வல்லவங்கப் பட்டை
இருவோமம் சீரகமாம் இங்கு. 557

இங்குவல்லால் சாதிக்காய் ஏர்[1] சாதி பத்திரிசீர்
தங்குசிறு நாகப்பூ தான்லவங்கம் - பாங்கு
திரிகடுகாம் அஞ்சுப்புத் திப்பிலிமூ லத்தோடு
உரியவதி விடையம் ஓங்கு. 558

ஓங்குவகைக் கோர்பலத்தூள் ஓர்ந்ததனிற் றூவிநல்
பாங்குகடு காய்திரட்டிப் பண்யோகந் - தேங்குபெயர்[1]
சீர்படாக்கிராங்கள்[2] சேர்ந்த அரிதகியாம்
ஓர்கடுக்காய் தன்னளவாய் உண். 559

உண்ணத்தான் வேதனைசெய் ஓர்சூசி கைகிராணி
கண்ணப் படுசங் கரகிராணி - என்று
வருஞ்சிகை[1] வாய்வு வாரிதிக்கு ளோடி
இருந்[2]தொளித்து ஓய்ந்திடுமாம் ஏங்கி. 560

பாடவேறுபாடு :

பாடல் எண் : 554. 1 கரிணி
555. 1 மீனிடு, 2 தோணவெல்லாம்
556. 1 நாட்டுநெய்யு மெண்ணையும்வார் நாழி
557. 1 தயிர்களும்
2 வருநோய்த் தரத்தை - வருநோயகத் தாத
558. 1 ஓர்
559. 1 தேங்குபேய்
2 சீர்படாதக்கிராணிகள்
560. 1 வருஞ்சூசிகை
2 விடும்

சேரும் சரக்குகள் : பொன்முசுட்டை வேப்பந்தோல் புங்கு முத்தக்காசு
வேளைவேர் சாரணை அரசம்பட்டை (வகைக்கு
5 பலம்) வெள்ளுள்ளி 40 பலம்
கடுக்காய் 150 பலம்
பெருமரத்தோல் வேப்பீர்க்கு கழுநீர்க் கிழங்கு

கொடிவேலி (வகைக்கு 10 பலம்)
சுக்கு 15 பலம்
விளாங்கனி 6 பலம்
முட்காவேளைவேர் 6 பலம்
மாதுளைவேர் 7 பலம்

செய்முறை : மேற்கண்ட சரக்குகளில் வெள்ளுள்ளி, கடுக்காய், சுக்கு தவிர ஒன்றிரண்டாய் இடித்து 8 பங்கு நீர் சேர்த்து 1/8 வற்றும் படி காய்ச்சி அதில் தோல் நீக்கிய வெள்ளுள்ளி, சுக்கு, கடுக்காய் அரைத்துக் குடிநீரில் கலந்து கொண்டு.
நெய் 1 நாழி
தயிர் 1 பதக்கு இவற்றையும் சேர்த்து

அத்துடன் சிற்றரத்தை இலவங்கப்பட்டை ஓமம் அசமதா ஓமம் சீரகம் சாதிக்காய் சாதிப்பத்திரி சிறுநாகப்பூ இலவங்கம் சுக்கு மிளகு திப்பிலி கல்லுப்பு கறியுப்பு வெடியுப்பு வளையலுப்பு இந்துப்பு திப்பிலிமூலம் அதிவிடையம் (வகைக்கு 1 பலம்)
இவற்றைப் பொடி செய்து தூவிக் கிளறி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : கடுக்காய்

தீரும் நோய்கள் : சூசிகா வாயு, கிராணி, சங்கிரக் கிராணி, தலைநோய்.

இலசுனபுட்டி

வெள்ளுள்ளி நூறுபலம் மேல்தோலை நீக்கியதை
விள்ளவரைத் தேகற்க மேல்காய் - முள்ளி
திரிகடுகு சாதிக்காய் திப்பிலியின் மூலம்
உரிய சதகுப்பை உரை. 561

உரைசித் திரமுலம் உற்றளவச் சாரம்
உரியசத்திச் சாரம் ஓமம் - நெரியும்
கழற்சிவிரை அஞ்சுப்பு காண்பலங்க ளொன்றாம்
தழைச்சுகடு கோருழக்காம் சாற்று. 562

சாற்றுகா ரெள்ளுழக்கு தன்பொடியோ டேகலந்து
ஏற்ற விளக்கெண்ணெய் யீர்நாழி - தோற்றிடுநெய்

ஓரரையு மேவிடுத்தே யுள்ளெரியில் வைத்தெரித்து
பார்கடுகாய் பண்ணுபதம் பார்த்து. 563

பார்த்துக்கு நாமம் பகரில் லசுனபுட்டி
ஏற்றதனைத் தின்னவே எட்டுகுன்மம் - வீற்றிருக்கும்
சூசிகா வாய்வு சுவாச மகோதரங்கள்
காசம்பல் வாய்வும்போம் கண்டு. 564

பாட வேறுபாடு :

பாடல் எண் : 562. 1 தெரியும்.

சேரும் சரக்குகள் : வெள்ளுள்ளி - 100 பலம் தோல் நீக்கி விழுதாய் அரைத்துக்கொள்ள வேண்டும். முள்ளி சுக்கு மிளகு திப்பிலி சாதிக்காய் திப்பிலிமூலம் சதகுப்பை சித்திரமூலம் எவச்சாரம் சத்திச்சாரம் ஓமம் கழற்சி விரை கல்லுப்பு கறியுப்பு வெடியுப்பு வளையலுப்பு இந்துப்பு (வகைக்கு 1 பலம், கடுகு (1 உழக்கு) கருப்பு எள் (1 உழக்கு) விளக்கெண்ணெய் (2 நாழி)
நெய் (1/2 நாழி)

செய்முறை : சரக்குகளைச் சுத்தித்துச் சூரணித்து விளக்கெண்ணெய், நெய், உள்ளி கற்கம் ஆகியவற்றுடன் கலந்து எரித்துக் கடுகு திரளும் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : குன்மம், சூசிகாவாயு, சுவாசம், பெருவயிறு, காசம், வாய்வு.

மகாலசுனபுட்டி

துலங்கியிடும் வெள்ளுள்ளித் தோல்நீக்கி நூறு
பலங்களரைத் தேநொச்சி பண்பாய் - நிலங்கிளரு
முக்கா வேளைபிரமி மோதுமுடக் கொத்தான்
மிக்காம் விழுதிகுப்பை மேனி. 565

மேனியல்லால் பாவட்டை வெண்சாரணை வாசை
நான வமுக்குரா நல்முருங்கை - கானிலுள
ஆடுதின்னாப் பாளை ஆனபொன் னாவாரையுங்
காடுறையும் கொட்டைக் கரந்தை. 566

கரந்தையல்லால் சாறுவேளை காணுமிலைச்சாறு
திருந்துவகைக் கோர்நாழி சேர்பின் - பொருந்து வெள்ளை
யாடுபசு மூத்திரங்க ளானதென்னங் காய்கள்பால்
நாடுறையும் நார்த்தைகனி[1] நீர். 567

நீர்வகைக்கு மோர்நாழி நீங்கா திதுவுடனே
பார்விளக்கி னெண்ணெப் பசுவின்நெய் - சீரெள்ளின்
எண்ணெய்வகைக் கொன்றுபடி இத்தனை எல்லாமெரித்தே
ஒன்றுபடப் பாகுபதம் ஓர்ந்து. 568

ஓர்ந்தகற்கம் வெண்கார முத்த விருகடுகாம்[1]
ஏர்ந்த திரி கடுகோ டீரரத்தை[2] - சேர்ந்தபடி
காரஞ் சதகுப்பை காண்செவியம் அஞ்சுப்பு
கோர்சத்தி சாரமாம் கோட்டம். 569

கோட்டமுதல் வகைக்குக் கூறுநிடக மானாக
கூட்டுப்பொடித் தூவிமேற் கூர்கடுக்காய் - நாட்டிமலர்க்
கையகத்தி லேந்திம காலசுன புட்டிஎனப்
பெயரா மிம்மருந்தைப் பேணி. 570

பாட வேறுபாடு :

பாடல் எண் : 567. 1 நாரத்தைநற்கனி
569. 1 முத்தவிருக்கு கரம்
2 திரிகடுகா மீரரத்தை

பேணித் தவசபுடம் பேதமற வைத்தெடுத்து
நீணிலத்தோர் கொண்டிடுகில் நீள்சூலை - தோணு குன்மம்
வல்லை[1] நீராமை வருமந் தாகவறட்சி
செல்லுசெருக் குன்மசூலை தேமல், 571

தேமலல்லால் குட்டம் செறியும் சோதரங்கள்
தூமமுள மூலகரண சூலைவலி - சேமமுள
நாடி விரணம் நலிசூசிகை வாய்வு
கூடுகண்ட மாலையின் கூறு.[1] 572

கூறுமெண்ப தாம்வாதம் கூர்தந்த வாய்உதடு
மாறுமாகள கண்ட மாலைமேல் - மீறுதொப்புள்
வல்லை சருவாங்க வாதவீக்கங்க ளெல்லாம்
ஒல்லையினிற் போமே ஒடுங்கி. 573

பாடவேறுபாடு :

பாடல் எண் : 571. 1 வல்ல
572. 1 கூடுகண்டம் சீலையினங் கூறு
கூடுகண்ட மாலையின்னங் கூறு.

சேரும் சரக்குகள் : தோல் உரித்த வெள்ளுள்ளி - 100 பலம் இதனை அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
நொச்சி முட்காய்வேளை பிரமி முடக்கற்றான் விழுதி குப்பைமேனி பாவட்டை சாரணை ஆடா தோடை அமுக்கரா முருங்கை ஆடுதீண்டாப்பாளை பொன்னாவாரை கொட்டைக் கரந்தை சாறுவேளை ஆட்டுப்பால் (சாறு வகைக்கு 1 நாழி.
பசுநீர் தேங்காய்ப்பால் நாரத்தம்பழச் சாறு (வகைக்கு 1 நாழி)
விளக்கெண்ணெய் பசுவின் நெய் எள் நெய் (வகைக்கு 1 படி)
அவை அனைத்தையும் ஒன்று கலந்து பாகு பதத்தில் எரிக்க வேண்டும்.
வெங்காரம் வெண்கடுகு கருங்கடுகு சுக்கு மிளகு திப்பிலி சிற்றரத்தை பேரரத்தை படிகாரம் சதகுப்பை செவ்வியம் கறியுப்பு கல்லுப்பு வெடியுப்பு வளையலுப்பு சத்திச்சாரம் கோட்டம். (வகைக்கு 1 பலம்)

செய்முறை : இச்சரக்குகளைச் சுத்தித்துச் சூரணித்து மேற்படி பாகில் கலந்து கிளறி இறக்கிக் கொள்ள வேண்டும் இதன்ன ஒரு மண்டலம் தானிய புடம் வைத் தெடுக்க வேண்டும்.

அளவு : கடுக்காயளவு உருட்டி உட்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சூலை, குன்மம், வல்லை, நீராமை, மந்தம், தாக வறட்சி, குட்டம், தேமல், மகோதரம், மூலம், கர்ணசூலை, வலி, நாடிவிரணம், சூசிகவாயு, கண்டமாலை, 80 வகை வாதம், தந்தவாயு, கள கண்ட மாலை, தொப்புள் வல்லை, சருவாங்க வாதம், வீக்கம்.

அட்டகுன்மக்குடோரி

வெண்காரம் அஞ்சுப்பு வெள்ளுள்ளி யாங்கடுகு
திண்காயம் ஓமம் திரிகடுகு - பண்வசம்பு
நாடும் எவச்சாரம் நவச்சார மாங்கடுக்காய்
வாடுசவுக் காரம்நேர் வாளம். 574

வாள்விழியீர் இம்மருந்தை வாங்கிச் சமனிறையாய்
தூள்படுத்தித் தேங்காய்க்குள் தோண்டியிட்டு[1] - நீள்புடத்தில்
வெந்தோடு தான்மணக்கும்[2] வேளைதனி லெடுத்தே
அந்தோடு[3] நீக்கியரை காண். 575

அரைக்கு மருந்திரண்டு வான்நிடகம் கொள்ளில்
உரைக்கும் அட்ட குன்ம மெல்லா மோடுந் - தரைக்கிதுபேர்
அட்டகுன்ம மாங்குடோரி ஆவின்பால் நெய்தயிர்கள்
இட்டுண்ணப்[1] பத்தியமாம் என்று. 576

பாடவேறுபாடு :

பாடல் எண் : *575.* 1 தேங்காயுள் தோன்றவிட்டு
2 ஆமணக்கு
3 அத்தோடு
576. 1 இட்டுணு

சேரும் சரக்குகள் : வெங்காரம் வளையலுப்பு வெடியுப்பு இந்துப்பு கறியுப்பு கல்லுப்பு வெள்ளுள்ளி கடுகு பெருங் காயம் ஓமம் சுக்கு மிளகு திப்பிலி வசம்பு எவச் சாரம் நவச்சாரம் கடுக்காய் சவுக்காரம் நேர் வாளம் (சம அளவு)

செய்முறை : இவற்றைத் தூள் செய்து தேங்காயைக் கண் திறந்து அதற்குள் இட்டு மூடி புடத்தில் வைக்க வேண்டும். ஓட்டின் வெந்த மணம் வரும் போது வெளியிலெடுத்து ஓடு நீக்கி அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மருந்தளவு : 2 பலம்

தீரும் நோய்கள் : எட்டுவித குன்மம்.

பத்தியம் : பால், நெய், தயிர் சேர்த்து உணவு உண்ண வேண்டும்.

கௌதமி தக்கிரலசுனம்

ஆர்கோ புரமழகி யானிலை பலந்தானும்
ஓரன்ப துள்ளிபலம் ஓர்பத்து - மோர்தூணி
விட்டுநா ளொன்றாக வேகாய்ச்சி யிதுநிறக[1]
வெட்டு மருந்தினிவிள் வாம். 577

விள்ளக்கே ளத்தி கருவேல் ஆல்லரசும்[1]
ஒள்ளியமாம் பட்டை ஒதியந்தோல் - கொள்ளுமத்திப்
பிஞ்சு கருவேப் பிலைத்தண்டு புங்கம்வேர்
மிஞ்சுபொன் முசுட்டைக்கொடி வேலி 578

வேலியல்லால் மாதளையின் வேரு மதனிலையும்
சாலவே கரை[1] சமன்போட்டுள் - ஏலனீர்
விட்டுனால் ஒன்றாக்கி மேவியமுன் கோதமுடன்
இரண்டிரண்டும் ஒன்றாக்கியே. 579

ஆக்கியபின் சாதிக்காய் அப்பத் திரிவிடையம்
பூக்கும் கிராம்பு புளிவிரைத்தோல் - தூக்கு
திரிகடுகு பொன்முசுட்டை சேரும்வெட் பாலை
விரையுடன்மாங் கொட்டையிது வேண்டு. 580

வேண்டுமிது பொன்னிறமாய் வேகவறுத் தரைத்து
பாண்ட நல்லெண்ணெய் பசுவினெய் - மீண்டு
களைப்பச் சரிசிக் கழுனீர் வகைக்கு
மளவுபடி யரையா யாற்று. 581

ஆற்றுமிதெல் லாம்கடுகத் தாக்கிவைத்துக் கொண்டுண்ண
போர்க்குங் கிராணிஎல்லாம் போமிதன்பேர் - பார்க்குள்
அறிவா மிளமயிலே ஆம கௌதமீதக்
கிரலசுன மென்றே கிளத்து. 582

பாடவேறுபாடு :

பாடல் எண் : 577. 1 இருநிறம்
578. 1 ஆல்அரசு
579. 1 காரை

சேரும் சரக்குகள் :	*கோபுரந்தாங்கி*	*- 9 பலம்*
	வெள்ளுள்ளி	*- 10 பலம்*
	நீர்	*- 1 தூணி*

இடித்து தண்ணீர் சேர்த்து குடிநீராகக் காய்ச்சி வடித்துக் கொண்டு

அத்தி கருவேல் ஆல் அரசு மாம்பட்டை ஒதியம்-
பட்டை அத்திப்பிஞ்சு கருவேப்பிலைத்தண்டு
புங்கம்வேர் பொன்முசுட்டை கொடிவேலி
மாதுளைவேர் மாதுளை இலை (சமனளவு)

எடுத்துக் குடிநீரிட்டு முன்செய்த குடிநீருடன் சேர்த்துக் கொள்ள வெண்டும்.

சாதிக்காய் சாதிப்பத்திரி அதிவிடையம் கிராம்பு
புளியவிரைத்தோல் சுக்கு மிளகு திப்பிலி பொன்
முசுட்டை வெட்பாலை மாங்கொட்டை (சமனளவு)

இவற்றை பென்னிறமாக வறுத்து அரைத்து

நல்லெண்ணெய் பசுநெய் பச்சரிசி கழுநீர்
(வகைக்கு *1/2* படி)
குடிநீர், சூரணம், எண்ணெய் வகைகள் அனைத்
தையும் ஒன்று கலந்து அரைத்துக் கடுகு திரளும்
பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : கிராணி.

கோழிக்கடுகு

சாரணை நாய்வேளை தருவேலி யின்பருத்தி
சூறுகுப்பை மேனி கொடிவேலி - சாறியிடும்
சின்ன வழுதலைசொல் சேர்ந்தவே ருங்கடுகோடு
ஒண்ணு மிளகுவகைக் கோது. 583

ஓதும்பலங்க ளொன்றா மோர்காசெடை யிங்கு
பேதிக்கடுக் காய்பத்தாம் பின்கழற்சி - மீதினுள்ளே
ஒத்த விரைப்பருப்பு மோர்பத்தா மொன்றுபட[1]
யித்தில ரசகழஞ்சா மோர். 584

ஏர்சயிந்த உப்பும் இருகாசெடை மத்தித்
தோர்வெள் ளாட்டின்பாலை ஊற்றியரை - ஓர்சாமம்
கத்துகருங் கோழிதலை கால்மயிர்கள் நீக்கியது
வைத்த குடல்குதத்தால் வாங்கி. 585

அடைத்து அதனை சதுரக் கள்ளியினால் செய்யப் பட்ட பெட்டியில் வைத்து மூடியிட்டு. புடமிட்டு எடுக்கவேண்டும். எலும்பை எடுத்துவிட்டு மாமி சத்தை மட்டும் அம்மியில் அரைத்து ஒரு சட்டியில் போட்டு அத்துடன்.

வெள்ளுள்ளி - 1 பலம்
ஆமணக்கெண்ணெய் - 1 படி

சேர்த்து எரித்து கடுகு திரளும் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : கோழிமுட்டை அளவு
தீரும் நோய்கள் : உள்மூலம், சீமூலம், இரத்தமூலம், பிறமூலம், வாத மூலம், சூலை.

நார்த்தங்காய் கடுகு

திரிகடுகு வாய்விளங்கம் திப்பிலியின் மூலம்
வருகடுக்கா யோடுநேர் வாளம் - பெருங்காயம்
இந்து கடுகு எவச்சாரம் வெள்ளுள்ளி
தந்தமுதி ரோகணியாந் தான். 590

தான்வகைக் கோர்நிடகந் தங்காம லேபொடித்துக்
கானமுள நாரத்தங் காய்பத்தை - வானளைய
மாடியதில் அடைத்தே[1] ஆனபெரும் சட்டியினுள்
ஊடு குறுணிநீ ரூற்றி. 591

ஊற்றிச் சதுரக்கள்ளி ஓர்ந்து நறுக்கிவிட்டு
சேர்த்துவாய் வேடுகட்டிச் சீலையின்மேல் - ஏற்றதிந்த
நாரத்தங்காய் வைத்து நன்றாமேற் சட்டிகவிழ்த்
தூறு[1]சந்தில் மண்சீலை சுத்தி. 592

சுத்திமுப்பான்[1] நாழிகைதான் தோன்ற வெரித்தெடுத்தே
உத்தி நிழலுலர்த்தி ஒள்ளியதாய் - வைத்தவென்னீர்
தனனிலரைத் தருந்த[2] தாங்காத பேதியுமாய்
மன்னும் வயிற்றுளநோய் மாளும். 593

பாட வேறுபாடு :
பாடல் எண் : 591. 1 மாடியதிலடைத்தே
592. 1 ஆறு
2 தன்னிலமைத்தருந்த

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி வாய்விளங்கம் திப்பிலிமூலம் கடுக்காய் நேர்வாளம் பெருங்காயம் இந்துப்பு கடுகு எவச்சாரம் வெள்ளுள்ளி கடுகுரோகணி (வகைக்கு 1 பலம்)

செய்முறை : நாரத்தங்காயைப் பத்தைகளாகச் சுருளிட்டு அதில் மேற்கண்ட சரக்குகளைப் பொடிசெய்து அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் 1 குறுணித் தண்ணீர் விட்டு, சதுரக் கள்ளியை நறுக்கி அதிலிட்டு, சட்டி வாய்க்கு வேடுகட்டி அதன்மேல் நாரத்தங் காய்களை வைத்து அதன்மேல் மற்றொரு சட்டி மூடி, சந்து வாய்க்குச் சீலை மண் செய்து, அடுப் பில் வைத்து 30 நாழிகை எரித்து எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சிறிதளவு வென்னீரில் அரைத்து அருந்த வேண்டும். இதனால் பேதியாகும்.

தீரும் நோய் : வயிற்றுவலி

சூலைப்பிடாரம்

இஞ்சி எலுமிச்சை எழிலார் தும்மட்டிக்கா
யுஞ்சி[1] நொச்சிசீர்வகைக்கா மொன்றுபடி - மிஞ்சனலில்
நாலிலொன்றாய்க் காய்ச்சியதில் நல்லவிளக் கெண்ணெய்படி
காலும்விட்டுப் பின்சொல்வாய் கற்கம். 594

கற்கந் திரிகடுகு கான்றகொடி வேலிவேர்
தற்கா வெவச்சாரந் தருவிளங்கம் - வற்கோமம்
வெங்கார மஞ்சுப்போடு ரத்தகெச கணங்கள்
தங்காதொவ் வோர்பலமாத்[1] தான். 595

தானிடித்துத் தூள்தூவி சார்ந்தபத மாயிறக்கி[1]
மேனி[2] சுத்தி நேர்வாளம் விள்பலங்கள் - தானொன்றாம்
விட்டுப் பிசைந்ததனை வேண்டியுண சூலைவலி
எட்டுகுன்மம் பீலிகையோ டேற்று. 596

ஏற்று மகோதரங்க ளேந்துநீ ராமைவலி
சேர்த்தகவை தன்வயிற்றில் சேர்ந்தபிணி - யார்த்த

அடாதுடனே ஏகும் அதன்பெயர்கேள் சூலை
பிடாரமென்பார் நல்லோர் பிரித்து. 597

பாடவேறுபாடு :
பாடல் எண் : *594.* 1 காஞ்சி
595. 1 பலமாகத்
596. 1 குன்மம்பாற்கி
2 மேன்சுத்தி

சேரும் சரக்குகள் : இஞ்சி எலுமிச்சை தும்மட்டிக்காய் நொச்சி (சாறு வகைக்கு 1 படி)
இவற்றை எரித்து கால்பாகமாக வற்றியபின் விளக்கெண்ணெய் 1/4 படி
சுக்கு, மிளகு திப்பிலி கொடிவேலிவேர் எவச் சாரம் வாய்விளங்கம் ஓமம் வெங்காரம் வளைய லுப்பு வெடியுப்பு இந்துப்பு கல்லுப்பு கறியுப்பு யானைத்திப்பிலி (வகைக்கு 1 பலம்)

இவற்றைச் சூரணித்து, சாறு, எண்ணெய், இவற்றில் தூவி எரித்துப் பதத்தில் இறக்கி அதில் சுத்திசெய்த நேர்வாளம் 1 பலம் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சூலை, வலி, எட்டுவகை குன்மம், பீலிகை, மகோ தரம், நீராமை வலி, வயிற்றில் ஏற்படும் பிணிகள்.

எலுமிச்சங்கடுகு

இந்துப்பு இரண்டுபல மேர்காந்தம் நாலுபலம்
நந்து மரப்பொடிகள் நான்கிரட்டி[1] - வந்தபலம்
நாரத்தைச் செம்பீரம் நற்சங்கு கையான்[2]
ஆர்த்தவெற் றிலையோ டஞ்சு. 598

அஞ்சி னிலைச்சா றதுவகைக்கோர் நாழியாய்த்
தஞ்சமெனுஞ் சட்டியினில் தானவிடுத்தே - எஞ்சலில்லா
முன்சொன்ன நல்மருந்து மூன்றுமிந்தச் சாற்றரைத்து
பின்னெலும் பிச்சங்காய் பேசு. 599

பேசுங்கால் நாற்பதுவை பேதமறக் கீறிவாய்[1]
தேசுபெற வரிந்தே சிக்கினவாய் - நேசமுடன்
காயுள்ளே முன்னரைத்துக் கண்டமருந்தடைத்து
மேயச்சட்டி சாறுள்ளே விட்டு. 600

விட்டபின்பு நீர்சுவற வேகவைத்தே காரிரும்பின்
இட்ட கரண்டி யாலேதுழாவிக் - கட்டளையாய்ப்
பிள்னெடுத்துப் பாதிக்காய் பேசாமற் தின்றிடுகிற்
துன்னியிடும் காமாலை சோபை. 601

சோபையுடன் பாண்டும்போம் சொல்லியிடும்[1] பத்தியங்கள்
கோபமுள கைப்புப்புக் கோதுபுளி - சாபமதாய்
தள்ளிவிடு மோர்பழஞ் சோறுமாந்[2] தனிமிளகோடு
உள்ளது வரைப்பருப்புமா மோது: 602

ஓதுமிந்த யோகப்பேர் உற்றஎலும் பிச்சங்காய்
ஏதமறுங் கடுகாம் என்றுரைக்கும் - பாதிமதி
போன்ற நுதலீர் புதுவனசப் போததனில்[1]
தோன்றுந் திருவனையீர் சொல். 603

பாட வேறுபாடு :

பாடல் எண் : 598. 1 நானங்கிரட்டி, தான்கிரட்டி
2 கையின்றி
600. 1 கிராணிவாய், கினிவாய்
602. 1 சொல்லியிட்ட
2 சோறாமாந்
603. 1 போதலீற்

சேரும் சரக்குகள் : இந்துப்பு 2 பலம் கார்ந்தம் 4 பலம் அரப்பொடி 8 பலம் இம்மூன்றையும் நாரத்தை எலுமிச்சை சங்கங்குப்பி கையான் வெற்றிலை (வகைக்கு 1 நாழி) இவற்றின் சாற்றில் அரைத்துப் பின் எலு மிச்சங்காய் 40ஐக் கீறி அதனுள் அடைத்து, மீதி யுள்ள சாற்றை ஒரு சட்டியிலிட்டு அதில் எலு மிச்சங்காயைப் போட்டு நீர் வற்றும்வரை வேக வைக்க வேண்டும். இரும்புக் கரண்டியால் கிளறிவிட்டு எடுத்து ஆறவைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : பாதி எலுமிச்சை

தீரும் நோய்கள் : காமாலை, சோபை, பாண்டு

பத்தியம் : கைப்பு, புளிப்பு, உப்பு ஆகாது, மோர், பழஞ் சோறு, மிளகு, துவரம் பருப்பு ஆகும்.

மண்டூர பற்பம்

பழங்கிட்டந் தண்ணீரிற் பார்த்தொரு னாளூற
வழுந்தவிட்டுத் தானெடுத்தே யப்பால் - கொழுந் தெரியின்
வைத்துக் கெசபுடமாய் வன்னுரலி லிட்டிடித்தே
ஏத்துக்குன்றி போறபரும னேந்து. 604

ஏந்தியதைச் சட்டியினி லேபோட்டு வன்பிரமி
சேந்ததழு தாழை திகழ்நொச்சி - போந்திருக்குங்
கையின்றி கொட்டைக் கரந்தை கருஞ்சதங்கு[1]
பைய[2] வாசை வேலிப்பருத்தி. 605

பருத்தியல்லால் நீர்முள்ளி பாங்கமுச பாதி
இருத்தும் பொடுதலையி னீர்கள் - தெரித்துத்
தனித்தனியே இட்டொருநாள் தான்காய்ச்சி வேறே
இனிப்பசுவும் வெள்ளாடு மேற்று. 606

ஏற்றநன் கோமியத்தி லிட்டுத்தனித்தனியே
பார்த்தவித்துச் சேறுபதம் படவே - ஆற்றிப்
பொடித்துப் பரணியிலேப் போத[1] வைத்துப் பின்னே
சோடித்த[2] திரிகடுகின் தூள். 607

பாடவேறுபாடு :

பாடல் எண் : 605. 1 கருஞ்சங்கு
2 பைய
607. 1 எழுத
2 சேர்மதத்
608. 1 சஞ்சீவி
2 செவி

பழைய கிட்டத்தைத் தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து அதனைக் கெசபுடமிட்டு எடுத்து அரைத்து குன்றியளவு உருண்டைகளாகச் செய்துகொள்ள வேண்டும். இதனை ஒரு சட்டியில் போட்டு.

பிரமி தழுதாழை நொச்சி கையான் கொட்டைக் கரந்தை சங்கங்குப்பை ஆடாதொடை வேலிப்

பருத்தி நீர்முள்ளி செருப்படை பொடுதலை இவற்றின் சாற்றால் தனித்தனியே ஒவ்வொரு நாள் காய்ச்சி பின் இதே போன்று பசுவின் நீர் ஆட்டு நீர் இவற்றிலும் வேகவைத்து எடுத்து ஆறவைத்துப் பொடி செய்து சிமிழில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அனுபானம் : திரிகடுகு

தீரும் நோய்கள் : சயம், காசம், இரத்தகாசம், சுவாசம், கடிவகை, பாண்டு, சோபை

நவநீத பற்பம்

தந்தசத்தி சாரணைவேர் தானரைக்கு[1] மவ்விழுது
தொந்தமுடன் மூன்றுபலம்[2] சொல்பசுவி - னுந்து[3] வெண்ணெய்
ஒன்றுபங்குஞ் சேர்த்தரைத்தே ஓங்குசட்டி யுள்ள மைத்து
நன்றுசட்டி மேல்மூடி நாடு. 609

நாடுசந்து[1] வாய்க்குமண்செய் சீலைசுற்றி நல்லிடத்தில்
போடுகெச புடமாய்ப் போட்டபின்பு - கூடுபற்பம்
வெண்மையாய்த் தானிருக்கு மேன்மையுள்ள பற்பமதை
தன்மையி லந்தையிலை தான். 610

தானரைத்து நீர்கரைத்துத் தாங்கிக் கடைந்தனுரை
மேன்குழைத்துகைகால் விரைத்திடுகில் - மான்விழியீர்
கைகா லெரிவதும்போங் காணுநவ நீதபற்ப
மெய்காணி[1] தன்பெயராம் விள். 611

பாட வேறுபாடு :

பாடல் எண் : 609. 1 தானடைக்கு
2 பங்கு
3 உத்த
610. 1 நாடுகந்து
611, 1 மெய்தனி

சேரும்சரக்குகள் : சத்திச்சாரணைவேர் அரைத்த விழுது - 3 பலம்
பசுவெண்ணெய் - 1 பலம்

செய்முறை : இவற்றை ஒன்றாக அரைத்து ஒரு சட்டியின் மேல் மூடி, சந்து வாய்க்குச் சீலை மண் சுற்றிக் கெச புடத்தில் போட்டு எடுக்க வேண்டும். எடுத்த பற்பம் வெண்மையாக இருக்கும். இலந்தை இலையை அரைத்து நீரில் கரைத்துக் கடைய நுரையுண்டாகும். இந்தநுரையை நவநீத பற்பத் துடன் குழைத்துத் தடவ கை கால் எரிச்சல் நீங்கும்.

ஒற்றடம்

தான்றிமுத்தந் தேங்காய் தருவேப் பரிசிமஞ்சள்
ஆன்ற முருங்கை அகத்திவிரை - ஊன்றி
திரிகடுகு சீர்கோட்டம் சிற்றா மணக்கின்
அரிசி சதகுப்பை அது. *612*

அதுபொட் டணங்கட்டி யாமோட்டில் வேம்பின்[1]
வித்தை[2] எண்ணெய் குத்திவெதுப்பி - இதைநனைத்து
மேலொத்த சன்னிசுரம் வெருட்டும்[3] வாதங்கள்
கோலொத்த கூர்விழியீர் கூறு. *613*

பாட வேறுபாடு :

பாடல் எண் : 613. 1 யாமோட்டிவை வேம்பின்
2 விதை
3 வேறுபடும்

சேரும் சரக்குகள் : தான்றிக்காய் முற்றிய தேங்காய்த் துருவல் மஞ்சள் முருங்கை அகத்திக்கீரை சுக்கு, மிளகு திப்பிலி கோட்டம் சிற்றாமணக்கு விதை சதகுப்பை

செய்முறை : இவற்றைப் பொடித்து ஒரு துணியில் பொட்டணமாகக் கட்டி, ஒரு ஓட்டில் வேப்பெண்ணெய் ஊற்றி அதில் வெதுப்பி அதில் இப்பொட்டணத்தை நனைத்து ஒற்றடமிட வேண்டும்.

தீரும் நோய்கள் : சன்னி, சுரம், வாதம்.

ஒற்றடம் (வேறு)

முற்றின தேங்காய்த்துருவல் மொய்ம்பினுள்ளி ஓர்சிரங்கை
நற்றும் வசம்பு நாலாறு - பத்துபொடி
மேல்வேப்பி னெண்ணெய் குற்றி வேறே வறுத்தொத்தக்
காலகலும் சன்னிபோங் கண்டு. 614

சேரும் சரக்குகள் : முற்றிய தேங்காய்த்துருவல் *1* சிரங்கை
வெள்ளுள்ளி *1* சிரங்கை
வசம்பு *10*

செய்முறை : இவற்றைப் பொடித்து அதனுடன் வேப்பெண்ணெய் ஊற்றி வறுத்து ஒற்றட மிட வேண்டும்.

தீரும் நோய் : வாதம், சன்னி.

ஏறழிஞ்சி வித்தெள்ளு ஏற்குங் கருங்கொள்ளு
ஏறுபுன்னை வித்துறுந்து வெள்ளுள்ளி - கூறுசத
குப்பை கழல்பருப்பு கூர்வசம்பு சுக்குக்கணம்
ஒப்புகருஞ் சீரகமாம் ஓது. 615

ஒது முருங்கை உயரகத்தி வாலுளுவை
வாதுபுரி சிற்றா மணக்கமுத்தும் - ஏதமறும்
கெந்தகந் தேங்காய்த்துருவல் கேளிதளைப் பொட்டணஞ்சேர்
உந்துஎனும் பிச்சைநீ ரூற்றி 616

ஊற்றியதில் வேப்பெண்ணெய் ஒக்கக் கலந்துசட்டி
ஏற்றெரித்துப் பொட்டணத்தை யேதோய்த்துப் - போற்றுமுடல்
தன்னிலொத்த வாதசுரஞ் சன்னியெல்லாம் ஓடியிடு
மின்னினொத்த நுண்ணிடையீர் விள். 617

சேரும் சரக்குகள் : ஏறழிஞ்சிவித்து எள்ளு கருங்கொள்ளு புன்னை விதை உளுந்து வெள்ளுள்ளி சதகுப்பை கழற்சி விதை வசம்பு சுக்கு திப்பிலி கருஞ்சீரகம் முருங்கை விதை அகத்தி விதை வாலுளுவைவிதை சிற்றா மணக்கு விதை கந்தகம் தேங்காய் துருவல்

செய்முறை : இவற்றைப் பொடி செய்து ஒரு துணியில் பொட்டணமாகக் கட்டிக் கொள்ள வேண்டும்.
எலுமிச்சம்பழச்சாறு
வேப்பெண்ணெய் (சரியளவு)

இவற்றைச் சட்டியிலிட்டு எரித்து அதில் மேற்படிப் பெர்ட்டணத்தை தோய்த்து உடலில் ஒற்றடமிட வேண்டும்.

தீரும் நோய்கள் : வாதசுரம், சன்னி.

சினேக பொட்டணம்

புன்னை அரைக்கீரை புங்கழிஞ்சி யாமணக்கு
மன்னு முருங்கை மகிழ்சணம்பு - பின்னும்
பருத்தி மருதணையின் பண்புடைய வித்தும்
அரத்தை கடுகுள்ளியோ டல்லால். 618

அல்லாமல் எள்ளுகொள்ளோ டாங்கோர்ட்டம் இந்துப்பு
சொல்லார் வசம்புங்கு தூயோமம் - நல்லாய்வெள்
ளாட்டின்பிச்சு சமளா யத்தனையும் பொட்டணஞ்சேர்த்
தோட்டிலதில் வேப்பெண்ணெய் ஊற்றி. 619

ஊற்றி எரித்தே உடனனைத்து மேலோத்த
சாற்றியிடும் வாதமெல்லாம் தானோடு - மேற்றபெய
ராகும் சினேகப் பொட்டணமாம் யாவருக்கு
மோகையுடன் சொல்வாய் உகந்து. 620

சேரும் சரக்குகள் : புன்னை விதை அரைக்கீரை விதை புங்கு விதை அழிஞ்சில் விதை ஆமணக்குவிதை முருங்கை விதை மகிழ்விதை இணல்விதை பருத்தி விதை மருதனை விதை அரத்தை கடுகு வெள்ளுள்ளி எள்ளு கொள்ளு கோட்டம் இந்துப்பு வசம்பு பெருங்காயம் ஓமம் வெள்ளாட்டுப்பிச்சு (சம அளவு)

செய்முறை : இவற்றை இடித்துப் பொடித்து ஒரு வெள்ளைத் துணியில் பொட்டணமாகக் கட்டி ஒரு ஓட்டில் வேப்பெண்ணெய் ஊற்றி எரித்து அதில் பொட்டணத்தைத் தோய்த்து உடனே ஒற்றடமிட வேண்டும்.

தீரும் நோய் : வாதம்.

லோகாமிர்த ரசாயனம்

திரிகடுகு முத்தம் செவியமோ டேலம்
உறுதிப் பிலிமூல மோமங் - குரியசத
குப்பை விளாவரிசி கூர்கொடி வேலி இந்து
உப்புகிட்டம் வெந்தையமா முண். 621

உண்ணுமிரு சீரகங்கள் உள்ளியரப் பொடிகள்
பண்ணுமிது சமன்தூள் பண்ணியதை நண்ணொச்சி
பூவரசு கையின்றி போந்த கீழ்காய்நெல்லி
தாவுசங்கு தன்னிலையின் சாறு. 622

சாறுந் தனித்தனியே தானரைத்தே[1] யிஞ்சி
நீருரு மிளனீர் நெய்தேனுள் - மோரிற்
குடமொன்றிற் கொள்ள சயம்பாண்டு குன்மங்
குடல்வாதங்கள் வெப்புப்பாவை[2] காண். 623

காணும் விடபாண்டு காமாலை சோகையொடு
மூணியிடும்[1] வாந்தியு டன்ஏகும் - பூணுபசி
காந்திப் பிலனழகு காணுமுழு லோகாவமிர்தம்
ஏந்தும் ரசாயனப்பே ரெண். 624

பாட வேறுபாடு :

பாடல் எண் : 622. 1 உள்ளியாம்
623. 1 தள்ளாதரைத்தே
2 பாவையது
624. 1 மூணயிடும்.

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி முத்தக்காசு செவ்வியம் ஏலரிசி திப்பிலிமூலம் ஓமம் சதகுப்பை விளா வரிசி கொடிவேலி இந்துப்பு அயக்கிட்டம் வெந்தயம் சீரகம் கருஞ்சீரகம் வெள்ளுள்ளி அரப் பொடி (சம அளவு)

இவற்றைப் பொடி செய்துகொள்ள வேண்டும்.

நொச்சி பூவரசு கையாள் கீழ்க்காய் நெல்லி சங்கங்குப்பி (இவற்றின் இலைச்சாறு சமஅளவு)

செய்முறை : இவற்றில் தனித்தனியே அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : இஞ்சிநீர், இளநீர், நெய், தேன், மோர்

தீரும் நோய்கள் : சயம், பாண்டு, குன்மம், குடல்வாதம், வெப்புப்பாலை, விடப்பாண்டு, காமாலை, சோகை, வாந்தி இவை நீங்கும், பசி உண்டாகும் உடற்காந்தி, பலம், அழகு ஏற்படும்.

மகாவில்வாதி லேகியம்

நூறுபலம் கூவிளைவேர் நொய்யசிற்றா முட்டிவேர்
தேறுபலம் எண்பதுவாம் செஞ்செந்நெல் - கூறுபொரி
தானினிதாம் சுக்குமுத்தம் சந்துவிலாம்[1] பிச்சைவேர்
ஆனநெல்லி யின்முள்ளி யாமுன். 625

உன்னும் பருத்திவிரை யோடேலம்[1] சீரகமும்
பன்னும் திராட்சைப் பழம்செவ்வியம் - துன்னியிடும்
காட்டினில்வாழ் கொத்துமல்லி காண்வகைக்கீ ரெண்பலமும்
போட்டுப் புனல்வகுப்போம் போந்து. 626

போந்தமரக் காலாற் பொங்குபுன லீரெட்டில்
சேந்த கிசாயத் திறந்தெரித்தே[1] - யேந்தவிடு
நாலொன்றாய்க் காய்ச்சி நலமாகும் கற்கங்கள்
சேல்விழியீர் சொல்லீர் தெரிந்து. 627

தெரிந்த சிறுநாகப் பூதிப்பிலி ரெண்டாகும்
அறிந்த[1] கொடிவேலி தாளீச - மரிந்தகண
மூல மிலவங்க மோது வகைக்கிரண்டு[2]
சாலப் பலமாகும் தான். 628

தானிஞ்சி செம்பீரம் சார்வெள்ளை வெற்றிலையின்
மேன்சா றுரிவகைக்காம் வெல்லமது[1] - கூனிமிர்ந்து
தூண்டிருபத் தஞ்சும்[2] தொடிசேர் சருக்கரையும்
வேண்டும்பல மெட்டாகும் மேன்.[3] 629

மேன்மிளகு நான்குபலம் மெய்ப்பயறு நாழியாம்[1]
தேன்நெய்சேர் லேகியத்தின் தீண்டுபெயர்[2] - மானமகா[3]
வில்வாதி லேகியமாம் வேண்டியுண்ணப் பாண்டு பித்தம்
சொல்வா யருசியும்போம் தோய்ந்து.[4] 630

243

தோய்ந்தசயம் பித்தசுரம்[1] சோரிரத்த[2] பித்தசத்தி
காய்ந்தசயம் காலெரிவு காமாலை - வாய்ந்ததலை
சுத்தல் கிறுகிறுப்புச் சூழ்பிரமை வாயூறல்
அத்தனையும் போமே அதிர்ந்து. 631

பாடவேறுபாடு :

பாடல் எண் ; 625. 1 சாறுவிலாம்
626. 1 விரையோரேலம்
627. 1 திரித்தெரிந்தே, திரித்தெரித்தே
628. 1 திரிந்த, மறிந்த
2 வகைக்கீ ரிரண்டு
3 சால், சொல்
629. 1 வெல்லமது, உரிவகைக்கு வெல்லங்கள்
2 இருபத்தஞ்சாம்
3 மேல்
630. 1 நாழிதே
2 சேர்ந்த, ஏந்து
3 நெய்யுடனே லேகியமா யேந்துபெயர் - நூல் விதியின்
4 செல்வா ருசியும்போம் தேய்ந்து

பாடல் எண் : 631. 1 தோய்ந்த பித்தசுரம்
2 சேரிரத்த
3 பித்தகுன்மம் போமே பிரண்டு.

சேரும் சரக்குகள் : வில்வவேர் 100 பலம்
சிற்றாமுட்டிவேர் 80 பலம்
நெற்பொரி சுக்கு முத்தக்காசு சந்தனம்
விலாமிச்சைவேர் நெல்லிமுள்ளி பருத்தி
விதை ஏலரிசி சீரகம் திராட்சைப்பழம்
செவ்வியம் கொத்துமல்லி (வகைக்கு 16 பலம்)
இச்சரக்குகளை ஒன்றிரண்டாய் இடித்து
நீர்-16 மரக்கால்

செய்முறை : சேர்த்துக் குடிநீர் செய்து 1/4 பங்கு வற்றிய பின்
வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.
சிறுநாகப்பூ திப்பிலி கொடிவேலி தாளிசபத்திரி
திப்பிலிமூலம் இலவங்கம் (வகைக்கு 1 பலம்)

இஞ்சிச்சாறு எலுமிச்சம்பழச்சாறு வெள்ளை
வெற்றிலைச்சாறு (வகைக்கு 1 உரி)

வெல்லம்	25 பலம்
சர்க்கரை	8 பலம்
மிளகு	4 பலம்
பயறு	1 நாழி

மிளகு, பயறு இவற்றை நன்கு பொடி செய்து வைத்துள்ளக் குடிநீர், சாறுகள், வெல்லம், சர்க்கரை இவற்றை ஒன்று கலந்து, எரித்துப் பதத்தில் இறக்கி நெய், தேன் விட்டுக் கிளறி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : பாண்டு, பித்தம், சுவையின்மை, சயம், பித்தசுரம் இரத்தபித்தம், வாந்தி, கை கால் எரிவு, காமாலை, தலைசுற்றல், கிறுகிறுப்பு, பிரமை, வாயூறல்.

இலகு வில்வாதி லேகியம்

வில்வவே ருள்நரம்பு வேண்டுபல முப்பதுவாம்
நல்லயிஞ் சிச்சாறு முன்னாழியாம் - வெல்லந்தான்
முப்பதுவாம் நற்பலங்கள் மூசுகின்ற தேனாழி
செப்பமுடன் மேற்கற்கம் தேடு. 632

தேடுகொடி வேலிகணம் தேர்ந்தோர் பலவகைக்கே
யாடுஞ்செவ் வியமூன் றுந்தொடிகள்[1] - காடதனில்
பாவுகண மூலம் பலமிரண்டாம் சிறுநாகல்[2]
பூவரையாம் நற்பலங்கள்[3] பூணு. 633

பூணுந்தா ளிசவிலை போந்த பலமரையாம்
காணு மிலேகியமாய்க் கண்டபெயர் - தோணுலகு
வில்வாதி லேகியமாம் வேண்டுவார் தன்னருசி
கொல்வாந்தி பேதியும்போம் கூறு. 634

பாடவேறுபாடு :

பாடல் எண் : 633. 1 யாடுஞ்செவிய முண்டாம் தொடிகள்
2 சின்னாவல்
3 பூவரையாம் நற்பலமும், பூவரையாம் கற்பலங்கள்.

சேரும் சரக்குகள் :

	வில்வவேர்	30 பலம்
	இஞ்சிச்சாறு	3 நாழி
	வெல்லம்	30 பலம்
	தேன்	1 நாழி
	கொடிவேலி திப்பிலி செவ்வியம் (வகைக்கு 1 பலம்)	
	திப்பிலிமூலம்	2 பலம்
	சிறுநாகப்பூ	1/2 பலம்
	தாளிசபத்திரி	1/2 பலம்

செய்முறை : கொடிவேலி முதலான கடைச்சரக்குகளை கற்கமாய் அரைத்துக் கொண்டு வில்வவேரைக் குடிநீரிட்டு, இஞ்சிச்சாறு, வெல்லம் இவை கலந்து எரித்து இலேகிய பதத்தில் இறக்கி தேன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சுவையின்மை, வாந்தி, பேதி.

வில்வாதி லேகியம்

வில்வவேர் பாவட்டம் வேர்கீழா நெல்லிமுத்தம்
நல்லவிலாம் மிச்சம்வேர் நன்னாரி - சொல்புங்கு
காரை வறட்சுண்டி காணுமுக்கா வேளைவேர்
பாரிநெல்லி செந்தொட்டி பாங்கு. 635

பாங்குடைய தண்ணிவிட்டான் பண்ணுமனு பாலைவேர்
ஓங்குகொம் மட்டிவேர்[1] ஊமத்தை - தாங்குவெட்டி
வேர்முசுக்கை பற்படக மேவும் புளியாரை
ஓரிதழின் தாமரைவேர் உள். 636

உள்கூ விளங்கனிகள் ஒன்றுகரு வேம்பினிலை
முள்ளிலவந் தன்பிசினா முத்தியிடும் - விள்ளுகரு
வேலந்தோல் கல்லீச்சு மீறுவெள்ளி லோத்திரத்தோல்
ஆலிளம்[1] விழுதோ டாம். 637

ஆமருது தானிலந்தை யானகருங் காலித்தோல்
தாமுருங்கை வேம்பரசு தான்வாகை[1] - மேலும்
பெருமரத்தின் தோல்குடசம் பேர்பெரிய பூத[2]
மரப்பொருக்குச் சொல்வகைக்கா மன்னு.[3] 638

மன்னு நிறைக்குறுணி வாய்த்த[1] கிசா யந்தனிலே
பன்னுவெல்வம் நூறு பலம்கரைத்துச் - சொன்ன கற்கம்
சாதிக்காய் கொத்துமல்லி தக்கோலம் வாய்விளங்கம்
சோதி யதிமதுரம் சுக்கு. 639

சுக்கு நெருஞ்சிக்காய் சொல்குடசப் பாலைவிரை
தக்கசிறு நாகம் தான்றிநெல்லி - மிக்க
இலவம்பிசி னபினியோ விளாவின் வித்தும்[1]
குலவு முத்தஞ் சீரகமும் கொள்.[2] 640

பாடல் எண் : 636. 1 ஓங்குகண்டம் கொம்மட்டி, ஓங்கு கொம்மட்டி வேரு
637. 1 ஆலிநீள்
638. 1 தான்வகை
2 பேர்திரும்பி, பேர்பெரிபூச
3 வகைக்குச்சேர் மூணாய் மண்ணு
639. 1 மன்னு மதக்காடு மதுவாய்ந்த
640. 1 சுக்கு நெருஞ்சிக்காய் சொல்குடசப் பாலை விரை : சுக்குமருக் காலைக்காயந்தகனி - மிக்க யிலவம் பிசின் ....
2 சீரகமு மால்

இந்தப் பாடல் சென்னை கீ, சு, நூலகச் சுவடி எண் ஆர். 2315 லிருந்து எடுத்தெழுதப்பட்டுள்ளது.

மால்சீரக மாஞ்சிவரு முத்தம் பேரீச்சம்
மேலுங் கசகசா லவங்கம் - வால்மிளகு
சேருகின்ற கோட்டம் சிறுலவங்கப் பத்திரியும்
பேருங்கரு வேலந்தோல் பின். 641

பின்கூகை நீறுகணம் பேர்சாதி பத்திரிகை
பொன் முசுட்டை ரேணுகங்கள்[1] பூண்கார[2] - நந்திப்
பிலிமூலம் பேர்வகைக்குப் பேசுபல மொன்றா
மெலிய விடித்தூள்[3] வேண்டு. 642

வேண்டியதில் தூவியுமேல் மெயப்பசுவின் பால்நெய்தேன்
பூண்டவகைக் கானான்கு[1] போந்தபடி - யாண்டகையே
ஊற்றியும்பின் மாதுளங்கம் உள்ளகனி நீர்விடுத்துப்[2]
போற்றிய லேகியப்பண் பொற்பு. 643

பொற்புடைய லேகியம்பேர் பூங்கொடியே வில்வாதி
விற்பனமாய்த் தானருந்தில் மேல்வாந்தி - சொற்கிராணீ
யுத்தவிடப் பாகசய மோராமல் பித்த
மத்திசுர விக்கல் அருசி.[1] 644

பாட வேறுபாடு :

பாடல் எண் : 641.

1 ....
யினியோ விளாவித்து சொல்லுமுத்தம் - நாறுகின்ற
சீரகம்பே ரீஞ்சுகனி சேருமில வங்கயிலை பேருகரு
வேலந்தோல் பின்.

2 கொள்ளும் பேரீச்சு குழைகனியு மந்த முள்ளவில வங்கமு
திரிபலைகள் - விள்ளொணா மேருவனை கொங்கையரே
மேதினியில் நாலும் பேருகரு வேலந்தோல் பின்.

இப்பாடல் எல். ஆர். யூனிட். சு.எண். 137ல் இருந்து எழுதப்பட்டது. 17- ஆம் பாடல் சென்னை கீ. சு. நூலகச் சுவடி எண் ஆர். 2315 இல் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

642. 1 ரேணுகம் ஓமம்
2 தான்கார, புண்கார
3 இடித்ததூள்
643. 1 போன்றவகைக் காமேகம்
2 நீரெடுத்துப்
644. 1 அரும்

அருசியல்லால்[1] மூர்ச்சை யதிசாரம் குட்டம்
வருவலிப்புச் சோபை வயிறு - பொருமல்
தலைச்சுற்றல் சேட்பந் தனிலே பித்தம்
சூலைபுண் வசூரியுடன் கூறு. 645

கூறுமவி சர்ப்பி குழந்தை யதிசாரம்
மீறும சீரணங்கள் மெல்லியர்கள் - வீறிரத்த
தோடமுத லானதும்போம் தூயபல முண்டாம்
ஏடவிழும் கோதாய் இயம்பு. 646

பாட வேறுபாடு :
பாடல் எண் : *645.* 1 அரும் அருசி
2 சேடபந்தனிமூலம் பித்தம்
646. 1 விதம்பி.

சேரும் சரக்குகள் : வில்வவேர் பாவட்டம்வேர் கீழாநெல்லி முத்தக்காசு விலாமிச்சவேர் நன்னாரி புங்கு வறட்சுண்டி முட்காவேளை வேர் நெல்லிவற்றல் செந்தொட்டி தண்ணீர் விட்டான் பாலைவேர் கொம்மட்டி வேர் ஊமத்தை வெட்டிவேர் முசுமுசுக்கை பற்பாடகம் புளியாரை ஒரிதழ்தாமரை வேர் வில்வப்பழம் கருவேப்பிலை இலவம்பிசின் கருவேலம் பட்டை கல்லீச்சு வெள்ளிலோத்திரத்தோல் ஆலம் விழுது மருதம்பட்டை முருங்கை வேம்பு அரசு வாகை பெருமரப்பட்டை குடசப்பாலை பூதகரப்பான் பட்டை

இவற்றை ஒன்றிரண்டாகத் தட்டி முறைப்படி 1 குறுணி குடிநீர் இட்டுக் கொண்டு.

வெல்லம் 100 பலம் கரைத்துக் கொள்ள வேண்டும்.
சாதிக்காய் கொத்துமல்லி தக்கோலம் வாய்விளங்கய் அதிமதுரம் சுக்கு நெருஞ்சில்காய் குடசப்பாலைவிதை சிறுநாகப்பூ தான்றிக்காய் நெல்லிமுள்ளி வில்வப்பிசின் அபினி ஏலரிசி மிளகு விளாவரிசி சீரகம் சடாமாஞ்சில் முத்தக்காசு பேரீச்சம் கசகசா இலவங்கம் வால்மிளகு கோட்டம் சன்னலவங்கப் பத்திரி கருவேலந்தோல் சூகைநீறு திப்பிலி சாதிப்பத்திரி பொன்முசுட்டை கடுக்காய் வெங்காரம் திப்பிலிமூலம் (வகைக்கு 1 பலம்)

இவைகளை இடித்துச் சூரணித்துக்கொள்ள வேண்டும். இதனை முன் குடிநீரில் தூவி இலேகிய பதம் வரும்வரை எரித்து அத்துடன்.

பசுவின்பால் நெய் தேன் (வகைக்கு 4 படி)
மாதுளை ரசம் 4 படி
சேர்த்துக் கிண்டி இறக்கிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வாந்தி, கிராணி, விடபாகம், சயம், பித்தம், அத்திசுரம், விக்கல், சுவையின்மை மூர்ச்சை, அதிசாரம்,

குட்டம், வலிப்பு, சோகை, வயிறுபொருமல், தலைச்சுற்றல், சேத்துமத்தில் பித்தம், வயிற்றுப்புண் வைசூரி, விகர்ப்பகுட்டம், குழந்தைகளுக்கு உண்டாகும் அதிசாரம், அசீரணம், பெண்களுக்கு உண்டாகும் இரத்ததோடம் முதலானவை போகும். உடல் பலம் உண்டாகும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வவேர் ஈரைந்தாம் வெட்டிவிலாம் பிச்சைமுத்தம்
நல்லமுக்கா வேளைவேர் நன்னாரி - சொல்லுசுக்குச்
சீரகமாங் கொத்துமல்லி சேர்செவியம் நெல்லிமுள்ளி
ஒருவகைக் கோர்பலமாம் ஓது. 647

ஓதுங் கசாயத்தி லுற்ற கனமிளகு
தீதில்[1] வகைக் கீர்பலமாம் சிறுநாவல்[2] - மோதுகொடி
வேலிதா ளிசமொடு மேல்முந் திரிவகைக்கோர்
பாலின்மொழி யாய்பலங்கால்[3] பாங்கு.[4] 648

பாங்கேலம்[1] சாதிக்காய் பண்சாதி பத்திரிகை
யாங்கா[2] ணிலவங்க[3] மாம்வகைக்கு - யோங்கு[4] நிடக
மொன்றாம் கணமூலம் ஓரரையாம் நற்பலங்கள்
நன்றாமேற் கற்கமென நாடு. 649

நாடும் பழவெல்லம் நற்பலங்கள் பத்தாகும்
தேடுமிஞ்சி மாதுளங்கம் செம்பீரம் - நீடுவெள்ளை
வெற்றிலையோர் பங்குநீர் வேண்டும் படியரைக்கால்
உற்றநறு நெய்யுந்தே னூற்று. 650

ஊற்று மிலேகியமாம் உள்ளபெயர் வில்வாதி
தோற்றுமதி சாரசுரம் சொல்பாண்டு - சீற்றவன்னி
மந்த மருசிவினை மாறிழித்துக் காயபலம்
தந்துவிடும் எந்நாளும் தான். 651

பாட வேறுபாடு :

பாடல் எண் : 648. 1 சேது
2 சின்னாவல்
3 யாம்பலங்கள், பால்மொழியாய் காற்காற்பலம்
4 வாங்கு

649. 1 பலமேலம்
2 வலமாம்
3 நலநிடக
4 பொங்கு

சேரும் சரக்குகள் : வில்வவேர் 10 பலம்
வெட்டிவேர் விலாமிச்சம்வேர் முத்தக்காசு முட்
காய் வேளை நன்னாரி சுக்கு சீரகம் கொத்துமல்லி
செவியம் நெல்லி முள்ளி

இவற்றைக் குடிநீர் செய்துகொள்ள வேண்டும்.

மிளகு 2 பலம்
சிறுநாகப்பூ கொடிவேலி தாளிசபத்திரி
முந்திரிகை (வகைக்கு 1/4 பலம்)
ஏலரிசி சாதிக்காய் சாதிபத்திரி இலவங்கம்
(வகைக்கு 1 பலம்)
திப்பிலிமூலம் (1/2 பலம்)

இவற்றைக் கற்கமாக்கி மேற்சொன்ன குடிநீருடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். இத்துடன்.

பழைய வெல்லம் (10 பலம்)
இஞ்சிச்சாறு மாதுளம்பழச்சாறு
வெள்ளை வெற்றிலைச்சாறு (வகைக்கு 1/8 படி)

இவற்றையும் சேர்த்து எரித்துக் கிளறி நெய்விட்டு இலேகிய பதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : அதிசாரசுரம், பாண்டு, அக்கினி மந்தம், சுவை யின்மை. இவை நீங்கும், உடல் பலம் உண்டாகும்

குண்டலாதி லேகியம்

ஆனசங்கம் வேர்பலங்கள் எண்பதுவாம்சின்னெருஞ்சி
கானமுறை கூவிளைவேர் கண்டமுள்ளி - நாணமுள்ள
பாதிரிகாட் டாமணக்குப் பாரித் தழுதாழை
யோது பெருங்குமிழாம் உன். 652

உன்னுகூத் தன்குதம்பை யோரிரண்டு நொச்சிநல
மென்னுங்கீழ் காய்நெல்லி யின்வேர்கள் - மன்னும்

செவியமுத லாம்வகைக்கோர் சேர்ந்திருபத் தஞ்சு
குவிபலமாம் சொல்வீர் குறித்து. 653

குறித்த சிறுதேக்கு கூர்கொடிய வேலி
முறித்த கணமூலம் மூன்றும் - பிரித்து
வகைக்கிருப தாம்பலங்கள் வார்க்கும்நீர் நாலென[1]
தொகைப்பெருங்கால் சொல்வாய் துணிந்து.[2] 654

துணிந்த குடிநீர்கள் தூணியாய்க் காய்ச்சிப்
பணிந்தவெல்லா மன்பான்பலங்கள் - தணிந்தநீர்
தான்கரைத்துக் கோதத்தில் சார்விடுமேல் கற்கம்
தேன்மொழியீர் சொல்வீர் தெளிந்து. 655

தெளிந்தேலம் சாதிக்காய் சீரகம்[1] லவங்க
மிளிர்ந்திங்கு[2] மூன்றுபலம் வீதம் - நெளிந்தெழுந்த[3]
திப்பிலிநான் கைந்துபலம் சேர்மிளகு கூகைநீறு
ஒப்ப பலம் நான்கினத்துக் கோர். 656

ஓர்கற் கடகசிங்கி யோங்கும் சிறுதேக்குப்
பேரினத்துக் கோர்பலம்[1] பின்சுக்கு - நேரெட்டு
நற்பலமாம் லோகங்கள் நன்பலமு[2] முக்காலாம்
சொற்படித்தூள் பாகதனிற் தூவு.[3] 657

பாடவேறுபாடு :

பாடல் எண் : 654. 1 கூறுபலம்நா லைந்தாம்கொள் நீர்நாலொண் தொகையா
2 தோறுமற்று சொல்லாய் துணிந்து
656. 1 சீராம்
2 மிளிர்ந்திக்கு
3 தெளிந்த
657. 1 பலமாம்
2 நன்னாரி
3 பாகினித்தூள் தூவி

தூவிபத மாயிறக்கித் தூயயிரு நாழி[1]தேன்
பாவிவிடு லேகியமாம்[2] பண்பேரும்[3] - பூவுலகில்
ஏர்குண்ட லாதியிலேகியமாய் ஏந்தியுணப்
பேர்வாத கட்டுவிடும் பின்னும். 658

பின்கு லைவறட்சிப்[1] பேரிதய ரோகம்விக்கல்
தன்னருசி வன்னிமந்தம் தான்கிராணி - நன்னுதர
நோய்குறலா மிடியதுண்[2] காசமேல் மூச்சுப்
போயொளிக்கு மாக்கடலிற் பூந்து. 659

பாட வேறுபாடு :

பாடல் எண் : 658. 1 தூய இஞ்சி
2 லேகியத்தை
3 பின்பெயரும்

659. 1 உள்வறட்சி
2 மிடியனுன், மிடியல்

சேரும் சரக்குகள் : சங்கவேர் (80 பலம்)
சிறுநெருஞ்சில் வில்வவேர் முள்ளி பாதிரி
காட்டாமணக்கு தழுதாழை பெருங்குமிழ்
கூத்தன் குதம்பை நொச்சி கீழாநெல்லிவேர்
செவியம் (வகைக்கு 25 பலம்)
சிறுதேக்கு கொடிவேலி திப்பிலிமூலம்
(வகைக்கு 25 பலம்)

இவற்றை முறைப்படி குடிநீர் ஒரு தூணி செய்துகொள்ள வேண்டும்.

வெல்லம் 50 பலம்

இதனை மேற்படி குடிநீரில் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஏலரிசி சாதிக்காய் சீரகம் இலவங்கம் (வகைக்கு 3 பலம்)
மிளகு கூகைநீறு (வகைக்கு 4 பலம்)
கற்கடகசிங்கி சிறுதேக்கு (வகைக்கு 1 பலம்)
சுக்கு 8 பலம்
அயப்பொடி 3/4 பலம்

இவற்றைச் சூரணித்து மேற்படி பாகில் தூவிக் கிளறி இறக்கி தேன் 2 நாழி கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வாதக்கட்டு, சூலை, வறட்சி, இதயநோய், விக்கல், சுவையின்மை, அக்கினிமந்தம், கிராணி, வயிற்று நோய், குரல்கம்மல், காசம், மேல்மூச்சு.

குண்டலாதி லேகியம் (வேறு)

முள்ளுசங்கம் வேர்பலங்கள் முப்பதுவாம் வில்வ நொச்சி
தள்ளுதழு தாழைகூத் தன்குதம்பை - உள்ளவேர்
மூவைந்தா மொன்றினுக்கே முள்ளிகீழ்க் காய்நெல்லி
தாவுந்தா னஞ்செவியம் தான். 660

தான்குமிழ்காட் டாமணக்கு தாங்குசிறு தேக்கும்
கான்திப் பிலிமூலம் காழ்வன்னி - மேன்மணக்கும்
பாதிரிவே ராம்வகைக்குப் பன்னிரண்டாம் பார்நெருஞ்சி
ஓதரத்தை நன்னாரி உந்து. 661

உந்துமுக்கா வேளைவேர் ஓரினத்துக் கோர்பதக்காம்
நந்துகண்டங் கத்தரிவேர் நாலைந்தாம் - வந்தவகை[1]
சொல்லும் பலம்கணக்காம் சோரா திதுவெல்லாம்
நல்லகிசா யங்கள்வைத்தே நத்து. 662

நத்தும் குடிநீரில் நாள்பழைய நல்லவெல்லம்
முத்தநான் கெட்டுபலம் முன்விடுத்தே - பெத்தநெய்யும்
பார்த்து[1] விடுத்தே பதமதாம்[2] வேளையினில்
ஏற்றகற்கம் சொல்லாய் இசைந்து. 663

இசைந்த மிளகுகஞ்சா எழில்சுக்கு மூன்றுபலம்
கசிந்தபெருங் காயங்கள் காலா - மொசித்த
சிறுதேக்கு ஏலங்கற் கடகசிங்கி வகைக்கோரொன்று
தூக்குபலம்[1] பத்தாமாம் தூண்டு. 664

துண்டு மிலவங்கம் சுயசாதிக் காய்வகைக்கு
வேண்டு மரைத்தொகையாம் விள்பலங்கள் - பூண்ட[1]பொடி
போட்டுக் கிளரித்தேன் போந்தமட்டும் தான்விடுத்து
கூட்டு மிலேகியப்பேர் கூறு. 665

பாட வேறுபாடு :

பாடல் எண் : 662. 1 வந்ததொகை
663. 1 பத்து
2 பாகுபதம்
664. 1 தூக்குகணம்
665. 1 பூண்டு, பூண்ட

கூறுகுண்ட லாதி லேகியமாய் கொண்டிடுகில்[1]
தூறு சயம்சுரங்கள் சொல்லருசி - ஊறுவன்னி
மந்தம் பலவாய்வு மாறுசெய்யும் குன்மசத்தி
யுந்துசுவா சங்களும்[2] போம்ஒல்கி.[3] **666**

பாட வேறுபாடு :

பாடல் எண் : 666. 1 குண்டலாதியாம் கொள்ள மனமகிழ்ந்து
2 காசசுவாசங்களும்
3 உலகில்

சேரும் சரக்குகள் : *முட்சங்கம் வேர் 30 பலம்*
வில்வவேர் நொச்சி தழுதாழை கூத்தன்குதம்பை (வகைக்கு 15 பலம்) முள்ளி கீழ்க்காய் நெல்லி செவ்வியம் குமிழ்வேர் காட்டாமணக்கு சிறு தேக்கு திப்பிலிமூலம் கொடிவேலி பாதிரிவேர் (வகைக்கு 12 பலம்)
நெருஞ்சி அரத்தை நன்னாரி முட்காவேளைவேர் (வகைக்கு 1 பதக்கு) கண்டங்கத்தரிவேர் 20 பலம்

செய்முறை : *இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும். இதில் பழைய வெல்லம் - 32 பலம் கரைத்துக் கொள்ள வேண்டும்.*
மிளகு கஞ்சா சுக்கு (வகைக்கு 3 பலம்)
பெருங்காயம் சிறுதேக்கு ஏலம் கற்கடகசிங்கி (வகைக்கு 10 பலம்)
இலவங்கம் சாதிக்காய் (வகைக்கு 1/2 பலம்)
இவற்றைச் சூரணித்து முன் சொன்ன பாகில் தூவிக் கிளறி இறக்கித் தேன் தேவையான அளவு விட்டு கிண்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : *சயம், சுரம், சுவையின்மை, அக்கினி மந்தம், வாய்வு குன்மம், வாந்தி, சுவாசம்.*

சிஞ்சாதி லேகியம்

அசுவகெந்தி[1] சீந்தி யமுதபலம் சந்து[2]
முசுமுசுக்கை பற்படா முத்த - முசலிவேர்[3]
கூவிளத்ததோல் முட்டி[4]ரண்டு கூறிதழ்தோ லாமுக்[5]
காவளை[6] கை யாந்தகரை காண். **667**

காண்சித் திரமூலம் கண்ணன் கிரந்திதிராய்
நீனிலத்துச் செப்பு நெருஞ்சிலாம் - தோணுவகைக்
கோர்பலமாம் நீர்பதக்கோ டொன்றவெரி நாலொன்றாய்
சேர்கசா யந்தனையே சேர். 668

சேருமெட்டுக் கால்காடி தேர்ந்ததனில் தூயபுளி[1]
யாருமிலை யாடகமா மாறுமிடு[2] - ஏறுமின்னங்[3]
காரிரும்பு நூறுபலம் காணதனில் கூடவிட்டுச்
சீர்குடிநீர்[4] எட்டொன்றாய்த் தேர். 669

தேர்ந்தகசா யந்தனைமுன் சேர்ந்தகுடி நீரதிலே
ஏந்தவிடு பின்னும் இயல்பழசு - போந்தவெல்லம்
நாற்பதுவா நற்பலங்கள் நன்னீரில் தான்கரைத்து
வார்ப்பதுதான் அத்துடனே வாய்ப்பு. 670

வாய்ப்புடைய கோதத்தில் வன்னிஞ்சி மாதுளங்கள்
தேய்க்கும் பசும்பயறும் சேர்ந்தவகை - மாய்த்துத்
தனித்தனியே நீர்நாழி தானெய்யு மோர்நாழி
பணிக்கவிடு பாகமாம் பண்பு. 671

பாட வேறுபாடு :

பாடல் எண் : 667. 1 அசுவமுடன்
2 சிந்து
3 முசலிவேர்
4 மட்டி
5 கூர்மிளதோலுமுக்
6 காவேளை

669. 1 தூறுபிணி
2 மாறுசெய்யாமல் மலைந்தோட
3 பேறுமின்னங்
4 சீர்குறுணி

பண்பாகக் காயும் பலவிதமாம் கோதத்தில்
நண்பாந் திரிகடுகு நற்கோட்டம் - வண்மதுர
மீரரத்தை யிந்துயிரு சீராம் நெய்பொரியும்
பேர்கெசத்தின் திப்பிலியம் பேசு. 672

பேசுந் திரிபலைகள் பேதவகைக் கோர்பலமாம்
தேசுமிகும் சாதிக்காய் சேர்ந்தயிலை[1] - மாசில்

வகைக்கோ ரரைப்பலமாம் வன்பளிதம் சேரும்
தொகைபலங்கால் சொல்வாய் தொகுத்து. 673

தொகுத்தகற்கத் தூள்தூவித் தூயபதம் வாகாய்
வகுத்திறக்கி நாழித்தேன் வாராய் - மிகுத்தபெயர்
சிஞ்சாதி லேகியமாம் தின்னத்தான் தீபனஞ்சேர்
பஞ்சாகப் போம்பித்தம் பாண்டு. 674

பாட வேறுபாடு :
பாடல் எண் : 673. 1 சேந்தவிலை
674. 1 தீயின் சேர்.

சேரும் சரக்குகள் : அமுக்கரா சீந்தில்சர்க்கரை சந்தனச் சிராய் முசு
முசுக்கை பற்பாடகம் முத்தகக்காசு நிலப்பனை
வேர் வில்வப் பட்டை சிற்றாமுட்டிவேர்ப்
- பட்டை பேராமுட்டிவேர்ப்பட்டை முட்காய்
வேளை கையாந்தகரை சித்திரமூலம் கிரந்திதகரம்
திராய் நெருஞ்சில் (வகைக்கு 1 பலம்)
தண்ணீர் (1 பதக்கு)

மேற்படி சரக்குகளை இடித்துத் தண்ணீரில் கலந்து குடிநீரிட்டு 1/4 பங்காகக் குறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இதில்.

காடி 8 படி
புளியிலை 6 படி
காரிரும்பு 100 பலம்

போட்டுக் குடிநீரிட்டு 1/8 ஆகக் காய்ச்சிக் கொண்டு இக்குடிநீரை முன்செய்து வைத்துள்ளக் குடிநீரில் கலந்து அத்துடன்.

பழைய வெல்லம் 40 பலம்

நீரில் கரைத்துக் கலந்து கொள்ள வேண்டும். இதில் இஞ்சிச்சாறு
மாதுளம்பழச்சாறு பசும் பயறுக் குடிநீர்
(வகைக்கு 1 நாழி)

கலந்துகொள்ள வேண்டும். இவற்றை அடுப்பில் வைத்து நெய்
1 நாழி, சுக்கு மிளகு திப்பிலி கோட்டம் அதி
மதுரம் சிற்றரத்தை பேரரத்தை இந்துப்பு சீரகம்
கருஞ்சீரகம் நெற்பொரி யானைத்திப்பிலி
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்
(வகைக்கு 1 பலம்)
பச்சைக் கற்பூரம் 1/4 பலம்

677. 1 படி
679. 1 தண்ணீர்
2 தாரம்
3 சீரகம்
4 சின்னாகப்பூ

செப்புமகா சிஞ்சாதி லேகியமாம் தின்றிடுகில்[1]
உப்பு தர்[2]குன்மம் உறுசோபை - வெப்புவிக்கல்
வன்னிமந்தம் வாய்வுவலி வாதப்[3] பாண்டருசி
துன்னும் - காமமாலைமேற் சொல். 681

சொல்சுவாசங் காசம் சூழ்கிரந்திப் புண்சூலை
பல்பிணியும் ஏற்றிளைத்தே பாறியிடும் - நல்தேகம்
காந்திதரும் புட்டியுண்டாம் காரணமாம் இம்மருந்தை
ஏந்திழையீர் சொல்வீர் எவர்க்கும்.[1] 682

பாடவேறுபாடு :

பாடல் எண் : 681. 1 சேர்லேகியம் தின்னவே
2 இப்புதா
3 பாத
682. 1 இசைந்து

சேரும் சரக்குகள் : புளியிலைக் குடிநீர் புளியாரைக் குடிநீர் (வகைக்கு 1 பதக்கு) அரப்பொடி 100 பலம்

இவற்றை ஒரு பாண்டத்தில் போட்டு எரித்துக் குடிநீராக்கி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

கண்டங்கத்தரிவேர் சிறுமல்லிகை வேர் சிறு வழுதுனைவேர் தழுதாழைவேர் நெருஞ்சில் வேர் பாதிரிவேர் பெருங்குமிழ் வேர் பெரு மல்லிகைவேர் வாகைவேர் வில்வவேர் (வகைக்கு 1 பலம்)

முன் குடிநீரில் சேர்த்து எரித்து வடிகட்ட வேண்டும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு சங்கன் வேர்ச் சாறு முசுமுசுக்கைச்சாறு மாதுளம் பழச்சாறு (வகைக்கு 1 குறுணி)
பசுவின் பால் 1 பதக்கு

தேன் -4 நாழி
நெய் 4 நாழி
வெல்லம் 100 பலம்

வெல்லத்தை மேற்படி சாற்றில் கரைத்துக் குடிநீருடன் சேர்த்து எரித்துப் பாகுபதம் வந்ததும்.

பேரரத்தை சிற்றரத்தை இலவங்கம் இலவங்கப் பட்டை சிறுநாகப்பூ ஏலரிசி வாய் விளங்கம் கொத்துமல்லி தாளிச பத்திரி கூகைநீறு செவ் வியம் சித்திர மூலம் சிவதைவேர் தண்ணீர் விட்டான் கிழங்கு எவச்சாரம் கிரந்திதகரம் கருஞ் சீரகம் சீரகம் பேரீச்சம்பழம் முந்திரிகை சிறுநாகப்பூ முத்தக்காசு நெல்லிமுள்ளி கற் பூரம் வில்வப்பழம் நிலப்பனைக் கிழங்கு (வகைக்கு 1 பலம்)
கலந்து தூள் செய்து தூவிக் கிளறி இறக்கிக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : வயிற்றைப் பற்றிய குன்மம், சோபை, விக்கல், அக்கினிமந்தம், வாய்வு, வாத வலி, பாண்டு, சுவையின்மை, காமாலை, சுவாசகாசம், கிரந்திப்புண், சூலை இவை தீரும். உடல் காந்தியும், புட்டியும் உண்டாகும்.

சூத்திர அபையாதி லேகியம்

நொய்யகண்டம் கத்தரிவேர் நூற்றுமுப்ப தாம்பலங்கள்
அய்யகடுக் காய்நூறு பலங்கள் - பைய்ய
நறுக்கியே எண்மரக்கால் நற்சலமும் விட்டே
எரித்துநீர் நாலொன்றாய் ஏந்து. 683

ஏந்தும் குடிநீரில் ஏர்மூன்றா மாண்டுவெல்லம்
போந்தநீ ரிற்கரைத்துப் போதவிடு - சேந்தகற்க
மேலமில வங்க மேன்றதிரி கடுகு
கோல அதிமதுரம் கூறு. 684

கூறுசிறு நாகப்பூ கொள்வெட்டி வேர்வகைக்கே
ஏறுபல மொன்றேகால் இத்தனையும் - சூரணமாய்
பாகதனில் தூவிப் பதத்திறக்கி மற்றாநாள்
வாகுபெற நாழிதேன் வார். 685

வாருமிந்த யோகப்பேர் வையகத்தில் சூத்திரா
சேரு பைபாதி லேகியமாம் - நீரும்[1]
பொருந்துகுடி நீர்வெந்த பூங்கடுக்காய் ஒன்றும்
திருந்தியிடு லேகியமும் தின். 686

தின்னத்தான் சூலையுடன் சேர்சுவாச காசம்
பன்னு மருசி பலவீக்கம் - துன்னி
வருத்தும் சூலைபாண்டு வன்மூலம் குன்மம்
பிரிந்தசயம் வாந்தியின்னும் பேசு. 687

பேசுபித்தம் வாய்வுவிக்கல் பேதசுரம் தீர்ந்துவிடும்
தேசு தருமுடம்பில் தீபனமாம் - பேசு[1]
மலசுத்தி தாதுவிருத்தி மாயவுடல் புட்டி
நலமுண்டாம் இம்மருந்தை நாடு. 688

பாட வேறுபாடு :

பாடல் எண் : 683. 1 இரண்டாம்
684. 1 மூண்டா
2 கோலவதிற் தூரங் கூறு
686. 1 நீரும்
688. 1 பேசு

சேரும் சரக்குகள் & செய்முறை : கண்டங்கத்தரிவேர் 130 பலம்
கடுக்காய் 100 பலம்
நீர் 8 மரக்கால்

இவற்றில் கண்டங்கத்திரியை ஒன்றிரண்டாக நறுக்கிக் கொண்டு, கடுக்காயில் கொட்டைகளை நீக்கி, பின் இரண்டையும் ஒன்று சேர்த்து ஒரு பாண்டத்தில் போட்டுத் தண்ணீர் சேர்த்து அடுப்பில் வைத்து எரிக்க வேண்டும். 1/4 பங்காக வற்றியபின் வடிகட்டிக் கொள்ள வேண்டும். வெல்லம் - 100 பலம் சேர்த்து எரித்து பாகுபதம் வரும்போது

ஏலம் இலவங்கம் சுக்கு மிளகு திப்பிலி
அதிமதுரம் சிறுநாகப்பூ வெட்டிவேர்
(வகைக்கு 1¼ பலம்)

இச்சரக்குகளை இடித்துச் சூரணித்துத் தூவிக் கிளறி இலேகிய பதத்தில் இறக்கி ஆறவிட்டு மறுநாள் தேன் 1 நாழி விட்டுக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : கடுக்காய்க் குடிநீர்.

தீரும் நோய்கள் : சூலை, சுவாசகாசம், சுவையின்மை வீக்கம் வயிற்றுநோய், பாண்டு, மூலம், குன்மம், சயம், வாந்தி, பித்தவாயு, விக்கல், சுரம் இவை தீரும், மலசுத்தி ஏற்படும், தாது விருத்தியும், உடல் புட்டியும் உண்டாகும்.

அகிலாதி லேகியம்

பச்சை முசுமுசுக்கைப் பாண்டமதில் நூறுபலம்
வைச்சுநீர் மூவிருகால் வார்த்தெரித்து - நிச்சயமாய்
தான்குறுணி யாய்வடித்துத் தண்ணீர்விட்டான் கந்தமிஞ்சி
கானெருஞ்சிச் சாற்றிற்சேர் கண்டு. 689

கண்டகசா யந்தனிலே கான்ற சருக்கரையும்
அண்டவே யோர்குறுணியாம்கலந்தே - எண்டிசையும்
தோற்றுகற்கம் சாதிக்காய் சொல்லவங்க முந்திரிகை
சாற்றும் திரிகடுகாம் தான். 690

தானெய்தல் கந்தமோடு தன்சீரக மேலம்
வான்மதுரம் கச்சோலம் வார்முத்தம் - மான்விழியீர்
நன்னாரி கர்ச்சூரம் நல்லவங்கத் தோலுரிய
தன்தாள துவாம்[1] சொல். 691

சொல்லும்வகைக்கரையாம் தோற்றுபலம் தூள்பாகில்
மெல்லவிடு லேகியமா மீதிறக்கி - நல்ல
தகிலாய் நாழித்தேன் தான்கலந்தே யோகம்
அகிலாதி லேகியமாம் ஆர்ந்து. 692

ஆர்ந்த ரசமருந்தால் இரத்தபித்தம் தானிரைப்பு
வாந்தி தலைநடுக்கல் வன்மூர்ச்சை - சேர்ந்தசுரம்
காலெரிவோ டுள்மாந்தங் காசம் சுவாசசயம்
மேலெரிவு பாண்டினம்சேர் விண்டு. 693

விண்டிரத்த மாங்கழிச்சல் வேதனைபோம்பத்தியமும்
மண்டிடுபால்நெய்ப்பயறு மாங்கீரைத் - தண்டிலைகள்
நன்முருங்கைக் காயிலையும் நன்மையாம்[1] கைப் புளிப்பு
முன்வரினு நீக்காய்[2] முனிந்து. 694

பாடவேறுபாடு :

பாடல் எண்: 691. 1 தாளாதூதுவாம்
694. 1 நல்லதுவாம்
2 நீக்கே

சேரும் சரக்குகள் பச்சை முசுமுசுக்கை 100 பலம்தண்ணீர் 6 மரக்கால்

செய்முறை: ஒரு பாண்டத்தில் போட்டு 1 குறுணியாக வற்றும்படி எரித்துக் குடிநீரிட்டுக் கொள்ள வேண்டும்.

தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு இஞ்சிச்சாறு
நெருஞ்சில் சாறு சர்க்கரை (வகைக்கு 1 குறுணி)
சாதிக்காய் இலவங்கம் முந்திரிகை சுக்கு மிளகு
திப்பிலி நெய்தல்கிழங்கு சீரகம் ஏலரிசி அதிமதுரம்
பூலாங் கிழங்கு முத்தக்காசு நன்னாரி பேரீச்சை
இலவங்கப்பட்டை இலவங் கப்பத்திரி
(வகைக்கு 1/2 பலம்)

இவற்றைத் தூள்செய்து கொண்டு. முன் செய்து வைத்துள்ள குடிநீரில் சர்க்கரையைக் கரைத்து, அத்துடன் சாறுகளைச் சேர்த்து எரித்து பாகுபதம் வரும்போது சூரணத்தைத் தூவிக் கிளறி இலேகிய பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும். ஆறியபின் தேன் ஒரு நாழி சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : இரத்தபித்தம், இரைப்பு, வாந்தி, தலை நடுக்கல், மூர்ச்சை, கைகால் எரிச்சல், உள்மாந்தம், காசம், சுவாசம், சயம், உடல் எரிச்சல், பாண்டுவகை, இரத்தக் கழிச்சல்.

பத்தியம் : பால், நெய், பயறு, கீரை, கீரைத்தண்டு, முருங்கைக் காய், முருங்கை இலை இவை ஆகும். கைப்பு, புளிப்பு நீக்கவேண்டும்.

ஆத்திராதிஇலேகியம்

இஞ்சி பலம்பத்தாம் இணங்க வரிந்துநிழல்
துஞ்ச உலர்ந்தத்[1] தூளுடனே - அஞ்சாமல்
அட்டசூ ரண[2] மருந்தாம் ஆனவகைக் காற்பலமா
இட்டுவெல்லம் ஆறுபலம் ஏந்து. 695

ஏந்துவெல்லப் பாகுடனே ஏன்றநெய் தேன்தானறிந்து

சேந்துவிட்டு லேகியமாய்ச் செய்தபெயர் - தேர்ந்துரைக்கில்[1]
ஆத்தி ராதிலேகிய மாமத்தை யுண்ண
போர்க்கழிச்சல் வாய்வும்போம் பொற்பு. 696

பாடவேறுபாடு :

பாடல் எண் : 695. 1 உலர்ந்தந்தத்
2 அட்டவர்க்க சூரணமும்
696. 1 தேர்ந்துரைக்கும்
2 ஆருத்தி ராயினை அன்புடனே உண்டாக்கு
3 வாந்தியும்

சேரும் சரக்குகள் : இஞ்சி 10 பலம்
இந்துப்பு ஓமம் கருஞ்சீரகம், சீரகம் சுக்கு திப்பிலி
மிளகு பெருங்காயம் (வகைக்கு 1/4 பலம்)
வெல்லம் 6 பலம்
தேன் நெய் தேவையான அளவு

செய்முறை : இஞ்சியைத் தோல் சீவி சிறிதாக அரிந்து நிழலில் உலர்த்திக்கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளை இடித்துச் சூரணித்து அத்துடன் இஞ்சி சூரணம் செய்து கொண்டு, வெல்லத்தை சிறிது நீர்விட்டு அடுப்பில் வைத்து எரித்து பிறகு பதம் வரும் போது சூரணத்தைப் போட்டு கிளறி சுருண்டு வரும்போது நெய் சேர்த்துக் கிளறி இறக்கி, ஆறியபின் தேன் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : போர்க்கழிச்சல், வாய்வு.

கண்டாமலக இலேகியம்

ஆனபச்சை நெல்லிக்காயன்னீ ரறுநாழி[1]
பானமுள்ள சர்க்கரையன் பான்பலங்கள் - நானமுள்ள
வேலக்கா ஏலும் மிலவங்கப் பத்திரிதன்
சீலவிரு சீரகமாம் சேர். 697

சேர்செவ்வியம் கொத்துமல்லி சீர்தாளிச மிளகு
வேர்க்கொம்போ டுலவங்கம் வேண்முத்தம்[1] - பார்திப்
பிலிமூல மிந்துப்பு பேரே ணுகமாம்

மெலிகூகை னீறுகொடி வேலி.[2] 698

வேலியந்த மர்ம் வகைக்கு வேண்டுபலம் கால்சிவதை
கோலுபல மோரிரண்டாம் கூறுகணம் - பாலனியல்[1]
முந்திரி ஓர்[2] பலங்கள் மூசுதேன் ஆறுபலம்
பந்தநெய் யொன்பான் பலம். 699

பல்[1]மருந்தை லேகியமாய்ப் பண்யோகம் கண்டா
மலகமெனும் பெயரா[2] மண்ணில் - குலமேகம்
நந்தாமல் பித்தம் நாடாமல்போங் கிராணி[3]
சிந்தாசயம் போமாம்[4] தேய்ந்து. 700

பாட வேறுபாடு :

பாடல் எண் : *697.* 1 நெல்லிக்காயன்னீர்

698. 1 வெண்முத்தம்
2 கொடிவேலிவேர்

699. 1 பாலரியல்.
2 ஒவ்வோர்

700. 1 பண்
2 மல்லக மென்னும்
3 பெயராகும்
4 நாடாக்கிராணி
5 போகும்

சேரும் சரக்குகள் : பச்சை நெல்லிக்காய்ச்சாறு 6 நாழி சர்க்கரை 5 பலம் ஏலக்காய் இலவங்கப்பத்திரி கருஞ்சீரகம் சீரகம் செவ்வியம் கொத்துமல்லி தாளிசபத்திரி மிளகு சுக்கு இலவங்கம் முத்தக்காசு திப்பிலி மூலம் இந்துப்பு கடுக்காய் கூகைநீறு கொடி வேலி (வகைக்கு 1/4 பலம்)
சிவதை வேர் 2 பலம்
திப்பிலி முந்திரி (வகைக்கு 1 பலம்)
தேன் 6 பலம், நெய் 9 பலம்

செய்முறை : கடைச் சரக்குகளைச் சூரணம் செய்து கொள்ள வேண்டும். நெல்லிக்காய் சாற்றில் சர்க்கரை கலந்து அடுப்பில் வைத்து எரித்துப் பாகுபதம் வரும்போது சூரணம் செய்து வைத்துள்ளதைத் தூவி நெய் சேர்த்து இலேகிய பதத்தில் இறக்கி

ஆறியபின் தேன் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : மேகம், பித்தம், கிராணி, சயம்.

கண்டத் திப்பிலி இலேகியம்

சர்க்கரை நான்குபலம் தண்ணீர்விட்டான் கந்தமிஞ்சி
இருக்கும்நீர் எண்பலங்க ளோரா - உருக்கியநெய்
ஆறுபலம் ஆவின்பால் ஆனபடி யிரண்டு[1]
கூறுதேன் மூணுபலம் கூட்டு. 701

கூட்டியெரித்துக் கெந்தகம்[1] கோதகலும் பாகதனில்[2]
காட்டுகண்ட[3] திப்பிலியும் காண்வேத மீட்டுகருங்[4]
காலித்தோல் மாஞ்சிமுத்தக் காசுசிறு நாகப்பூ
ஏலமில வங்கத்தோல் ஏர்ந்து. 702

ஏர்ந்துகடுக் காய்மிளகோ டேற்றசுக்கு நெல்லிமுள்ளி
கூர்ந்தயில வங்கயிலை கொத்துமல்லி - சேர்ந்திடுநல்
சீரகமெல் லாம்வகைக்குச் சேர்ந்தநிடக மோர்மூன்று
சேர விடித்ததூள் தூவு. 703

தூவியே லேகியமாய் தோன்ற எடுத்தபெயர்[1]
மேவுகண்ட திப்பிலியாம் வேண்டியுண்ணத் - தாவியிடு[2]
மாமலக பித்த மருசி[3] பித்த வாய்வும்போம்
காமமுள்ள கோதாய் கருது. 704

பாடவேறுபாடு :

பாடல் எண் : 701. 1 இரண்டுடனே
702. 1 கெந்தக்
2 பார்த்ததனில்
3 காட்டுகற்கம். நாட்டுகற்கம்
4 காட்டுகண்ட திப்பிலியும் காண்வேத திப்பிலி கள் நான்குபலம்
703. 1 நாமம்
2 தாவிவிழும்
3 அருசி

சேரும் சரக்குகள் : சர்க்கரை 4 பலம்

தண்ணீர்விட்டான் கிழங்கு இஞ்சி
(குடிநீர் வகைக்கு 8 பலம்)
நெய் 6 பலம், பால் 2 படி, தேன் 3 பலம்
கண்டத்திப்பிலி கருங்காலிப்பட்டை சடாமாஞ்சில் முத்தக்காசு சிறுநாகப்பூ ஏலம் இலவங்கப் பட்டை கடுக்காய் மிளகு சுக்கு நெல்லிமுள்ளி இலவங்கப் பத்திரி கொத்துமல்லி சீரகம்
(வகைக்கு 3 பலம்)

செய்முறை : கடைச் சரக்குகளைச் சூரணம் செய்து கொள்ள வேண்டும். முன் செய்து குடிநீரில் பால், சர்க்கரையைக் கலந்து பாகுபதமாகக் காய்ச்சி சூரணத்தைத் தூவி, சுருண்டு வரும் பதத்தில் நெய் சேர்த்துக் கிளறி இறக்கி ஆறியபின் தேன் சேர்த்துக் கிண்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : ஆமலகபித்தம், சுவையின்மை, பித்தவாயு.

கூழ்ப்பாண்ட இலேகியம்

முற்றினதோர்[1] பூசணிக்காய் மோதிப் பிழிந்தநீர்
பற்ற வொருகுறுவி பாளிதங்கள்[2] - மெத்தவுந்தான்
நானாழி விட்டுமே[3] நல்வேறு பூசணிக்காய்
தானாமேல் சீவித் தரித்து. 705

தரித்து சிறுகவரிந்தந்தத் தண்ணில் வேகவைத்தே[1]
பொறுக்க உணர்ந்தபின்பு போந்தே - மறுத்திடித்துப்
பின்னும் திரிகடுகு பேசுமில வங்கயிலை
பன்னுமிரு சீரகமாம் பண்பு. 706

பண்பேலம் கொத்தமல்லி பரவு[1] மிலவங்கம்
நன்வகைக்கோர் தானரையாம் நற்பலங்கள் - ஒன்பொடியும்
முன்னிடித்த தூளும் முறைமையுடன்[2] பாகதனில்
மன்னவிடு தேனுடனே மாண்பு. 707

மாண்புடைய கூழ்ப்பாண்ட லேகியமா மன்னுபெயர்
காண்புவியோர் தானருந்தில்[1] காசசயம் - பூணும்
உடம்பிளைப்புக் காமாலை உற்ற சுவாசங்கள்[2]
தடம்படப்போ மெல்லாம் தளர்ந்து.[3] 708

பாட வேறுபாடு :

பாடல் எண் : 705. 1 முற்றியிடும்
2 பாளிதமும்
3 விட்டிட்டு

706. 1 சிறுக அரிந்து தான்பதத்தில் வைத்து. சிறுகவுரி நத்தைத் தண்ணீரில் தான் கலந்து வேகவைத்தே சிறுகவுரிந் தாதவன்னை முன்வைத்தே

707. 1 பாவு
2 உறமையுடன்

708. 1 தானருந்த
2 சுவாசம்
3 கடன்படப் போமெல்லாங் கடந்து

பூசணிக்காயைத் தோல்சீவி சிறியதாக அறிந்து, 4 நாழி நீர் சேர்த்து வேகவைத்துப் பிழிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

சேரும் சரக்குகள் : சர்க்கரை 1 குறுணி
சுக்கு மிளகு திப்பிலி இலவங்கபத்திரி கருஞ்சீரகம் சீரகம் ஏலம் கொத்துமல்லி இலவங்கம் (வகைக்கு 1/2 பலம்)

செய்முறை : இவற்றை சூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் பிழிந்த சாற்றுடன் சர்க்கரை கலந்து பாகுபதம் வரும் வரை அடுப்பிலிட்டு எரிக்க வேண்டும். பாகுபதம் வந்தவுடன் சூரணத்தை தூவிக் கிளறி இறக்கி, ஆறிய பின் தேன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : காசம், சயம், உடல் இளைப்பு, காமாலை, சுவாசம்.

திப்பிலியாதி இலேகியம்

சார்கணங்கள்[1] எட்டு சர்க்கரைகள் ஓர்நான்கு
பார்மிளகு சுக்கேலம் பாரங்கி - கூர்சாதிக்
காய்லவங்கப் பட்டை கருது மதனிலைகள்
வாய்விளங்கம் தக்கோலம் வாழ்த்து. 709

வாழும் திரிபலைகள் வன்சீர கம்வகைக்குத்
தாழும் இதுகளொன்றும்[1] தான்செவியம் - வீழுமஞ்சு

சேர்சித் திரமூலம் திப்பிலிமூலம் இனத்துக்[2]
கோரிரண்டின் மேலரையாம் உன். 710

உன்னியிடும் லோகமும்[1] உகந்தகை யாந்தகரை
மன்னும் வகைக்கிரண்டு வந்ததொகை - சொன்னபலம்
இத்தனையும் சூரணம்செய் தேதேனி ரண்டுபடி
ஒத்ததொரு லேகியம்பண் ஓர்ந்து. 711

ஓர்ந்ததொரு லேகியப்பேர் ஓர்திப் பிலியாதி
ஏந்தியுண்ணக் குன்மசத்தி யோரருசி[1] - சேர்ந்துடல்தன்
மேலிளைப்பும் பீனிசங்கள் மேன்சுவாச காசம்
காலிளைப்பும் போமே கலுழ்ந்து. 712

பாடவேறுபாடு :
பாடல் எண் : 709. 1 சார்கணமும்
710. 1 இறுகளொன்றாம்
2 வகைக்கு
711. 1 உன்னியிடு சாக
712. 1 யேரரசி (யேரரசி)

சேரும் சரக்குகள் : திப்பிலி 8 பலம் சர்க்கரை 4 பலம்
மிளகு சுக்கு ஏலம் பரங்கிப்பட்டை சாதிக்காய்
இலவங்கப்பட்டை இலவங்கப் பத்திரி வாய்
விளங்கம் தக்கோலம் கடுக்காய் நெல்லிக்காய்
தான்றிக்காய் சீரகம் (வகைக்கு 1 பலம்)
செவ்வியம் 5 பலம்
சித்திரமூலம் திப்பிலிமூலம் வகைக்கு 2 1/2 பலம்
அயச்செந்தூரம் கையாந்தகரை வகைக்கு 2 பலம்

இவற்றைச் சூரணம் செய்து இலேகிய முறைப்படிச் செய்து தேன் 2 படி கலந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : குன்மம், வாந்தி, சுவையின்மை, உடல் இளைப்பு, பீனிசம், சுவாசகாசம்.

கண்டங்காரி லேகியம்

கண்டங்காரி தூதுவளை கையின்றி நொச்சியிலை
தண்டாடா தோடை தளுதுளசி - மீண்டிடர்செய்
வேகசிறு காஞ்சோரி வேலிப் பருத்தியிலை
யோக முருக்கினிலை ஓது. 713

ஓதும் தனிதனிநீர் ஒன்றும் படிவெல்லம்
நீதுபல மீர்பத்தாம் நெய்யுழக்கு - கோதில்கற்கம்
பாரங்கி சிங்கி பகரரத்தை கையின்றி
கூரங்கொள் தாளிசம் கூறு. 714

கூறு கணமூலம் கொடிசெவ்வியம் கொள்கடுக்காய்
மீறுந் திரிகடுகு வெங்காரம் - நாறும்
இருசீ ரகங்கணங்க ளேற்ற பெருங்காயம்
வருமிதுகள் தான்சமனாய் வாங்கு. 715

வாங்கி விதியோடே வாகாக லேகியம்பண்
ஓங்கியுண்ணக் காசம் உள்மாந்தை - ஏங்கிவிடும்
காசினியிற் பேர்கண்டங் காரியெனும் லேகியமா
மாசின்றிச் சொல்வாய்[1] மகிழ்ந்து. 716

பாட வேறுபாடு :

பாடல் எண் : 716. 1 மாசில்நற் சொல்வாய்

சேரும் சரக்குகள் : கண்டங்கத்திரி தூதுவளை கையாந்த கரை நொச்சி யிலை ஆடாதோடை துளசி சிறுகாஞ்சோரி வேலிப் பருத்தி இலை முருக்கிலை (குடிநீர் வகைக்கு 1 படி)
வெல்லம் - 20 பலம் நெய் - உழக்கு
பரங்கிப்பட்டை கற்கடகசிங்கி சிற்றரத்தை தாளிசபத்திரி திப்பிலிமூலம் செவ்வியம் கடுக்காய் சுக்கு மிளகு திப்பிலி வெங்காரம் கருஞ்சீரகம் சீரகம் பெருங்காயம் சம அளவு

செய்முறை : கடைச் சரக்குகளைக் கற்கமாக அரைத்துக் கொள்ள வேண்டும். குடிநீர், வெல்லம், கற்கம் இவற்றை ஒன்று கலந்து அடுப்பிலிட்டு எரித்து இலேகிய பதத்தில் நெய் விட்டுக் கிளறி இறக்கி ஆறவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்..

தீரும் நோய்கள் : காசம், உளமாந்தை.

திராட்சாதி இலேகியம்

முந்திரிகை கோட்ட முதிர்வெட்டி வேர்சீந்தில்
அந்தநில வேம்போடு அதிமதுரம் - செந்தொட்டி

நெல்லிவற்றல் சிங்கி நிகரிலுப்பைப் பூரேணு
ல்லகலைக் கொம்புகுமிழ் நாடு. **717**

ாடுவிலாம் பிச்சைவேர் நாறுமிரு சீரகங்கள்
தேடுசா துர்சாதம் தேறுகணம் - காடுறையும்
பற்பட மீரகத்தி[1] பண்ரோ கிணிமுதலாய்ச்
செப்புச் சமநிறையாய்ச் சேர். **718**

சேரிதற்கு வெல்லம் சேறிசர்க் கரைசமனாய்
ரர்தேனும் விட்டுடனே லேகியம்செய் - பேர்கேள்[1]
நிராட்சாதி லேகியமாம் தேன்மொழியீர் கொள்ளில்[2]
இரத்தகபம் பித்தசயம் ஏகும். **719**

ரகுமல்லால் மூலமிரத்த பித்த வாந்திசுரம்
போகுங்கா சங்களுடன் பொன்னகர்வாழ் -மாகுலிசன்
மால்யானைப் போல மதத்தெழுந்த வன்கொங்கை
பால்மோகஞ் செய்வீ ரறி. **720**

பாட வேறுபாடு :

பாடல் எண் : *718.* 1 மீராத்தி
719. 1 யேற்கொள்
2 கேளீர்
3 இராத்தாகம்

சேரும் சரக்குகள் : முந்திரிகை கோட்டம் வெட்டிவேர் சீந்தில் நில வேம்பு அதிமதுரம் செந்தொட்டி நெல்லிவற்றல் கற்கடகசிங்கி இலுப்பைப்பூ கடுக்காய் மான் கொம்பு குமிழ்வேர் விலாமிச்சவேர் கருஞ்சீரகம் சீரகம் இலவங்கம் இலவங்கப்பட்டை ஏலரிசி சிறுநாகப்பூ திப்பிலி பற்பாடகம் சிற்றரத்தை பேரரத்தை கடுகுரோகணி (சம அளவு)
வெல்லம் - சம அளவு
தேன் - தேவையான அளவு
சரக்குகளைச் சூரணம் செய்து வெல்லப்பாகில் தூவிக் கிளறி இலேகிய பதத்தில் இறக்கி ஆறிய பின் தேன் கலந்துவைத்துக் கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள் : பித்தவாந்தி, சுரம், காசம்

மகாபிரசாத இலேகியம்

ஏர்ந்து நவச்சாரம் எவச்சாரம்[1] கல்லுப்போடு
ஆர்ந்த சவுக்காரம் சீனக்காரம் - சேர்ந்த
இருகழஞ்சா மிவ்வகைக்கே யேர்சயிந்த வுப்பு[2]
கருஞ்சீ ரகம்கடுகு காண். 721

காண்திப் பிலிமூலம் கார்மிளகு சீரோமம்
வீண்வாய் விளங்கம் விழலரிசி - மாண்புடைய
வெப்பாலைத் தன்னரிசி வேண்டும் வகைக்கிரண்டு
செப்பாய் பலமிதுமேல் சிங்கி.[1] 722

சிங்கியல்லாற்[1] சாதிக்காய் திப்பிலிசிறு னாகப்பூ
தங்குபெரு[2] நாகப்பூச் சாரணைவேர் - பொங்குசிறு
தேக்கு மிளகறணை சேர்கடுகு ரோகணிதீய
தாக்குகெச திப்பிலியாம் தான். 723

தான்வேலி யின்பருத்தி தன்வேர் நரிவிளா
தூன்வேர் வகைக்கொன்றாம் சொல்பலங்கள் - கான்சேர்
நரளையப் பைச்சீரவுரி நற்பா லையோடு[1]
உருபே ரரத்தையுடன் உன். 724

உன்னுநேர் வாளமுயர்சாதி பத்திரிகை
பன்னும் பெருமரத்தின் பட்டையாம் - பொன்னினிற்
கத்தூரியின் மஞ்சள் கருதும் வகைக்கரையாம்
சுத்தபல மைந்துபலம் சுக்கு. 725

சுக்கொழிய மூன்றுபலம் சோருங் கொடிவேலி
மிக்கபெருங் காயம்பல மேலஞ்சு - தக்கதெல்லாம்
நந்தவிடித் தேபாலில் நன்றாக வேயரைத்துப்
பிந்திநத்தை தன்சதையாம் பேசு. 726

பேசும் கிளிஞ்சில்சதை பேர்வகைக்காம்[1] இரண்டுபடி
மாசுகருங் கோழி[2] வன்சதையும் - நேசமதாய்
பாண்டத்தி லிட்டுநொச்சி பன்னநீர் மூவிருகால்
தூண்டவிட்டு இன்னமுமேல் சொல். 727

சொல்விளக்கி னெண்ணெய்த் துலங்கியிடும் வேப்பெண்ணெய்
நல்லெள்ளின் எண்ணெயொவ்வோர் நாழிவிட்டு - வல்லமையால்

ஓர்பகல் ஆதவன்முன். ஓங்குபுடம் வைத்துப்பின்[1]
நீர்சுவறக் காய்ச்சிடுவாய் நின்று. 728

நின்றுபத மாயிறக்கும் நீதவி லேகியத்தை
அன்றருந்திக் குன்மம் அடர்கவிசை - துன்றகவை
பக்கமுள்ள சூலைவெப்புப் பாவையட்டப்[1] பீலிகையோடு
ஒக்கவான்[2] வாய்வோ டொன். 729

ஒண்திரட்சி வாய்வுமுத லொடுமூ வர்கடலில்[1]
தன்னுடலம் புட்டியுமாம் சந்ததமும் - மன்னி
இறவா திருந்திடுவார்[2] மகா வென்னும்
பிரசாத லேகியமாம் பேர். 730

பாடவேறுபாடு :

பாடல் எண் : 721. 1 கடலில்வளர்
2 யேரா மிந்துப்பு
722. 1 சீர்
723. 1 சீர்சிங்கி
2 சார்பெறு
3 கார்சிறு
724. 1 நற்பாலோடுவை
727. 1 பேரொணுக்காம்
2 கோழியொன்று
728. 1 ஓர்பகலி னாதபத்தி னோங்குபுட மதைதப்பி
729. 1 பார்வையட்ட
2 வானபவன
730. 1 மூவர்க்களிற்
2 திருத்திடுவர்பேர்
3 பொற்பு

சேரும் சரக்குகள் : நவச்சாரம் எவச்சாரம் கல்லுப்பு சவுக்காரம் படிகாரம்
(வகைக்கு 2 கழஞ்சு)
இந்துப்பு கருஞ்சீரகம் கடுகு திப்பிலிமூலம் மிளகு
ஓமம் வாய்விளங்கம் விழலரிசி வெட்பாலை அரிசி
(வகைக்கு 2 பலம்)
கற்கடகசிங்கி சாதிக்காய் திப்பிலி சிறுநாகப்பூ தக்
கோலம் சாரணைவேர் சிறுதேக்கு மிளகறணை
கடுகுரோகணி யானைத்திப்பிலி வேலிப்பருத்தி

வேர் நரிவிளாவேர் (வகைக்கு 1 பலம்) நரளைவேர்
அவுரி நற்பாலைவேர் பேரரத்தை நேர்வாளம்
சாதிப்பத்திரி பெருமரப்பட்டை கத்தூரிமஞ்சள்
(வகைக்கு 1/2 பலம்)

சுக்கு - 5 பலம்
கொடிவேலி - 3 பலம்
பெருங்காயம் - 5 பலம்

இவற்றை நன்றாக இடித்துப் பால்விட்டு அரைத்து வழித்துக் கொள்ள வேண்டும்.

நத்தைச் சதை கிளிஞ்சல் சதை
கருங்கோழிச்சதை (வகைக்கு 2 படி)

இவைகளை ஒரு பாண்டத்தில் போட்டு அதில்,

நொச்சிக் குடிநீர் - 6 படி
விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய்
எள்நெய் (வகைக்கு 1 நாழி)

செய்முறை : இவ்வெண்ணெய்களை விட்டு ஒரு நாள் முழுதும் வெயிலில் வைக்கவேண்டும். பின் கற்கம் சேர்த்து நீர் வற்றும்வரை அடுப்பி லிட்டுக் காய்ச்ச வேண்டும். பின் இறக்கி ஆறவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : குன்மம், கவிசை, பக்கசூலை, வெப்புப் பாவை எட்டுவித பீலிகைநோய், வாய்வு, திரட்சிவாயு இவை தீரும், உடல் புட்டி உண்டாகும்.

சவுபாக்கிய சொண்டி

பால்நாலு மாகாணி பாளிதங்கள் விள்ளுதுலாம்
ஏலரையாம் தண்ணீர் விளம்புபடி - யாலரைகள்
மூன்று மழற்காய்ச்சி[1] முதிற்பாகு பக்குவத்தில்
தோன்றுகற்கம் சோதிவிரை சொல். 731

சொல்விளங்கம் ஓமம் துதிலவங்கம் அத்தோல்கள்[1]
நல்லலேலம்[2] வெள்ளுள்ளி நற்சீராம்[3] வல்ல
திரிகடுகொவ் வோர்பலங்கள் சேர்ந்த சதகுப்பை
அரியகொத்து மல்லிவகைக்கு அஞ்சு. 732

அஞ்சுபலம் சுக்கு அதன்பலங்கள் ஓரெட்டுத்
துஞ்சுபொடி யாகதனிற் றூவியே - வஞ்சமறத்
தான்பதத்தி லேந்தித் தறுகாமல்[1] மற்றாநாள்
தேனரைமா காணிகலந் தேதின். 733

நின்ன சயமருசி சேர்சூசிகாவாய்வு
பன்னிமந்த மத்திசுரம் வாயூறல் - மின்னரசே
காசம் சுவாசம் கடுப்பிரத்தம்[1] வீழ்சூலை
தேசுகெடப் போமே தெரிந்து. 734

பாட வேறுபாடு :

பாடல் எண் : 731. 1 மாழக்காய்ச்சி
732. 1 தோலுடனே
2 நல்லசோம்பு
3 நற்சீரி
733. 1 இறுகாமல்
734. 1 காணீரத்தம்

சேரும் சரக்குகள் : பால் - 4 மாகாணி
சர்க்கரை - 2 மாகாணி
தண்ணீர் - 1 1/2 படி

இம்மூன்றையும் அடுப்பில் வைத்து பாகு முதிரும் வரை காய்ச்ச வேண்டும்.

வாலுளுவை அரிசி ஓமம் இலவங்கம் இலவங்கப் பத்திரி ஏலம் வெள்ளுள்ளி சீரகம் சுக்கு மிளகு திப்பிலி (வகைக்கு 1 பலம்)
சதகுப்பை கொத்துமல்லி (வகைக்கு 5 பலம்)
சுக்கு - 8 பலம்

செய்முறை : இச்சரக்குகளைச் சூரணம் செய்து முன் சொன்ன பாகில் தூவி இலேகிய பதத்தில் இறக்கி வைத்து, அடுத்த நாள் தேன் 1/2 மாகாணி விட்டுக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், சுவையின்மை, சூசிகாவாய்வு, அக்கினிமந்தம் என்பைப் பற்றிய சுரம், வாயூறல், காசம், சுவாசம், கடுப்பு, இரத்தம் வீழ்தல், சூலை.

கண்டசக்கரை இலேகியம்

இஞ்சி அறுபத்து நான்குபலம் ஏந்தியபின்[1]
நஞ்சு புறஞ்சீவி நறுக்கியரைத் - துஞ்சாமல்
நெய்படிகள் நான்கனலின்[2] நேர்கொதிக்கக் காய்ச்சியதை
முந்த விறக்கிவைத்தே முன். 735

முன்னரைத்த இஞ்சிதனை மூழ்கநெய்யில் தான் விடுத்து
நன்னத் துழாவிவிடுவாய் நாலுதரம் -பின்னுடனே
ஏலம் மிளகு இயல்திப் பிலிமூலம்
கோலநறும் சீரகமாம் கொள். 736

கொள்வகைக்கு நான்குபலம் கூர்திப் பிலியெட்டு
விள்பலங்கள் சாதிக்காய் மேல்லவங்கம் - உள்ளதன்தோல்
நாடும் அதிமதுரம் நாகேசு ரங்கோட்டம்
நீடுகருஞ் சீரகமாம் நேர். 737

நேர்விளங்கம் ஓர்வகைக்கு நீளு பலமிரண்டாம்
சீரிதுதன் சூரணமும் சேர்த்திட்டே - பாரின்
சருக்கரையெண் ணான்குபலம் தானும் விடுத்துப்
பெருக்கமுடன் கிளறிப் பேற்று.[1] 738

பேற்றுநெல்லிக் காயளவு பேதமற வருந்தில்[1]
ஏற்றபித்த வாய்வுகுன்மம்[2] ஏகியிடும் - கூற்றனைப் போல்
மோதுவன்னி மந்தமும்போ மோக முடனிதன்பேர்[3]
தீதில்[4] கண்ட சக்கரையாம் செப்பு. 739

பாடவேறுபாடு :

பாடல் எண் : 735. 1 ஏந்தியதி
2 நான்காலில்
738. 1 பெருக்கமாய் செய்தே நீ போற்று
739. 1 பூவையே தின்றுவர
2 ஏத்த வாத குன்மம்
3 உண்மையுட னிதின்பேர்
4 சேதி

சேரும் சரக்குகள் : இஞ்சி - 64 பலம்
தோல் சீவி நறுக்கி அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

நெய் - 4 படி

அடுப்பில் வைத்து கொதிக்கக் காய்ச்சி இறக்கி வைத்து. முன் அரைத்து வைத்துள்ள இஞ்சி விழுதைப் போட்டு நன்கு கிளறி விட வேண்டும். பின்.

ஏலரிசி மிளகு திப்பிலிமூலம் சீரகம் (வகைக்கு 4 பலம்) திப்பிலி - 8 பலம், சாதிக்காய்
இலவங்கம் இலவங்கப்பட்டை அதி மதுரம்
சிறுநாகப்பூ கோட்டம் கருஞ்சீரகம்
வாய்விளங்கம் (வகைக்கு 2 பலம்)
சர்க்கரை - 32 பலம்

செய்முறை : கடைச் சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து முன் சொன்ன நெய்யில் தூவி அத்துடன் சர்க்கரையும் கலந்து இலேகியப் பதத்தில் எரித்து இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : நெல்லிக்காயளவு

தீரும் நோய்கள் : பித்தவாய்வு, குன்மம், அக்கினி மந்தம்.

இலகு குண்டலாதி இலேகியம்

சங்குகண்டம் தூதுவளை சார்நொச்சி இம்பூறல்
மங்குசெம்முள்ளி வளர்வாசை - தங்கியவேர்
எல்லாம் இடித்துத்தூ ளேழுபலம் திப்பிலித்தூள்
நல்லாய் இதிற்பாதி நாடு. 740

நாடும் பனைவெல்லம் நான்கைந்தாம் நன்பலங்கள்
கூடுநெய்யும் தேனும் குறித்துவிட்டே - பீடுபெறச்
செய்யும் இலேகியத்தைத் தின்னில் உள்மாந்தை
வெய்ய சயங்களும்போம் விட்டு. 741

விட்டுடனே[1] வாதபித்தம் மேல்சேத்து மமதனால்
துட்ட இருமல் தொலைந்தோடும் - மட்ட
லகுகுண் டலாதி லேகியமாம் இப்போ
தகுமருந்தைக் கொள்வாய் தனித்து. 742

பாட வேறுபாடு :

பாடல் எண் : 742. 1 விட்டுப்பின்
2 தொட்ட

277

சேரும் சரக்குகள் : சங்கங்குப்பி வேர் கண்டங்கத்தரி வேர் தூதுவளை வேர் நொச்சிவேர் இம்பூறல் வேர் செம்முள்ளி வேர் ஆடாதோடை வேர் (வகைக்கு 7 பலம்)
திப்பிலி - 3 1/2 பலம்

இவற்றை இடித்துத் தூளாக்கி பனைவெல்லம் - 20 பலம் பாகுவைத்துத் தூவிக் கிளறி தேவையான அளவு தேன், நெய் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : உளமாந்தை, சயம், வாதபித்த சேத்து மத்தால் உண்டான இருமல்.

வில்வாதி இலேகியம்

பச்சைவில்வ வேர்நாற்பது பலங்கள் தானிடித்து
நச்சுதண்ணீர் எண்மூன்றும் நாழிவிட்டே - வைத்தெரித்து
நானாழி யாயேந்தி நல்லவெல்ல மாறைந்து
தானாம் பலங்கரைத்துத் தான். 743

தான்பாகு காயில் தருசீ ரகமேலம்
வான்லவங்கத் தோலிலைகள் வன்சுக்கு - தேன் மொழியீர்
மூன்று பலம்வகைக்கு முற்றும் கொடிவேலி
தீன்று வலவங்கம்சேர்[1] செவ்வியம். 744

செவ்விய முதல்வகைக்குச்[1] சேர்பலங்கள் ஒன்றும்[2]
நவில்மிளகு[3] சொல்பலங்கள் நான்கு[4] - குவியும்[5]
கணந்திப் பிலிமூலம் காணும் தாளிசம்
குணவகைக்கு இரண்டு[6] பலம் கூறு.[7] 745

கூறுமிந்தத் தூள்கலந்து கொண்டு கிளறியே
ஊறுதேன் ஒன்றுபடி ஒக்கவிட்டே[1] - தேறியுணில்
விக்கலுடன் சத்திப்போம் மேலான வில்வாதி
மிக்க லேகியப்பேர் விள்ளு. 746

பாட வேறுபாடு :

பாடல் எண் : 744. 1 கடவுள் பூசேர்
745. 1 சேர்செவ்வியம் ஓர் வகைக்கு, செவிய முதல் வகைக்கு
2 ஒன்றாக
3 வீர் மிளகு

4 சொல்பலமும் விண்ணான்கு
5 நேராம்
6 ஈர்
7 ஈர் பலமாம் கூறு
746. 1 ஓர்படியும் ஓர்ந்து விட்டே

சேரும் சரக்குகள் : பச்சை வில்வவேர் - 40 பலம்
நீர் - 24 நாழி

இடித்துக் குடிநீரிட்டு 4 நாழியாகக் குறுகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

வெல்லம் - 30 பலம்

குடிநீரில் கரைத்து பாகாகக் காய்ச்ச வேண்டும்.

சீரகம் ஏலரிசி இலவங்கப்பத்திரி சுக்கு (வகைக்கு 3 பலம்)
கொடிவேலி இலவங்கம் செவ்வியம் (வகைக்கு 1 பலம்)
மிளகு - 4 பலம்
திப்பிலி திப்பிலிமூலம் தாளிசபத்திரி (வகைக்கு 2 பலம்)
தேன் - 1 படி

செய்முறை : சரக்குகளைச் சூரணம் செய்து முன் சொன்ன பாகில் தூவிக் கிளறி இறக்கித் தேன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : விக்கல், வாந்தி

சரபங்க வில்வாதி இலேகியம்

முக்காவேளை வில்வ முள்ளுசங்கம் வேர்வகைக்குச்
சிக்குபலம் நாலைந்தாம் சிற்றாமுட்டி - மிக்கபலம்
பத்தாம் நிலப்பனையை பார்கோலப் பன்னஞ்சிர்[1]
கொத்தான் சவுரிவேர் கூறு. 747

கூறியிடும் பொன்முசுட்டை கோலவெள்ளைச் சாரணைவேர்
தேறுஞ் சிறுதேக்கு சிந்தில்கொடி - தூறு[1] விலாம்
பிச்சை மரமஞ்சள் பேசியிடும் நன்னாரி
மெச்சுமுள்ளி வேர்வகைக்காம் விள். 748

விள்பலங்க ளைந்தெல்லா[1] மேன்பாண்டம் தன்னடக்கி
உள்தோய மென்னான்கு ஊற்றியிட[2] - உள்ளெரியில்
எட்டொன்றாய்க் காய்ச்சி இறுக்கும் குடிநீரில்
அட்ட சரக்கரைகள்[3] ஆய்ந்து. 749

ஆய்ந்தபல முப்பதுதா னான்கரைத்தே வைத் தெரித்து
வாய்ந்த பதம்பாகு[1] வருமதனில்[2] - மாய்ந்த[3] கற்கம்
சாதுர்சாதம் செவ்வியம் சாதிக்காய் நெல்லிமுள்ளி
யோதுமிரு சீரகமா முன். 750

உன்னும் திரிகடுகோ டோர்திப் பிலிமூலம்
மன்னுசிறு நாகப்பூ வந்தவகைக்கு - மூன்றுபலம்
காலிதுதன் தூள்கலந்தே கானமலைத் தேன்கலந்து[1]
கோலும் இலேகியமாய்க் கொள். 751

கொள்ளீர் சயவாதம் கூறாமல் பித்தம்
தள்ளியிடு மென்சுவாச சங்காசம்[1] - துள்ளுகுன்மம்
பாண்டதி சாரங்கிராணி பாழ்சூசி கைவாய்வு
தூண்டருசி அத்தி சுரங்கள்.[2] 752

சுரங்கள் கிறுகிறுப்பு சூழ்ந்த சத்திபித்தம்[1]
கரங்கள் திருவனையீர் காணும் - நிரந்தரம்போ[2]
மேலாஞ் சரபங்க வில்வாதி இலேகியமாம்
மாலாய உகந்தருந்தாய் வாழ்த்தி. 753

பாட வேறுபாடு :

பாடல் எண் : 747. 1 பார்கூந்தல் தன்வேரும்
748. 1 நாறு
749. 1 விள்பலமோ வைந்தெல்லாம்
2 எண்ணிருகா லூத்தியிட எண்ணான்கு முற்றி
3 சர்க்கரையாம்
750. 1 பதமாய்
2 வருகையிலே
3 தோய்ந்த

பாடல் எண் : 751. 1 காலது வரந்தூள் கலந்தேனும் கலந்தே.
752. 1 மெள்ளும் சுவாசமொடு மேன்காசம்
2 சுரம்துன்

753\. 1 துன்சுரங்கள் தீமயக்கம் சூழ்ந்தசுத்தி பித்த
மொடு
2 கன்மலையில் ஒடிக் கரந்தொளிக்கும் -
மன்னுபெயர்
3 மாலா யுகந்தருந்தே வாழ்த்து.

சேரும் சரக்குகள் : முட்காய்வேளை வேர் வில்வவேர் முட்சங்கன் வேர் - (வகைக்கு 20 பலம்)
சிற்றாமுட்டி - 10 பலம்
நிலப்பனங்கிழங்கு கொத்தான் சவுரிவேர் பொன்முசுட்டை வெள்ளைச்சாரணை சிறு தேக்கு சீந்தில்கொடி விலாமிச்சவேர் மர மஞ்சள் நன்னாரி நீர்முள்ளிவேர் (வகைக்கு 5 பலம்)
நீர் - 32 படி

செய்முறை : இவற்றைக் குடிநீரிட்டு 1/8 ஆகக் குறுக்கிக் கொள்ள வேண்டும். இதில்
சர்க்கரை - 30 பலம்
கரைத்து பாகு பதமாக எரித்துக் கொள்ள வேண்டும். இப்பாகில்
இலவங்கம் இலவங்கப்பட்டை சிறுநாகப்பூ ஏலம் செவ்வியம் சாதிக்காய் நெல்லி முள்ளி கருஞ்சீரகம் சீரகம் சுக்கு மிளகு திப்பிலி திப்பிலிமூலம் சிறுநாகப்பூ - இச்சரக்கு களை சூரணம் செய்து தூவிக் கிளறி இறக்கித் தேன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : சயவாதம், பித்தம், சுவாசகாசம், குன்மம் அதி சாரம், கிராணி, சூசிகாவாயு, சுவையின்மை, அத்திசுரம், கிறுகிறுப்பு, பித்த வாந்தி.

மதனகாமேசுரம்

தூதுவளை பூமுருங்கை பூவகைக்குச்சொல்படி இரண்
டோது நிலப்பனை யின்தன்கிழங்கு - தீதகலும்
சின்நெருஞ்சி வேர்பூமி சக்கரையின் சேர்கிழங்கு
மன்னும்வகைக் கோர்பலமா மாண்பு. 754

மாண்பு தண்ணீர்விட்டான் வருங்கிழங்கு மூன்றுபலம்
நான்மதுர நன்னாரி நல்லேலங் - காண்வகைக்காம்
ஈர்பலங்கள் இத்தனையும் தூளாய் இடித்துத்தேன்
சீர்பளிதம் வகைக்காம் சேர். 755

சேரும் படியரையாம் சேர்ந்தபசும் பால்குறுணி
ஏருமிது வெல்லாம் லேகியமாய் - யாரும்
அதனைஉண்ணத் தாதுவிர்த்தி ஆகு மிதின்பெயர்
மதனகா மேசுரமாம் வாகு. 756

சேரும் சரக்குகள் : தூதுளம்பூ முருங்கைப்பூ (வகைக்கு 2 படி) நிலப் பனங்கிழங்கு நெருஞ்சில்வேர் பூமிசர்க்கரைக் கிழங்கு (வகைக்கு 1 பலம்) தண்ணீர் விட்டான் கிழங்கு - 3 பலம் அதிமதுரம் நன்னாரி ஏலரிசி (வகைக்கு 2 பலம்)

சர்க்கரை - நேரெடை
பால் - 1 குறுணி

செய்முறை : கடைச் சரக்குகளைச் சூரணித்து, பூக்களை அரைத்து சர்க்கரைப் பாகில் கலந்து பால் சேர்த்துக் கிண்டி, இலேகியமாகச் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள் : தாதுவிருத்தி உண்டாகும்.

மதனகாமேசுரம் (வேறு)

அப்பிரக செந்தூரம் ஆனதிரி கடுகு
செப்பு மதுரம் சிறுதேக்கு - இப்புவியின்
நீர்முள்ளி வித்து நெருஞ்சில் வேர்க் கொத்துமல்லி
சீர்கோட்டம் சாதிக்காய் சேர். 757

சேருளுந்து எள்ளு திகழ்முந்திரி ஏலம்
பேர்முள் ளிலவம் பிசினிந்து - பார்விடைய
கத்தூரி மஞ்சள் கதலிகந்தஞ் சாரணைவேர்
வித்தூர சுவகெந்தி வேர். 758

வேர்தண்ணீர் விட்டான் விளங்கு கையாந்தகரை
ஓர்சித்திர மூலம் ஒண்மருள் - வேர்காரணை
திப்பிலி சிறுனாகப்பூ சேர்வெந் தயமபினி
கப்பிலவம் பட்டை கருது.. 759

கருதுந் திரிபலைகள் காண சணப்பம்வித்து
பெருகுமிரு சீரகங்கள் பின்னும் - வருமா
நிலப்பனையின் கந்தம் நின்றலவங்கமாக
பலத்தொகுதி எல்லாம் பரி. 760

பரியுமிது சமனாய்ப் பார்த்திடித்தே தூளுக்கு
சரிபூனைக் காலிவிரை தானும் - பிரியமுடன்
சேர்த்துமிதற்கு நிறைசேர் சமிதை வித்துத்தூள்
ஏற்றமுடன் போட்டே இதற்கு. 761

இதற்குச் சமனாக வெந்திருக்கும் நல்ல
பதத்தின் சருக்கரைகள் பாங்காய் - விதத்திட்டு
செல்லுமென்ற தேனெய்யும் தேர்ந்துவிட்டு லேகித்து
நல்லதினத் தோடருந்தாய் நாடி. 762

நாடியுண்ணத் தேகங்கள் நல்லழகு காந்தியுண்டாம்
வீடியிடும் வீரியமும் விருத்தியுண்டாம் - கூடிடவே
இந்திரியங் கட்டுப்பட்டே இருக்குமோர் சாமம்
வந்தபெண்கள் மேல்மனதா மால். 763

மால்கிராணி சேத்தும மருவுபித்த வாய்வுடன்
மேல் சயித்தியங் களும்போம் விண்டேதா - னேலபுளிநல்
எண்ணெய்கடு காகாது ஓர்மதுரம் பால்நெய்யும்
வண்ண முருங்கைக்காய் வன்பிஞ்சு. 764

பிஞ்சல்லாற் பூவுமாம் பின்னு மதுரம்
பஞ்சக சாயங்களுமாம் பத்தியங்கள் - துஞ்சா
மதனகாமே சுரமா மன்னு மதன்பேர்கள்
சுதனமுடன் கொள்வாய் துணிந்து. 765

சேரும் சரக்குகள் : அப்பிரகச் செந்தூரம் சுக்கு மிளகு திப்பிலி அதிமதுரம் சிறுதேக்கு நீர்முள்ளிவிதை நெருஞ்சில் வேர் கொத்துமல்லி கோட்டம் சாதிக்காய் உளுந்து எள் முந்திரிகை ஏலரிசி முள்ளிலவம்பிசின் அதிவிடையம் கத்தூரி மஞ்சள் வாழைக்கிழங்கு சாரணைவேர் அமுக்கராவேர் தண்ணீர் விட்டான் கையாந்தகரை கொடிவேலி மருள்வேர் திப்பிலி சிறுநாகப்பூ வெந்தயம் அபினி இலவம்பட்டை கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கனல்விதை

கருஞ்சீரகம் சீரகம் நிலப்பனங்கிழங்கு இலவங்கம் காரை (சமஎடை)

இவற்றை சுத்தி செய்து இடித்துத் தூள் செய்து கொள்ள வேண்டும்.

பூனைக்காலிவிதைத்தூள் கஞ்சா விதைத் தூள் (சூரணத்திற்கு நேரெடை) சர்க்கரை இவை அனைத்திற்கும் சரி எடை

செய்முறை : சூரணத்தைச் சர்க்கரைப் பாகில் கலந்து கிண்டி, நெய் சேர்த்துக் கிளறி இறக்கிய பின் தேன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : அழகு, காந்தி உண்டாகும். வீரிய விருத்தி ஏற்படும். இந்திரியம் கட்டும். கிராணி, சேத்துமம், பித்தவாயு, சயித்தியம் இவைகள் போகும்.

பத்தியம் : புளி, நல்லெண்ணெய், கடுகு, இவை ஆகாது, சர்க்கரை, பால், நெய், முருங்கைப்பிஞ்சு, முருங் கைப்பூ, பஞ்ச கசாயம் (தேன், நெய், பால், வாழை, சர்க்கரை சேர்த்துச் செய்யப்படுவது)

மதனகாமேசுரம் (வேறு)

கஞ்சா விலைப்பொடிகள் கானசாதிக் காய்மதுரம்
மெஞ்சாத கத்தூரியின் மஞ்சள் - அஞ்சாமல்
தோன்றியிடும் குங்குமப்பூ சொல்லவங்கத் தோல்வகைக்கா
மூன்றுநிடக மோரரையா முன். 766

உன்முருங்கை வித்து ஒளிர்பூனைக் காலிவிரை
தன்னசுவ கெந்திசந்தந் தான்கோட்டம் - வன்னமுள
அக்கராகார மான கசகசா
நொக்கு குரோசானி ஓமம். 767

ஓமமல்லால் ஓங்குஞ் சமுத்திரா சோகிவிரை
வாமமுட னிடகம் வகைக்கிரண்டு - சேமமுடன்
தானிடித்த சூரணத்தைத் தப்பாமல் மூன்றுநாள்
தேனிலரைத் தேளடுத் தேர்ந்து. 768

தேர்ந்துசுண்டைக் காய்போலச் சேரவுருட்டி ஒன்று
போந்திரவி முன்னே பூண்டுகொள்ள - ஏந்திழையே

வீரியமும் விருத்தியாம் வீழாமல் இந்திரிய
மாரிமெய்யில் கட்டிடுமாம் வாகு. 769

சேரும் சரக்குகள் : கஞ்சாஇலைத் தூள் சாதிக்காய் அதிமதுரம் கத்தூரி மஞ்சள் குங்குமப்பூ இலவங்கப்பட்டை (வகைக்கு 3 1/2 பலம்) முருங்கைவிதை பூனைக்காலிவிதை அமுக்கரா சந்தனம் கோட்டம் அக்கராகாரம் கசகசா குரோசானி ஓமம் சமுத்திராசோகி

செய்முறை : இவற்றை முறைப்படி இடித்துச் சூரணம் செய்து, 3 நாள் தேனில் அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : சுண்டையளவு இரவில் உண்ண வேண்டும்.

தீரும் நோய் : வீரிய விருத்தி உண்டாகும். இந்திரியம் கட்டும்.

ஏலாதிச் சூரணம்

ஏல மிலவங்க மிதன்தோலு முந்திரிகை
ஞாலகணம் வகைக்காம் நற்பலங்கள் - கோலுமுறை
தீவினை[1] வருமுந் திருமகா மாராயபுரி
மேவுசருக் கரையா மேல். 770

மேலுங் கற்சூரம் விளம்புவகைக் கோர்பலஞ்சேர்
சால விடித்துத் தேனில் தான்குழைத்து - கோல
கழற்சிவிரை நேருருட்டி காலமே யுண்ண
உழைக்குசய மார்புநேர் உண்ணு. 771

உண்ணு தலைசுற் றுள்பிரமை சோணிதமும்
வன்னிமந் தம்பித்தம் வயிற்றுவலி - மன்னுடலோர்
பாலான சூலை பகர்காசம் போமிதன்பேர்
ஏலாதி சூரண மாமே. 772

பாடவேறுபாடு :

பாடல் எண் : 770. 1 தீயென

சேரும் சரக்குகள் : ஏலம் இலவங்கம் இலவங்கப்பட்டை முந்திரிகை திப்பிலி இராயபுரிசர்க்கரை பேரீச்சு (வகைக்கு 1 பலம்)

இவற்றை இடித்துச் சூரணித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : கழற்சி விதையளவு

அனுபானம் : தேன்

தீரும் நோய்கள் : சயம், மார்புநோய், தலைசுற்றல், பிரமை, சோணித நோய், அக்கினிமந்தம், பித்தம், வயிற்றுவலி, சூலை, காசம்.

பாண்டு காமாலைக்கு இலேகியம்

நாயுருவியின் சாம்பல் நற்படிக ளாமொன்று
தூயவேலிப் பருத்தி சொல்லுபடி - ஏயபொன்னாங்
கண்ணி கையான்தகரை காணிலையின்நீர்வகைக்கே
நண்ணுபடி காலாம் நாடு. 773

நாடுமுக் காவேளை நலிசூரணம் பசுநெய்
தேடுவகைக் கோரரையாம் தின்பலங்கள் - கூடியிடும்
சீனிசருக் கரைகள் சேர்ந்தபடி யொன்றரையாம்
ஊனமில்லா துகந்து உண். 774

உகந்தே லேகியம் உண்டிடுகிற் பாண்டு
நகர்ந்துவிடுங் காமாலை நாடா - தகர்ந்துவிடும்
வன்னிமந்த மோடியிடும் வன்பசிக ளுண்டாகும்
சொன்னபடி செய்வாய் துணிந்து. 775

சேரும் சரக்குகள் :

நாயுருவிச் சாம்பல்	1 படி
வேலிப்பருத்திச் சாறு	1 படி
பொன்னாங்காணிச் சாறு	1/4 படி
கையாந்தகரைச் சாறு	1/4 படி
முட்காய்வேளைவேர்	1/2 பலம்
நெய்	1/2 பலம்
சர்க்கரை	1 1/2 படி

செய்முறை : மேற்படி சாற்றில் சருக்கரை கலந்து, நாயுருவிச் சாம்பல், முட்காய்வேளை வேர்ச் சூரணம் சேர்த்துக் கிண்டி, நெய் விட்டு கிளறி இறக்கி ஆறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : பாண்டு, காமாலை, அக்கினிமந்தம் நீங்கி விடும் பசி உண்டாகும்.

சுத்தி நெய்

வன்கிளிஞ்சி உள்ளிருக்கும் வார்சதைக ளோர்குறுணி
நன்வெள்ளைப் பூண்டுத்திரி நான்குபடி - சொன்னரண்டு
என்மரக்கால் நீரி[1]னிலிட் டேகாய்ச்சி நாலிலொன்று[2]
எண்மையுடன் ஏந்தி யிறுத்து. 776

இறுத்தவதில்[1] நெய்குறுணி ஏர்பசுவின் பாலும்
நிறுத்துப் பதக்குவிட்டே நேர்முள் - உறுஞ்சதுரக்
கள்ளியின் பாலிரண்டு[2] படிகாறும் புளியரணை
உள்ளகந்த நீர்குறுணி யோர். 777

ஓர்கற்கம் இந்துப்போடு ஓங்கும் திரிகடுகு
வார்திப்பிலிமூலம் வன்செவியம் - ஈர்சீரம்[1]
மாம்பல வேதாச மாஞ்சி[2] சித்திரமூல
வேம்புசிறு நாகப்பூ வேலம். 778

ஏலமல்லாற் கோட்டம் இலவங்க மிவ்விலைகள்
கோலகெச திப்பிலிகள் கொள்மதுர - மால்பெரிய
காயம் புளியரணை கந்தந் திரிபலைகள்
தூயஎவட் சாரம் துடங்கு. 779

துடங்கும் வகைக்கிரண்டு தூயநிடக மிரண்டாம்
இடங்குபொடி நெய்யதனில் இட்டே - அடங்கெரித்து
மேல்சிக் கின்பதத்தில்[1] மேன்மையுடன் வடிக்கு
மால்சுத்தி நெய்பெயராம் மாண்பு. 780

மாண்பாய் இதையருந்தில் மாமுத் திரக்கிரிச்சம்
வீண்பித்த பாண்டு விடபாகம் - காண்கரம்கால்
வீக்கம் செல்கூர மீறுசய பித்தசுரம்
தாக்கு மகோதரம்போம் தான். 781

பாட வேறுபாடு :
பாடல் எண் : *776.* 1 தீநீர்
2 நாலொன்றா
777. 1 இறுத்தியதில்
2 பாலும் இரண்டு
778. 1 இருசீரக
2 மாம்பல வேதசரமாஞ்சி
780. 1 மேல் சிக்கின பதத்தில், சிலக்கனபத்தில்

சேரும் சரக்குகள் : கிளிஞ்சல் சதை 1 குறுணி
வெள்ளைப்பூண்டு 4 படி

இவற்றை ஒன்று சேர்த்து இத்துடன் 16 மரக்கால் நீர் சேர்த்து நான்கில் ஒரு பாங்காகக் காய்ச்சி இறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் நெய் 1 குறுணி, பால் 1 பதக்கு சதுரக்கள்ளிப் பால் 2 படி புளியாரை கிழங்குச்சாறு 1 குறுணி சேர்த்து இத்துடன் இந்துப்பு சுக்கு மிளகு திப்பிலி திப்பிலிமூலம் செவ்வியம் சீரகம் கருஞ்சீரகம் சடா மாஞ்சில் சித்திரமூலம் வேம்பு சிறுநாகப்பூ ஏலம் கோட்டம் இலவங்கம் இலவங்கப்பத்திரி யானைத் திப்பிலி அதிமதுரம் பெருங்காயம் புளியாரைக் கிழங்கு கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் எவச்சாரம் (வகைக்கு 2 நிடகம்)

செய்முறை : கடைச் சரக்குகளைத் தனித்தனியே இடித்துத் தூளாக்கி மேற்படி நெய்யில் கலந்து எரித்து நெய் பதத்தில் வடித்து வைத்துக்கொள்ள வேண்டும்..

தீரும் நோய்கள்: மூத்திரக்கிரிச்சரம், பித்தப்பாண்டு, விட பாகம், கை கால் வீக்கம், சயம், பித்த சுரம், மகோதரம்.

வறளாதி குக்குலு நெய்

முன்னைக் கொடிவேலி மூக்கிரட்டை சித்தமுட்டி
மன்னு புனமுருங்கை மாவிலங்கை - நன்னாரி
சித்தமல்லி புங்கு சிறுகுறிஞ்சி நொச்சிகண்டம்[1]
கத்தரியிம் பூறல்வேர் காண். 782

காண்சா ரணைவீழிக் காட்டில்[1] தழுதாழை
நீண்சீந்தித் தண்டு நிமிர்சடைச்சி - வான்முருங்கை[2]
வேலந்தோல் பேய்ப்புடோல்வேப்பந்தோல் பேர்மல்லி
கோலமழ வண்ணக் குறிஞ்சி. 783

குறிஞ்சியல்லால் வெள்ளறுகு கூர்பா திரியின்வேர்
பிறிஞ்சி பெருமருந்து பின்னும் - சிறுகுறட்டை
கந்தம்செம் முள்ளி கருதும் சமூலம்
வந்தமாட்டாங்கொடி[1] சேர் மாண்பு. 784

மாண்பாம் பொன்வண்ண மழக்குறிஞ்சி யாம்வாசை
காண்வகைக்கோர் மூன்றுபலம் கண்டித்துப் - பூண்முலையீர்
தூணிநீர் வார்த்தெரித்துச் சொல்குறுணி யாயேந்தி
வெண்ணையும் நானாழி விட்டு. 785

விட்டடல்லாற் கற்கம் விடய மிலவங்கம்
கட்டு சிறுதேக்குக் கடுகரத்தை - நட்டயிரு
சீரகங்கார் போகரிசி சித்திரமூலஞ் செவ்வியம்
கார்சத குப்பைக்கடுக் காய். 786

காய்சாதிக் காய்தான்றி[1] கச்சோலம் கல்லுப்பு
தேய்கோட்டம் இந்துப்பு தேவதாரு - ஏயும்
எவட்சாரம் வெட்பாலை யின்னரிசி கொத்தமல்லி
தவட்சீர மஞ்சிட்டித் தானேர். 787

ஏர்சீனக் காரம் எழில்கடுகு ரோகணிதன்
நேர்விளா வின்னரிசி நேருமிங்கு - சீர்செய்
திரிகடுகு பேராணைத் திப்பிலிகள் சொன்ன
பெருங்குரும்பை தன்வகைக்காம் பேசு. 778

பேசியிடு முக்கழஞ்சு பேராவின் பால்குறுணி
மூசியிடும் குக்குலவு மூன்றுபலம் - நேசமுடன்
எல்லாம் அரைத்துடன்விட் டேஎரியில் காய்ச்சியிறு
வல்லாண்மை தன்னால்[1] வகுத்து. 789

வகுத்த வறளாதி குக்குலு நெய்வாரித்
தொகுத்தருந்தில் சேத்துமத்தில்[1] சூழ்ந்த - மிகுத்தசய
மண்டைக் கிரந்திகண்ட மாலைபவுத் திரங்கள்
தொண்டை சிலந்திகடி தோடம். 790

தோடே விடபாகம் தொடர்மூல ரோகங்கள்
நாடு செவிகளான்[1] நலிகிரந்தி - கூடியிடும்
கன்னக் கிரந்தி கடிசகல மானபுண்ணும்
தன்னிடத்திற் போமே தளர்ந்து. 791

பாடவேறுபாடு :

பாடல் எண் : 782. 1 சிறுகுறிஞ்சான் கண்டங்
783. 1 காட்டித்
2 வான்முகை

784. 1 வந்தமடாங் குடிசேர் மாண்பு
787. 1 தான்
789. 1 தன்னில்
790. 1 சேத்துமதிற்
791. 1 செவிகள், செவிக்கன்னம், செவிக்கள்ளான்.

சேரும் சரக்குகள் : முன்னை கொடிவேலி மூக்கிரட்டை சிற்றாமுட்டி
புனமுருங்கை மாவிலங்கை நன்னாரி சிற்றாமல்லி
புங்கு சிறுகுறிஞ்சான் நொச்சி கண்டங்கத்திரி இம்
பூறல்வேர் சாரணை வீழி தழுதாழை சீந்தில்தண்டு
நெட்டி முருங்கை வேலந்தோல் பேய்ப்புடல்
வேப்பந்தோல் பேராமல்லி அழவணை குறிஞ்சி
வெள்ளறுகு பாதிரி பெருமருந்து சிறுகுறட்டை
சந்தனம் செம்முள்ளி ஆட்டாங்கொடி வண்ணக்
குறிஞ்சி ஆடாதோடை (வகைக்கு 3 பலம்)

இவற்றை இடித்துத் தூணிநீர் சேர்த்து எரித்துக் குறுணியாக வற்றவைத்து வடிகட்டியதில் நெய் 4 நாழி விட்டு அத்துடன்.

அதிவிடயம் இலவங்கம் சிறுதேக்கு சிற்றரத்தை
கருஞ்சீரகம் சீரகம் கார்போகவரிசி கொடிவேலி
செவ்வியம் சதகுப்பை கடுக்காய் சாதிக்காய்
தான்றிக்காய் கச்சோலம் கல்லுப்பு
கோட்டம் இந்துப்பு தேவதாரு எவச்சாரம் வெட்
பாலைஅரிசி கொத்துமல்லி மஞ்சிட்டி சீனாக்
காரம் கடுகுரோகணி விளாவரிசி சுக்கு மிளகு
திப்பிலி ஆனைத்திப்பிலி பெருங்குரும்பை
(வகைக்கு 3 கழஞ்சு)

பால்	- 3 குறுணி
குங்கிலியம்	- 3 பலம்

இவற்றை அரைத்துக் கலந்து எரித்து இறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சேத்துமசயம், மண்டைக்கிரந்தி, கண்டமாலை,
பவுத்திரம், தொண்டைச்சிலந்தி, கடிதோடம்,
விடபாகம், மூலம், செவிக்கள்ளன், கிரந்தி, கன்னக்
கிரந்தி, கடி, அனைத்துப் புண்கள் தீரும்.

கடுக்காய் நெய்

ஆனகடுக் காய்நூறு ஆங்கடுகு ரோகணியும்
ஈன திரிகடுகும் இந்துப்பும் - நானகிட்டங்
காந்தபற் பந்தன்வகைக்கும் காண்பலங்கள் ஓரரையாம்
ஏந்துமிரு சீராம் இரண்டும். 792

இரண்டல்லால் கோட்டம் எழில்சாதிக் காயேலம்
திரண்ட திரிபலைகள் சேரும் - புரண்டசத
குப்பைவகைக் கோர்பலமாம் கொண்டசுத்தி நேர்வாளம்
செப்புமூ வைந்துபலம் சேர்ந்து. 793

சேர்ந்த வரப்பொடி[1] சீரெண்ப தாம்பலங்கள்
சார்ந்தசங்கு கையாந் தகரைபுளி - ஆர்ந்த
பிரமிகிழ்க் காய்நெல்லி பேரூசி மல்லி[2]
தருதூது வளைமூலந்[3] தான். 794

தானும் பொடுதலைகள் தன்னினி னீர்குமரி
பூணுறும் சாறுவளை யோர்முழுதும் - தேனே
இடித்துப் பிழிந்துநீர் எல்லாம் வகைக்கு
விடுத்திடும் நாழி விரைந்து. 795

விரைந்துநெய்யும் ஈர்நாழி விட்டெரியில்[1] காய்ச்சி
நிரந்தரமாய்த் தான்வடிக்கும் நெய்பேர் - துறந்தறிக
உள்ளகடுக் காய்நெய்யாம் உண்டவுடன் காமாலை
கள்ளவிடப் பாகம்போம் கண்டு. 796

கண்டபித்த பாண்டூளை காசம் விடபாகம்
கொண்ட வெகுவீக்கம் குறிசோகை - பாண்டுமிந்த
வேதனைநோய் தீரும் விரும்பியே எவ்வுலகு
மாதனையே சொல்வாய் வகுத்து. 797

பாடவேறுபாடு :

பாடல் எண் : 794. 1 வரப்பொடியும்
2 பெருமல்லி
3 மேல்
796. 1 விட்டெரித்து

இதில் கடுக்காய் நெய் செய்முறை விளக்கப்படுகிறது.

சேரும் சரக்குகள் : கடுக்காய் - 100

கடுகுரோகணி சுக்கு மிளகு திப்பிலி இந்துப்பு
அயபற்பம் காந்தபற்பம் (வகைக்கு 1/2 பலம்)
கருஞ்சீரகம் சீரகம் கோட்டம் சாதிக்காய் ஏலம்
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சதகுப்பை
(வகைக்கு 1 பலம்)

சுத்தித்த நேர்வாளம் 15 பலம்
அரப்பொடி 80 பலம்
சங்கங்குப்பி கையாந்தகரை புளி பிரமி கீழ்க்காய்
நெல்லி பெருமல்லிகை தூதுவளை பொடுதலை
கற்றாழைசாறு வேளை (சாறு வகைக்கு 1 நாழி)
நெய் 2 நாழி

செய்முறை : கடைச் சரக்குகளைப் பொடித்துச் சாறுகள் மற்றும் நெய்யுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள் : காமாலை, விடபாகம், பித்தப்பாண்டு, ஈளை, காசம், வீக்கம், சோகை இவை தீரும்.

பூசணிக்காய் நெய்

பூசணிக்காய்நீர் முசுமுசுக்கை பூந்தா மரைவளையம்
வாச்சசதா வேரி வன்கருப்பு - தேசுடைய
ஓரிலையின் தாமரைநீர் உற்றநெய்பால்[1] ஓர்வகைக்கு
வார்குறுணி கற்கம் வலிந்து. 798

வலிந்த சிறு தேக்குசுக்கு வல்லிலுப்பையின்பூ
மெலிந்த கணமரத்தை மேலாய் - பொலிந்தசந்து
நன்னாரி சண்பகப்பூ நற்சீரகங் கடுக்காய்
பொன்னார் இலவங்கம் போற்று. 799

போற்றுசிறு நாகப்பூ போந்தேலம் கொத்தமல்லி
சாற்றும் இருவேலி சாதிக்காய் - தோற்றுவிலாம்
பிச்சம் அதிமதுரம் போர்தா மரைத்தாது[1]
மெச்சுகொட்டி யின்கிழங்கு மேல். 800

மேல்சாத் திரவேதி வெட்பாலை யின்னரிசி
மாலமுத வள்ளியின் வன்கிழங்கு - சால்முந்
திரி[1]கோட்டம் கச்சூரம் சேர்குங்கு மப்பூ
வரிகடுகு ரோகணிதான் மன்னு. 801

மன்று தட்சீர்[1] மருவும் நவச்சாரம்
துள்ஷியிடு மஞ்சிட்டி சொல்வகைக்குப் - பன்னியிடு
முக்கழஞ்சி வீத முறைமையுட னரைத்துப்
பக்குவமாய் விட்டெரியுள் பாங்கு. 802

பாங்குபத மாயிறக்கும் பகர்பூசணி நெய்யைத்
தாங்கிச் சருக்கரையில் தானுண்ண - ஓங்குபித்தம்
தாதுநட்டம் மெய்யிளைப்பு தான்கிரிச்சம் உள்வரட்ஸை[1]
கோதிரத்த மேகம்போம் கூறு. 803

பாட வேறுபாடு :

பாடல் எண் : 798. 1 உற்றநெய்யில்
800. 1 பொற்தாமரை
801. 1 முந்திரிகை
802. 1 தவாட்சீர், மெவச்சார
803. 1 உள்வரட்சி

சேரும் சரக்குகள் : பூசணிக்காய்நீர் முசுமுசுக்கைச்சாறு தாமரை வளையம் சாறு தண்ணீர்விட்டான் சாறு கரும்புச் சாறு ஓரிலைத் தாமரைச் சாறு நெய் பால்
(வகைக்கு 1 குறுணி)

கற்கச் சரக்குகள் : சிறுதேக்கு சுக்கு இலுப்பைப்பூ அரத்தை சந்தனம் நன்னாரி சண்பகப்பூ கடுக்காய் இலவங்கம் சிறு நாகப்பூ ஏலம் கொத்துமல்லி வெட்டிவேர் சாதிக் காய் விலாமிச்சவேர் அதிமதுரம் தாமரைத்தாது கொட்டிக்கிழங்கு சாத்திரபேதி வெட்பாலை அரிசி சிந்தில் கிழங்கு முந்திரிகை கோட்டம் கச்சூரம் குங்குமப்பூ கடுகுரோகணி நவச்சாரம் மஞ்சிட்டி
(வகைக்கு 3 கழஞ்சி)

செய்முறை : கற்கமாக மேற்படிச் சரக்குகளை அரைத்து சாறு களுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : சரக்கரை

தீரும் நோய்கள் : பித்தம், தாதுநட்டம், உடல் இளைப்பு, கிரிச்சரம் உள்வரட்சி, இரத்தமேகம்.

இலந்தை நெய்

இலந்தை இலைபிழிநீர் ஈராறு நாழி
கலங்தெரியில் நாலொன்றாய்க் காய்ச்சித் - துலங்கவிறுத்
தேயதனில் நற்றயிர்கள் ஏற்றபடி முந்நான்கு
நேயபுளி யாரைநீர் நெய். 804

நெய்வகைக்கோ ரொன்றுபடி நீங்குகற்கம் இந்துப்பு
மெய்யகத்திப் பூவிடைய மேலோமம் - துய்யசிறு
மூலம் திரிகடுகு மோதிலவந் தன்பிசினும்
சாலவகைக் கோர்கழஞ்சாந் தான். 805

தானெல்லாம்[1] சேர்த்து தகுமெரியினிற்[2] காய்ச்சி
ஆனபதன் வடிக்கு மன்நெய்பேர் - மானும்
இலந்தைநெய் உண்டிடுகில் ஏந்திழையார் அல்குல்
கலந்திரத்தம் வீழ்வதும்போம் கண்டு. 806

பாடவேறுபாடு :

பாடல் எண் : 806. 1 தானேலம்
2 நீர்

சேரும் சரக்குகள் : இலந்தை இலைச்சாறு - 2 நாழி
எடுத்துக் காய்ச்சி நாலிலொன்றாக்கி அத்துடன்
தயிர் - 12 படி, புளியாரைச்சாறு
நொய் (வகைக்கு 1 படி) இந்துப்பு அகத்திப்பூ
அதிவிடையம் ஓமம் திப்பிலி மூலம் சுக்கு மிளகு
திப்பிலி இலவம்பிசின் (வகைக்கு 1 கழஞ்சி)

செய்முறை : கடைச் சரக்குகளைப் பொடித்து சாறு, நெய், தயிர் இவற்றுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : பெரும்பாடு

கண்டங்காரி கிருதம்

ஆற்றுமுள்ளி வேர்நூறு ஆடாதோடை அன்பான
தேற்றகீழ்க்காய் நெல்லிசேர் செவ்வியம் - தோற்றவகைக்
கையஞ்சு தூதுவளை யாறிரண்டு மேலரைய
மெய்நெருஞ்சி மூவிருகால் மேவு. 807

மேவு சிறுதேக்கு மென்மூன்றின் மேலரைக்கால்
பூவலரும் தேவதாரு பொன்முசுட்டை - தாவுகொடி
வேலிகண்டு மூலம்[1] நாய் வேளைவகைக் கைந்து
கோலுந்தொகை நற்பலமாய்க் கொள். *808*

கொள்ளிதற்கு நாற்பங்கு கூறுசலம் விட்டெரித்து
மெள்ளநான் கொன்றாகும்[1] மேல்வடித்துத் - துள்ளுகுடி[2]
நீரதற்கு நாலிலொன்று நெய்யதனில்[3] சேர்த்திட்டே[4]
ஆர்பிரமிச் சங்குகை யானன்றி. *809*

அன்றிலையி னீர்வகைக்காம் அந்நெய்க்குத் தானிரட்டி
ஒன்றவிடு மேற்கற்கம் ஒண்ணுதலாய் - நின்றுபடர்
தூதுவளை தன்விரைப்பார் தோன்றுகண்டம்[1] வேரினிற்தோல்
தீதறுக்கும்[2] கற்கடகச் சிங்கி. *810*

சிங்கியல்லால் கோட்டமொடு சிற்றவரை யின்விரை நீண்டு
எங்கும் படரேழி லம்பாலை - தங்கிய[1]நெய்
ஓர்நாழி யாம்வகைக்கே ஒன்றவே முக்கழஞ்சு
சேரிடித்துச் சூரணமாய்ச் செய். *811*

செய்தபொடி மேல்தூவி சீர்பெறவே ஆக்குகின்ற
நெய்வடித்துக் கற்கமெல்லாம் நீக்குடன்பே ரெய்துகண்டங்
காரிக் கிருதமெனும் காசினியோர் தன்கரத்தில்
வாரியுண வீக்கம்போம் வற்றி. *812*

வற்றியபின் குன்மம் வயிறூதல் பீலிகைமெய்
யுற்றரத்த சேத்தும முறுமூல - முற்றசயம்
காசம் சுவாசங்கள் காந்துகின்ற வன்னிமந்தம்
பேசிதய ரோகம்போம் பேர்ந்து.[1] *813*

பாட வேறுபாடு :

பாடல் எண் : *807.* 1 தேர்ந்து
808. 1 கணமூலம்
809. 1 நன்றாகும்
2 உள்ளுகுடி
3 நெய்யதனை
4 சேர்த்திடவே
5 கையன்றி

810. 1 தோன்றுகணம்
2 தீதகற்றும்
811. 1 சுங்கிய, தாங்கியநெய்
813. 1 போந்து

சேரும் சரக்குகள் : ஆற்றுமுள்ளிவேர் - 100 பலம்
ஆடாதோடை கீழாநெல்லி செவ்வியம்
(வகைக்கு 5 பலம்)
தூதுவளை - 12 பலம்
நெருஞ்சி - 1/2 பலம்
சிறுதேக்கு 1/8 பலம்
தேவதாரு பொன்முசுட்டை கொடிவேலி திப்பிலி
மூலம் நாய்வேளை (1 பலம்)

இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து இதற்கு 4 பங்கு நீர் சேர்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். குடிநீர் அளவுக்கு நெய் - 1/4 பங்கு பிரமிச்சாறு சங்கங்குப்பிச்சாறு கையான்சாறு (இவை 1/4 பங்கு)

இவற்றைக் கலந்து அத்துடன் :
தூதுவளை கண்டங்கத்திரிவேர்த்தோல் கற்கடக
சிங்கி கோட்டம் சிற்றவரை ஏழிலைப்பாலை
(வகைக்கு 3 கழஞ்சு)

செய்முறை : ஆகியவற்றை இடித்துச் சூரணமாக்கி மேற்கண்ட கலவையில் தூவி நெய் பதத்தில் காய்ச்சி இடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : சிரங்கையளவு

தீரும் நோய்கள் : வீக்கம், குன்மம், வயிறூதல், பீலிகை, இரத்த சேத்துமம், மூலம், சயம், காசம், சுவாசம், மந்தம், இதய நோய்.

புளியாரைச் கிருதம்

புளியாரை நீர்நாழி பொற்பசுவின் நெய்நாழி
நெளியா மரமஞ்சள் நீள்செவ்வியம் - விளியா
அகத்திப்பூ மஞ்சள் அதிவிடையம் சுக்கு
தொகுத்தவில்வப் பிஞ்சுவறட் சுண்டி. 814

சுண்டியல்லால் சொல்லவங்கத் தோல்வெட்டி வேர்சந்து
திண்டுவெள்ளி லோத்திரமாம் தேவதாரு - வண்டமுத்தம்
செங்கழுநீர் தண்டுமதன் சேர்ந்தகந்தம் பொன்முசுட்டை
தங்குகொடி வேலிஎவட் சாரம். 815

சாரவகைக் கோர்கழஞ்சாய் தகக்கற்கத் தூளுடனே[1]
ஆரவே ஆக்கியநெய் ஆமதன்பேர் - தூயபுளி
யாரைக் கிருத மருந்தக் கிராணிபின்னும்
ஓரைக் கழிச்சலும்போம் உன்னு.[2] 816

பாடவேறுபாடு:

பாடல் எண் : 816. 1 தானுடனே
2 கழிச்சலும்போம் உண்ணு.

சேரும் சரக்குகள் : புளியாரைக் குடிநீர் - 1 நாழி
பசு நெய் - 1 நாழி
மரமஞ்சள் செவ்வியம் அகத்திப்பூ மஞ்சள் அதி விடையம் சுக்கு வில்வப் பிஞ்சு ஆடுதின்னாப் பாளை இலவங்கப் பட்டை வெட்டிவேர் சந்தனம் வெள்ளி லோத்திரம் தேவதாரு செங் கழுநீர்த் தண்டு செங்கழுநீர்க் கிழங்கு பொன் முசுட்டை கொடிவேலி எவட்சாரம்
(வகைக்கு 1 கழஞ்சு)

செய்முறை : கற்கச் சரக்குகளை அரைத்து மேற்படி கலவை யுடன் கலந்து எரித்து நெய்யாக்கிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : கிராணி. கழிச்சல்

அகிலேகிய கிருதம்

பாரின் முசுமுசுக்கை பச்சிலை[1] நீர்பதக்கு
நீரன்பா லோர்[2] குறுணி நெய்குறுணி - சேரப்
பொருந்து மதிற்கற்கம் பூணும் விலாம்பிச்சை
திருந்து மதிமதுரம் செப்பு. 817

செப்பும் இலுப்பைப்பூ தேய்ந்தசந்து முந்திரிகை
பற்படகம் இலவங்கப்[1] பத்திரிகை - இப்புவியீர்[2]
நேர்ந்துவெட்டி வேர்கோட்டம் ஏலம் இலவங்கம்
சேர்ந்தவகைக் கோர்பலமாய்த் தேர்ந்து. 818

தேர்ந்துவகைச் சூரணமாய்ச் செய்துநெய்யில் தான்கரைத்து
ஆர்ந்த பதனறிந்தே யாக்குபெயர் - போந்த
அகிலேகி யக்கிருதம் மானவர்கள் கொள்ளில்
திகிலோ பைத்தியங்கள் தீர்ந்து. 819

தீர்ந்து தலைசுற்றல் செங்கைகால் உள்ளெரிவும்
ஊர்ந்துதிரி கால்விழியின் உள்ளநோய் - பேர்ந்து விடும்
தேகம் பலக்கும் திருவனையீர் இம்மருந்தை
மோகமூறத் தேடிடுவாய் முந்தி. 820

பாட வேறுபாடு :

பாடல் எண் : 817. 1 பச்சிலையின்
2 நீரான, நீர்ணம்மாலோர்
812. 1 மேலவங்கப்
2 இப்புவிமா

சேரும் சரக்குகள் :
முசுமுசுக்கை நீர் - 1 பதக்கு
பால் - 1 குறுணி
நெய் - 1 குறுணி
விலாமிச்சை அதிமதுரம் இலுப்பைப்பூ சந்தனம்
முந்திரிகை பற்பாடம் இலவங்கப்பத்திரி
வெட்டிவேர் கோட்டம் ஏலம் இலவங்கம்
(வகைக்கு 1 பலம்)

செய்முறை : இவற்றைச் சூரணித்து மேற்படி கலவையுடன் கூட்டி நெய் பதத்தில் காய்ச்சி இறுத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : பைத்தியம், தலைசுற்றல், கை கால் எரிவு, கண்ணோய் நீங்கும், தேகத்திற்கு பலம் உண்டாகும்.

கதகாதி கிருதம்

வந்த திரிகடுகு வாழுந் திரிபலைகள்
இந்த வகைக்கரை என்றபலம் - இந்துப்பு
காற்பலம் தேத் தான்விரைகள் காணும்[1] நான்காகும் நெய்
மேற்படிதான் ஒன்றாம்[2] விளம்பு. 821

விளம்புவுரை தான்பாலை விட்டரைத்தே ஊற்றி
வளம்பெறநெய் வாகாய் வடிக்கும் - உளயோக
நாமம் கதகாதி நற்கிருதம் நக்கியிடத்
தூமசயம்[1] ஏகியிடும் சொல். 822

பாடவேறுபாடு :

பாடல் எண் : 821. 1 காணுபலம்
2 என்றும்
822. 1 தோம சயம்

இதில் கதகாதி கிருதம் செய்முறை கூறப்படுகிறது.

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் (வகைக்கு 1/2 பலம்)
இந்துப்பு 1/4 பலம்
தேத்தான்விதை - 4 பலம்
நெய் - 1 படி

செய்முறை : கடைச்சரக்குகளை சூரணித்து, தேத்தான் விதையைப் பாலில் அரைத்து நெய்யில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சயம்.

கதகாதி கிருதம் (வேறு)

தூதுவளை தன்கனியின் சொல்தேத்தான் வித்து வகைக்கு
ஓதுபலம் நான்காய்நெய் ஓர்படியாம் - கோதுபடா
சர்க்கரைஇரண் டாம்பலங்கள் சாற்றும் திரிகடுகோடு
ஒக்குமிரு தீரகமாம் உன். 823

உன்பலங்கள் ஒவ்வொன்றாம் ஓதுதேத் தான்விரையைத்
தன்பாலி லேயரைத்துத் தான்கரைத்துப் பின்வடிக்கும்
நெய்பெயர் கதகாதி புட்டியதை[1] நித்தமுண்ண
மெய்நோய் சயங்குணமாம் விள்ளு.[2] 824

பாடவேறுபாடு :

பாடல் எண் : 824. 1 புட்டிலதை
2 விற்று

சேரும் சரக்குகள் : தூதுவளம்பழம்
தேத்தான் விதை வகைக்கு 4 பலம்
நெய் - 1 படி
சர்க்கரை - 2 பலம்
சுக்கு மிளகு திப்பிலி கருஞ்சீரகம்
சீரகம் (வகைக்கு 1 பலம்)

செய்முறை : இவற்றில் தேத்தான் விதையைப் பாலில் அரைத்துக் கொண்டு மற்ற சரக்குகளைச் சூரணித்து இவை அனைத்தையும் நெய்யுடன் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : தோல்நோய், சயம்.

ருத்திராதிகிருதம்

பண்ணிஞ்சி நீர்பதக்குப் பால்நாழி நெய்நாழி
எண்செவியம் திப்பிலியாம் இந்துப்புத் - திண்ணானை
திப்பிலியிம் பூறல்வேர் சேர்கீரக மோமம்
செப்புகொடி வேலியாம் சேர். 825

சேர்வகைக் கோர்கழஞ் சாயதன்பாலிற் சேர்த்தரைத்து
வார்பதனா யாக்கி[1] நெய்[2] வன்பெயர்கள்[3] - ஆருத்
திராதிக் கிருதநெஞ்சு சேர்யார் நோய்பாண்டு
கிராணிசயம் போக்கிடுமாம் கேள். 826

பாடவேறுபாடு :
பாடல் எண் : 826. 1 பதனாக்கி
2 பதனாக்கியே
3 வகைபெயர்கள்

சேரும் சரக்குகள் : இஞ்சிச்சாறு - 1 பதக்கு
பால் - 1 நாழி
நெய் - 1 நாழி
செவியம் திப்பிலி இந்துப்பு
ஆனைத்திப்பிலி இம்பூறல்வேர் சீரகம் ஓமம்
கொடிவேலி (வகைக்கு 1 கழஞ்சு)

செய்முறை : கடைச் சரக்குகளை பாலில் அரைத்து மற்ற நெய், பால், இஞ்சிச்சாறு இவற்றுடன் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்தெடுக்க வேண்டும்.

திரும் நோய்கள் : நெஞ்சு மற்றும் மார்பு நோய், பாண்டு, கிராணி, சயம் இவை நீங்கும்.

வாகாதி கிருதம்

வாசையிலை நீர்சமூலம் வளராவின் பாலினத்துக்கு
ஓசைநான் காநெய்யும் ஓரிரண்டு - பேசும்
படியளவாம் சேர்த்துப் பகரும்இனி கற்கம்
தொடிஇரண்டு திப்பிலியாம் சொல். 827

சொல்லும் எவட்சாரம் சுக்குக்[1] கொடிவேலி
வல்லகெச திப்பிலியாம் வன்னிந்து[2] - பொல்லும்
பலமரையாம் தன்வகைக்குப் பன்கொடி மேல்தூவி
நல்நெய்தான் ஆக்குபத னாடி. 828

நாடிவடி கொண்டதுக்கு நன்னாமம் தானுரைக்கில்
கேடிலா வாசாதிக்[1] கிருதமதைத் - தேடிக்
குடிக்க சயமருசி கூறுவல்லைப் பாண்டு
அடிக்கும் சுரம் கிருமியாம் பின். 829

பின்சுவா சங்காசம் பேராத வாய்வும்போய்
தன்னுடலும்[1] புஷ்டியுமாம் சந்ததமும் - துன்வயிற்றில்
தீவனமும் உண்டாகும் தீரா சயமுத[2]
லாவனவும் போமாம் அலைந்து. 830

பாடவேறுபாடு :

பாடல் எண் : 828. 1 உக்கு
2 வன்னினது
829. 1 வாகாதி
830. 1 தன்னுடலம்
2 சயமுந்த

சேரும் சரக்குகள் : ஆடாதோடைச் சமூலக் குடிநீர் - 4 படி
பால் - 4 படி
நெய் - 2 படி
எவச்சாரம் சுக்கு கொடிவேலி
கெசதிப்பிலி இந்துப்பு

செய்முறை : பொடித்து மேற்படி சரக்குகளுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், உருசியின்மை, வல்லை எனப்படும் வயிற்றில் உண்டாகும் கட்டி, பாண்டு, சுரம், கிருமி, சுவாசம் காசம், வாய்வு இவை தீரும், உடல் புஷ்டி உண்டாகும். வயிற்றில் பசி உண்டாகும்.

வாசாதி கிருதம் (வேறு)

வாசைச் சமூலம் வளர்பலங்கள் மூவெட்டில்
நேசமுடன் பதக்கு நீர்விட்டே - மாசகல
எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்தகுடி நீரதில்நெய்
திட்டமுடன் இரண்டுபடி[1] சேர். *831*

சேரும்திரி கடுகுதிண் செவிய மாஞ்சிதேவ
தாருந் திரிபலைகள் தண்நெருஞ்சி - வேருமஞ்சள்
முந்திரிகை இந்துப்பு முத்தம் விழலரிசி
தந்தவிரு சீரகமாம் தான். *832*

தானசுவ கெந்திகந்தம் தாங்கு[1] கொடிவேலி
கானகற் கடகசிங்கி காழ்கோட்ட - மென்கார
பரங்கி சக்கைககள் பண்வகைக்கா முக்கழஞ்சு
நேரவரைத் தேகரைப்பாய் நின்று. *833*

நின்றெரியில் காய்ச்சி நிலமைபெற வடிக்கு
நன்று நறுநெய்க்கு நாமமென்ன - என்றுமின்னே
கேளினி வாசாதிக் கிருதமதை அருந்தில்
மூலஞ்சயம் போமேமு றிந்து. *834*

பாடவேறுபாடு :

பாடல் எண் : *831.* 1 ரெண்படி
833. 1 தாக்கு

சேரும் சரக்குகள் : ஆடாதோடைச் சமூலம் - 24 பலம்
தண்ணீர் - 1 பதக்கு

சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இத்துடன்.

நெய் - 2 படி
சுக்கு திப்பிலி செவியம் சடாமாஞ்சில் தேவதாரு
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் நெருஞ்சி

மஞ்சள் முந்திரிகை இந்துப்பு முத்தக்காசு விழல
ரிசி கருஞ்சீரகம் சீரகம் அசுவகந்தி கொடிவேலி
வேர் கற்கடகசிங்கி கோட்டம் வெங்காரம் பரங்
கிச்சக்கை (வகைக்கு 3 கழஞ்சு)

செய்முறை : கடைச் சரக்குகளைச் சூரணித்துக் கலந்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : மூலம், சயம்,

சதாவேரி கிருதம்

ஆதி சதமூலி அரம்பை அசுவகெந்தி[1]
சோதி நிலப்பனையின் சூழ்[2] கிழங்கு - நீதி
இலவம் பிசின் வகைக்கோர் என்றமு வைந்து
பலம்படி நீரெட்டிரட்டிப் பார். 835

பார்கிசா யங்கள் படிஇரண்டாய்த் தானிறுத்து
வாரதனில் நெய்பால் வகைக்கிரண்டு - சீர்நாழி[1]
பூசனிக்காய் ஒற்றினுள்ளே போந்தநீர் கூடவிட்டுத்
தேசடரும் கற்கவகை சேர். 836

சேர்விலாம் பிச்சைவெட்டி சேர்ந்தசடா மாஞ்சிசந்து
தேர்கோட்ட[1] மேலம் திரிபலைகள் - சீர்மதுர
மாரு மிலவங்க மாந்திரையங் கற்சூரம்
பேருவகைக் கோர்துட்டாம் பேசு. 837

பேசும்பா ளித[1]மெட்டாம் பின்பலம்சேர் நூல்வழிசெய்
ஆசில் சதாவேரி யாங்கிருதம் - நேசமுடன்
ஏந்தியுணக் கைகால் எரிவுரத்த பித்தமனல்
காந்துபிர மேகமும்போம் காண். 838

பாடவேறுபாடு :

பாடல் எண் : 835. 1 அசுவகெந்திசேர்
2 நிலப்பனைச்
836. 1 சிர்தாளி, நீர்நாழி
837. 1 குட்ட
838. 1 பளித, பணித

சேரும் சரக்குகள் : தண்ணீர்விட்டான் கிழங்கு ஓமம் அமுக்கரா நிலப் பனங்கிழங்கு இலவம்பிசின் (வகைக்கு 15 பலம்)
நீர் - 16 படி

சரக்குகளை ஒன்றிரண்டாக்கி நீருடன் கலந்துக் காய்ச்சி 2 படியாக வற்ற வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

பூசணிக்காய்ச்சாறு - நாழி
விலாமிச்சம்வேர் வெட்டிவேர்
சடாமாஞ்சில் சந்தனம் கோட்டம் ஏலக்காய்
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் பேரீந்து
அதிமதுரம் இலவங்கம் இலவங்கப்பட்டை
இலவங்கப் பத்திரி (வகைக்கு 1 காசெடை)
சர்க்கரை - 8 பலம்

செய்முறை : கடைச் சரக்குகளைக் கற்கமாக பூசணி நீர் விட்ட ரைத்துக் கொண்டு மற்றக் கலவையுடன் கலந்து நெய் பதமாகக் காய்ச்சி இறுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : கை கால் எரிவு, இரத்தபித்தம், பிரமேகம்

சதாவேரி கிருதம் (வேறு)

தந்தசத மூலியிஞ்சி தண்ணீர் நறுநெய்யும்
விந்தையுடன் சமனாய் விட்டெரிக்கும் - அந்தநெய்யை
பத்தியமாய் உண்டிடுகில் பாரியிடும் சத்திகுன்மம்¹
ஒத்தசதாவேரி நெய் ஓது. 839

பாடவேறுபாடு :

பாடல் எண் : 839. 1 குணம்

சேரும் சரக்குகள் : தண்ணீர்விட்டான்சாறு இஞ்சிச்சாறு நெய் (சம அளவு)

செய்முறை : இவைகளை ஒன்று கலந்து நெய் பதத்தில் எரித்து இறக்கிக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சத்தி குன்மம்

சரபிந்தாதி கிருதம்

வாய்விளங்கம் கோட்ட மதுரம்வேர்க் கொம்புத்தூ
ளாய்நெய்யில் தூவிக்கை யாந்தகரை - காய்சாறும்[1]
வார்கா செடையிரண்டு வனதுருக்கம் பூவிரண்டு
சீர்நற் பணவெடையாம் சேர். 840

சேர்த்துத்தான் காய்ச்சித் திறமாய் வடித்தநெய்போர்
ஏற்றும் சரபிந்தாதி யேகிருதம் - மாற்றி
நசியமிடப் பீனிசம்போம் நானிலத்தோர்க் கெல்லாம்
ஒசியுமிடை நல்லாய் உரை. 841

பாடவேறுபாடு :

பாடல் எண் : 840. 1 காய்சாறும்

சேரும் சரக்குகள் ; வாய்விளங்கம் கோட்டம் அதிமதுரம் சுக்கு
கையாந்தகரைச்சாறு (வகைக்கு 2 காசெடை)
கடுக்காய்ப்பூ - 2 பணவெடை
நெய் - 2 பணவெடை

செய்முறை : இவற்றில் கடைச் சரக்குகளைச் சூரணித்து கையாந்தகரைச்சாறு, நெய் இவற்றுடன் கலந்துக் காய்ச்சி பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். ஆறியபின் மூக்கில் துளிகளாய் விட வேண்டும்.

தீரும் நோய் : பீனிசங்கள்

கூழ்பாண்ட கிருதம்

பூசணிக்காய் நீர்நான்கு போந்தமரக் கால்நெய்பால்
பேசவகைக் கோர்குறுணி பின்கற்கம் - தூசுசுக்கு
சித்தரத்தை காகோளி சீரகா கோளிசந்து
முத்துச்சிறு தேக்கேல முத்தம். 842

முத்தமல்லால் இந்து முதிர்திப் பிலிமூலம்
வைத்தவிலாம் பிச்சைவேர் வன்மதுரம் - உத்தா
மணிவேர் திரிபலைகள் மால்பற் படகம்
தனிலவங்க[1] மவ்விலைகள் சேர். 843

சேர்பாலை வெட்டிவேர் தேர்ந்த விருகணங்கள்
வார்தண்ணீர் விட்டான் வருகிழங்கும் - ஓர்வகைத்தாம்

ஓர்பலமாம் பாலிலரைத்து ஊற்றியே நற்கரும்பு
நீர்படிநான் காம்விடுவாய் நெய்யில். 844

நெய்யை எரித்திறுத்து நீங்காமல் தானருந்தில்
மெய்யிளைப்புக் குன்மபித்தம் மென்சயங்கள் - வெய்யசுரம்
தீழ்ப்பா மருந்திடு சேரப்போம் இப்பெயர்கேள்
சூழ்ப்பாண்ட மாங்கிருதம் கூறு. 845

பாடவேறுபாடு:

பாடல் எண் : 843. 1 தணிலவங்கம், திண்ணிலவங்க

சேரும் சரக்குகள் :	பூசணிக்காய்ச்சாறு	- 4 மரக்கால்
	நெய்	- 1 குறுணி
	பால்	- 1 குறுணி

கற்கச் சரக்குகள் : சுக்கு சிற்றரத்தை காகோளி சீரகாகோளி சந்தனம் சிறுதேக்கு ஏலம் கோரைக்கிழங்கு இந்துப்பு திப்பிலிமூலம் விலாமிச்சம்வேர் அதிமதுரம் உத்தாமணிவேர் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் பற்பாடகம் இலவங்கப்பத்திரி வெட்பாலை வெட்டிவேர் அரிசித்திப்பிலி கண்டத்திப்பிலி தண்ணீர்விட்டான்கிழங்கு (வகைக்கு 1 பலம்)

செய்முறை : இச்சரக்குகளை பொடித்துப் பாலிலரைத்து மேற்படி நீர்ச் சரக்குகளுடன் சேர்த்து அத்துடன், கருப்பஞ் சாறு 4 படி சேர்த்து நெய்பதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : உடல் இளைப்பு, பித்தகுன்மம், சயம், சுரம், மருந்தீடு

சம்பகணமந்தகக் கிருதம்

சீதேவி செங்கழுநீர் சேரு முசுமுசுக்கை
மா[1]தச மூலம் வகையொன்றுக்குப் - போதப்
பிழிந்தரசம் குறுணி பின்பசு[2] நெய் பாலும்
இழிந்தினத்துக் கோர்குறுணி ஏந்து. 846

ஏந்தும் இளநீர் எழில்சதா வேரியின்னீர்
ஆங்கினத்துக் கோர்நான்காம் ஆனபடி - சேர்ந்தகற்கம்

வெட்டிவிலாம் பிச்சைவேர் வெண்ணிலுப்பைப் பூயேலம்[1]
மட்டிமத ரம்கோட்ட மாம். 847

ஆமலவங்க மவ்விலைகள் ஆர்ந்தபே ரீந்துகனி
தேமுந் திரிகனிகள் தேய்ந்தசந்து - தோமலகம்[1]
பப்படக மோர்வகைக்குப் பன்னு[2] பலமொன்றாம்
ஒப்பமுடன் பாலிலரைத்து ஊற்று.[3] 848

ஊற்றி எரித்தே உடன்வடிக்கும் நெய்யருந்தில்
ஏற்றிசய மத்திசுரம் ஏறுபித்தம் - சேர்த்தகரம்[1]
காலெரிவு மெய்யிளைத்தல் காசம் தலைச்சுற்று
மேலணுகும் வாய்வும்போம் விள். 849

விள்சத் துவமுண்டாம் வீரியமும் விருத்தியாம்
உள்பசிசந் தானமுந்தான்[1] நோக்கவுண்டாம் - உள்ளியநேர்[2]
சம்பகண மந்தகமாம் சத்கிரும் மாமிதுதன்
உம்பருக்கு முண்கலுமாம்[3] ஓது. 850

பாடவேறுபாடு :

பாடல் ண் : 846. 1 மாதே
2 பின்பசுவின்
847. 1 பூவேர்
848. 1 தோமகலும்
2 பன்மை
3 ஊற்றி
849. 1 சேர்த்தகை
850. 1 உள்பரிசந்தான் முத்தான்
2 எள்ளியபெயர்
3 உண்கவுமாம், முண்கலசமாம்

சேரும் சரக்குகள் : சிதேவிச் செங்கழுநீர் முசுமுசுக்கை கண்டங்கத்தரி சிறுவழுதுணை சிறுமல்லி பெருமல்லி நெருஞ்சி வில்வம் பெருங்குமிழ் தழுதாழை பாதிரி வாகை
(சாறு வகைக்கு 1 குறுணி)

நெய்	- 1 குறுணி
பால்	- 1 குறுணி
இளநீர்	- 4 படி
தண்ணீர்விட்டான் நீர்	- 4 படி

கற்கச் சரக்குகள் : வெட்டிவேர் விலாமிச்சைவேர் இலுப்பைப்பூ ஏலக்காய் அதிமதுரம் கோட்டம் இலவங்கம் இலவங்கப்பத்திரி பேரீச்சை முந்திரிகை சந்தனம் நெல்லிக்காய் பற்படகம் (வகைக்கு 1 பலம்)

செய்முறை : கற்கச் சரக்குகளைப் பாலில் அரைத்து மற்ற கலவைகளுடன் சேர்த்து எரித்து பதத்தில் வடி கட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், அத்திசுரம், அதிகரித்த பித்தம், கை கால் எரிவு, உடல் இளைத்தல், காசம், தலைச்சுற்றல், வாய்வு இவை நீங்கும், உடலுக்கு சத்து, வீரியம், சந்தான விருத்தி, பசி உண்டாகும்.

பஞ்சகவ்விய கிருதம்

கோமூத் திரம் தயிர்நெய் கூறியிடும் சாணியினீர்
தேமூர்பால்[1] நான்குபடி சேர்வகைக்குத் - தாமோதும்
கற்க மெனும் சதுரக் கள்ளியின்வேரிற் றோல்கள்[2]
தக்கசிறு நாகப்பூ தாங்கு. 851

தாங்கு திரிகடுகு தான்திப் பிலிமூலம்
ஓங்கும் திரிபலைகள் ஓர்வகைக்குப் - பாங்குபலம்
ஓரொன்று கூட்டி உவந்துவடித்த நெய்பேர்
சீரொன்று மாமுலையாய் செப்பு. 852

செப்புபஞ்ச கவ்வியங்கள் சேர்கிருதம் தானருந்தில்
வெப்புகா மாலை வெகுசோபை - உப்புபித்த
பாண்டு மகோதரங்கள் பன்னியிடும் உள்மாந்தம்[1]
தூண்டுமலக் கட்டும்போம் சொல். 853

பாட வேறுபாடு :

பாடல் எண் : 851. 1 தேமுளபால்சேரு
2 நற்றோல்கள்
853. 1 முன்வாதம்

சேரும் சரக்குகள் : கோமூத்திரம் தயிர் நெய் சாணநீர் பால் (வகைக்கு 4 படி)

கற்கச் சரக்குகள் : சதுரக்கள்ளிவேர்ப்பட்டை சிறுநாகப்பூ சுக்கு மிளகு திப்பிலி திப்பிலிமூலம் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்

செய்முறை : கற்கச் சரக்குகளைப் பாலில் கற்கமாக அரைத்துக் கொண்டு பஞ்சகவ்வியத்தில் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வெப்பு, காமாலை, சோபை, பித்தப் பாண்டு, மகோதரம், உள்மாந்தம், மலக்கட்டு.

கதலிகந்த கிருதம்

வாழைக் கிழங்குநீர் வன்பசுவின் நெய்பாலும்
ஆழைவகைக் கோர்குறுணி யாம்விடுத்து - வீழுகற்கம்
சந்து மரமஞ்சள் சார்திப் பிலிமூலம்
முந்திரிசா துர்சாத மொய்ம்பு. 854

மொய்ம்பு விளாவொடு முதிரும் அதிமதுரம்
வெம்பு[1] விலாம் பிச்சைவேர் வெட்டிவேர் - நம்பியிடும்
சீத விருட் சமஞ்சு சேர்துளிவா ழைக்கிழங்கும்[2]
ஓதுவகைக் கோர்பலமாம் ஓர். 855

ஓர்சூ ரணங்கலந்தே உற்றநாள் மூன்றெரித்து
நேர்மை யுடன்வடிக்கும் நெய்பெயர்கேள் - சீர்கதலி
கந்தக் கிருதமதைக் கையேந்தி உண்டிடுகில்
வந்தசுர மேகமும்போம் வாய்ந்து. 856

வாய்ந்த தலைசுற்று வன்மூத்திரக் கிரீச்சம்
காய்ந்தகரம் காலெரிவு காண்பித்தம் - தேய்ந்துடன்[1]
மெத்தப் பசியுண்டாம் மெய்யில் பலங்கொடுக்கும்
உத்தமாம் கண்டே உணர். 857

பாட வேறுபாடு :

பாடல் எண் : 855. 1 தூயவேம்பு
2 சேர்தூளி வாழைக்கிழங்கு
857. 1 தேய்ந்துடன் போம்

சேரும் சரக்குகள் : வாழைக்கிழங்கு நீர் பசுநெய் பால்

கற்கச் சரக்குகள் : சந்தனம் மரமஞ்சள் திப்பிலிமூலம் முந்திரிகை எலம்

இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ விளாவரிசி அதிமதுரம் விலாமிச்சைவேர் வெட்டி வேர் அகில் (வகைக்கு 1 பலம்)

செய்முறை : கடைச் சரக்குகளைச் சூரணித்து வாழைக் கிழங்கு நீர் விட்டு கற்கமாக அரைத்து மற்ற சரக்குகளுடன் கலந்து 3 நாள் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள் : சுரமேகம், தலைசுற்றல், மூத்திரக்கிரிச்சம், கை கால் எரிவு, அதிகரித்த பித்தம் இவை தீரும். பசி உண்டா கும். உடல் பலமுண்டாகும்.

மகாகலியாண கிருதம்

பூசணிக்காய் வெள்ளரிக்காய் பொற்பிளநீர் நற்கரும்போடு
ஆசைவா ழைக்க்கிழங்கு அகத்தியிலை[1] - கூசுபுளி
யாரையா வாரையிலை[2] யின்னீர்[3] பிழிந்துகொண்டு
வெரையூர் தண்ணீர் விட்டான். 858

விட்டான் முசுமுசுக்கை வேரமுத வள்ளிகந்த
நெட்டால் விழுதி நிலப்பனைத் - திட்டுமுத்தம்
நன்னாரி செங்கழுநீர் நற்கிழங்கு பேய்ப்புடல்
பொன்னாங்காணி முருங்கைப் பூ. 859

பூந்தா மரைவளையம் போந்த கருநெய்தல்
சேந்த இருவேலிச் சிறுகீரை - சீந்திக்கொடி
செப்பு நெருஞ்சி திகழ்விலாம் பிச்சைவேர்
துப்போ ரிலைவனசம் சொல்.[1] 860

சொல்கிசா யங்களுமுன் சொன்னநீருங் கலந்து
செல்பசுவின் நெய்யுடனே[1] சேர்த்தெரிக்கில் - வல்லகற்கம்
கோட்ட மதிமதுரம் கொத்தமல்லி கர்ச்சூரம்
காட்டினி லவங்கயிலை காண்.[2] 861

காண்கூகை நீறு கனிமுந்திரிப் பழங்கள்
பூண்[1]திப் பிலிலவங்கப் பூவேலம் - தோணும்
புற்பிசின்[2] சாதிக்காய் போற்றும் இருசீரா
முற்சூரணம் கலந்தே ஊற்று. 862

ஊற்றி வடித்தெடுக்கும் ஓர்மகா கலியாண
நற்கிருதப் பேரிதையே நக்கியிடச் - சற்சை

இருபதினான் காம்போ காதமேக மோடும்
தருசுழற்சி பித்தமும்போம் சாய்ந்து.[1] 863

பாடவேறுபாடு :

பாடல் எண் : 858. 1 அத்தியிலை
2 வாழையிலை
3 யாவாரையிலைகள் நீர்
860. 1 வன்சொல்
861. 1 நீருடனே
2 காடி லவங்கயிலை காண்
862. 1 பூண்டு
2 புறம்பிசின்
863. 1 சயந்து

சேரும் சரக்குகள் : பூசணிக்காய் சாறு வெள்ளரிக்காய் சாறு இளநீர் கருப்பஞ்சாறு வாழைக்கிழங்குநீர் அகத்தியிலைச் சாறு புளியாரைச்சாறு ஆவாரை இலைச்சாறு தண்ணீர் விட்டான் சாறு முசுமுசுக்கைச் சாறு சீந்தில்கிழங்குச்சாறு விழுதிச்சாறு நிலப் பனங் கிழங்குச்சாறு முத்தக்காசு நன்னாரி செங்கழு நீர்க்கிழங்கு பேய்ப்புடல் பொன்னாங்காணி முருங்கைப்பூ தாமரைவளையம் கருநெய்தல் வெட்டிவேர் சிறுகீரை சீந்தில்கொடி செப்பு நெருஞ்சில் விலாமிச்சவேர் துளசி இலை

செய்முறை : இவற்றில் சாறு எடுக்க வேண்டியவைகளைச் சாறெடுத்துக் கொண்டு குடிநீரிட வேண்டியவை களைக் குடிநீரிட்டுக்கொண்டு இரண்டையும் ஒன்று கலந்து வைக்க வேண்டும்.

கற்கச் சரக்குகள் : நெய் கோட்டம் அதிமதுரம் கொத்து மல்லி பேரீந்து இலவங்கப்பத்திரி கூகைநீறு முந்திரிப்பழம் திப்பிலி இலவங்கம் வேலம்பிசின் சாதிக்காய் சீரகம் கருஞ் சீரகம்

இதில் சரக்குகளின் அளவு குறிப்பிடப்படவில்லை.

கற்கம், குடிநீர், சாறு மற்றும் நெய் இவற்றை ஒன்று கலந்துக் காய்ச்சி நெய் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

311

திரும் நோய்கள் : 24 மேகம், பித்தம்.

பஞ்சகவ்விய கிருதம்

ஆவின்பால் முந்நாழி ஆனதயி ரைந்நாழி
கோவிநெய்கள் நானாழி கூர்சாணி - மேவிடுநீ
ஈர்நாழி நற்பாலை ஏற்றசீ தேவிவகைக்
கோர்நாழி சாறு முணர். **864**

உணரா[1]வல் லாரையினீ ரொத்தநா னாழி
இணர்செவ் விளநீரு மிரண்டாம் - குணநாழி
குன்றிமணி வேர்மதுரம் கோரோ சனைசந்து
கன்றவீரி[2] செங்கழுநீர் கந்தம். **865**

கந்தமுத லெல்லாம் காய்ச்சி வடித்திடுநெய்
அந்தபஞ்ச கவ்வி யங்[1]கிருதம் - வந்தபெயர்[2]
உண்ண உதரம் உடம்புகரம் கால்நெஞ்சில்
நண்ணெரிவு நெஞ்சுதடு நாக்கு. **866**

நாக்கில் வெடித்ததுவும் நஞ்சுபீச்சில் இட்டநஞ்சும்
வீக்கம் காமாலை விடபாகம் - தாக்குபித்த
மாறல்வெப்பும் அத்திசுரம் மாறா சயங்களும்போம்
தேறும் இதுகண்டீர் தெரிந்து. **867**

பாடவேறுபாடு :

பாடல் எண் : 864. 1 ஆனதயிர் நாழி
865. 1 உண்ணீர்
2 கண்டவிசரி, கண்டவாரி
866. 1 கவ்வியங்காமம்
2 இந்தபெயர்

சேரும் சரக்குகள் :

ஆவின் பால்	3 நாழி
தயிர்	5 நாழி
நெய்	4 நாழி
சாணநீர்	2 நாழி
கோமூத்திரம்	2 நாழி
பாலை சீதேவி செங்கழுநீர் (வகைக்கு 1 நாழி)	
வல்லாரைச்சாறு	- 4 நாழி
செவ்விளநீர்	- 2 நாழி

குன்றிவேர் அதிமதுரம் கோரோசனை சந்தனம்
செங்கழுநீர்க்கிழங்கு (வகைக்கு 1 பலம்)

செய்முறை : மேற்கண்ட சரக்குகளின் பஞ்சகவ்வியம், சாறுகள் இவற்றை ஒன்று கலந்து அத்துடன் கற்கச் சரக்குகளை அரைத்துக் கலந்துக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : வயிறு, உடல், கை, கால், நெஞ்சு இவற்றில் எரிச்சல், நெஞ்சு, உதடு, நாக்கு இவற்றில் வெடிப்பு, நெஞ்சு வீக்கம், காமாலை, விடபாகம், பித்தம், மாறல் சுரம் அத்திசுரம், சயம் இவை போகும்.

பஞ்சகவ்விய கிருதம் (வேறு)

நூல்விதியின் கூட்டு[1] நுவல்பஞ்ச கவ்வியத்தில்
மால்மதுர முந்திரிகை வாய்விளங்கம் - மேல்வசம்பு
ஏலம் மரமஞ்சள் ஏர்கடுகு ரோகணியாம்[2]
கோலத் திரிபலைகள் கூறு. 868

கூறியடு மஞ்சள் கொடிவேலி மஞ்சிட்டி
நாறுமுத்தம் வெட்பாலை நல்லரிசி - மீறியிடும்
வட்டத் திருப்பி வளராநன் னாரிவேர்
நெட்டிலையின் வாசையாம் நேர். 869

நேராய் ஒருகழஞ்சி நேசமுடன் வகைக்கு
சீராய் இடித்துவிட்டுத் தீயடுப்பில் - ஓரவெரித்
திறக்குமாங் கிருத மேருலகின் ஞானம்
பறிக்குபஞ்ச கவ்வியமாம் பார். 870

பாரும் இதையருந்தில் பாவம்போம்பிள்ளையுண்டாம்
சேரும் அழகுவரும் செல்வமுண்டாம் - சீருலகில்
நூறு வயதிருப்பார் நோய்செய் பூதக்கிரக
மேறுந்தே வக்கிருத மேகும். 871

பாட வேறுபாடு :

பாடல் எண் : 868. 1 கூடு
2 கடுகுரோகணிகள்

சேரும் சரக்குகள் : கோமூத்திரம் பகஞ்சாணநீர் பசுவின் பால் பசுவின்

தயிர், பசுவின் நெய் (வகைக்கு 1 படி)
அதிமதுரம் முந்திரிகை வாய்விளங்கம் வசம்பு
ஏலம் மரமஞ்சள் கடுகுரோகணி கடுக்காய்
நெல்லிக்காய் தான்றிக்காய் மஞ்சள் கொடிவேலி
மஞ்சிட்டி முத்தக்காசு வெட்பாலை வட்டத்
திருப்பி நன்னாரிவேர் ஆடாதோடை (வகைக்கு
1 கழஞ்சு)

செய்முறை : இவற்றில் கடைச் சரக்குகளை இடித்துச் சூரணித்து பஞ்சகவ்வியத்துடன் கலந்துக் காய்ச்சி வடித் தெடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள் : பாவம் போகும், பிள்ளை உண்டாகும், அழகு வரும், செல்வம் உண்டாகும். உலகில் 100 வயது வாழ்வர். பூதகிரக தோடம் நீங்கும்.

சட்பல கிருதம்

ஏறுபஞ்ச கோலம் எவச்சாரம் சூரணத்தில்
கூறுபால் ஒன்றுபடி கூட்டியும்நெய் - ஆறுபலம்
விட்டுப்பால் சுண்டுமட்டும் மெய்யெரித்துக் காய்ச்சியிறு
திட்டமுடன் கொள்ளவிசை தேர்.[1] 872

தேர்பாண்டு வன்னிமந்தம் சேர்காச மட்டகுன்மம்
ஏர்சூலை வாய்வெல்லாம் ஏகியிடும் - பேரிதுதான்
கேள்சட் பலகிருதம் கிள்ளைமொழி மானனையீர்
நாள்பொருந்த வேயருந்தாய் நாடி. 873

பாட வேறுபாடு :

பாடல் எண் : 872. 1 கொள்ளகவை தேர்.

சேரும் சரக்குகள் : சுக்கு திப்பிலி திப்பிலிமூலம் செவ்வியம் சித்திர மூலம் எவச்சாரம் (சம அளவு)
பொடித்துச் சூரணித்து
பால் - 1 படி
நெய் - 6 பலம்

சேர்த்துக் காய்ச்சிப் பால் கண்டியபின் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திரும் நோய்கள் : கவிசை, பாண்டு, மந்தம், காசம், எட்டு வித குன்மம் சூலை, வாய்வு இவை தீரும்.

குக்குலு கிருதம்

வேப்பந்தோல் சீந்தி விளங்குன்ற கண்டங்கத்தரி வேர்[1]
பேய்ப்புடோல் வாசைப் பரங்கிதன்னை - நேர்ப்பாய்
பதக்குநீர் தன்னிலிட்டுப் பாகமாய்க் காய்ச்சி
மிதக்கநான் காம்படியோ வேண்டி. 874

வேண்டிஇதில் கற்கம் விளாவரிசி இந்துப்பு
தீண்டுசத குப்பை செவியமஞ்சள் - மாண்டகொடி
வேலிளவச் சாரம் வெட்பாலை யின்னரிசி
கோலிவசம் போமாம் குறி. 875

குறிசிவதை வேர்சுக்கு கோட்டம் விடையம்
திரிகடுகு ரோகணிமஞ் சிட்டி - நறுஞ்சீராம்
பொன்முசுட்டை தேவதாரு போர்கெச திப்பிலியும்
மீன்விளங்கஞ் செம்பாலை வேர். 876

வேரந்த மாம்வகைக்கு வேண்டும் கழஞ்சொன்றாம்
ஏர்குக் குலுவுந்தா னீரொன்பான் - சேர்கழஞ்சு
நெய்படிகள் ஐயுழக்கில் நேகவரைத் தேவிட்டு
மெய்யனலில் காய்ச்சியே மேல். 877

மேல்வடிக்க நெய்யதன்பேர் விள்குக்குலுக் கிருதம்
மால்பெறவே உண்டிடுகில் வன்சிலந்தி - தோலெலும்பில்
ஓடியிடும் விப்புருதி ஓர்குட்டம் சீழ்சிரங்கு
நீடும்தழு தணைபோம் நீங்கி. 878

பாடவேறுபாடு :
பாடல் எண் : 874. 1 விளங்குகின்ற கத்தரிவேர்

சேரும் சரக்குகள் : வேப்பந்தோல் சீந்தில் கண்டங்கத்தரிவேர் பேய்ப் புடல் ஆடாதோடை பரங்கிப் பட்டை (சம அளவு)
தண்ணீர் 1 பதக்கு

சரக்குகளை ஒன்றிரண்டாய் இடித்துத் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து 1/4 பாகமாகக் குறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.

315

கற்கச் சரக்குகள் : விளாவரிசி இந்துப்பு சதகுப்பை செவியம் மஞ்சள் கொடிவேலி எவச்சாரம் வெட்பாலை அரிசி வசம்பு ஓமம் சிவதை சுக்கு கோட்டம் அதிவிடையம் சுக்கு மிளகு திப்பிலி கடுகுரோகணி மஞ்சிட்டி சீரகம் பொன்முசுட்டை தேவதாரு யானைத் திப்பிலி வாய்விளங்கம் செம்பாலை (வகைக்கு 1 கழஞ்சு)
குங்கிலியம் 18 கழஞ்சு
நெய் - 1 படி

செய்முறை : நெய்யுடன் கற்கத்தைச் சேர்த்தரைத்து மிகுதி நெய் யுடன் கலந்துக் காய்ச்சி வடித்துக்கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள் : விப்புருதி, குட்டம், சீழ்பிடித்த சிரங்கு இவை தீரும்.

அசுவகெந்தாதிக் கிருதம்

அசுவகெந்தி கந்தம்[1] ஆகுபல[2] முன னான்கோடு
ஓசியுமு பயமல்லி உள்வேர் - பசுமையுள்ள
நன்னாரி தண்ணீர்விட்டான் நற்கிழங்கு பேர்மட்டி
கொன்னார் நெருஞ்சிவேர் கூறு. 879

கூறுவகைக் கோர்பலங்கள் கோதில்நீர்[1] எண்காலில்
ஊறவைத்துக் காய்ச்சியே ஓர்பதக்காய் - மீறிடவே
ஏந்திப்பால் நெய்படிகள் ஓர்வகைக்கோ நான்கு விட்டுச்
சேர்ந்தகொத்த மல்லிசிறு தேக்கு. 880

தேக்கல்லால் கச்சோலம் செவ்வல்லி யின்கொடிகள்
நீக்கும் திரிகடுகு நேர்மாஞ்சி - தூக்கும்
விளங்கம்சா துர்சாதம் விள்சரள தேவதாரு
துளங்கடுகு ரோகணியாம் சொல். 881

சொல்லும் ரேணுகங்கள் சூரணங்கள் ஒக்கவிட்டு
நல்பத மாய்க்காய்ச்சும் நற்கிருத - மெல்லஉண்ணத்
தீதுநவச் சாரங்கள் தீரா விடப்பாண்டு
சீதசுரம் காசமும்போம் தீர்ந்து. 882

தீர்ந்ததல்லால் மேலிளைப்புத் தீங்குவிட மச்சுரங்கள்
சோர்ந்தாற்றச் செய்யும் சுவாசங்கள் - பேந்துவிடும்
இந்தக் கிருதப்பேர் அசுவகெந் தாதி
ஏந்துலகும்[1] சொல்லாய் எதிர்த்து. 883

பாட வேறுபாடு :

பாடல் எண் : *879. 1 கிருதம்*
2 அடுபல்
880. 1 கோதிலீர்
883. 1 ஏந்துவரும்

சேரும் சரக்குகள் : அசுவகந்தி பேராமல்லிவேர் சிற்றாமல்லி வேர் நன்னாரி தண்ணீர்விட்டான் பேராமுட்டி நெருஞ்சிவேர் (வகைக்கு 1 பலம்)
தண்ணீர் - 8 படி

வேர்களை ஒன்றிரண்டாக இடித்து நீருடன் கலந்து எரித்து பதக்காகக் குறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

பால், நெய் வகைக்கு 4 படி சேர்த்து அத்துடன்.

கற்கச் சரக்குகள் : கொத்துமல்லி சிறுதேக்கு கச்சோலம் செவ்வல்லி சுக்கு மிளகு திப்பிலி சடாமாஞ்சி வாய்விளங்கம் ஏலம் இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறு நாகப்பூ சரளதேவதாரு கடுகுரோகிணி (வகைக்கு 1 பலம்)

செய்முறை : இவற்றை இடித்துச் சூரணித்துப் பின் பால் விட்டுக் கற்கமாக அரைத்து ஏனைய குடிநீர், நெய், பால் இவற்றுடன் கலந்துக் காய்ச்சி, வடிகட்டி, வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : 9 வகை சுரங்கள், விடப்பாண்டு, சீதசுரம், காசம், மேலிளைப்பு, விடமசுரம், சுவாசம் இவை நீங்கும்.

திப்பிலியாதி கிருதம்

தூதுவளை கண்டம் துளசிவில்வ நன்னாரி
ஆதளைசெந் தொட்டி ஆருங்குன்றி[1] - ஓதுகுமிழ்
மட்டிரண்டு கானெருஞ்சி வாசையொன்றுக் கோர்பத்து
திட்டபல மெண்கால்நீர் சேர்த்து. 884

சேர்த்தெரித்து நற்குடிநீர் சீர்குறுணி யாய்வடித்து
பார்த்துநெய்கள் ஓர்படிவார் பால்மூன்று - ஏத்தபடி
விட்டுவெகு நாள்பழைய வெல்லம்நான் கைந்துபலம்
எட்டுடன்மேற் கற்கம் இயம்பு. 885

இயம்புகண்டம் சுக்குபல மோவகைக்கோ ரைந்து
முயங்குசிறு தேக்குப் பலமூன்று - வயமதுரம்
வல்லிசமொவ் வோர்மூன்று வன்பலங்க ளாமரத்தை
சொல்லும் பலமிரண்டாம் தூக்கு. 886

தூக்குநறுஞ் சீரகங்கள் சூழ்ந்த பலமிரண்டு[1]
தாக்கு கணமூலம் தருமாஞ்சி - நோக்குவகைக்கு
ஓரரை[2] மஞ்சிட்டி உள்கரிய சீரகமும்
பார்வகைக் கோர்[3] பலமாம் பண்பு. 887

பண்பு திரிபலைகள் பண்கற் கடசிங்கி
நண்பு நவச்சாரம் நற்கோட்டம் - மண்புகலு
முந்திரிபே ரிந்துகனி மோதுமுதிர் கொத்தமல்லி
இந்தவகைக் கோர்பல மாமே. 888

மேலுமிந்தச் சூரணத்தை மெல்லவிட்டுத் தான்கிளறி
கோலுபடி ஒன்றரைத்தேன் கூடவிட்டு - சால
வலியபத னாயிறக்கும் வன்கிருதப் பேர்திப்
பிலிகொள் சயம்போமே பேசு. 889

பாடவேறுபாடு :

பாடல் எண் : 884. 1 அருங்குண்ணி
887. 1 பலமீரிரண்டு
2 ஓரரையாம்
3 கால்

சேரும் சரக்குகள் : தூதுவளை கண்டங்கத்திரி துளசி வில்வம் நன்னாரி ஆதளை செந்தொட்டி குன்றிவேர் பெருங்குமிழ் - வேர் சிறுகுமிழ்வேர் நெருஞ்சில் ஆடாதோடை (வகைக்கு 10 பலம்)
நீர் - 8 பங்கு

சேர்த்து காய்ச்சி 1/4 பங்காகக் குடிநீரிட்டுக் கொள்ள வேண்டும்.

நெய்	- 1 படி
பால்	- 3 படி
பழையவெல்லம்	- 5 பலம்
திப்பிலி	- 5 பலம்

சுக்கு - 5 பலம்
சிறுதேக்கு
அதிமதுரம் மிளகு - 3 பலம்
அரத்தை சீரகம் - 2 பலம்
திப்பிலிமூலம் சடாமாஞ்சி - 1/2 பலம்
மஞ்சிட்டி கருஞ்சீரகம் - 1 பலம்
கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கற்கடக சிங்கி நவச்சாரம் கோட்டம் முந்திரிகை பேரீந்து கொத்துமல்லி (வகைக்கு 1 பலம்)

செய்முறை : இவைகளை இடித்துச் சூரணித்து மேற்கண்ட குடிநீர், நெய், பாலுடன் கலந்து அத்துடன் தேன் - 1 1/2 படி சேர்த்துக்கிளறி பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும்.

திரும் நோய் : சயம்.

திப்பிலியாதி கிருதம் (வேறு)

முள்ளி[1] குமிழ் வேர்சித்த முட்டிகண்டங் கத்திரிவேர்
தெள்ளுசிறு காஞ்சோரி சின்நெருஞ்சி - விள்ளு வில்வம்
தூதுவளை வாசை துளசியுவாய் பாதிரிவேர்
ஓதுமொவ்வோர் நான்குபலம் ஓர். 890

ஓர் தூணி யில்பதக்காம் உற்றநீர் ஊற்றியிட்டு
நேர்குறுணி யாய்க்காய்ச்சி நெய்பாலும் - நீர்தேங்காய்
பால்வகைக்கு மோர்குறுணி பாங்காய் விடுத்தரிய
மேல்கற்கம் திப்பிலியாம் விள். 891

விள்ளேலம் சிங்கி[1] விடைய மதிமதுரம்[2]
உள்செவ்விய மாஞ்சி உயரரத்தை - புள்ளும்
இலவங்கம் அவ்விலைகள் ஏந்தும் சிறுதேக்கு
நல்திப் பிலிமூலம் நாடு. 892

நாடுமிரு சீரகங்கள் நல்ல திரிகடுகு
வாடியிடும் கத்தூரியின் வன்மஞ்சள் - நீடு
திரிபலையொவ் வோர்வகைக்குச் சேர்ந்த பலமொன்று
தருபொடியும் பாளிதம்தேன் தான். 893

தானோர் படிவகைக்குச் சார்ந்ததெல்லா மிட்டிடுநெய்
வான்திப் பிலியாதி வன்கிருதம் - பான்மொழியீர்

உண்டால் சயமருசி ஓடியிடும்[1] அத்திசுரம்
கண்டால் கடல்புக்கும்[1] காண். 894

பாடவேறுபாடு :
பாடல் எண் : 890. 1 முள்ளில்
892. 1 மருசி
2 மதுரம்
894. 1 கடல்புகுமே

சேரும் சரக்குகள் : முள்ளி குமிழ்வேர் சிற்றாமுட்டி கண்டங்கத்தரி சிறுகாஞ்சோரி சிறு நெருஞ்சில் வில்வம் தூதுவளை ஆடா தோடை துளசி பாதிரிவேர் (வகைக்கு 4 பலம்)
நீர் - 1 தூணி

சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி 1 குறுணியாக வற்ற வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

நெய் பால் தேங்காய்பால்
(வகைக்கு 1 தூணி

கற்கச் சரக்குகள் : திப்பிலி ஏலரிசி கற்கடகசிங்கி அதி விடையம் அதி மதுரம் செவியம் சடாமாஞ்சி பேரரத்தை இலவங்கம் இலவங்கப்பத்திரி சிறுதேக்கு திப்பிலி மூலம் சீரகம் கருஞ்சீரகம் சுக்கு மிளகு திப்பிலி கத்தூரி மஞ்சள் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்
(வகைக்கு 1 பலம்)
சர்க்கரை - 1 படி
தேன் - 1 படி

செய்முறை : கற்கச் சரக்குகளைப் பால் விட்டரைத்துக் குடிநீர், நெய், தேன், பால், சர்க்கரை இவற்றுடன் கலந்து எரித்து வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : சயம், ருசியின்மை, என்பைப் பற்றிய சுரம் இவை தீரும்.

கதகாதி கிருதம்

விந்தையுள்ள தேத்தான் விரைசக் கரைவகைக்கு
தொந்தபலம் ஓரிண்டாம் தூதுவளை - தந்தகனி

எண்பலங்கள் ஆவின்பால் ஓர்பசுவின் நெய்வகைக்கே
ஒண்படிகள் ஒரிண்டாம் ஓது. 895

ஓதியிடும் சாதிக்காய் ஊன்திப் பிலிமிளகு
பேதவிரு சீரகங்கள் பேர்வகைக்கு - நீதபலம்
ஓரரைமுன் வித்துகனி ஒக்கவே பாலிலரைத்து
ஏரவிடுத் தெல்லாம் எரித்து. 896

எரித்துப் பத மாய்கற்கத் தோடிறக்கி ஏந்தி
அருந்திஉணக் காசசய மத்தி - சுரத்துடன்போம்
நெய்பேர்கத காதியாம் நேரமுடன் கிருதம்
வைவேல் விழியணங்கே வாழ்த்து. 897

சேரும் சரக்குகள் : தேற்றான்விதை சர்க்கரை
(வகைக்கு 2 பலம்)
தூதுவளையம்பழம் - 8 பலம்
பால் - 1/2 படி
நெய் - 2 படி
சாதிக்காய் திப்பிலி மிளகு சீரகம் கருஞ்சீரகம்
(வகைக்கு 1/2 பலம்)

செய்முறை : இவற்றைப் பாலில் அரைத்து பால், நெய்யுடன் கலந்து காய்ச்சி, கற்கத்துடன் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : காசம், சயம், அத்திசுரம் இவை குணமாகும்.

ஆத்திராதி கிருதம்

இஞ்சி முசுமுசுக்கை இன்னீர்வகைக் கொன்றுபடி
துஞ்சும் அரத்தை சுயகோத - மிஞ்சியபால்
நெய்யுமொவ்வோ ரொன்றாம் நீத்த தொகைபடிகள்
உய்யும் அதிமதுரம் ஓது. 898

ஓதுகணம் ஒவ்வொர் ஒன்றுபலம் சீரகங்கள்
தீதில் பலமிரண்டாம் சேர்பொடிகள் - ஏதமில்லா
இத்தனையும் நூல்விதியே[1] யடுப்பில் வைத்தெரித்தே
உத்தபதம் கண்டுட[2] யொத்து.[3] 899

ஒத்து வடிக்கும் உயர்கிருதம் உண்கவிக்கல்
அத்தி இருத்தரோ கங்களுடன் - சத்தியும்போம்

சேந்தநெய் பேராத் திராதி கிருதமென்பார்
ஏந்துமுலை மானே இயம்பு. 900

பாடவேறுபாடு :

பாடல் எண் : 899. 1 வழியே
2 வடி
3 ஓர்ந்து

சேரும் சரக்குகள் : இஞ்சிச்சாறு முசுமுசுக்கைச்சாறு
(வகைக்கு 1 படி)
அரத்தைக் குடிநீர் பால் நெய்
(வகைக்கு 1 படி)
அதிமதுரம் திப்பிலி (வகைக்கு 1 பலம்)
சீரகம் கருஞ்சீரகம் (வகைக்கு 2 பலம்)

செய்முறை : கறக்ச் சரக்குகளைச் சூரணித்து மற்றவைகளுடன் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : விக்கல், என்பு, இருதயத்தை பற்றிய நோய்கள், வாந்தி இவை தீரும்.

இலட்சுமி கிருதம்

நறுந்தாளி நல்லிலையை நைய வரைத்தே
சிறுதேங்காய் அவ்வளவு[1] சேர்த்தே - பெருமதனில்
பாலுநெய்யும் ஒவ்வோர் படிவிடுத்தே லந்தொடிகள்
சாலவொன்றாம் இத்தனையும் தான். 901

தான்காய்ச்சி யேயிறுக்கும் தன்நெய்யை உண்டிடுகில்
மேன்சுரங்கள் அத்திசுரம் விட்டேகும் - வான்கிருதப்
பேரிலட் சுமிக்கிருதம் பேராத பித்தமும்போம்
ஏருலகில் சொல்லாய் இசைந்து. 902

பாட வேறுபாடு :

பாடல் எண் : 901. 1 அளவு

சேரும் சரக்குகள் :	தாளியிலை விழுது	- 1 தேங்காயளவு
	பால்	- 1 படி
	நெய்	- 1 படி
	ஏலத்தூள்	- 1 பலம்

செய்முறை : இவற்றை ஒன்று கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள் : சுரங்கள், அத்திசுரம், பித்தம் இவை நீங்கும்.

நயனசஞ்சீவி கிருதம்

உற்றபசும் பாலநெய்யும் ஒவ்வோர் படியொன்று
நற்று மதிமதுரம் நற்கோட்டம் - வெற்றேலம்
செண்பகப்பூ வெட்டிவேர் சேர்ந்தபொன்னாங் காணிவேர்
வெண்விலாம் பிச்சைவேர் விள்ளு 903

விள்ளும் கிராம்பு சிறுகீரை வேர்வகைக்காம்
உள்ளநிடகம் ஓர்நான்கும் உசிதமாய் - மெள்ளப்
பதமாய் வடித்திருக்கும் பண்கிருதப் பேர்கேள்
இதநயன சஞ்சீவி யென்னும். 904

என்னுமது முழுகவே கண்ணினுள் வருத்து
மன்னு படல மறைகாசம் - பின்னையும்தான்
தொண்ணூற்றா றுள்ளநோய் தோற்றுவிடும் கண்விளங்கும்
எண்ணூற்றாண் டாம்வயது மேற்று. 905

சேரும் சரக்குகள் : பசும்பால் - 1 படி
நெய் - 1 படி
அதிமதுரம் கோட்டம் ஏலரிசி செண்பகப்பூ வெட்டிவேர் பொன்னாங்காணி வேர் விலாமிச்சை வேர் கிராம்பு சிறுகீரைவேர் (வகைக்கு 1 நிடகம்)

செய்முறை : சரக்குகளைப்பொடித்து பால், நெய்யுடன் கலந்து எரித்து வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் தலைமுழுகப் பயன்படுத்த வேண்டும்.

தீரும் நோய்கள் : படலம், காசம், 96 கண்ணோய்கள் இவை நீங்கும். வயது 100 வரை வாழ்வர்.

சங்கத் திராவகம்

போத பொட்டிலுப்பும் பிறழ்சீனக் காரமுந்தான்
ஏதமுற நேர்க்கூட்டி[1] யே இதற்கே - ஓதாய்
சரியன்ன பேதியவட் சாரமயில் துத்தம்
தருசத்திச் சாரமாந் தான். 906

தான்வளைய லுப்புச் சயித்தவம் கல்லுப்பு
மேன்கழியி லுப்பும் விதங்கூட்டித் - தேன்மருவும்
கோதாய் பொடி செய் துலர்த்தியே குப்பியிட்டு
வாதாக வாயடைத்து வை.[1] 907

வைத்துத்தான் ஞாளிகா எந்திரமாய் மன்னியிட
மெத்தத்தான் சீலைமண்ணை மேல்சுற்றி[1] - பத்திரமாய்
வாலுகா எந்திரத்தில் வாகுபட வமைத்து
மேலுகா டாக்கினியாம் விள். 908

விள்ள வெரிக்க விழுஞ்சலத்தைப் பீங்கானில்
மெல்ல எடுத்து .விரைந்தருந்தக் - கள்ளமாய்
அங்கத்தில் வந்தகுன்ம மன்றகலும் இப்பெயர்கேள்
சங்கத் திராவகமாம் சாற்று. 909

பாடவேறுபாடு :

பாடல் எண் : 906. 1 நீர்க்கட்டி
907. 1 வாயடைத்தே வைத்து
908. 1 மேல் பூசி

சேரும் சரக்குகள் : பொட்டிலுப்பு படிகாரம் எவட்சாரம் மயில்துத்தம் சத்திச்சாரம் வளையலுப்பு இந்துப்பு கல்லுப்பு கரியுப்பு (சரி எடை)

செய்முறை : இவற்றை பொடி செய்து உலர்த்தி குப்பியிலிட்டு வாய்மூடி சீலைமண் செய்துலர்த்தி வாலுகாயந்திரத்தில் வைத்து காடாக்கினியாய் எரித்து அதிலிருந்து வடியும் நீரை பீங்கானில் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : குன்மம்

லோக திராவகம்

ஒத்திருக்கும் சங்கத் திராவகத்துக் குள்ளவிழ்தம்
வைத்துப் பொடித்து வருமதுக்குப் - பத்திலொன்று
பண்பரங்கிப் பாடாணம் பாங்காகச் சேர்த்திட்டுப்
பொன்னாளி எந்திரத்தில்[1] போட்டு. 910

போட்டே எரிக்கப் புகைந்துவிழும்[1] நீர்தனில்
ஒட்டு நவலோகம் ஒளிர்பொடியாம் - கூட்டுபொடி
பாகரச யோகங் களுக்காம்[2] பண்பெயரும்
லோகத் திராவகமாம் ஓது. 911

பாடவேறுபாடு :

பாடல் எண் : 910. 1 ஞாளி எந்திரத்தில்
911. 1 புகழ்ந்து விழும்
2 யோகங்களுக்காம்.

சேரும் சரக்குகள் : சங்கதிராவகத்தில் சேரும் சரக்குகள் (சரி பங்கு)
பரங்கிப்பாடாணம் - 1/10 பங்கு

செய்முறை : சேர்த்திடித்து வாலுகாயந்திரத்தில் வைத்தெரிக்க புகைந்து விழும் நீரைப் பீங்கானில் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

பயன் : இத்திராவகம் நலலோகங்களையும் பொடியாக்கும். இரசயோகங்களுக்கும் உதவும்.

தோட சுத்தி

பார்ரசத்தைச் சுத்திதன்னைப் பண்ணத்தா னுறுபலம்
நேரதிற் பாதி நிடகந்தான் - ஓர்பத்து
வைத்தே அகோரத்தை மந்திரித்துப் பூசைபண்ணிச்
சுத்திதனைச் செய்யத் தொடங்கு. 912

தொடங்கிக் குழிகல்லில் சூதத்தை விட்டே
இடங்குமஞ்சள் தூளிட் டிருகன்னல் - அடங்கரைத்து
மேலொட் டரைக்கலந்து வெய்யலிலே வைத்தபின்பு
சீலைவடிச் செய்யத் தெரிந்து. 913

தெரிந்தாரஞ் செம்புளிச்சை செம்முருக்கம் பட்டை
பரிந்த பலாசம்பட்டைப் பாகல் - விரிந்தயிலை
நாகவல்லித்துத்தூரம் நன்னிலத்தின்[1] மேற்பனையும்
வேகக் கொடிவேலி வேர். 914

வேராங் கையாந்தகரை வேலிப் பருத்தியிலை
சாரணையின் மேலிலையின் தன்சாறு மோரொன்று

ஆதரவாய்ச் சாற்றா லரைத்தா லிருகடிகை
பாதரசம் சுத்தியாம் பார். 915

பாடவேறுபாடு :
பாடல் எண் : 914. தன்னிலத்தின்

சேரும் சரக்குகள் : பாதரசம் - 100 பலம்

இதனைக் குழிக்கல்லில் இட்டு மஞ்சள் தூள் சேர்த்து கரும்பினால் ஒட்ட அரைத்து வெயிலில் காயவைத்துத் துணியிலிட்டுச் சலித்துக்கொள்ள வேண்டும்.

செம்புளிச்சை செம்முருக்கம்பட்டை பலாசுப்
பட்டை பாகல்இலை வெற்றிலை ஊமத்தை
இலை பனைவேர் கொடிவேலி வேர் கையாந்த
கரை இலை வேலிப் பருத்தி இலை சாரணை
இலை (சாறு)

இவற்றால் பாதரசத்தை அரைக்க 2 க:டிகையில் பாதரசம் சுத்தியாகும்.

அரிதார சுத்தி

மடலரிதா ரஞ்சிலையும் வன்சீலை யிற்கட்டி[1]
விடவூச லாநீர்[2]மே லாக்க[3] - கிடையாதேல்
காடிதனி லாத கமலவன்னி[4] நாள்மூன்று
தேடிஎரிக் கச்சுத்தி செய். 916

பாடவேறுபாடு :
பாடல் எண் : 916. 1 கூட்டி
2 நீரிற்
3 மேலாக்கிக்
4 கமலவல்லி

அரிதாரத்தை சீலையில் கட்டிப் பசுவின் நீரில் துலாயந்திரமாக எரித்து எடுக்கவும். காடியில் மூன்று நாள் எரித்தெடுக்கவும் சுத்தியாகும்.

வெள்ளைப்பாடாண சுத்தி

சொன்னவெள்ளைப் பாடாணந் தூளாய்ப் பொடித்தெடுத்துப்
பின்னிரட்டைச் சீலையில் பெய்துகட்டி - தன்னொருநாள்

சுண்ணாம்பு நீர்கரைத் துத்துலையாய்த் தூக்கியெரி
பண்ணாகச் சுத்திய தாம். 917

வெள்ளைப் பாடாணத்தைத் தூளாகப் பொடி செய்து சீலைத் துணியை இரண்டாகப் போட்டு அதிலிட்டுக் கட்டி சுண்ணாம்பு நீரில் துலாயந்திரமாக ஒருநாள் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

கவுரி சுத்தி

சீராம் கவுரிதனைத் செம்பீரச் சாற்றிலரைத்
தாரா யுருட்டி ஒருபலமு[1] - நீரெரியிற்[2]
கட்டியிரு சீலைதனில் கற்சுண்ண நீருசல
ஒட்டியிரு சாம முகந்து. 918

பாடவேறுபாடு :
பாடல் எண் : 918. 1 யிருபலமு
2 நேரிருப்பு

1 பலம் கவுரியை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து உருட்டி இரட்டைச் சீலையில் கிழியாகக் கட்டி கற்சுண்ண நீரில் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

தொட்டிப்பாடாணச் சுத்தி

புத்தோட்டுத் தொட்டிப் பொருந்தெருமை நாத்தொட்டி
வைத்தோட்டிக் கல்வத்தில் வன்சீலை - சுத்தொட்டிக்
கோசலத்தில் மூன்றுநாள் கொண்டோலை யாய்யெரிக்க
மாசலத்துச் சுத்தியதா மால். 919

புத்தோட்டுத்தொட்டி, எருமைநாத்தொட்டி இவற்றைத் தனித்தனியாகக் கல்வத்தில் போட்டு அரைத்து சீலையில் கட்டி பசுநீரில் துலாயந்திரமாகக் கட்டி மூன்று நாள் எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

கந்தக சுத்தி

நெல்லிக்காய் கெந்தகத்தை நேரிரும்பு பாத்திரத்தில்
செல்லா மணக்கெண்ணெய் தொல்[1]விட்டு நல்லதோர்
தீபமென வேளரிக்கச் செப்பியகந் தகசுத்தி
ஆவதெனச் சொன்னார் அறிந்து. 920

பாடவேறுபாடு :
பாடல் எண் : 920. 1 நெல், தேல்.

நெல்லிக்காய் கந்தகத்தை இரும்புப் பாத்திரத்தில் போட்டு அதில் விளக்கெண்ணெய் விட்டுத் தீபம் போல் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

துருசு சுத்தி

மாயூரத் துத்தத்தை வன்பசுவின் தன்தயிரால்[1]
ஓயா தரைத்தடையா யோட்டில்லை - தூயதா
வொன்றே புடமிட்டால் ஒண்ணுதவே அயத்துருசு
நன்றாகச் சுத்தியாம் நாடு. 921

பாட வேறுபாடு :

பாடல் எண் : 921. 1 வன்பசுவின் தயிரால்.

மயில் துத்தத்தைப் பசுவின் தயிரில் அரைத்து அடையாகத் தட்டி ஓட்டில் வைத்து மூடி ஒரு புடமிட்டு எடுக்கச் சுத்தியாகும்.

பால்துத்த சுத்தி

பானிறத்துத் துத்தசுத்தி பண்ணும் வகைகேளீர்
ஊனமில்லாக் கற்பூரம் ஒண்பொடியாய்[1] - தானெடுத்துச்
சீலைதனில் கட்டிச் சீலைசுண்ண நீர்குடத்திட்
டோலைஎரிக் சுத்தூய தாம். 922

பாடவேறுபாடு :

பாடல் எண் : 922. 1 ஏற்படியாய்.

பால்துத்தத்தைப் பொடி செய்து கற்பூரத்திற்குள் வைத்து அதனைச் சீலையில் கட்டி சுண்ணநீரில் துலாயந்திரமாக எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

கற்பூர சுத்தி

ஆனதோர் கற்பூரம் ஆனகத்தின் மூத்திரத்தில்
ஈனமிலாச் சாம மிரண்டாக்கும் - வான்கழுதை
கேளாமல்[1] டோலைஎரித் தாற பழுதின்றித்
தாளாது[2] சுத்தியாம் தான். 923

பாட வேறுபாடு :

பாடல் எண் : 923. 1 கேளாமற்
2 தாபூாது.

கற்பூரத்தை யானைநீரில் இரண்டு சாமம், துலாயந்திரமாக எரித்தெடுக்க சுத்தியாகும்.

நிமிளைகள் சுத்தி

கஞ்சநிறம் பொன்னிறங் கான்ற நிமிளைசுத்தி
துஞ்சத் துயில்புனைந்து டோலையாய் - மிஞ்சவெரி
காடிக் கதலித்துர்க் கந்தநீர் செம்மறிநீர்
நாடியா மோரொன்றின் நான்கு. 924

கருநிமிளை, பொன்நிமிளை இவற்றைச் சுத்தி செய்ய அதனைச் சீலையில் கட்டித் துலாயந்திரமாகக் காடி, வாழைக் கட்டைநீர், ஆட்டின் மூத்திரம் இவற்றில் ஒவ்வொரு நாழிகை எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

நிமிளை சுத்தி (வேறு)

ஏமநிறக் கஞ்ச மிசைமாட்சிக சுத்தி
தேமோ டரைத்துருட்டிச் சீலைகட்டித் - தாமெரிக்க
கொள்ளுநீர்க் காடியொடு கோசலத்தில் டோலையாய்த்
தெளிதனியே[1] நால்சாமஞ் செய். 925

பாடவேறுபாடு :

பாடல் எண் : 925. 1 தெளத்தேள்.

பொன்நிமிளை அல்லது கருநிமிளையை அரைத்து உருட்டிச் சீலையில் கட்டிக்கொள்ளுக் குடிநீர், காடி, பசுநீர், ஆகியவற்றில் துலாயந்திரமாக நான்கு சாமம் எரித்தெடுக்க வேண்டும்.

வெண்கார சுத்தி

வெண்காரந் தான்பொரித்து மேற்பிச்சஞ் சாற்றால்
தண்காடி யாதல் தனித்தரைத்தல் - பண்[1] சுத்தி
கற்பூரத்தின்[2] தூளைக் கரண்டியிலிட் டா[3] நெய்விட்
டொப்பவெழு பொங்க வெரித்து.[4] 926

பாடவேறுபாடு :
பாடல் எண் : 926. 1 மண்
2 கற்பாதத்தின்
3 கரண்டியிலிட்டுபின்
4 பொங்கே ழெரித்து

வெண்காரத்தை பொரித்து எலுமிச்சம் பழச்சாறு, காடி இவற்றில் அரைத்து எடுக்கச் சுத்தியாகும். கற்பூரத்தை நெய்யில் விட்டு பொங்க எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

சங்கு பாடாண சுத்தி

சங்குப்பா டாணத்தைச் சாமமொன்று தேனிலெரித்
துங்க முறச்சுத்தி கெந்தகத்தைப் - பங்கமற
ஆட்டுப்பால் விட்டு அதனிடையே வேகவைக்க
வாட்டமறச் சுத்தியதாம் வந்து. 927

சங்கு பாடாணத்தை ஒரு சாமம் தேனில் எரித்தெடுக்கச் சுத்தியாகும். கந்தகத்தை ஆட்டுப்பாலில் வேக வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

நேர்வாள சுத்தி

நேர்வாளச் சுத்தி நெறித்தே இலைபோக்கி
வேராவின் சாணத்தில் வெந்தபின்பு - ஒரொன்றாய்[1]
சீரகத்திற் றொங்கும்மா[2] கோசலத்தின்
வேகத்தா நெய்யில் வெழுப்பு. 928

பாடவேறுபாடு :

பாடல் எண் : 928. 1 ஒரொன்று
2 சாகத்தின் சீர்தீரதங் குமரி, நாகத்தின் சீரத்தி.

நேர்வாள விதையை உடைத்து அதன் நடுவில் இருக்கும் இலையை எடுத்துவிட்டு சாணப்பால் மற்றும் பசுவின் நீரில் வேகவைத்தெடுத்துப் பின் நெய்யில் வெதுப்பி எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

குக்கில் சுத்தி

மைசாட்சி சுத்தி வளர்நிம்பத் தோல்சீந்தில்
செய்யார் புடோலுந் திரிபலையும் - துய்யமுத்தம்
வெந்த கசாயத்தின் மேலூச லெந்திரத்தின்
நந்துமொரு நாளெரிக்கத் தான். 929

மைசாட்சி குங்கிலியத்தை வேப்பம்பட்டை, சீந்தில், பேய்ப் புடல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முத்தக்காசு இவற்றாலான கடிநீரில் துலாயந்திரமாக ஒரு நாள் எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

உப்புகள் சுத்தி

இந்துப்புக் காடி இசையத் தெளித்து வெய்யில்
அந்தத்தான் சுத்தியதாம் அல்லாது - நந்தாமல்
ஆட்டுநீர் விட்டே ஆடுகின்றார் சுத்தியதாய்
தேட்டமுற நல்லதுவாம் செப்பு. 930

சிவந்துப்பை யானீரில் செம்பீரஞ் சாற்றில்
உவந்துவெய்யில் வைக்கவே ஒள்ளியதாம் - பவந்தவிர
அட்டிலுப்பும் பொட்டிலுப்பு மானீரா மோராம்
இட்டுவெய்யில் வைக்க இசைந்து. 931

கல்லுப்பை மூன்றோட்டிற் காலவுடனே வறுக்க
நல்ல புளியிலையின் தன்சாற்றில் - சொல்லும்
வளையலுப்பைபாவனையால் வையாத பத்தின்பத்து
துளையயிவை சுத்தியாம் சொல்.[1] 932

தன்காடிக் கோனீராஞ் சத்திஎவட் சாரத்தை
நண்பா யரைக்க நலமாகும்[1] - பண்பான
தண்டுலத்தைத் தான்கழுவுந் தண்ணீரைத் தான்போக்கி[2]
கண்டுஎவட் சாரசுத்தி காண். 933

பாடவேறுபாடு :

பாடல் எண் : 932. 1 பலபலவென்று சுத்தியாம் பார்.
933. 1 நீலமாகும், நல்கும்
2 தண்ணீரைத் துணக்கக்

இந்துப்பை காடி தெளித்து வெய்யில் வைத்தெடுக்கச் சுத்தியாகும்.

1. மேலும் ஆட்டுநீர் விட்டு அரைத்துக் காயவைத்தெடுக்கச் சுத்தியாகும்.
2. இந்துப்பை பசுநீரிலும், எலுமிச்சம் பழச்சாற்றிலும் சேர்த்து வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.
3. அட்டிலுப்பு, பொட்டிலுப்பு இவை பசுநீர். மோர் இவற்றை விட்டு வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.
4. கல்லுப்பை ஒட்டிலிட்டு வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.
5. வளையலுப்பு புளியிலைச் சாற்றில் இட்டு வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.
6. சத்திச்சாரம், எவச்சாரம் இவை காடி, பசுநீரில் அரைத்து எடுக்கச் சுத்தியாகும்.

7. எவச்சாரத்தை அரிசி கழுவிய நீரிலிட்டு வெயிலில் வைக்கச் சுத்தி யாகும்.

கற்பூரசிலாசத்து, வெண்போளம், கரியபோளம் சுத்தி

சேந்த கற்பூர சிலாசத்தைத் தாமரையின்
வாய்ந்தவளை யம்நெய்தல் வன்கிழங்கு - போந்தரசம்[1]
விட்டரைக்கச் சுத்தியாம் வெண்போளங் கார்போள
மட்டுகளில் தேய்த்துவெய்யில் வை. 934

பாடவேறுபாடு :

பாடல் எண் : 934. 1 போந்ததாம்.

கற்பூர சிலாசத்தைத் தாமரை வளையம், நெய்தல் கிழங்கு இவற்றின் சாறு விட்டரைத்தெடுக்கச் சுத்தியாகும். கரிய போளம், வெண்போளத்தை மணலில் தேய்த்து, வெயிலில் காய வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

பெருங்காயம், திப்பிலி சுத்தி

வனசவிலைச் சாறுவிட்டு வன்பெருங் காயத்தை
நனையவொரு சாமமரை நன்றாம் - வினையபத்தின்[1]
திப்பிலிக்குக் காடியதாம் செம்மறியின் மூத்திரமாம்
தப்பிலாப் பாவனைசெய் தால். 935

பாடவேறுபாடு :

பாடல் எண் : 935. 1 வினையியற்றின்

தாமரை இலைச் சாற்றில் ஒரு சாமம் பெருங்காயத்தை அரைத்து எடுக்கச் சுத்தியாகும்.

திப்பிலியை காடி, செம்மறியாட்டு நீரில் சேர்த்து வெயிலில் காயவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

ஊமத்தைவிதை எட்டிவிதை சுத்தி

துத்தூர்[1] வித்துச் சுசியாம் எலுமிச்ச
மத்தூரில்[2] சாற்றி லொருசாமம் - கைத்தளட்டி
தந்தவிதை யைத்தேத்தான் தன்மூலிச்[3] சாற்றிட்டு
வெந்திறக்கச்[4] சுத்திய தாம். 936

திப்பிலி மிளகு சுத்தி

கொடிவேலி வேர்ச்சாற்றில் சூர்திப்பிலி யையூற
வடிவாநன்[1] மாமிளகின் வார்மோரைப் - படியவே[2]
ஊறவிட்டுத் தானுலர்த்தி ஒட்டிலிள வறுப்பாய்[3]
தேறவறுக்கச்[4] சுத்தி செப்பு. 937

பாடவேறுபாடு :

பாடல் எண் : *936.* *1* துத்தூரம்
2 மோரில்
3 தான்மளச்
937. *1* வடிவாக உணர்த்திநன்
2 படியே
3 இளவரையாய்
4 தேறவறுத்து

ஊமத்தை விதையை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு சாமம் வேக வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

எட்டிவிதையை, தேத்தான் வேர்ச்சாற்றில் வேக வைத்தெடுக்கச் சுத்தியாகும்.

கொடிவேலிவேர்ச் சாற்றில் திப்பிலியை ஊறவைத்தெடுத்து உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

மிளகை மோரில் ஊற வைத்து உலர்த்தி ஓட்டில் வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

ஓமசுத்தி சீரகசுத்தி

ஓமத்தைச் சுண்ணநீர் ஊறவைத்தே யோர்சாமம்
தாமதமாய்ப் பின்னுரைக்க[1] தான்சுசியாம் - சாமமொன்று
சீரா மிரண்டுஞ் சிறந்த தாபத்தி லிட்டு[2]
வாரா யடுப்புமேல் வறு.[3] 938

பாட வேறுபாடு :

பாடல் எண் : *938.* *1.* பின்னுணக்கத்
2. சிறந் தாமத பதத்திலிட
3. கடுப்பேல வறு.

ஓமத்தைச் சுண்ணாம்பு நீரில் ஒரு சாமம் ஊறவைத் தெடுக்கச் சுத்தியாகும்.

சீரகம், கருஞ்சீரகம் இவற்றை வெயிலில் வைத்து அடுப்பிலிட்டு வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

அயச் செந்தூரம்

கரும்பொன் னரப்பொடியைக் காரெண் ணெய்விட்டு
விரும்பியெரித் தேகழுவி மீதே - துரும்பற்றுப்
பார்க்கரு வேலம் பட்டைச்சார் விட்டரைத்து
ஆறவெய்யிற் காயசுத்தி யாம். 939

ஆன அரப்பொடியை யாமலகக் காய்ச்சாறு[1]
நான முருங்கை நற்றோல்[2] - ஊனமிலாச்
சொல்லும் புளியிலைநீர் சொற்சுரபி நற்சலமும்
வல்லமையாலே[3] வேக வை. 940

வைத்துத் தனித்தனியே வந்தநீர் தன்னில்
அரைத்தே யடையா யுலர்த்தியெடு[1] - இத்தை
இடமா மகலிட் டிருசீலை மண்செய்
புடமோ கெசநீளம்போடு. 941

போடத்தான் பற்பமாம் போந்த திரிபலையின்
கூடக் கிடாயத்தின் கோதறவே - நாடவரை
ஒன்றவிரு பத்திரண்டாம் ஒண்புடமும் வெவ்வேறாய்
குன்றவரைத் தேபுடத்தைக் கொள். 942

கொள்ளாலம் பால்தனிற் கூறுபுடம் பண்ணொன்று
மெள்ளா தெருக்கம்பால் ஈரைந்தும் - உள்ளபுடம்
நந்தவ ரைத்தலுமே நாற்பத்து மூன்றாக
வெந்தமருந் தையெடுத்து மேல். 943

மேலுமரைத் தின்னீரின் மேவக் குகையிலிட்டுச்
சீலைசுத்தி ஓடிட்டுச் செம்மண்ணிட்டு[1] - சால
உலையில் துருத்திகளால் ஊதவே எல்லாம்[2]
மலினமற்று[3] செந்தூர மாம். 944

பாட வேறுபாடு :
பாடல் எண் : 940. 1 ஆதளங்காய்ச் சாறு
2 சார்புத்தோல் நீர், சம்புநற்றோல் நீர்
3 வல்லமை

941. 1 உணக்கி,
944. 1 செம்மிட்டு, செயமிட்டு
2 பொல்லா, பூப்போலாகும்
3 ஈனமற்று, இனமொத்து.

சுத்தி : அயப்பொடியை நல்லெண்ணெய் சேர்த்து எரித்து. கழுவி எடுக்க அதிலுள்ள துரு நீங்கும். அதனை வேலம்பட்டைச் சாறு விட்டரைத்து வெயிலில் காயவைத்து எடுக்க சுத்தியாகும். சுத்தி செய்த அரப்பொடியை, நெல்லிக்காய் சாறு முருங்கைப்பட்டைச் சாறு, புளியிலைச் சாறு புன்னைச் சாறு -

இவற்றில் தனித்தனியாக வேகவைத்து அச்சாறுகளிலேயே தனித்தனியாக அரைத்து வில்லை தட்டி காயவைத்து அகலில் இட்டு மேலகல் மூடி கெசபுடமிட்டு எடுக்க வேண்டும்.

இவற்றில் ஒவ்வொன்றிலும் 5 முறை செய்து கொள்ள வேண்டும். இதுபோன்றே திரிபலைக் குடிநீரில் 2 முறையும். பாலில் 10 முறையும், எருக்கம்பாலில் 10 முறையும் ஆக 43 முறை புடமிட்டுக் கொள்ள வேண்டும். இதனைக் குகையிலிட்டுச் சீலை செய்து மேலோடு மூடி உலையில் வைத்து ஊதச் செந்தூரமாகும்.

வங்கநாகச் சுத்தி

வங்கநா கஞ்சுத்தி வன்காடி கோசலமு
மங்காமோர்க் கொள்ளுச்சார் எருக்கம்பால் - புங்கெண்ணெய்[1]
தாண்டு குறிப்பால்[2] தனித்தனியே தானுருக்கி
வேண்டும் படிசாய்க்க மேல். 945

நாகச் செந்தூரம்

கருநாகஞ் சட்டியிட்டுக் காடாக் கினியா
உருக எரித்தே வாசை யுட்சா - றருகுவைத்து
வெப்பாற் சுருக்காக மேல்தெளிக்க வக்கொம்பால்[1]
தப்பா வறுநீராம்[2] தான். 946

தானாகு நீற்றை[1] தழைவாசைச் சாற்றாலும்
கானாறுங் கொட்டைக் கரந்தையிலை - தானீரும்
ஓமம் கிடாயத்தி லோரொன்று மும்மூன்றாய்
சாமமரை பின்புடம்வை சால்பு. 947

சால்பாகும் பற்பமதைத்[1] தாம்பூலச் சாற்றிலரைத்
தேல்பாங் கெசப்புடமிட் டீரைந்து - மால்போய்
எடுத்தபின்பு பார்க்கில் எழுஞா யிறுபோல்
கடுத்துவிடும் செந்தூரம் காண். 948

பாடவேறுபாடு :

பாடல் எண் : 945. 1 இங்கெண்ணெய்
2 குமரிப்பால்
946. 1 வயக்கொம்பால்
2 நீராம்
947 1 இத்தை
948. 1 பற்பத்தை
2 தான்மூலி

வங்க நாகத்தைக் காடி, பசுநீர், மோர், கொள்ளுச் சாறு, எருக்கம்பால், புங்கெண்ணெய் இவற்றில் தனித்தனியாக உருக்கிச் சாய்க்க வேண்டும்.

நாகச் செந்தூரம் : நாகத்தைச் சட்டியிலிட்டு காடாக்கினியாக எரித்து அதில் ஆடாதோடை இலைச் சாறு, அருகன் சாறு, சுருக்கு கொடுத்து எருக்கின் குச்சியால் கிளறிவிட பற்பமாகும். இதனை,
ஆடாதோடை இலைச்சாறு
கொட்டைக்கரந்தை இலைச்சாறு
ஓமத்தீ குடிநீர் இவற்றில்
தனித்தனியாக மூன்றுசாமம் அரைத்துப் புடமிட வேண்டும். இதற்கு வெற்றிலைச் சாற்றிலரைத்து 10 முறை கெசபுடமிட செந்தூரமாகும்.

வங்கச் செந்தூரம்

சுத்திசெய்த வங்கத்தைத் தூயதோர் சட்டியிட்டு
மெத்த வெரித்துருக்கி மேன்மருந்தாய் - உத்திடவே
நாயுருவிச் சாம்பலிட்டு நன்றாய் வறுத்தெடுக்கில்
போயுருவஞ் சாம்பல்தாம் போந்து. 949

போந்தநிற பற்பமதை போதவெலு மிச்சம்
வாய்ந்தசாற் றாலரைத்து வைத்தபுடம் - காந்திடவே
மூன்றுபுடம் போட முன்னுருவ மாறியபின்
கான்றநிறம் செந்தூரம் காண். 950

சுத்தி செய்த வங்கத்தைச் சட்டியிலிட்டு உருக்கி, நாயுருவிச் சாம்பல் சேர்த்து வறுத்தெடுத்து எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்து 3 முறை புடமிட்டு எடுக்க செந்தூரமாகும்.

தாமிர செந்தூரம்

தாம்பிரத்திற் சுத்தித் தகடாகத் தட்டியபின்
ஆம்புளிமோர் கற்றாழை யாஞ்சீதை[1] - தேம்பிளியல்
காணமிவைச் சாற்றில் கருமா னுலைக்காய்ச்சிப்
பேணியெழு கால்தோய்த்தப் பின். 951

பின்னாந் தகட்டுநிறை[1] பேசியதோர் கந்தகத்தை
மின்னா ரெருக்கம்பால் விட்டரைத்து - முன்னாம்
தகட்டின் மிசைப்பூசி இருசட்டியி னுள்வைத்து
திகட்டாமுச் சீலைமண் செய். 952

செய்தே உலர்த்தியபின் சேரக் கெசப்புடமாய்[1]
வையா யொருபுடத்தின் மாய்ந்துவிடும் - துய்ய பற்பம்
சீராம் பசுவின்பால் சேர்ந்த திரிபலைநீர்
சோராங் கற்றாழைநீர் சொல். 953

சொல்லும் இவைகளிலே தோய வரைத்து
நல்லாங் கெசப்புடங்கள் நாற்பத்திரண்டு - ஒல்லையிடச்
சாம்பலாம் நீற்றைத் தனியெருக்கம் பாலாலும்
தேம்பாலை செருப்படியும் சேர். 954

சேராய் வறட்சுண்டிச் சேயரசு கல்லீச்சு
வாராய் கிடாயம்பால் வன்சாறு - தேர்பற்பம்
இந்தவகை யாலரைத்து ஏழுகெச புடத்தாற்
செந்தூர மாகுஞ் சிவந்து. 955

சிவந்த நிறமருந்தை சேரப் பொடிசெய்து
உவந்த வனுபானம் உடன்கொண்டால்[1] - கவந்தருசி
வாந்திதாகம் பிரமை மாந்தவலி குன்மம்
சேந்தவலி போமே தெளிந்து. 956

பாட வேறுபாடு :
பாடல் எண் : 951. 1 சீரை
952. 1 பின்னுந் தகட்டின்நிறை
953. 1 கெசபுடத்தை

337

954. 1 தோராமலே

956. 1 உட்கொண்டால்

சுத்தி : தாமிரத்தைத் தகடாகத் தட்டி கொல்லன் உலையில் காய்ச்சி, புளியிலைச் சாறு, மோர், கற்றாழைச்சாறு, பொன்னாங் காணிச் சாறு, இவற்றில் 7 முறை தோய்த்து எடுத்து சுத்தி செய்து கொள்ள வேண்டும்.

செய்முறை : சுத்தி செய்த தாமிரத்தகட்டின் அளவுக்குக் கந்தகம் எடுத்து எருக்கன் பால் விட்டரைத்து. தகட்டில் பூசி, இரண்டு சட்டிக்கிடையில் வைத்து, சந்துவாய் சீலைமண் செய்து உலர்ந்த பின் கெசபுட மிட்டெடுக்க பற்பமாகும். இப்பற்பத்திற்குப் பசும்பால், திரிபலைக் குடி நீர், கற்றாழைச் சாறு இவற்றில் அரைத்து 42 முறை கெசபுடமிடவேண்டும். இதற்கு எருக்கம்பால், பாலை, செருப்படை, வரட் சுண்டி, அரசு, கல்ஈச்சு இவற்றின் சாற்றால் அரைத்து 7 முறை கெசபுடமிட வேண்டும்.

இதனைப் பொடிசெய்துதகுந்த அனுபானத்தில் உட்கொள்ள உருசி இன்மை, வாந்தி, தாகம், பிரமை, மாந்தம், வலிகுன்மம், வலிப்பு தீரும்.

செம்பொன் செந்தூரம்

செம்பொன் தகட்டின்மிசை செம்மண்ணைப் பூசிஉலை
வெம்பும் கனலிடை.யே வெந்தபின்பு - கொம்பதனால்
மண்தட்டித் தானெடுத்து மாசத் தகட்டெல்லாம்
பண்புசுத்தி யாகும் படிந்து.[1] 957

துய்ய தகட்டைச் சுவர்ணநிற மாட்சிகத்தை
நய்யவரை செம்பீர நற்சாற்றில் - மெய்பூசி
நல்லவகல் இரண்டு நடுவிட்டுச் சீலைசெய்து
வல்லபுடத் தாற்பற்ப மாம். 958

ஆமரசின் தோல்காய்ச்சி அன்னீ ரெருக்கம்பால்
தாமரைத்துப் பின்பொடியைத் தாக்கியே - தூமநிறப்

பூனைக்கால் வெந்தநீர் போந்தம்ச பாதரசம்
நானத்தரை நான்கு[1] நாள். 959

நாளரைத்து வில்லைதட்டி நன்றாய் உலர்த்தியபின்
மீளவெடுத்து அகலுள் மேல்மூடி - நீள்துயிலால்
மண்செய்து ஐந்துதரம் வைக்கக் கெசபுடமாய்
நண்பாம் பொன்செந்தூரம் நாடு. 960

பாடவேறுபாடு :

பாடல் எண் : 957. 1 பின்பு சுத்தியாகும் பிடித்து
959. 1 நானான்கு

சுத்தி : பொன் தகட்டில் செம்மண்ணைப் பூசி அனலிலிட்டுக் காய்ச்சி, மண்ணைத் தட்டி எடுக்கப் பொன் சுத்தியாகும். இதற்கு சொர்ண மாட்சிகத்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து தகட்டிற்குப் பூசி அகலில் வைத்து மேலகல் மூடி சீலை மண் செய்து புடமிட்டு எடுக்க பற்பமாகும்.
இப்பற்பத்திற்கு அரசம்பட்டைக் குடிநீர், எருக்கம் பால், பூனைக்காலி குடிநீர். செருப்படைச்சாறு இவற்றில் 4 நாளரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் இட்டு மேலகல் மூடி, சீலைமண் செய்து, 5 முறை கெசபுடமிட்டு எடுக்க பொன் செந்தூரமாகும்.

செம்பொன் செந்தூரம் (வேறு)

தங்கமலர்ப் பொன்னைத் தகடாக்கிக் கந்தகத்தை
வெங்கருப்பஞ் சாற்றரைத்து மேல்பூசி - பொங்கு வெயில்
வைத்தெழுகால் பூசி வலியவக லுள்ளிட்டு[1]
ஒத்தசந்து மண்சிலை ஒங்கு. 961

ஓங்குகெசப் புடம்வைத் துள்ளாறப் பின்னெடுத்துப்
பாங்காகுங் கந்தகநாற் பங்கரைத்துத் - தீங்கருப்பின்
மன்னுமிரதத் தரைத்து[1] வன்தகட்டின் மேற்பூசி
பின்னுமகல் வைத்தவகை[2] பேசு. 962

பேசுங் கெசப்புடங்கள் பின்மூன்று தான்போட[1]
மாசகன்று பற்பம் வளமாகும் - ஆசில்பற்பம்

நீண்டசயம் சுவாசம் நெடுகாச மார்நோவு
பாண்டுமுத லோடு மதுபண்பு. 963

பாடவேறுபாடு :

பாடல் எண் : 961. 1 உள்மூடி, மூட்டி
962. 1 மன்னுமிரதத்தரை
2 வைத்ததனை, வைத்துமதை
963. 1 தானரே, தான் இரண்டு

தங்கத்தைத் தகடாகத் தட்டி அவ்வெடைக்கு கந்தகத்தைக் கருப்பஞ்சாறு விட்டு 7 முறை பூசி வெய்யிலில் காய வைத்து அகலில் வைத்து, மேல் அகல்மூடி சந்துவாய் சீலைமண் செய்து கெசபுடமிட்டு எடுக்க வேண்டும். இத்துடன் 4 பங்கு கந்தகம் சேர்த்து கருப்பஞ்சாற்றால் அரைத்து, அகலில் வைத்து 3 முறை கெசபுடம் இட பற்பமாகும்.

தீரும் நோய்கள் : சயம், சுவாசம், காசம், மார்பலி, பாண்டு.

வெள்விச் செந்தூரம்

பண்வெள்ளிச் சுத்தி பழுபாகற் கந்தகத்தின்
தண்ணீரிற் காய்ந்தவெள்ளி தான்தோய்க்க - எண்ணெழுகால்
தோய்த்தசுத்தி யானதனைத் துய்ய தகடுதட்டி
வாய்த்தபின்பு சொல்வேன் மருந்து. 964

மருந்தாகுங் காகநீர் மாட்சிகத்தை மின்னார்
பொருந்துமுலைப் பாலரைத்துப் பொற்பாய் - வருந்தகட்டின்
மேல்பூசி எழுகால் வெயில்வைத்து வன்குகையின்
பாலமைத்துச்[1] சீலைமண்ணைப் பண். 965

பண்ணும் குகையெடுத்துப் பாரக் கெசப்புடத்தில்
நன்னவமைத் தாற்பற்பம் நன்றாகும் - எண்ணரிய
சாம்பல் நிரைக்குச் சரிசாதி லிங்கமிடத்[1]
தேம்பவரைக் கன்னப்பால் தேர்ந்து. 966

தேர்ந்தகரு வேலந்தோல் சீரார் வெள்வேலந்தோல்
ஆர்ந்த கியாழமோ டாலம்பால் - சேர்ந்ததோர்
வெள்ளெருக்கம் பாலும் மிகுந்த செருப்படியும்
உள்ளமைத்தச்[1] சாறும் உவந்து. 967

உவந்தே தனித்தனியே யோரொன் றாய்நெருங்
கவந்த புடமேழுங் கண்டால் - சிவந்துவிடும்
செந்தூரம் கொண்டால் திரும்பாக் கயந்தீர்ந்து
வந்தூரப்[1] போமே மருண்டு. 968

பாடவேறுபாடு :
பாடல் எண் : *965.* *1* பாலிழைத்துச், மேலமைத்து
966. *1* லிங்கமிட்டுத்
967. *1* உள்ளமைந்த
968. *1* வந்தூரி, வந்தூரில்

பழுபாகல் கிழங்குச்சாற்றில் வெள்ளியைக் காய்ச்சி 7 முறை தோய்க்க சுத்தியாகும். இதன் அளவுக்கு காகமாட்சிகத்தை தாய்ப் பாலில் அரைத்து, வெள்ளித் தகட்டிற்கு 7 முறை பூசி வெய்யிலில் காய வைத்து குகையில் இட்டு, சீலைமண் செய்து கெசபுடம் இட்டு எடுக்க பற்பமாகும். இப்பற்பத்தினளவுக்கு சரியளவுக்கு சாதிங்கம் சேர்த்து, கருப்பஞ்சாறு, கருவேலம் பட்டைக் குடிநீர், வெள்வேலம்பட்டைக் குடிநீர், ஆலம்பால், வெள்ளெருக்கம்பால், செருப்படிச்சாறு இவற்றில் தனித்தனியாக 7 முறை புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

திரும் நோய் : சயம்.

கஞ்சச் செந்தூரம்

கஞ்சமுருக்கி முக்கால் கான்ற புளியின்[1]
தஞ்சாற்றில் சாய்க்கச்சுத்தி தானாகும் - மிஞ்சும்
அரத்தால் ராவியதன் பொடிநேர் கெந்தியிட்டு
உரைத்த வெருக்கம்பாலை ஊட்டு. 969

ஊட்டும் எருக்கம்பால் ஊறியபின் னேயரைத்து
வாட்டமற வெய்யலிலே வைத்தெழுகால் - கூட்டி
வைரக் குகையிட்டு வாய்ச்சீலை மண்செய்து
செயிரறவே ஏழுபுடஞ் செய். 970

செய்தபின் பற்பத்துச்சேர்பாதி சாதிலிங்கம்
உய்யவதில் கெந்தகம் ஓர்பாதி - துய்யவதில்
பாதரசம் பாதியம்ச பாதி எலுமிச்சஞ்
சீதரத மாலம்பால் செப்பின். 971

பின்பூனைக் காலிவேர் பேர ரசந்தோல்
முன்பாங் கருவேல முருக்கந்தோல் - இன்பானீர்

தேர்ந்த மருந்தெல்லாம் சேர அரைத்தெழுகால்
வார்ந்தேழ கெசப்புடமாய் வை. 972

வைத்தெடுத்தால் செந்தூரம் வன்னமு மல்லாதே
உத்தடமாங் குகையி னுள்ளிட்டு - மெத்தியிட்டு
கொல்லனுலை வைத்தூதக் கோதில்லா பானுவைப் போல்
நல்லதுவாம் செந்தூரம் நாடு. 973

பாடவேறுபாடு :

பாடல் எண் : 969. 1 புளியின் தன்சாத்தில்

சுத்தி : வெண்கலத்தை உருக்கிப் புளியிலைச் சாற்றில் சாய்க்க சுத்தியாகும். இதனை அரத்தினால் ராவி, இதன் எடைக்கு கந்தகம் சேர்த்து, எருக்கம் பால் விட்டு ஊறியபின் அரைத்து, வெய்யிலில் வைத்து எடுக்க வேண்டும். இவ்விதம் 7 முறை செய்து கொள்ள வேண்டும். இதனைக் குகையிலிட்டு வாய்மூடி, சீலைமண் செய்து 7 முறை புடமிட பற்பமாகும். இப்பற்பத்திற்குப் பாதியளவு சாதிலிங்கம், அதில் பாதி கந்தகம். அதில்பாதி இரசம், செருப்படைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு, ஆலம்பால், பூனைக் காலிவேர்க் குடிநீர், அரசம்பட்டைக் குடிநீர், கருவேலம் பட்டைக் குடிநீர், முருங்கப்பட்டைக் குடிநீர் இவற்றில் தனித்தனியாக அரைத்து 7 முறை கெசபுடம் இட்டு எடுக்கச் செந்தூரமாகும். செந்தூரம் நிறம் சரியில்லை என்றால் குகையிலிட்டு கொல்லன் உலையிலிட்டு ஊதி எடுக்க செந்தூரம் நல்ல நிறமாகும்.

காந்தச் செந்தூரம்

காடி எலுமிச்சங் காய்ச்சாற்றில் நன்மோரில்
நாடிய காந்தம் நனையவெயில் - தேடிவைக்கச்
சாமமிரண் டானபின்பு தங்காமலே எடுத்தால்
சேமமிகுச் சுத்தியாம் செய். 974

செய்தெடுத்த காந்தகத்தில் சேர்கந்தம் நாலிலொன்று[1]
பைய வெருக்கம்பால் பாலரசந்தோல்[2] - நெய்யசிறு

பூளைவேர் காஞ்ச பொருவி நீர்விட்டரைத்து
மாளவோர் புடமூன்று வை 975

வைத்தாற்பின் னீறு[1] மதில்பாதி சாதிலிங்கம்
உத்தேபூ னைக்காலி னோடரைத்து - நித்தம்[2]
செம்மண் குகையிட்டு சீலைமண்செய் மூன்றுபுடம்
தம்மிலிட்ச்செந்தூரம் தான். 976

பாட வேறுபாடு :

பாடல் எண் : 975. 1 நாலொன்று
2 பலாரசத்தோல்
976. 1 பின்னீராம்
2 நீற்றநிறம், நீத்தநிறம்.

சுத்தி : காந்தத்தைக் காடி, எலுமிச்சம்பழச்சாறு, மோர் இவற்றிலிட்டு தனித்தனியாக வெய்யிலில் 2 சாமம் வைத்து எடுக்கச் சுத்தியாகும்.
சுத்தி செய்த காந்தத்திற்கு 4ல் 1 பங்கு கந்தகம் சேர்த்து எருக்கம்பால், அரசம் பட்டைக் குடிநீர் சிறுபூளை வேர்க் குடிநீர், காஞ்சொறி வேர்க்குடி நீர் விட்டரைத்து மும்மூன்று புடம்போட்டெடுக்கப் பற்பமாகும். இதற்குப் பாதியளவு சாதிலிங்கம் சேர்த்து, பூனைக்காலி குடிநீர் சேர்த்தரைத்துக் குகையிலிட்டு மூன்று முறை புடமிட்டு எடுக்கச் செந்தூரம் ஆகும்.

பவழ பற்பம்

நற்பவழம் செம்பீர நற்சாற்றி லோர்சாமம்
துப்புறவாய் ஆறியபின் தோய்க்கவெள்னீர் - நற்சுத்தி
முன்னெருக்கம் பாலதனில் மூன்றுநாள் ஊறவிட்டுப்
பின்னெடுத்து வைகுகையில் போர்ந்து.[1] 977

போர்ந்துமண் சீலைதனைப் பேணி குகைமூடி
யார்ந்தகுழி[1] வெட்டியதி னூடே - கூர்ந்திடவே
இட்ட புடத்தால் இயலாம் பவழநிறம்
பட்டிறந்து பற்பநிறம் பார். 978

பாடவேறுபாடு :

பாடல் எண் : 977. 1 பொதிந்து, பெயர்ந்து
978. 1 குகை

சுத்தி : நற்பவழத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு சாமம் ஊறவைத்து வெந்நீரில் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இதே போன்று எருக்கம்பாலில் ஊற வைத்து எடுத்துக் குகையிலிட்டு சீலைமண் செய்து குழியை வெட்டி, அதனுள் வைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

வைர பற்பம்

வயிரக் கல்சுத்தியாம் வாம்புரவி நீரில்
உயிரறுமே மூன்றுநா ளூறில்[1] - செயிற்பிரண்டை
உற்றரைத்து உலரக்[2] குகைமூடிப்
பெற்றநிறம் பற்பநிறம் பேசு. 979

பாட வேறுபாடு :

பாடல் எண் : 979. 1 ஊறிச்
2 உத்திரத் தூறலுலர்தல்

சுத்தி : குதிரை நீரில் வைரத்தை மூன்று நாள் ஊற வைத் தெடுக்க சுத்தியாகும். இதற்குப் பிரண்டைச் சாறுவிட்டு அரைத்துலர்த்தி குகையிலிட்டு மூடிப் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

மரகத பற்பம்

நிலக்குமிழின் வேரரரைத்து நேர்பச்சை[1] யுள்ளிட்டு
மலக்கறவே சீலையொடு மண்செய்து - கலக்கமற
வாரணத்தை நெற்புடமாய் வைக்க மரகதமும்
ஆரணங்கே சுத்தியாம் அப்பால். 980

சுத்த[1] மரகதத்தைத் துய்யகண்டம்[2] பூளைச்சார்
ஒத்தவரைத் தேயகலில் உள்ளிட்டு - மெத்திமண்செய்
வாராய் கெசப்புடத்தை வைத்தாற் சீதளமாம்
தோராயம் பற்பமெனச் சொல். 981

பாட வேறுபாடு :

பாடல் எண் : 980. 1 நேர்ந்தபச்சை
981. 1 சுத்தி
2 தூயகண்டம்

சுத்தி : மரகதத்திற்கு நிலக்குமிழின் வேரை அரைத்து மேல் பூசி சீலைமண் செய்து நெற்புடம் வைத்தெடுக்க மரகதம் சுத்தி யாகும்.

சுத்தி செய்த மரகதத்திற்குக் கண்டங் கத்தரிச் சாறு. சிறுபூளைச் சாறு இவற்றாலரைத்து அகலில் வைத்து மேலகல் மூடி சீலைமண் செய்து கெசபுடம் இட்டெடுக்க பற்பமாகும்.

நீலக்கல் பற்பம்

நீலக்கல் வேசரியின் நீர்தேளக் கடைச்சாற்றில்
சாலவெயி லோர்நாள்வைத் தாற்சுத்தி - கோலமாம்
வச்சிரத்தின் மூசையிட்டு[1] வாங்குலையில் ஊதியிட
மெச்சுபற்ப மாகும் விரைந்து. 982

பாடவேறுபாடு :

பாடல் எண் : 982. 1 முட்டையிட்டு

சுத்தி : நீலக்கல்லை கழுதை மூத்திரத்தில் போட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்தெடுக்க சுத்தியாகும். இதனை வச்சிர மூசையிலிட்டு குகையில் ஊத பற்பமாகும்.

மாணிக்க பற்பம்

மாணிக்க சுத்திக்கு மாதுளங்க[1] மாற்சலத்[2]
தூணிவெய்யில் மூன்றுநாள் ஊறவிட்டு - பேணி வென்னீர்
தன்னாற் கழுவி சத்தளத்தோன் மூலிப்பால்
முன்னாகப் பாவனைநாள் மூன்று. 983

மூன்றுநாள் பாவனையாய் யூறியபின் னேயெடுத்து
வான்றவக லுள்ளிட்டு[1] மண்சிலை - தோன்றவிட்டு
வைக்கவொரு மூன்றுபுடம் மாணிக்க பற்பமெனத்
தக்கவர்கள் சொல்லத் தகும். 984

பாடவேறுபாடு :
பாடல் எண் : 983. 1 மாதுள, மதுரங்க
2 மாற்மசல
984. 1 வான்றவைகளுள்ளிட்டு, அகலிலிட்டு

சுத்தி : மாணிக்கத்தை மாதுளம் பழச்சாற்றில் போட்டு மூன்று நாள் வெய்யிலில் வைத்து வெந்நீரில் கழுவியெடுக்கச் சுத்தியாகும். இதுபோன்றே தாய்ப்பாலிலும் மூன்று முறை செய்ய வேண்டும் இதனை அகலில் வைத்து சீலைமண் செய்து புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

புட்பராக பற்பம்

புருடராக சுத்தி போந்தமறி நீராலும்
உருகவெய்யில் வைத்தெடுத்து ஒண்பீளை[1] - தருசாற்றில்
ஊறவெடுத் தேயுலையில் ஒண்குகையில் வைத்தூத
தேரியதோர் பற்பமாஞ் செப்பு.[2] 985

பாடவேறுபாடு :
பாடல் எண் : 985. 1 பொன்பீளை
2 செய்

புட்பராகத்தை ஆட்டுநீரில் போட்டு வெய்யிலில் வைத்தெடுத்து. இதுபோன்றே சிறுபீளைச் சாற்றிலும் வைத்தெடுத்துக் குகையில் வைத்து உலையிலிட்டு ஊத பற்பமாகும்.

கோமேதக பற்பம்

கோமே தகத்தைக் குதிரைநீர்[1] மூன்றுநாள்
தாமாம் நிலக்குமிழ்நீர்[2] தானொருநாள் - ஆமூறல்[3]
சுத்திக்க ரூமத்தை[4]நீர் துய்க்கவொருநாள் குகையின்
உத்துலையின் நீரிசைய[5] ஊது. 986

பாடவேறுபாடு :
பாடல் எண் : 986. 1 குதிநீர்
2 தாமாமதில் குமிழ்நீர்
3 முற்சுத்தி
4 சுத்திக் கருமரூத்தை
5 மீரிசைய

சுத்தி : கோமேதகத்தை குதிரை மூத்திரத்தில் மூன்றுநாள், நிலக்குமிழ் சாற்றில் ஒருநாள் ஊற வைத்தெடுக்கச் சுத்தியாகும்.

இதற்கு கருஊமத்தைச் சாறுவிட்டரைத்து குகையிலிட்டு உலையிலிட்டு ஊத பற்பமாகும்.

வைடூரிய பற்பம்

ஆனவை டூரியத்தை அசுவநீர் விட்டொருநாள்
மானவெயில் வைத்தெடுத்து மற்றநாள் - தேனனைய
பூசணிக்காய்ச் சாறொருநாள் போதவதி லிட்டெடுக்க
மாசகன்ற சுத்தியதா மாண்பு.[1] 987

மாண்பாஞ் சிறுபூளை வெந்தநீர் ஊறவிட்டுச்
சேண்பாய்க் குகையிலிட்டுச் சீலைமண்செய் - காண்பரிய[1]
மூன்றுபுடம் வைக்கலுமாம் முன்துருத்தி யூதலுமாம்
ஏன்றவதில் நீராம் இசைத்து. 988

பாடவேறுபாடு :
பாடல் எண் : 987. 1 மானது
988. 1 காண்பெரிய

சுத்தி : வைடூரியத்தை குதிரை நீரில் போட்டு வெய்யிலில் ஒருநாள் வைத்தெடுத்து மறு நாள் பூசணிச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து எடுக்கச் சுத்தி யாகும்.
இதற்கு சிறுபூளைக் குடிநீரில் ஊற வைத்துக் குகையிலிட்டு சீலைமண் செய்து மூன்று முறை புடமிட்டெடுத்துத் துருத்தியில் ஊதி எடுக்கப் பற்பமாகும்.

முத்துபற்பம்

துத்தூர மாம்பிலத்தில்[1] சொல்லிய சாறொன்றதனில்
முத்தூர மிரண்டுநாள் மொய்குழலே - சுத்தியதாம்
வெண்முள்ளிச் சாறெடுத்து மேலாங் குகையிலிட்டு
மண்குழியி னிறுபுட மாற்று. 989

பாடவேறுபாடு :

பாடல் எண் : 989. 1 துத்தூரமாம் பிலாநல்

முத்தை ஊமத்தை இலைச் சாற்றில் இரண்டு நாள் ஊற வைத்தெடுக்கச் சுத்தியாகும், சுத்தி செய்த முத்திற்கு வெண்முள்ளிச் சாறுவிட்டுக் குகையிலிட்டு குழியில் வைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அப்பிரக வகை

பச்சையுமை யாளிடத்தில் பாங்கான அப்பிரக
மச்சமற நான்குவித மாகுமே - இச்சைபெரு
மண்டூகம் நாகம் வயிரம் பினாகமென
உண்டா மதன்குணத்தை ஓர். 990

ஓராய்ப்பினாக[1] முருக்க உருகும் வயிரம்
வாராய் புகையாகும் மண்டூகம்[2] - நேராய்த்
தவழும் நாகமுமே தான்சீறு மூதி
இவுலையில் இட்டுருக்க உன். 991

உன்னும் பினாக முயர்வாதம்[1] போக்கிவிடும்
பின்னு மண்டூகம் பெரிதாம் நோய் - பன்னாக
அப்பிரகஞ் சேத்தும முண்டாக்கிவைக் குமேவைரம்
தப்பாதாம் எப்பிணிக்கும் தான். 992.

தானே வைரம் தனில்மூன்று பேதமுண்டாம்[1]
ஊனூரும்[2] பொற்கென்ற லுட்டிணம்போம் - மேன்வெளிறல்[3]
அய்போக்குமே செப்பறும் வாதங் கார்நிறத்தல்[4]
பொய்யாகாது எப்பிணியும் போம். 993

போந்த கார்மேனி போன்றவெயில் அப்பிரகந்
தோர்ந்தகலில் மூன்றுநாள் சேர்த்திட்டு - ஆர்ந்தெடுத்து
ஆதவத்தின் வைத்திடித்தே ஆனபொடிக் காடிதனில்
தீதறவே மூன்றுதினம் சேர். 994

சேர்ந்தபொடிக் காடியுடன் சென்னலதில்[1] பாதியிட்டு
வார்ந்தபெருந் தாழிதுகில்[2] வாய்கட்டி - ஓர்ந்துவைத்து
காடி சேர்த்து[3] கையால் அரித்திட்டால்
சாடியுறு மப்பிரகஞ் சாய்த்து. 995

பாட வேறுபாடு :
பாடல் எண் : 991. 1 ஓர்நாபி நாகம்
2 புகையாது மண்டூகம்

992. 1 உய்வாதம்
993. 1 நாலுபேதமுண்டாம்
2 மூன்றும், மூணாறும்
3 மேன்வேளுறல்
4 ஐயமது போக்கும் மகாவாதம் காந்தம் நிறத்தல்
995. 1 சொன்னலத்திற்
2 தாழிஅகல்
3 சிறிதுவிட்டு

சாய்த்துத் தெளிவெல்லாம்[1] சாடியிடை வெண்ணெயைப்போல்
வாய்த்தமருந்து அம்மிதன்னில் வைத்தரைக்க காய்த்தகொள்ளு
சாற்றில்நெய் யெருக்கம்பால்[2] தன்னொன்றிநான்காக
ஏற்ற[3] கெசபுடத்தை ஏர்.[4] **996**

ஏர்க்குங் கவித்துளசி எந்நா யுருவியர்க்கஞ்
சேர்க்கு மாசில்நெருஞ்சி சின்னெருஞ்சி - பூர்க்கும்
பாலரிசிரண்டு நன்னாரி பாரில்வளர் சீதைகொட்டை
உலர்கரந்தை தண்ணீர் மிட்டானும். **997**

உன்னுவ ராகிகன்னி உள்நொச்சி[1] வாசையிலை
பின்சங்க மமுக்குரா பேராம்பல் - நன்னெய்தல்
கண்ட நிலக்குமிழுங் கார்முருங்கைச் சாரணையும்
தொண்டஞ் சேர்திடமதியம்[2] சொல். **998**

சொல்லாரும்[1] சீந்திலொடு[2] சொன்ன மருந்தெல்லாம்
நல்லாய் பால் பட்டைகந்தம் நல்லிலையின் - வெல்சாறு
ஒன்றொன்றாய் விட்டரைத்து ஓரோர் கெசப்புடத்தில்
நன்றாக வைக்க நலம்.[3] **999**

நலமா நிசியிஞ்சி நற்சாறு உண்டை[1] யிட்டுக்
குலமா[2] எலுமிச்சங் கொள்சாறும் - நிலமாகும்[3]
முத்தமொடு தூதுளையும் ஒட்டாலின் சின்விழுதும்
வைத்த கியாழம் வார்த்தரை.[4] **1000**

அரைத்தே தனித்தனிவைத் தானஉலை மூடி
உரைத்துஇரண்டு சேர்சிலை உடுமண்செய் - நிறைத்தபுடம்
பொன்றா தறுபதுவும் போட்டவுடன் செந்தூரம்.
நன்றாகு மென்றே நவில். **1001**

பாடவேறுபாடு :

பாடல் எண் : 996. 1 தெளிவதெல்லாம்
2 சாத்தாநெய்யக்கம்பால், அர்க்கம்பால்
3 ஏற்றாய்
4 செய்.

998. 1 ஊர்நொச்சி
2 சோதிடமதியம்.

999. 1 சொல்லாம்
2 சீந்திலொன்று
3 நலமாம்.

1000. 1 கண்ட
2 குலமாகு
3 நிலமாறு
4 வைத்தரை

அப்பிரகம் நான்கு வகைப்படும் அவை.

1 மண்டூகம் 2 நாகம் 3 வயிரம் 4 பினாகம். இவற்றில் பினாகத்தை உருக்கினால் உருகும். வைரம் புகையாகும். மண்டூகம் அப்படியே இருக்கும். நாகம் உருக்கச் சீறும்.

பினாகம் வாதநோய்களை நீக்கும். மண்டூகம் நோய்களை அதிகமாக்கும். நாகம் சேத்துமத்தை அதிகரிக்கும். வைரம் எல்லா நோய்களையும் தீர்க்கும்.

வச்சிர அப்பிரகம் மேலும் 3 வகையில் பிரிவுபடும். ஆம்பல் நிறத்தில் உள்ளது உட்டிணத்தைப் போக்கும். வெளிறல் நிறமுடையது வாதத்தைப் போக்கும். கரிய நிறத்தில் உள்ளது எல்லாப் பிணிகளையும் நீக்கும்.

கருப்பு நிற அப்பிரகத்தை அகலில் வைத்து 3 நாள் வெயிலில் வைத்தெடுத்துப் பொடிசெய்து 3 நாள் காடியில் ஊறவைத்து ஒரு சட்டியின் வாய்க்கு துணி கட்டி அதன்மேல் ஊறவைத்த அப்பிரகம், அரைப்பங்கு நெல் சேர்த்து காடியுடன் கையால் அரித்தெடுக்க அப்பிரகம் வெண்ணெய் போன்று வரும். இதனை அம்மியில் வைத்துக் கொள்ளுச்சாறு, நெய், எருக்கம்பால் இவற்றால் தனித்தனியாக அரைத்து நான்குமுறை ஒவ்வொன்றிலும் கசபுடமிட வேண்டும். இதற்கு

துளசிச்சாறு, செந்நாயுருவிச் சாறு, எருக்கஞ்சாறு, செப்பு நெருஞ்சிச்சாறு சிறுநெருஞ்சில் சாறு, சிறு அம்மான் பச்சரிச்சாறு, பெரிய அம்மான் பச்சரிசிச் சாறு, நன்னாரி, பொன்னாங்காணி, கொட்டைக் கரந்தை நிலப்பனங்கிழங்கு, கற்றாழை, நொச்சி, ஆடாதோடை இலைச் சாறு, சங்கங்குப்பி, அமுக்கரா, ஆம்பல், நெய்தல், நிலக்குமிழ், முருங்கை, சாரணை, சீந்தில், இவற்றில் ஒவ்வொரு முறை அரைத்துக் கசபுடம் வைத்து எடுக்க வேண்டும். இதனை இஞ்சிச் சாறு, சுண்டையிலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, முத்தக்காசு, தூதுவளை, ஆலம்விழுதுச்சாறு இவற்றின் குடிநீரில் தனித்தனியாக அரைத்து, ஓட்டிலிட்டு மூடி, சீலைமண் செய்து புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

அப்பிரக பற்பம் (வேறு)

கார்நிறத்த[1] அப்பிரகம் காய்ச்சித்தோய் கோசலத்தின்
ஏர்பெறவே சுத்திபெறும் ஏழுதரம் - சீராகில்
அப்பால் எடுத்தரைத்து எருக்கவிலைச் சாற்றதனில்
செப்பார் குகையினுட்[2] சேர். 1002

சேர்குகையின் வாய்மூடிச் சீலைமண்ணைச் செய்தபின்பு
பார்வுலை வைத்தூதப் பற்பமாம் - நேர்முக்கால்[1]
பன்னுரச மருந்திற் பண்பாகச் சேர்க்கலாம்[2]
ஒண்ணுதலா யொன்றறிவாய் உற்று. 1003

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1002. 1 கார்நிறத்தின்
2 குரையினுட, குகையினூடே
1003. 1 தேர்முக்கால்
2 சேர்க்கால்.

சுத்தி : கிருட்டிண அப்பிரகத்தை பசு நீரில் ஏழு தரம் காய்ச்சிச் சாய்த்தெடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

இதனை எருக்கிலைச் சாற்றில் அரைத்து குகையில் வைத்து வாய் மூடி சீலைமண் செய்து உலையில் வைத்து ஊதி எடுக்க பற்பமாகும்.

இம்மருந்தினை இரசமருந்துகளோடு 3/4 பங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

இரச செந்தூரம்

சுத்திரதம் பங்கொன்று தூயகெந்தம் பங்கொன்று
நத்துநவச் சாரம் நாலிலொன்று[1] - மெத்தபொடி
யாகவே நாள்மூன் றரைத்தெடுத்துக் குப்பியிட்டு
வாகுபெற மாக்கல்வை வாய். 1004

வாய்மூடி ஏழுசுத்து[1] மண்சீலை செய்துலர்த்தி
மெய்சட்டி[2] உப்பிட்டு மேல்வைத்துச் - சாயாமல்
சூழவுமே உப்பிட்டுத்[3] தூயமணல் மேலிட்டுத்
தாழியால் மேல்மூடு தான். 1005

மூடுங் கலசத்துக்கு[1] முச்சீலை மண்செய்து
தேடும் கமலமலர்[2] தீயெரிக்க - நாடியதோர்
பன்னிரண்டு சாமம் படர்ந்தக்கால் செந்தூரம்
நன்னிறமுங்[3] குங்குமமாம் நாடு. 1006

பாடல் வேறுபாடு :

பாடல் எண் : 1004. 1 நாலென்று
1005. 1 ஏழுசத்து
2 மேல்சட்டி
3 நல்லுப்பிட்டு
1006. 1 கலத்துக்கு
2 கமலமிரத
3 அதன்நிறமுங்

சுத்தி செய்த இரசம் 1 பங்கு, கந்தகம் 1 பங்கு இவற்றைப் பொடியாக மூன்றுநாள் அரைத்து குப்பியில் வைத்து மாக்கல்லால் வாய்மூடி 7 சீலை மண் செய்து உலர்த்தி, சட்டியில் உப்பைப் போட்டு அதன் மேல் வைத்து, மேலும் உப்பு போட்டு அதன்மேல் மணலிட்டு தாழியால் மேல் மூடி மூடும் கலசத்திற்கு சீலைமண் செய்து கமலாக்னியாக 12 சாமம் எரித்தெடுக்கச் செந்தூரமாகும்.

இரச செந்தூரம் (வேறு)

துய்யரதம் கெந்தகமும் தூக்கிச் சரியாக
நய்ய[1] செருப்படியின் நற்சாற்றில் - பைய்யவெட்டு
சாமமரைத் துண்டைசெய்து தானுலர்த்திக் குப்பியிட்டு
சேமவாய்[2] மாக்கல்[3] செறி. 1007

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1007. 1 தைய்ய
2 சேமமாய்
3 மாக்கல்லால்.

சுத்தி செய்த - இரசம், கந்தகம் சம அளவு

இவற்றை செருப்படைச் சாற்றில் 8 சாமம் அரைத்து உருண்டை செய்து உலர்த்திக் குப்பியிலிட்டு மாக்கல் கொண்டு மூடி, சந்துவாய்க்கு 7 சீலைமண் செய்து உலர்த்தி இதனை ஒரு சட்டியில் வைத்து அதனைச் சுற்றிலும் மேல் பகுதியிலும் 4 படி உப்பைக் கொட்டி அதன் மேல் மணல் போட்டு மூடியிட்டு சந்துவாய் சீலைமண் செய்து கமலாக்கினியாக 12 சாமம் எரித்து ஆறியபின் எடுக்கச் செந்தூரமாகும்.

இரச பூபதி

இரசத்தின்[1] பூபதியாம் எண்சுத்தி[2] சூத
மரப்பொடியு நாபிகெந்த மாமிளகும்[3] - சரியாக
ஆஞ்ச பாதிசாற் றரைத்தே யுருட்டுணக்கி
எஞ்சுகுப்பி யிட்டுருக்கி யே. 1008

ஏலவே சீலைமண்ணை ஏழுதர முஞ்செய்து
வாலுகா எந்திரத்தின் வாய்மூடிக் - கோலிவைத்து
பன்னிரண்டு யாமம் பதுமமலர் போலெரித்துப்
பின்னெடுக்கிற்[1] சீதளமாம் பேர். 1009

பேரான குப்பிப் பிளந்தே மருந்தெடுத்துத்
தோராய மாயரைத்துத் தூளாக - ஒருளுந்து
மட்டிஞ்சி[1] சாற்றிலிட வாதசுரம் பித்தசுரம்
தொட்டசன்னி போமே துலைந்து.[2] 1010

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1008. 1 இரத்தின
2 மென்சுற்றி
3 மரமிளகும்
4 அம்சபாத, அஞ்சடாதி, அஞ்ச

1009. 1 மண்ணெடுக்கில்

1010. 1 மடிஞ்சி
2 துணிந்து.

சேரும் சரக்குகள் : சுத்திசெய்த இரசம் அயப்பொடி நாபி கந்தகம் மிளகு (சம அளவு)

செய்முறை : இவற்றை சிறுபுள்ளடிச் சாற்றில் அரைத்து உருட்டி குப்பியில் அடைத்துக் குப்பிவாய் மூடி 7 சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் வைத்து, வாய்மூடி 12 மணி நேரம், கமலாக்கினிபோல் எரித்து ஆறியபின் குப்பியைத் திறந்து மருந்தை எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : உளுந்தளவு

தீரும் நோய்கள் : வாதசுரம், பித்தசுரம், தோடசுரம்.

நவலோக அக்கினிக் குமாரன்

சுத்திரதம் பொன்வெள்ளி சுல்ப மிரும்புகஞ்ச
மத்தவங்க நாக மப்பிரகம் - வைத்ததோர்
காந்தபற்பம் பத்தும் கருந்தெருக்கங் கொத்த[1]
ஊந்தைந்து[2] நாளரைக்க ஓது. 1011

ஓதுமருந் தோர்குப்பி உள்ளிட்டு வாய்மூடி
ஆதரவாய்ச் சீலைமண் ஆத்தியே - சீதந்தி
வாலுகந்தைச் சட்டியிட்டு வைத்தா றிரு[1] சாமம்
மேல்கமலம் போலே எரி. 1012

எரித்தாங்கு சீதளமாய் இயலரை[1] யறிந்தெடுத்துப்[2]
பரித்த[3] மருந்தை பாயப்பண்ணி[4] - உறுத்தும்
நவலோக மக்கினியாம் நன்குமா ரந்தன்னால்[5]
புவனமுள்ள வன்பிணிகள்[6] போம். 1013

போமனு பானத்தால் பொருந்துகுன்றி[1] யவ்வளவு
ஆமெனவே கொள்ள வதிகசுரம் - ஆமசுரம்
வந்தசன்னி பாதசுர மாறல்வெப்புத் தாந்திரீகம்
தொந்தசுரம் போமே துலைந்து. 1014

பாட வேறுபாடு :
பாடல் எண் : 1011. 1 கருத்தெருக்கொத்த
2 உளுந்தைந்து.

1012. 1 வைத்தூறிச்
1013. 1 சீதளமாயேயலவை
2 அரிந்தெடுத்து
3 பருத்த
4 யாயப்பண்ணி
5 நவலோக வாக்கியாம், நன் குமாரந் தன்னூல்
6 வன்பிணியும்
1014. 1 போர்ந்தகுன்றி.

சேரும் சரக்குகள் : சுத்தி செய்த - இரசம், பொன் வெள்ளி தாமிரம் அயம் வெண்கலம் வெள்வங்கம் நாகம் அப்பிரகம் காந்தம் (பற்பம் சம அளவு)

செய்முறை : மேற்கண்ட பத்து மருந்துகளையும் எருக்கிலைச் சாற்றில் 5 நாள் அரைத்து குப்பியில் வைத்து வாய்மூடி சீலைமண் செய்து வாலுகா யந்திரத்தில் வைத்து 12 மணி நேரம் எரித்து ஆறியபின் மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : குன்றியளவு, தகுந்த அனுபானத்தில்.

தீரும் நோய்கள் : அதிகசுரம், ஆமசுரம், சன்னிபாதசுரம், மாறல் சுரம், தாந்திரிக சன்னி, தொந்த சுரம்.

நவரத்தின அக்கினிக் குமாரன்

தூயரச மிந்துப்பு[1] தோன்றுநவ ரத்தினம்
ஐயமில்லை யோர்நிறையே யாம்பற்பம் - செய்யதோர்
மாவிலங்கந் தொக்கிரத மத்தித்து வோர்தினத்தில்
ஒலிசித்திர நீரினாள் ஒன்று. 1015

ஒன்றி யரைத்தே ஓர்குப்பி யுள்ளிட்டுக்
குன்றாத வாலுகத்திற் கோலியிட்டு - நன்றான
மந்தவங்கி யாற்றியாம்[1] மாறாம லேயெரித்தே
எந்திரத்தி லாற வெடு. 1016

எடுத்த மருந்து குன்றி யெடைஅளவு கொண்டால்
அடுத்தசன்னி பாதசுரம் யாவும் - கெடுத்துவிடும்
அப்போ அரைசணத்தில் ஆனகுமா ரத்தை
துப்பார்க்குப் பத்தியம்[1] சொல். 1017

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1015. 1 துய்யரத மஞ்சுப்பு
1016. 1 ஆறியாம்
1017. 1 பத்தியமில்சொல்.

சேரும் சரக்குகள் : சுத்தி செய்த இரசம் இந்துப்பு பவளம் வைரம் மரகதம் வைடூரியம் கோமேதகம் முத்து மாணிக்கம் புட்பராகம் நீலம்.

செய்முறை : இவற்றை மாவிலங்கைச் சாற்றில் ஒரு நாளும், கொடிவேலிச் சாற்றில் ஒரு நாளும் அரைத்து குப்பியில் வைத்து வாலுகா யத்திரத்திலிட்டு கமலாக்கினியாய் 12 மணிநேரம் எரித்து ஆறவிட்டெடுத்து அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்

அளவு : குன்றியெடை

சித்தாக்கினி குமாரன்

கோதற்ற[1] சூதம் குலவுகெந் தகங்காரம்
ஏதமத்த நாபி எருக்கிலைநீர் - போதவரைத்து
உண்டைசெய்தே உணக்கி யோர்வைர மூசையிட்டு
வண்டுபெறச் சீலையிடு மண்.[2] 1018

மண்கலசந்[1] தன்னுள்[2] மணலில் பதிகுகையைப்
பண்துகிலை மண்செய் பதித்தோட்டை - ஒண்குழியில்
வைத்தாற் கெசபுடமாய் வான்சீதளத் தெடுக்க
சித்தாக்கினிக் குமாரன் தேர்ந்து. 1019

தேர்ந்தக் கினியாம்[1] சித்தாக்கினி குமாரன்
ஓர்ந்ததனில் குன்றியள வுட்கொண்டால் - சூர்ந்தசுரம்
வாதசன்னி பித்தசன்னி வாய்ந்ததிரி தோடசன்னி
சீதசன்னி ஓடும் திகைத்து. 1020

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1018. 1 கோத்த
2 இயல்சென்று
3 மணலிட் டிடையில் செப்பு
1019. 1 மண்கலையம்
2 தன்னால்
1020. 1 கனியரசே.

சேரும் சரக்குகள் : சுத்திசெய்த - இரசம் கந்தகம் வெங்காரம் நாபி (பற்பம் சம அளவு)

செய்முறை : இவற்றை எருக்கிலைச் சாற்றில் அரைத்து உருண்டை செய்து வச்சிர மூசையில் இட்டுச் சீலைமண் செய்து, ஓட்லிட்டு மூடி கசபுட மிட்டு ஆறியபின் எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : குன்றியெடை

தீரும் நோய்கள் : சுரம், வாதசன்னி, பித்தசன்னி, திரிதோட சன்னி, சீதசன்னி.

இலகுவாக்கினி குமாரன்

பாரதமு மடங்கணமும்[1] பண்புசிலைத் தாளகமும்
நீரதமாம் கந்தகமும் நேர்க்கூட்டி - ஓர்தினமும்
சொல்லிற் செருப்படிநீர் தோன்றவரைத் தேகுப்பி
புல்லமண லந்திரத்திற் போது.[2] 1021

போத விருசாமம் பூவனசம் போலெரித்துச்
சீதமுறு வேலையொடு சேர்பொடியாய் - ஓதுகுன்றி
அவ்வளவு கொண்டால் இறந்தகலும்[1] சன்னிசுரம்
ஃவ்விலகு மக்கினிக்கு மாரன். 1022

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1021. 1 முட்டங்கணமும், மங்கணமும்
2 போற்று.

1022. 1 இரிந்தகலும்.

சேரும் சரக்குகள் : பாதரசம் வெங்காரம் மனோசிலை தாளகம் கந்தகம் சம அளவு

செய்முறை : இவற்றை சிறுசெருப்படிச் சாற்றில் ஒரு நாள் அரைத்துக் குப்பியில் அடைத்து வாலுகா யந்திரத்தில் ஏற்றி 12 மணி நேரம் கமலாக் கினியாய் எரித்து ஆறியபின் எடுத்து அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : குன்றியளவு.

தீரும் நோய் : சன்னிசுரம்.

மகா அக்கினி குமாரன்

தரத்[1] மரிதாரம் தாம்பிரம் அப்பிரநாக[2]
மிரதமெலிப் பாடாணம் மேர்கெந்த - நீரவுசரி
உமைபிருங் கராசத மோர்[3]நா ளரைத்துணக்கி
வைசுருங்க குப்பியிடு வாய். 1023

வாய்த்தமண வெந்திரத்தின் வைப்பாயோர் நாளெரித்துக்
காய்த்தகல் சீதளத்தின் கைக்கொண்டு - தேய்த்த பொடி
மாவக்கினிக் குமாரரை மந்த்[1] சணம் பலவு[2]
தாவக்கினிச் சன்னிபோம் தான். 1024

பாடவேறுபாடு :
பாடல் எண் : 1023. 1 தாதக
2 அப்பிரகம்
3 உய்ப்பிறங் காரசாத மோர்

1024. 1 மாத்த
2 பிளவு.

சேரும் சரக்குகள் : தாளகம் செம்பு அப்பிரகம் நாகம் இரசம் எலிப் பாடாணம் கந்தகம் (பற்பம் சரியளவு)

செய்முறை : இவற்றை கையாந்தகரைச் சாற்றில் ஒரு நாள் அரைத்து உருட்டி குப்பியிலிட்டு, வாலுகா யந்திரத்தில் வைத்து, ஒருநாள் எரித்து ஆறிபின் எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் சோய்கள் : சன்னி, சுரம்.

பிரதாபவக்கினி குமாரன்

எவட்சார நாபி இரதசுலபஞ் சுக்குத்
தவட்குப் படிகாரம் சத்திச்சார்[1] - முவர்க்கடலின்
உப்பாதி ஐந்தோடு உறுமிளகு வோர்நிறையாய்
தப்பாம லிஞ்சிபிழிச் சாறு. 1025

சாற்றா லொருநாள் தணியவரைத் துணக்கிக்
கூர்த்தா மணற்சட்டிக் குப்பிவைத்துப் - போத்தொருநாள்

மந்தவன்னி யாயெரித்து மாறியபின் னேயெடுத்து
வந்தசிவ நாபியிடு வாறு. 1026

வாறாகப் பத்திலொன்று மாயப் பொடிசெய்து
கூறான குன்றியிடை கொள்ளிஞ்சிச் - சாறதனில்
வாய்ந்த பிரதாப வக்கினி குமாரனுக்குத்[1]
தேய்ந்தோடும்[2] சன்னிசுரம் செப்பு. 1027

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1025. 1 சத்திடச்சார
1027. 1 குமாரத்துக்குத்
2 தேர்ந்தோடும்
தீர்ந்தோடும்,
குதித்தோடும்.

சேரும் சரக்குகள் : எவச்சாரம் நாபி இரசம் தாமிரம் சுக்கு படி காரம் சத்திச்சாரம் கடலுப்பு கல்லுப்பு வெடியுப்பு இந்துப்பு வளையலுப்பு மிளகு. (சம அளவு)

செய்முறை : இவற்றை சுத்தி செய்து இஞ்சிச் சாற்றால் ஒருநாள் அரைத்து குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் வைத்து ஒருநாள் எரித்து ஆறிய பின் எடுத்துப் பொடி செய்து 10 பங்கு நாபித் தூள் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : குன்றியெடை
அனுபானம் : இஞ்சிச்சாறு
தீரும் நோய் : சன்னிசுரம்.

பிராணாக்கினி குமாரன்

அப்பிரக நாபிரத மானகெந் தகநேராய்
பப்படவச் சாற்றோர் பகலரைத்துச் - செப்பிலிட்டு
சிலையொன்றை முடிமண் செய்துவோர் குழியில்[1]
செல்லுமண விட்டிடையிற் செப்பு.[2] 1028

செப்பும் புடம்வைத்துச் சீதளமாய்ப் பின்னெடுத்து
அப்புபின்[1] கானகிட்டா[2] யாடுமயில் - முப்பிச்சும்
பின்பா வனைசெய்[3] பிராணாக்கினிக் குமாரந்
தின்பார்க்குச் சன்னிபோம் தீர்ந்து. 1029

பாட வேறுபாடு :

பாடல் எண் : 1028. 1 மண்சீலை செய்துஓர் குமுஷ்ட்டி
2 வண்டுபெறச் சீலையிடு மண்

1029. 1 அப்புமின்
2 கானகிடா
3 பின்பவனை செய்

சேரும் சரக்குகள் : அப்பிரகம் நாபி இரசம் கந்தகம் (சம அளவு)

செய்முறை : இவற்றை சுத்தி செய்து பற்பாடகச் சாற்றில் ஒரு நாளரைத்து செப்பிலிட்டு சீலைமண் செய்து குழிப்புடத்தில் வைத்து ஆறியபின் எடுத்து காட்டெருமை ஆடு மயில் ஆகிய மூன்றின் பிச்சுகளில் பாவனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னி.

திவியாக்கினி குமாரன்

சுத்திரத நாபிநேரத் துய்யகொடி வேலிச்சா
றுத்தரைத்து வைக்குகையில் ஓடிட்டுச் - சுத்தி[1] மண்செய்
வாலுகத்தி னூடமுத்தி வன்குழியிற்[2] போடுபுட
மாலுகுநீர் சீதளமா மற்று. 1030

மற்றெடுத்து நாலிலொன்று வன்நாபி கூட்டி[1]
உற்றதிரி கடுகி னுட்தைலம் - பெற்றரைத்துச்
சின்னிமுன்னி யாதல் செழுஞ்சாற் றரைத்துருட்டு
பின்னுகுன்றி அவ்வளவு பேர்.[2] 1031

பேராகுந் திவ்வியாக்கினி பேசுங் குமாரர்க்கு
நேரா மருந்தில்லை நீயறிந்து - சீராம்
அனுபானத் தாலே அறிந்தூட்டச் சன்னி
தனுப்பாயும் வெப்பும்போம் தான். 1032

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1030. 1 சத்து, சுற்று
2 வன்குகையில்

1031. 1 நாலொன்று வைத்த நாபங்கூட்டி
2 போம்

சேரும் சரக்குகள் : சுத்தி செய்த இரசம்
சுத்தி செய்த நாபி (சம அளவு)

செய்முறை : இவற்றை கொடிவேலிச் சாற்றில் அரைத்துக் குப்பியிலிட்டு மூடி வாலுகா யந்திரத்தில் புடமிட்டு ஆறியபின் எடுத்து அதற்கு 1/4 பங்கு நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்து சிறு சின்னிச் சாற்றில் அரைத்து குன்றியளவாக உருட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : ச்ன்னி, சுரம்.

உத்தமாக்கினி குமாரன்

செம்பு[1]லோக மப்பிரகம் நேர்காந்த பற்பமுட
அம்பு[2]சேர் சென்னியானென் றோதும் - நம்பிச்
செருப்படியின் சாற்றொருநாள் சேரவரைக் குப்பியினுள்
விரும்பி[3]யிடு சீலைமண்செய் மேல். 1033

மேலு மறுசாமம்[1] வெண்மணலுள் வைத்தெரித்துச்
சாலவடுத் தேபொடித்துத் தானுளுந்து - போலருந்த
உத்தவக் கினிக்குமார முயர்பேர் உடம்பதனில்[2]
வைத்தபிணி போக்கும் வகை. 1034

வகையா லருந்துவிக்க[1] வாதபித்த சன்னி
பகையாஞ் சுரத்துடனே பாறும் - மிகையான
ப'த்தியமு மிச்சையாம் பத்தியமே[2] தாகித்தால்
தத்திளநீர் கன்னவாந் தான். 1035

பாடவேறுபாடு :
பாடல் எண் : 1033. 1 செம்பு
2 அப்பு
3 வறுப்பி
1034. 1 மெண்சாமம்
2 உத்தமவாந்தி விக்கல் வாதபித்தம் சன்னிவகை
1035. 1 விக்கல்
2 பத்தியே

சேரும் சரக்குகள் : தாமிரம் அயம் அப்பிரகம் காந்தம் (பற்பம் சம அளவு)

செய்முறை : இவற்றை செருப்படிச் சாற்றில் ஒருநாள் அரைத்து குப்பியில் வைத்து வாலுகாயந் திரத்தில் புடமிட்டு ஆறியபின் எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : உளுந்தளவு

தீரும் நோய்கள் : வாத, பித்த சன்னி, சுரம்

பத்தியம் : இச்சாபத்தியம், தாகமெடுத்தால் இளநீர், கரும்புச் சாறு அருந்தலாம்.

புவனேச ரசம்

நேர்வாளஞ் சாதிலிங்கம் நீனிறத்த நாபிகெந்தம்
வேரான வன்னிநீர் விட்டரைத்து - சேரவே
கூட்டி முடிந்து கொடிவேலி வென்னீரில்
ஆட்டிய ஊசல்[1] போ வாக்கு. 1036

ஆக்குமொரு நாளளவு மாறியபின் கெண்டைமீன்
தாக்குபிச்சு கள்ளிப்பால் சாமமொன்று - நோக்கியரைத்து
ஒருளுந்து மாத்திரையா மொள்ளியபு வனேசரசம்[1]
பேர்அனந்த[2] வெப்புமுதற் போம். 1037

போம்வெப்புக் கிஞ்சிரதம் போகாத சன்னிக்கு
ஆமெருக்கு வேர்குடிநீ ராலருந்த - தோமிலா
[x]தாம்பத்தியந் தயிராம் தாகித்தால் மோரு
மாம்பரிசு செய்ய வறிந்து. 1038

x இவ்விரண்டு அடிகள் அறிஞர் அண்ணா மருத்துவனை சுவடி எண். 502ல் எடுக்கப்பட்டன.

பாடவேறுபாடு :
பாடல் எண் : 1036. 1 ஊசலம்
1037. 1 பூதேசரசம்
2 போர்வளந்த, பேர்காந்த

சேரும் சரக்குகள் : நேர்வாளம் சாதிலிங்கம் நாபி கந்தகம் (சம அளவு)

செய்முறை : இவற்றை கொடிவேலிச் சாற்றில் அரைத்து ஒரு துணியில் முடிந்து, கொடி வேலிக் குடிநீரில்

துலாயந்திரமாக ஒரு நாள் எரிந்து ஆறியபின் எடுத்து அத்துடன்.
கெண்டைமீன் பிச்சு கள்ளிப்பால் இவை சேர்த்து தனித்தனியாக ஒவ்வொரு சாமம் அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம், திரும் நோய் : சுரத்திற்கு - இஞ்சிச்சாறு
சன்னிக்கு - எருக்கவேர் குடிநீர்

பத்தியம் : தயிர்சாதம், தாகமெடுத்தால் மோர் குடிக்க வேண்டும்.

திரிபுராந்தக ரசம்

ஐய்யா விரதகெந்தம் அப்பிரகம் நேரவரை
கையாந்த கரையிலைக் காரநீர் - மையா
மருந்தைக் குகையிலிட்டு மாமனலில் வைத்தே
பொருந்துபுடங் குக்குடநேர்[1] போடு. 1039

போட்ட மருந்தைப் புனற்கெண்டைக் கான்பன்றி
கூட்டும்பிச்சுக் காராடு கூடவே - ஓட்டியரைத்
தேய்த்தநிறை குன்றித் திரிபுராந் தகமெனும்பேர்
வாய்ந்த மருந்தின் வளம். 1040

வளமான இஞ்சியிலிட வாதபித்த சேத்துமம்போம்
துளவாஞ் சுரங்குடிநீர் தோடங்கள் - அளவறந்த
சன்னிமுத லாம்பிணிகள் தாம்போகும் பத்தியமும்
பண்ணியிடின் மோச்சோறும் பண்பு. 1041

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1039. 1 குக்குடனில்

சேரும் சரக்குகள் : இரசம் கந்தகம் அப்பிரகம் (சம அளவு)

செய்முறை : இவற்றை கையாந்தகரைச் சாற்றில் அரைத்துக் குகையிலிட்டு அனலில் வைத்து குக்குட புடமிட்டு ஆறியபின் எடுத்து அத்துடன்.
கெண்டை பன்றி ஆடு இவற்றின் பிச்சு சேர்த்து அரைத்துக் குன்றி அளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : இஞ்சிச் சாறு

தீரும் நோய்கள் : வாத, பித்த, கபசுரம், சன்னி.

பத்தியம் : மோர் சாறு.

காளகண்ட ரசம்

மத்தை விதைநாபி மனோசிலை வெண்காரம்
சுத்திரசங்[1] கெந்தகம் தூயகணம் - ஒத்தநிறை
ஓதமத்தின்[2] பாகவிலை உள்ளநீர் விட்டொருநாள்
பேதமற வேயரைத்த பின். 1042

பின்னெடுத்து நல்லகலில் பெய்துவாய் மூடிடுமண்
துன்னிய சீலைதனைச் சுத்திட்டு - பண்ணுபுடம்
வாரணம்போல்[1] போட்டெடுத்து வச்சிறப்பான மீன் பிச்சுஞ்
சீரணமாய் ஓர்சாமந் தேய். 1043

தேய்த்தரைத்துக் குன்றிநிறை சேர்குளிகை காளகண்ட
மாய்த்தசுரஞ் சன்னிசுர மாறுமே - வாய்த்ததோர்
பத்தியமும் இச்சை பருப்பன்னமுங் கொளலாம்
முத்திய தாக்கிக்கின் மோராம்.[1] 1044

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1042. 1 சுத்திரதம்
2 ஓதுமத்தின்
1043. 1 வர்ணம் போல்
1044. 1 முத்திய தாக்கின மோர்.

சேரும் சரக்குகள் : ஊமத்தை விதை நாபி மனோசிலை வெண்காரம் இரசம் கந்தகம் திப்பிலி (சம அளவு)

செய்முறை : இவற்றை ஊமத்தை இலைச் சாறு விட்டு ஒரு நாள் அரைத்து வில்லை தட்டி அகலில் வைத்துச் சீலைமண் செய்து குக்குடபுட மிட்டெடுத்து அத்துடன் மீன்பிச்சு சேர்த்து 3 மணிநேரம் அரைத்துக் குன்றி அளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னி, சுரம்,

பத்தியம் : இச்சாபத்தியம், பருப்பு சாதம், தாக மெடுத்தால் மோர் அருந்தலாம்.

சாம்பவி ரசம்

கந்தகநேர் வாளங் கெவுரிக் கடுஞ்சுக்கு
விந்துவிதை ஆமணக்கின் வெண்காரம் - தந்திரதம்
சேர்த்திதனை மூன்றுநாள் செம்பீரச் சாற்றரைத்து
வார்த்தவகல் மேல்மூடி வை. 1045

வைத்துமண் சீலையிட்டு வாரணனேராம்[1] புடமிட்டுத்
தைத்தவதிற் பத்திலொன்று தூயநாபி - ஒத்தகறி
ஏரண்ட நெய்விட் டிசையவரைத் துண்டைகுன்றி
ஏர்சாம்பவி ரசமா மென்.[2] 1046

என்னு மருந்துண்டைக் கிஞ்சி யனுபானம்
பின்னுமதி லேதோன்றும் பெய்திடுகத் - துன்னுசுரம்
அண்டாது வெப்பெவையு மோடுஞ் தயிருஞ்சோறு
உண்டார் தலப்பத்தியமா மோர். 1047

பாடல் எண் : 1045. 1 வாரணனோர்
1046. 1 சாம்பவிரதமா மென், சாம்பவிரச மாமே.

சேரும் சரக்குகள் : கந்தகம் நேர்வாளம் கவுரி சுக்கு ஆமணக்குவிதை வெண்காரம் இரசம் (சம அளவு)

செய்முறை : இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் 3 நாள் அரைத்து வில்லை தட்டி அகலில் வைத்து, சீலைமண் செய்து குக்குடபுடம் இட்டெடுத்து, அதில் 1/10 பங்கு நாபி, சம அளவு ஆமணக் கெண்ணெய் விட்டரைத்து குன்றியளவு உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : இஞ்சிச்சாறு
தீரும் நோய் : சுரம்
பத்தியம் : தயிர் சோறு.

பத்தி ரசம்

திரிகடுகு இந்துப்புச் சீர்நாபி கந்த
மரியிரதம் வெண்கார மப்பிரகம் - தெரியலூ

365

மத்தைவிதை நேர்பொடித்து கைகுகைமேல் மண்சீலை
துய்த்து[1] மண லெந்திரத்தில் துய். 1048

துய்த்தே[1] இருசாமம் தோன்ற எரித்தெடுத்துப்
பத்திரதம்[2] பண்ணும் வகையறிந்து - தத்துநீர்
மீன்பிச் சுடனரைத்து மேலுளுந்தாய் உண்டைபிடி
ஊன்வெப்புச் சன்னி ஒடுங்கும். 1049

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1048. 1 செய்து
1049. 1 தூயதே
2 பாத்திரதம்.

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி இந்துப்பு நாபி கந்தகம் இரசம் வெண்காரம் அப்பிரகம் ஊமத்தை விதை. (சம அளவு)

செய்முறை : இவற்றைப் பொடித்து குகையிலிட்டு சீலைமண் செய்து வாலுகா யந்திரத்தில் வைத்து 6 மணி நேரம் எரித்து ஆற விட்டெடுத்து, மீன் பிச்சு சேர்த்து அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னி.

அவ்னேசுர ரசம்

பச்சைநாபி கெவுரி பாதரச நேர்வாளம்
நிச்சயமாய் அப்பிரக நேர்சிலையும் - சுச்சிறுக[1]
காரவல்லிச் சாற்றில் கலந்துநாள் மூன்றரைத்துப்
பாரவகவிட்டு நிலமண்[2] பண். 1050

பண்குக் குடப்புடத்தைப் பார்த்தெடுத்துச் சாமமிரண்டு
ஒண்பொடியாய் நேரவரைத் தோர்குன்றி - யுண்மட்டாய்
வந்தஅவ னேசுரத்தை[1] மாந்தத்[2] திரிகடுநீர்
பந்தமறு மெச்சுரமும் பார். 1051

பாட வேறுபாடு :

பாடல் எண் : 1050. 1 சிச்சிறுக, மச்சச்சிறுக்
2 சீலைமண்

1051. 1 வந்த அவனே சுரமா மிரத்தை
2 மாந்தாதி

சேரும் சரக்குகள் : பச்சை நாபி கவுரி இரசம் நேர்வாளம் அப்பிரகம் மனோசிலை (சம அளவு)

செய்முறை : இவற்றை பாகலிலைச் சாற்றில் 3 நாள் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலிலிட்டு சீலை மண் செய்து குக்குட புடத்தில் வைத்தெடுத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும்.

அளவு : குன்றியெடை

அனுபானம் : திரிகடுகுக் குடிநீர்

தீரும் நோய் : சுரம்.

மகா அக்கினி குமாரன் (வேறு)

நவச்சார மைந்துப்பு நாபி அரிதாரம்
எவட்சாரம் அப்பிரகம் ஏர்சூதம்[1] - உவட்டா[2]
இலவங்கம் சாதிக்கா யேநெல்லி வித்தும்
குலவுநவ லோகபற்பம் கொள். 1052

கொள்ளு நேர்வாளம் குடசத்தண் டூரங்கந்தம்[1]
உள்ளு கொடி மாட்சிகமோ டொட்டரையும் - ஒள்ளியதாய்
கொண்டுவந்து நேராகக் கூட்டிய ரைக்கும்வகை
ஒண்தொடியாய்ச் சொல்வோம் உவந்து. 1053

உவந்தஉள்ளி[1] வாசை[2] இலை யுட்சாறு மன்றித்
தவந்தான் முருங்கைவேர் தானும் - கவந்தெருக்குக்[3]
கானகொடிவேலி காய்ந்தநீர் வேரொன்று[4]
ஆனதோர் சாம மரை. 1054

அரைத்தெடுத்துக் குப்பியிட்டு வாகவெழு சீலை மண்ணை
உரைத்தபடி செய்வாயி லோரகலில் - பொருந்தியிட்டு
வாலுகா யெந்திரத்தின் வைத்தே[1] தலைகீழாய்
சாலமேலச் சட்டிகவிழ் தான். 1055

தான்கவிழ்த்த சட்டி தளராமல் மண்பூசி
ஊனிந்த தீபவன்னி யோர்நாளும் - கான்கமல
வன்னியொரு நாளும் மற்றநாள் காடவன்னி
உன்னிளரி மூன்று நாளோய். 1056

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1052. 1 நேர்சூதம்
2 மூவையில்
1053. 1 குடசத்தண மூல கந்தம்
சூட்ச தண்டலிக்கெந்த
2 உள்ளி
1054. 1 ஆளி
2 வாகை
3 வந்தெருக்கு
4 ஒன்றொன்றா
1055. 1 வைத்து.

ஒய்ந்தபின்பு சீதளத்தை ஓர்ந்தெடுத்து நாலாநாள்
வாய்ந்தகுழி கல்லிடையில்[1] வைத்தரைத்துப் - போந்தபின்னும்
மாறிரண்டு நாபியதி விரட்டிக் கூர்மிளகும்
நீறுபடச் சேர்த்தொருநாள் நேர். 1057

நேராம் பொடியில் நிறைகுன்றி மாட்டிடுக[1]
கூராமா வக்கினி குமாரத்தைத் - தீராத
சன்னிபதி மூன்றும் தசமூலக் கோதத்திற்
பின்னும் சுவாசகாசம் பேசு. 1058

பேசுசுர தாபம் பெரும்பூசணிச் சாற்றில்
மாருள் மாந்தை வாதகுன்ம[1] - மாசுற்ற
சூலை முதற்பணிக்குந் துய்யவெற் றிலையிஞ்சி
காலிலவங் கங்கணந்தேன் காண். 1059

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1057. 1 கல்லிடத்தில்
1058. 1 மாட்டிட்டு
1059. 1 வாதகுணம்

சேரும் சரக்குகள் : நவச்சாரம் இந்துப்பு கல்லுப்பு சோற்றுப்பு வளையல்உப்பு வெடியுப்பு நாபி அரிதாரம் யவச் சாரம் அப்பிரகம் இரசம் இலவங்கம் சாதிக்காய் நெல்லிவித்து பொன்பற்பம் வெள்ளிபற்பம் தாமிரப் பற்பம் அயப் பற்பம் வெங்கலப் பற்பம்

வெள்வங்கப் பற்பம் நாகப் பற்பம் காந்தப்
பற்பம் நேர்வாளப் பற்பம் குடசப்பாலை திப்பிலி
மூலம் மாட்சிகம் ஒட்டடை பூண்டு

செய்முறை : இவற்றைப் பூண்டுச்சாறு, ஆடாதோடை இலைச் சாறு, முருங்கைவேர் குடிநீர், எருக்கன் குடிநீர் கொடிவேலிக் குடிநீர் இவற்றால் ஒவ்வொரு சாமம் அரைக்க வேண்டும். அரைத்து எடுத்துக் குப்பியில் வைத்து ஏழு சீலை மண் செய்து அகலில் வைத்து வாலுகா இயந்திரத்தில் வைத்து அதன் மேல் மேல்சட்டி மூடி, சந்து வாய்க்கு மண்பூசி தீபமாக ஒருநாளும், கமலாக்கினியாக ஒருநாளும் காடாக்கினியாக ஒருநாளும் எரித்து 4ம் நாள் எடுத்து குழிக் கல்லில் வைத்து அத்துடன் நாபி 2 பங்கு, மிளகு 4 பங்கு சேர்த்து ஒருநாள் அரைத்து குன்றியளவு மாத்திரை செய்துகொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் : 13 வகை சன்னி சுவாச காசம் தாபகரம் உள்மாந்தை வாதகுன்மம் சூலை

அனுபானம் : தசமூலக்குடிநீர் பூசணிச்சாறு வெற்றிலைச் சாறு இஞ்சிச்சாறு திப்பிலிமூலம் இலவங்கம் தேன்.

மகேசுர ரசம்

சீராரு மப்பிரகம் செய்யவிரதஞ் சமனாய்
ஒரோரு நாழிசங்கில் உற்றனீர் - சேர
வரைத்தந்தக் கோதந் தழலில் இருசாமம்
உரைத்தவூச விட் டெரிக்க உன். 1060

உன்னி எடுத்தே உலவு மயில்கோழி
தன்னிடத்தில் பிச்சிலிரு சாமமரை - பின்னும்[1]
கொள்விஞ்சி[2] நீரில் கொடுஞ்சுரமே போமாம்
அளவுமா மகேசுரந் தானாம். 1061

பாடவேறுபாடு :
பாடல் எண் : 1060. 1 ஊஞ்சலிட
1061. 1 பின்னும்கேளு
2 கொள்ளுவிஞ்சி

சேரும் சரக்குகள் : அப்பிரகம் இரசம் (சம அளவு)

செய்முறை : இவற்றை சங்கங்குப்பி சாற்றிலரைத்து அதே குடிநீரில் துலா யந்திரமாக எரித்து எடுத்து அத்துடன் மயில் பிச்சு, கோழி பிச்சு இவற்றுடன் ஒரு சாமம் அரைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : இஞ்சிச் சாறு

தீரும் நோய் : சுரம்.

நாரசிங்க ரசம்

கந்தகம் சூதம் கிளர்நாபி நேர்வாளம்
அந்தமுற வோர்நாள் அரைத்துருட்ட - வந்தெருக்கின்
சொல்லுங் கிசாயத்தில் டோலையிட் டோர்சாமம்
நல்லகுன்றி மாத்திரையே நன்று. **1062**

நன்றாங் குடிநீ நாரசிங்கனா ரசத்தைக்
குன்றாம லுட்கொண்டால் கோடிசுரம் - சென்றோடும்
வல்லமருந் தாம்பளவப மாமுலையின் மாதே
நல்லமருந் தாமிதனை நாடு. **1063**

சேரும் சரக்குகள் : கந்தகம் இரசம் நாபி நேர்வாளம் (சம அளவு)

செய்முறை : ஒருநாள் அரைத்து எருக்கம் வேர் கஷாயத்தில் துலாயந்திரமாக 1 சாமம் எரித்தெடுத்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்துகொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சுரம்.

சாம்பவி ரசம் (வேறு)

அப்பிரகம் சூதம் அரிதாரம் சாதிலிங்கம்
செப்பமுறு நாபி செருப்படிநீர் - ஒப்பவரைத்து
உண்டை அகலிட்டு ஒண்சீலை மண்செய்து
அன்றுபுடம் குக்குடம்போ லாக்கு. **1064**

ஆக்கி செருப்படிநீர் ஆவாரை இரண்டுநாள்
கூக்கோழி நெற்புடமாய்க் கொள்ளகலின் - நோக்கியெடுத்து
ஆமைபன்றி மீன்பிச்சு அரைத்தேசேர் ஓர்நாள்
ஓமஉளுந் தாமுண்டை உருட்டு.[2] **1065**

உருட்டிய வீச்சாம்பவி ரசத்தை யுள்ளனு பானந்[1]
தெருட்டியிடச் சன்னிசுரம் தேய்ந்தேகும்[2] - வருத்த மின்றி
பத்தியமும் இச்சையா பால்இளநீர் கன்னலாம்
உத்தமமாம் அம்மருந்தை ஓர். 1066

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1065. 1 மீன்பிச்சரைச் சோர்நாள்
2 உழுந்தாமாம் உருட்டு
1066. 1 உருட்டிய வீச்சாம்பரசத்தை உள்ள அனு பானம்
2 ஏகும்

சேரும் சரக்குகள் : அப்பிரகம் இரசம் தாளகம் சாதிலிங்கம் நாபி (சம அளவு)

செய்முறை : இவற்றை செருப்படிச் சாற்றில் அரைத்து அகலில் இட்டு சீலை மண் செய்து குக்குட புடமிட்டு எடுக்க வேண்டும். இதனை செருப்படி நீர், ஆவாரை இவற்றால் இரண்டு நாள் அரைத்து குக்குட புடமிட்டு ஆறியபின் எடுத்து அதனுடன். ஆமை பன்றி மீன் (பிச்சு) இவை சேர்த்து ஓர்நாள் அரைத்து உளுந்தளவு மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னி சுரம்

பத்தியம் : இச்சா பத்தியம்

அனுபானம் : பால், இளநீர், சர்க்கரை.

கிடார ரசம்

சாதிலிங்க நாபிரதம் சார்கந்தம் இந்துப்பு
மோதுகி ராம்புகண மூலம் - தீதகலச்
செல்லுமப் பிரகம் திரிகடுகு நேரவரை
வெல்லுமொரு நாளரைத்து மேல். 1067

மேலும் அகலிட்டு மேஞ்சீலை மண்செய்து
சாலவொரு குக்குடம்போல் தான்புடமிட்டு - ஏலவரைத்து

371

உன்னு கிடாரத் துச்சமாகு வெப்பிற்கு
பன்னியிடம் மாடம்[1] பரிந்து. 1068

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1068. 1 மாட்டி

சேரும் சரக்குகள் : சாதிலிங்கம் நாபி இரசம் கந்தகம் இந்துப்பு கிராம்பு திப்பிலிமூலம் அப்பிரகம் சுக்கு மிளகு திப்பிலி (சம அளவு)

செய்முறை : இவற்றை ஒருநாள் அரைத்து அகலிலிட்டு மேல்மூடி சீலைமண் செய்து குக்குட புடமிட்டு ஆறியபின் எடுத்து உளுந்தளவு மாத்திரை உருட்டிக்கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சுரம்.

பார்வதி ரசம்

துய்யகந்தம் நேர்வாளம் சூதமிது மூன்றும்
செய்யரசன் தோல்சாற்றில் சேரவரை - உய்யநீர்
ஊற்றியொரு சட்டியினில் ஊசலிட் டோர்சாமம்
ஏற்றி எரிப்பின் எடுத்தே. 1069

எடுத்தே அரைத்து இயல்குன்றி அவ்வளவு
கொடுத்தாற் சுரமனைத்துங் குன்றும் - தொடுத்த
பருவதத்தி லேபிறந்த பார்வதியார் தன்பேர்
தரித்தரதம் வன்பிணிபோம் தான். 1070

சேரும் சரக்குகள் : கந்தகம் நேர்வாளம் இரசம் (சம அளவு)

செய்முறை : அரசம்பட்டை சாற்றால் அரைத்து அதன் குடிநீரில் ஒரு சாமம் துலா யந்திரமாக எரித்து எடுத்து. அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சுரம்.

நாராயண ரசம்

கந்தகம் அப்பிரகம் கேள்கடுகு ரோகணியும்
தந்த திரிகடுகுந் தாளகமும் - நந்தவரை[1]

பஞ்சகோ லக்கோதம் படிய விருசாமம்
விஞ்சுகுகை இட்டடைத்து மேல். 1071

மேற்குகையின் மண்பூசி வெம்புபுட மிட்டபின்பு
மேற்குநுழை நரிமீன் பிச்சரைத்து - ஏற்கிருநாள்[1]
நாரா யணரசத்தை நாகவல்லிச் சாற்றிலிடப்
பேராத[2] தோடசன்னி போம். 1072

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1071. 1 அந்தவரை, முந்தவரை
1072. 1 இறக்கிருநாள்
2 பேரான

சேரும் சரக்குகள் : கந்தகம் அப்பிரகம் கடுகுரோகணி சுக்கு மிளகு திப்பிலி தாளகம்.

செய்முறை : இவற்றை பஞ்சகோல குடிநீரில் 2 சாமம் அரைத்து, ஓட்டிலிட்டு மேலோடு மூடி சந்து வாய் சீலை செய்து, புடமிட்டு எடுத்து, நரி மீன் பிச்சு சேர்த்து ஒருநாள் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : வெற்றிலைச்சாறு

தீரும் நோய் : சன்னி தோடம்

வைணவி ரசம்

பன்னுந் திரிகடுகு பார்கடுகு ரோகணியும்
துன்னு ரசம்வசம்பு தூயநாபி - மன்னுகொடி
வேலிக் கசாயத்தில் வேகவைத்துப் பின்னரைத்து
தோலையிடச் சாமமொன்று சூழ்ந்து. 1073

சூழ்ந்தெடுத்து நேருளுந்து தூயஉண்டை இஞ்சியிடப்
போழ்ந்தசுரம் சன்னிசுரம் போகுமே - ஆழ்ந்த
வயணவியா மிம்மருந்தில் வாங்காப் புராணசுரம்
துயரருகும்[1] தொந்தசுரத் தோடு. 1074

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1074. 1 துயரருக்கும்

சேரும் சரக்குகள் : சுக்கு மிளகு திப்பிலி கடுகுரோக்ணி இரசம் வசம்பு நாபி (சம அளவு)

செய்முறை : ஒரு சாமம் இவற்றை கொடிவேலிக் குடிநீரில் துலாயந்திரமாக எரித்து எடுத்து, பின் அரைத்து உளுந்து அளவு மாத்திரை செய்ய வேண்டும்.

தீரும் நோய் : சுரம், சன்னிசுரம், புராண சுரம், தொந்த சுரம்.

இலட்சுமி நாராயண ரசம்

நல்ல துரிசுகெந்தகம் நலமான அரிதாரம்
செல்லுகின்ற வெங்காரம் சேர்சரியாய் - சொல்லரிய
சாரணைநீ ரின்மூன்று சாமமரைத் தூஞ்சலிட்டு[1]
ஆறவிட்டுக் குன்றியள வாக்கு. 1075

ஆக்கி அனுபானத் தருந்தவே வாதபித்தம்
தூக்கிய சேத்துமசுர தோடம்போம் - நோக்கில்
இலக்குமி நாராயணமா மிம்மருந்து சாரக்
கலக்கமுறும் எப்பிணியும் காண். 1076

பாட வேறுபாடு :

பாடல் எண் : 1075. 1 ஊசலிட்டே

சேரும் சரக்குகள் : மயில்துத்தம் கந்தகம் தாளகம் வெங்காரம் (சம அளவு)

செய்முறை : இவற்றை சாரணைச் சாற்றில் மூன்று சாமம் துலாயந்திரமாக எரித்து ஆறவிட்டு எடுத்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : வாதபித்த கப சுரம்.

இரணிய கற்ப ரசம்

சாரம்பொன் செம்பரி தார மனோசிலையும்
பார்கந்தம் சூதம் பவளமொடு - சேரவே
மெய்க்கடுகு ரோகணியும் வெண்மறிப்பால் விட்டொருநாள்
துய்க்கவரைத் தேயுருட்டித் தூர். 1077

தூர்[1] குகையின் மண்சீலை சுத்தி[2]லை புடத்தை
நேர்புடத்தில் ஆறியதோர் நீள்மருந்தை - கூர்பொடியாய்ச்
செய்மாட மிரண்டிட்டால் சேரவனு பானத்து
ஐயவாத்[3] பித்தமும்அல் லாமல். 1078

அல்லாமல் சன்னி அனைத்தினுக்கா மாகுகலும்
வல்லாரி ராசபுத்தி வந்தெய்தும் - சொல்லில்
இரணிய கற்பமா மிம்மருந்து கொள்வோர்
பரணிய பத்தியமில்லை யாம். 1079

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1078. 1 தூரா
2 சுத்தியே
3 இலைவாத

சேரும் சரக்குகள் : நவச்சாரம் தங்கபற்பம் தாமிர பற்பம் தாளக பற்பம் மனோசிலை பற்பம் கந்தக பற்பம் இரச பற்பம் பவழ பற்பம் கடுகுரோகணி (சம அளவு)

செய்முறை : இவற்றை ஆட்டுப்பாலில் அரைத்து உருட்டி குகையிலிட்டு சீலைமண் செய்து புடமிட் டெடுத்து ஆறியபின் உளுந்தளவு மாத்திரை செய்துகொள்ள வேண்டும்.

அளவு : இரண்டு மாத்திரைகள் தக்க அனுபானத்தில்

தீரும் நோய்கள் : வாதபித்த கப சன்னிகள், புத்தி கூர்மை உண்டாகும்.

கமலாசன ரசம்

காந்தம் உலோகம் கருதிரதம் அப்பிரகம்
சேந்ததொரு தாம்பிரம் சேர்நிறையாய் - வாய்ந்த
வேப்பிலையின் சாற்றி லொருநா ளரைத்துருட்டி
வாய்ப்பான குப்பியதில் வை. 1080

வைப்பாம் ஏழுசீலை மண்செய்து வாலுகத்தில்
தப்பா தருசாமம் தானெரித்து - வெப்பாறப்
பின்னெடுக்க நெல்லளவு பேரான்[1] சன்னியறும்
துன்னுகம லாசனம்பேர்[2] சொல். 1081

பாட வேறுபாடு :

பாடல் எண் : 1081. 1 போல்
2 போம்

சேரும் சரக்குகள் : காந்தம் அயம் இரசம் அப்பிரகம் தாமிரம் (சம அளவு)

செய்முறை : இவற்றை வேப்பிலைச் சாற்றில் ஒருநாள் அரைத்து உருட்டி குப்பியில் வைத்து 7 சீலை மண் செய்து வாலுகா இயந்திரத்தில் ஆறு சாமம் எரித்து ஆறியபின் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : நெல் அளவு

தீரும் நோய் : சன்னி.

பிதாமகனார் ரசம்

இங்குலிக நாபி இரதம் பழங்கிட்டம்[1]
தங்கடுகு ரோகணியும் தாம்பிரமும் - மங்கும்
உலோகம் வகைநிறையாய் உத்தெருக்கம் வேர்[2] நீர்
திலதமென வேயரைத்துச் சேர். 1082

சேரவொரு குப்பியிட்டுத் தீயெரிக்க நீரிடையே
ஆறவொரு ஊசலிட்டே யந்தரம்வைத் - தாரவெரி
மந்தவன்னி யாகவறு மூன்று சாமமது
வெந்தாறி இறக்கவே. 1083

வேரெடுத்துக் குன்றியிடை[1] மேலுருண்டை தன்னையிட
மாறுகொள்ளு மெச்சுரமு மாறுமே - கூறில்[2]
பிதாமகனா ரசமாய்ப் பேசிடுவ ரென்றும்
விதாகமறச் சொல்வார் விரைந்து. 1084

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1082. 1 பழங்கிடம்
2 உத்தெருக்குவேர்

1084. 1 குன்றிநிறை
2 கூறிலா

சேரும் சரக்குகள் : இலிங்கம் நாபி இரசம் பழங்கிட்டம் கடுகு ரோகணி தாமிரம் அயம் (சம அளவு)

செய்முறை : இவற்றை எருக்கம்வேர் குடிநீரில் அரைத்து குப்பியிலிட்டு எரித்து எருக்கம்வேர் குடி நீரில் துலாயந்திரமாக 3 சாமம் எரித்து வெந்து ஆறிய பின் எடுத்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்துகொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சுரம்,

பார்வதி ரசம் (வேறு)

நாவிரதங் கந்தகமும் நாறுவச மப்பிரகம்
தாவில்கொட்டைக் கரந்தைச் சாற்றொருநாள் - மேவியரைத்
தாற உருட்டி யரியகுகை உள்ளிட்டுத்
தேறுபுடம் குக்குடம்போல் செய். 1085

செய்ய[1] மருந் தூர்க்குருவிச் சேர்பிச்சில் நாளிரண்டு
நய்யவரைத் துருட்டி நாடுகுன்றி - மெய்யளவு
பார்பதியின் பேரான பண்பிரத முட்கொண்டால்
போராடும் தோடசுரம் போம். 1086

பாடவேறுபாடு :

பாடல் எண் : 1086. 1 செய்து

சேரும் சரக்குகள் : நாபி இரசம் கந்தகம் செம்பு அப்பிரகம் (சம அளவு)

செய்முறை : இவற்றை கொட்டைக் கரந்தைச் சாற்றில் 1 நாள் அரைத்து உருட்டி குகையிலிட்டு குக்குட புடம் போட்டு எடுத்து அத்துடன் ஊர்க்குருவி பிச்சு சேர்த்து 2 நாள் அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

கஸ்யாணி ரசம்

சங்குசுட்ட நீரோடு தாளகமும் கந்தகமும்
துங்க வெலும்பிச்சந் தூயரசம் - பொங்கவரைத்
தூசலிட குப்பியிட்டுத் தோர்சாமம் வெந்தபின்பு
மாசிலுண்டை மேலுளுந்தா யாக்கு. 1087

ஆக்கு மருந்தின்பேர் அரியகலி யாணிரசம்
தாக்கிறச் சுரம்சன்னித் தானனைத்தும் - போக்காக
வெங்கொளிப் போமென்றே ஏங்கித்[1] தடுமாறிப்
பொங்குகட லுட்புகுந்து போம். 1088

பாடவேறுபாடு :
பாடல் எண் : 1088. 1 இயங்கித்

சேரும் சரக்குகள் : சங்கு சுட்ட சாம்பல் தாளகம் கந்தகம் (சம அளவு)

செய்முறை : இவற்றை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து இச்சாற்றிலேயே துலாயந்திரமாக ஒரு சாமம் எரித்து புடமிட்டு எடுத்து அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சன்னி.

சர்வேசுர ரசம்

வெண்காரம் சாதிலிங்கம் மேலா மிரதகந்தம்
ஒண்காண நாபிநிறை யோரைந்து - அன்பாய்
கொடிவேலி வெந்தநீர் கூட்டியரை குப்பியுள்ளில்
அடைவிலிடு மண்சீலை ஆய்ந்து. 1089

ஆய்ந்தமண் சீலைசெய்து ஆற்றுமண லெந்திரத்தின்
ஏய்ந்த விருசாம மெரியிட்டு - ஒய்ந்தபின்பு
குன்றியள விட்டால் கொடியசுரம் தோடம்போம்
வென்றீசர் வேசுரம்பேர் விள். 1090

சேரும் சரக்குகள் : வெங்காரம் சாதிலிங்கம் இரசம் கந்தகம் நாபி (சம அளவு)

செய்முறை : கொடிவேலிக் குடிநீரில் அரைத்துக் குப்பியிலிட்டு சீலைமண் செய்து, வாலுகா யந்திரத்தில் இரு சாமம் எரித்தெடுத்து ஆறியபின் அரைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் : சுர தோடம்.

வீரவிக்கிரம ரசம்

எட்டிவிரை நாவிரதம் இந்துப்புப் பாதரசம்
கட்டிப் பெருங்காயம் வெண்காரம் - ஒட்டியதோர்

திப்பிலிமூ லத்தினொடு சேரவிட்டு நேர்பொடியாய்ச்
செப்புநீர் திப்பிலிமூலம் சேர். 1091

சேரும் கிசாயத்தில் செரிந்தூசல் இட்டெரித்து
ஆறவே பன்னியதன் பிச்சுச் - சேரவரைத்
துண்ணுகுன்றி மாத்திரையில் தோடசுரம் போகும்
உண்ணுவீர விக்கிரமம் ஓர். 1092

சேரும் சரக்குகள் : எட்டிவிதை நாபி இந்துப்பு பாதரசம் பெருங்காயம் வெங்காரம் திப்பிலிமூலம் (சம அளவு)

செய்முறை : இவற்றை திப்பிலிமூலக் குடிநீரில் துலாயந் திரமாக எரித்து, ஆறியபின் பன்றிப் பிச்சு சேர்த்தரைத்து குன்றியளவு மாத்திரை செய்துகொள்ள வேண்டும்.

தீரும் நோய் : தோடசுரம்.

அகத்தியர் மணி 4000 என்னும்
வைத்திய சிந்தாமணி வெண்பா 4000
முதல் பாகம் முற்றும்.

தாமரை
நூலகம்